# தஞ்சை நகரிய சக்திக் கோயில்கள்

க. குளத்தூரான்

எட்டாம் உலகத் தமிழ் மாநாடு
பதிப்புச் சூழல்நிதி வெளியீடு

தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

G5285
C07E05
பரு-5285

ISBN : 81 - 7090 - 225 - 8

**எட்டாம் உலகத் தமிழ் மாநாடு**

**பதிப்புச் சுழல்நிதி வெளியீடு எண் 20.**

தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீடு : 177

திருவள்ளுவராண்டு 2025 கார்த்திகை, திசம்பர் 1994

நூல் : தஞ்சை நகரிய சக்திக் கோயில்கள்

ஆசிரியர் : முனைவர் க. குளத்தூரான்

பதிப்பு : முதற்பதிப்பு

விலை : உரூ. 60 - 00

அச்சு : அமுதச்சகம்
38, மேலப்பொன்னகரம் 7 - ஆவது தெரு,
மதுரை - 625016. (தொலைபேசி: 602029

அச்சு
(படங்கள்) : தமிழ்ப் பல்கலைக்கழக அச்சகம்
தஞ்சாவூர் - 613 001.

முனைவர் ஔவை நடராசன்
துணைவேந்தர்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

# முகவுரை

சங்கம் என்ற சொல் முன்னாளில் வழக்கில் இல்லை. மன்றம் என்பது அப்பொருளில் வழங்கியது. அகன்ற இலந்தை மரத்தின் நிழலில் - மன்றத்தில் புலவர்களும் பாணர்களும் குழீஇயிருந்து தமிழ் நலம் பேசி உவந்ததைக் கேட்டு மகிழ்ந்து சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் பாணர்க்கும் புலவர்க்கும் அழியாப் பெருஞ்செல்வம் வழங்கினான் என்பர். இரத்திநீடிய அகன்றலை மன்றத்துக் 'கரப்பில் உள்ளமொடு வேண்டுமொழி பயிற்றி, அமலைக் கொழுஞ்சோறு ஆர்ந்த பாணர்க்கு அகாலச் செல்வம் முழுவதும் செய்தோன், எங்கோன் வளவன் வாழ்க! நின்பீடு கெழு நோன்றாள் பாடேனாயின் பல்கதிர்ச் செல்வன் படுவது அறியேன்' என ஆலத்தூர் கிழார் பாடும் பாடற் பொருளில் சோழர் பேரூரில் புலவர் கூடல் மிளிர்ந்தென அறிஞர் கருதுவர். அம் மரபை ஒட்டியே பல்லாண்டுகள் கழிந்து, தண்ணார் தமிழ் வளர்க்கும் தஞ்சை மாநகரில் அருட்டுறைக்குப் பெரிய கோயிற் போலவே தமிழ் நலம்பேணும் அரியகோயிலாகத் தமிழ்ப் பல்கலைக்கழகம் திகழ்கிறது.

1981 ஆம் ஆண்டு மாமதுரையில் நிகழ்ந்த ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டின் அறிவுப் பயனாகத் தமிழ்ப் பல்கலைக் கழகம் தஞ்சையில் தோற்றம் பெற்றது. கடந்த பதின்மூன்று ஆண்டுகளில் இப்பல்கலைக்கழகம் உயராய்வு நிறுவனமாக ஓங்கி வளர்ந்துள்ளது. உலகிலுள்ள எழுபதுக்கும் மேற்பட்ட நாடுகளில் தமிழ் பேசும் மக்கள் பரவியுள்ளனர். உலகெங்கும் வாழும் தமிழ் மக்களின் கனவுகளை நனவாக்கும் முயற்சியில்

இப்பல்கலைக்கழகம் தமிழ் பண்பாட்டுக் கலையரங்கமாக மிளிர வேண்டுமென்பதும் நமது நோக்கமாகும். எட்டாம் உலகத் தமிழ் மாநாடு தஞ்சையில் தமிழ்ப்பல்கலைக்கழக வாகை வளாகத்தில் 1995 சனவரி 1 முதல் 5 ஆம் நாள் வரை நடைபெறுகிறது. இவ்வரிய நிகழ்ச்சியை நினைவுகூரும் வகையில் தமிழக அரசு இப்பல்கலைக் கழகத்திற்குப் பத்து இலட்ச நிதி வழங்கி பதிப்புச் சுழல் நிதியை அமைத்தது சுழல் நிதியின் பதிப்பாக இந்நூல் தொடங்கும் உலகத் தமிழ்மாநாட்டின் போது வெளியிடப்பெறுகிறது. பல்லாண்டுகளாக அச்சேறாமல் இருந்த இந்நூல் தமிழுலகின் கையில் இப்போது கிடைப்பது நமது பேறாகும்.

துறைதோறும் தமிழின் சிறப்பையும் வளத்தையும் உலகுக்கு ஆய்வு நூல்களாகப் படைத்து வழங்குவது பல்கலைக் கழகத்தின் கடமையாகும். பல்கலைக்கழக அறிஞராகிய நூலாசிரியரைப் பாராட்டி மகிழ்கிறேன். ஏட்டளவில் இருந்த பனுவல்களின் அச்சு வடிவைக்காணும் கற்றோர் போற்றவும் ஊக்கமளிக்கவும் வேண்டுகிறோம்,

ஔவை நடராசன்

# முன்னுரை

'தஞ்சை நகரிய சக்திக் கோயில்கள்' என்ற இவ்வாய்வேடு தஞ்சை நகரத்தில் அமைந்துள்ள அறுபத்துமூன்று சக்திக்கோயில் கள் பற்றிய செய்திகளை விளக்கமுறையில் (Descriptive Study) ஆராய்கிறது. தஞ்சை நகரத்தில் அமைந்துள்ள சக்திக் கோயில்கள் பற்றிய செய்திகளைத் திரட்டி அவற்றிற்கான புகைப்படங்கள் எடுக்கப்பட்டு ஆவணப் பதிவு (Documentation) செய்யவேண்டும் என்ற குறிக்கோளில் இக் கோயில்கள் பற்றிய செய்திகள் திரட்டப்பட்டுள்ளன. ஒவ்வொரு கோயிலிலும் களப் பணி மேற்கொள்ளப்பட்டு புகைப்படங்கள் எடுக்கப்பட்டன. ஒவ்வொரு கோயிலையும் பற்றிய செய்திகள் கோயில் குருக்கள், பூசாரிகள், ஊர்ப்பெரியவர்கள், பொதுமக்கள் ஆகியோரிட மிருந்து நேர்கானல் மூலமாகவும் வினாப்பட்டியல்கள் மூல-மாகவும் களப்பணி செய்தும் சேகரிக்கப்பட்டன. சில கோயில் களில் புகைப்படம் எடுப்பதற்கு அனுமதி வழங்கப்படாததால் அக்கோயில்களுக்கான புகைப்படங்கள் எடுக்கப்படவில்லை.

இந்தியாவின் பல பாகங்களிலும் அமைந்துள்ள சக்தி வடி வங்கள் பற்றி திரு. தி. அ. கோபிநாத ராவ் அவர்களும் (Ele-ments of Hindu Iconography) திரு. இரா. நாகசாமி அவர்களும் (Tantrrc Cult in South India) ஆய்வு நூல்கள் (Micro level Study) எழுதி வெளியிட்டுள்ளனர். 'தஞ்சை நகரிய சக்திக் கோயில்கள்' என்ற இவ்விளக்கமுறை ஆய்வானது தஞ்சை நகரத்தில் மட்டுமே அமைந்துள்ள (Micro leval Study) சக்திக் கோயில்களின் தோற் றம் அமைப்பு, கட்டிட. சிற்பக் கலை அம்சங்கள், வரலாறு ஆகியவை பற்றி அமைந்துள்ளது.

தஞ்சை நகரத்தில் அமைந்துள்ள சக்திக் கோயில்களின் சமய வழிபாட்டு நெறிகள், சிற்பக்கலை, கோயில் அமைப்பு. கட்டடக் கலை ஆகியவை பற்றிய செய்திகள் இவ்வாய்வேட்டின் முதற்பாகத்தில் ஆராயப்பட்டுள்ளன. ஒவ்வொரு சக்திக் கோயில்களின் அமைவிடம், அமைந்திருக்கும் திசை, பரப்பு, வரலாறு, கல்வெட்டுச் செய்திகள், சிற்பக்கலை, கட்டடக்கலை, கோயில் அமைப்பு, சமய வழிபாட்டு நெறிகள் முதலிய செய்தி கள் இரண்டாவது பாகத்தில் தரப்பட்டுள்ளன.

பெரும்பான்மை இக்கோயில்கள் அளவில் சிறியனவாக உள்ளன. கிராமிய சமய வழிபாட்டு நெறிகளும் தாந்திரிக சக்தி வழிபாட்டு நெறிகளும் பின்னிப் பிணைந்த நிலையில் இக் கோயில்கள் தோன்றி வளர்ந்துள்ளன. ஆதலால் நாட்டுப்புறச் சமயப் பின்னணியில் இக்கோயில்களை ஆராய்வது இன்றியமை யாததாகும். அவ்வகையில் 'சமயமும் வழிபாடும்'' என்ற முதற் கட்டுரை அமைகிறது.

இரண்டாவது கட்டுரையில் இந்நகரத்தில் காணப்படும் பல்வேறு தேவியின் வடிவ அமைப்புக் கூறுகள் விளக்கமுறையில் தரப்பட்டுள்ளன. பிற பகுதிகளில் காணப்படும் தேவியின் வடிவங்களும் ஆகம, புராண, சிற்ப சாஸ்திரங்கள் கூறும் தேவி யின் வடிவங்களும் இவ்வடிவங்களிலிருந்து வேறுபட்டும் ஒன்று பட்டும் காணப்படும் தன்மையினையும் தஞ்சையில் பரவியுள்ள சக்தி வடிவங்களையும் இதனால் அறியலாம். மேலும் தஞ்சை நகர சக்தி வடிவங்களை இதனால் அடையாளம் காட்ட முடியும்.

மூன்றாவது கட்டுரையில் இக்கோயில்களில் அமைப்பும், கட்டடக் கலையும் ஆராயப்பட்டுள்ளது. பெரும்பான்மையான இக்கோயில்கள் சாதாரண மக்களால் எழுப்பப் பெற்றுள்ளன. சில கோயில்கள் சிற்ப சாஸ்திர மரபுகளைப் பின்பற்றிய போதி லும் பல கோயில்கள் கிராம மக்களின் தனித்திறமையால் அமைக்கப்பட்டுள்ளன- பொது நிலையில் சக்திக்கோயில்களின் அமைப்பும் கட்டடக் கலைக் கூறுகளும் இங்கு விளக்கப் பட்டுள்ளன.

இரண்டாவது பாகத்தில் அறுபத்து மூன்று சக்திக் கோயில்கள் பற்றிய தொகுப்புக் கட்டுரைகள் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு கட்டுரையிலும் அக்கோயில் அமைந்திருக்கும் வீதி, திசை, பரப்பு, கோயில் அமைப்பு, சிற்பக் கலை, சமய வழி பாட்டு நெறிகள், வரலாறு, கல்வெட்டுச் செய்திகள் முதலியன தரப்பெற்றுள்ளன. சில கோயில்களில் மேற்கண்ட சில செய்தி கள் குறைந்து காணப்படலாம். அக்கோயிலின் இயல்பைப் பொறுத்தது. ஒவ்வொரு கோயிலில் கிடைக்கப் பெற்ற புதிய செய்திகளும் அக்கோயில் பற்றிய கட்டுரையில் தரப்பட்டுள்ளன

பெரும்பான்மையாக இக்கட்டுரைகள் மேற்கண்ட பாகுபாட்டில் அடிப்படையிலேயே தரப்பெற்றுள்ளன. கோயில்ப்ளுக்கான புகைப்படங்கள் ஆய்வேட்டில் இறுதியில் இணைக்கப் பட்டுள்ளன.

இக்குறுகிய கால (ஆகஸ்ட் 1987-பெப்ருவரி 1988) ஆவணப் பதிவுத் (Documentation) திட்டத்திற்கான செய்திகளை சேசரிப்பதற்கும் புகைப்படம் எடுப்பதற்கும் இப்பொருள் பற்றி ஆய்வு செய்வதற்கும் உதவி ஊக்கமளித்த தமிழ்ப் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் முனைவர் ச. அகத்தியலிங்கம் அவர்களுக்கு என் நன்றி.

இவ்வாய்வேட்டினை மதிப்பீடு செய்து கருத்துரைகள் நல்கிய பெரியார் அமரர் திரு. கே. ஆர். சீனிவாசன் அவர்கட்கு நான் பெரிதும் கடப்பாடுடையேன்.

இந்நூலுக்கு முகவுரை நல்கி சிறப்புச்செய்த தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் ஔவைநடராசன் அவர்கட்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாய்வு நூலாக வெளிவர உதவிய நண்பர்கள் அனைவருக்கும் என் நன்றி.

தஞ்சை
14—12—94 க, குளத்தூரார்ன்

# பொருளடக்கம்

பக்கம்

முன்னுரை :

முதற்பாகம்

1. சமயமும் வழிபாடும் 1 - 20

2. சிற்பக் கலை 21 - 35

3. கோயில் அமைப்பும் கட்டடக்கலையும் 36 - 46

இரண்டாம் பாகம்

அ. கோயில்களும் விதிகளும் 47 - 49

ஆ. கோயில் பற்றிய விபரங்கள் 50 - 167

பயன்பட்ட நூற்பட்டியல் 161 - 169

புகைப்படங்கள் 170 - 176

# 1. சமயமும் வழிபாடும்

பெண் தெய்வ வழிபாடு தொன்று தொட்டு உலகின் பல பாகங்களிலும் பல நூற்றாண்டுகளாகவே நிலைபெற்று வருகிறது. ண்வழிச் சமுதாய அமைப்பு பழங்குடி இனத்தவரிடம் ஏற்பட்ட காலத்திலிருந்தே இவ்வழிபாடு சிறப்புற்று விளங்கியது எனலாம்.[1] பழங்குடி இனத்தவரிடம் செழிப்புத் தெய்வமாக இப்பெண் தெய்வங்கள் இன்றும் கிராமிய, பழங்குடி மக்களிடம் நிலைபெற்றுள்ளன. காவல் தெய்வங்களாகவும் நோயை உண்டு பண்ணுபவளாகவும் அச்சத்தை உண்டு பண்ணுபவளாகவும் அச்சத்தைப் போக்குபவளாகவும் மழையை உண்டு பண்ணுபவளாகவும் வெற்றியை அளிப்பவளாகவும் உயிரினங்களைக் காப்பாற்றுபவளாகவும் இப்பெண் தெய்வங்கள் விளங்குகின்றன. இவை வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு பகுதிகளில் வெவ்வேறு பெயர்களுடன் வழிபடப்படுகின்றன. அத்தெய்வங்களுக்கு வெவ்வேறு உருவங்களை அமைத்தும் வழிபட்டுள்ளன². மேலும் தனது சமூகத்தில் மறைந்த தலைவர்கள் அல்லது சிறப்பு மிக்கவர்கள், தன் குடும்பத்தினர் போன்றோர் தெய்வங்களாகக் கருதி வழிபடப்பட்டனர். பெண்ணைத் தெய்வமாகக் கருதி வழிபடும் பழங்குடி அல்லது நாட்டுப்புறச் சமய மரபானது உயர் சமயங்களும் வழிபாடுகளும் தோன்றிய காலத்திலும் அதனோடு பின்னிப் பிணைந்தே வந்துள்ளது. சில காலங்களில் பெண் தெய்வம் உயர்வாகக் கருதப்பட்டும் சில காலங்களில் ஆண் தெய்வத்திற்குத் தாழ்ந்தும் சமுதாயச் சூழ்நிலைகளுக்கேற்ப மாற்றம் அடைந்து வந்துள்ளது. உயர் இந்து சமயமும் அதன் தத்துவங்களும் புராணங்களும் வழிபாட்டு நெறிகளும் இந்தியாவில் ஒரு பக்கத்தில் வளர்ந்து கொண்டே வந்துள்ளன. சிந்து சமவெளி நாகரிகத்திலும் அதற்கு முன்பும் பின்பும் இந்தியாவில் பல பாகங்களிலும் பெண் தெய்வ வழிபாடுகள் தோன்றி வளர்ந்துள்ளன. உயர் சமயங்களும் வழிபாடுகளும் சமுதாயத்தில் தோன்றி வளர்ந்த பின்பும் அவை மக்களிடையே நிலைபெற்றுள்ளன. உயர் சமயங்கள், சடங்குகள், பூசை முறைகள், விழாக்கள் என்று ஏற்பட்ட பின்பு முன்பே இருந்து வந்துள்ள புராதன வழிபாடுகளும் சடங்குகளும் உயர் சமயவழிபாடு, சடங்குகளுடன் கொள்வினை கொடுப்பினையைச் சில சூழ்நிலைகளில் ஏற்படுத்திக் கொண்டன.

---

1 See. Battacharya, 1973.

மேலும் பல உயர் சமய வழிபாடுகளுக்கும் சடங்குகளுக்கும் மூல காரணமாகப் புராதன சமயமும் வழிபாடுகளும் அமைந்திருந் தன. இரண்டு சமய நெறிகளும் சமூகச் சூழ்நிலைக்கு ஏற்ப ஒன்றையொன்று தழுவிக் கொண்டன. இன்று காணப் படுகின்ற உயர் சமய வழிபாடுகளிலும் நெறிகளிலும் புராதன வழிபாட்டு எச்சங்களைக் காண்கிறோம். அதே போன்று புராதன சமய, வழிபாடுகளில் உயர் சமயத் தாக்கங்களையும் பார்க்கலாம். இச்சமய வழிபாடுகளுக்காக ஏற்படுத்தப்பட்ட கோயில்களில் இவ்வா றான மாற்றங்களைக் காணலாம். கோயில்களின் பல்வேறு அம்சங் களிலும் இவற்றைக் காணலாம்.

வரலாற்றுப் பேராசிரியரும் கணித மேதையுமான கோசாம்பி அவர்கள் கூறுவதாவது :

'' .. .. பண்பாட்டுக் க Acculturation) என்பது இந்தி யாவில் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாகவே தொடர்ந்து நடை பெற்று வருகின்ற ஒரு நிகழ்வாகும்; அதன் காரணமாகவே நாம் அதன் காலத்தை நிர்ணயிக்க முடிவதில்லை. அடிப்படையில் இக் கலப்பு வன்முறைச் சம்பவங்களால் அமையக் கூடியதல்ல. ஏனென் றால் ஒரு புதிய சமுதாயம்உருவாகி வருகின்ற காலங்களில் உயர்ந்த பண்பாட்டுக் கூறுகளும் தாழ்ந்த பண்பாட்டுக் கூறுகளும் ஒன்றிடமிருந்து ஒன்று சில கூறுகளைக்கடன் வாங்கிக் கொள்கின்றன. அவை எத்தகைய கூறுகளைக் கடன் வாங்கிக் கொள்கின்றன, என்னென்ன கூறுகளில் கலப்பு ஏற்படுகின்றது என்பதைப் போன்ற எல்லா விவரங்களையும் நாம் அக்கலப்பின் வரலாற்றுப் பின்னணியில் அறிந்து கொள்ள முடியாவிட்டாலும் இத்தகைய பண்பாட்டுப் பரிமாற்றங்களை வரலாற்றாசிரியர்களின் பார்வைக்குக் கொண்டு வராமல் புறக்கணித்தாலோ மூடி மறைத்தாலோ வரலாற்றின் சில முக்கியமான மூலங்களை இழந்து விட்டதாகத்தான் கூற முடியும்''[2] என்று கூறுகிறார்.

சில காலங்களில் பெரிய பண்பாடும் சிறுபண்பாடும் அல்லது பெரிய சமய நெறிகளும் சிறிய சமய நெறிகளு

2. Kosambi, D. D. 1956, P. 50.

கொள்வினை கொடுப்பினை வைத்துக் கொண்டு தங்கள் நெறியைச் செழுமைப்படுத்திக் கொள்கின்றன. இத்தகைய பண்பாட்டுக் கலப்புகள் சில காலங்களில் மட்டுமே நிகழ்கின்றன. சில காலங்களில் இத்தகைய பண்பாட்டுக் கலப்புகளைக் காணமுடிவதில்லை, ஏன்? அதற்கான காரணங்களை நாம் அந்தந்தச் சமுதாய வரலாற்றுச் சூழ்நிலைகளை ஆராய்ந்து கண்டு பிடிக்க வேண்டும்.

இந்தியாவில் வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு சமய வழிபாடுகள் வெவ்வேறு இடங்களில் இணைந்துள்ளன. விஷ்ணு-நாராயணனின் பல்வேறு அவதாரங்களை எடுத்துக் கொள்ளலாம். பல அவதாரங்களாகக் கருதப்படும் வடிவங்கள் ஒரு காலத்தில் பாமர மக்களின் வழிபாட்டுத் தெய்வங்களாகக் கருதப்பட்டன. அவை பிற்காலத்தில் விஷ்ணு—நாராயணா என்ற உயர் வைணவ தெய்வத்தின் அவதாரமாகக் கருதப்பட்டு உயர் மரபுடன் இணைக்கப்பட்டு உள்ளன.[3] இது ஒரு சமுதாயச் சூழலில் ஏற்பட்டது. அதே போன்று பலவகையான கிருஷ்ணர்களும் ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளன. கிருஷ்ணனின் மனைவிகள் கிராம தேவதைகளாகக் கருதப்பட்டவை. அதே போன்று சிவன் — பார்வதி கணவன் மனைவியாகவும் அர்த்தநாரீசுர வடிவமாகவும் இணைக்கப்பட்டது. இவ்விணைப்பு வன்முறைகளால் ஏற்பட்டதல்ல.

தற்காலத்தில் உயர் தெய்வங்கள் வீற்றிருக்கும் கோயில்களில் பழங்குடி மக்கள் அல்லது நாட்டுப்புற மக்கள் வழிபடுகின்ற தெய்வங்கள் வீற்றிருப்பதைப் பார்க்கலாம். இவை உயர் சமயத்தாரால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. அல்லது சில சூழ்நிலைகளின் காரணமாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளன. அதே போன்று கிராம தேவதைக் கோயில்களில் உயர் தெய்வங்கள் வைக்கப்பட்டு வழிபடப்படுகின்றன. உயர் சமயத்தினர் பழங்குடி அல்லது நாட்டுப்புறத் தெய்வங்களை ஏற்றுக்கொள்ளும்போது அத்தெய்வங்கள் உயர் சமயத் தெய்வங்களின் மனைவியாகவோ, கணவனாகவோ, அவதாரங்களாகவோ, குழந்தையாகவோ, சகோதரராகவோ,

3. Kosambi, D.D. 1962, P. 28.

சகோதரியாகவோ, பணியாளராகவோ மாற்றப்படுகின்றன. அதற்கான புராணங்களும் அத்துடன் தோற்றுவிக்கப்படுகின்றன. வெவ்வேறு சிறு சமூகங்களிடம் காணப்படும் வெவ்வேறு வழிபாடுகள் உயர் சமயத்தில் இணைகிறது என்றால் வெவ்வேறு சிறு சமூகங்கள் ஒரு பெரிய சமூகத்தில் இணைகிறது என்றுதான் பொருள். வடிவங்கள் அல்லது வழிபாடுகள் இயற்கையாக இணைந்து விடுவதில்லை. அவற்றை வழிபடுகின்ற மக்கள் கூட்டத்தினரிடம் ஒரு ஒற்றுமை அல்லது இணைப்பு ஒரு குறிப்பிட்ட சமூகச் சூழ்நிலையில் ஏற்படுகின்ற காலத்தில் அவர்களது வழிபாடுகளும் இணைகின்றன. சமூக அமைப்பில் வேற்றுமைகள் ஏற்படாதிருக்கும் போது சமய மட்டத்திலும் இத்தகைய கொள்வினை கொடுப்பினை நிகழ்கின்றது. சமூக அமைப்பில் இத்தகைய ஒற்றுமை நிலவவில்லையென்றால் சமயமட்டத்தில் இத்தகைய இணைப்புகளையும் சகிப்புத் தன்மையையும் நாம் பார்க்க முடியாது. கோசாம்பி அவர்கள், இது பற்றிக் கூறுவதாவது:

''சிக்கல்கள் மிகுந்ததும் மூடநம்பிக்கைகள் மிகுந்ததுமான பிராமணீய சமய வழிபாடுகள் பல கிராமிய, பழங்குடி சமய வழிபாடுகளைச் சிறிதும் அழிக்காமல் தங்கள் சமயத்துக்குள் தன்மயமாக்கியுள்ளன. பல மக்கள் கூட்டம் ஒரு சமூகத்தில் எத்தகைய முரண்பாடுகளுமின்றி இணைக்கப்படுவது போன்று வழிபாடுகளும் இணைக்கப்பட்டுள்ளன. ... ...இந்தியப் பண்பாட்டு வளர்ச்சியில் காணப்படும் இத்தகைய சகிப்புத் தன்மைக்கு மிகவும் அடிப்படையாக அமைவது ஒரு காலத்தில் ஓர் இடத்தில் உற்பத்தி முறைகளால் ஏற்படும் சமுதாய வரலாற்று மாற்றங்களே காரணமாகும்''[4] என்று கூறுகிறார்.

மேலும் போர்களின் மூலமாகவும், வியாபாரத் தொடர்புகள் காரணமாகவும் மக்கள் இடம் பெயர்ந்து (Migration) செல்வதாலும் பிரதேச, தேசிய உணர்வுகள் காரணமாகவும் இப்பண்பாட்டுக் கலப்புகள் ஏற்பட வாய்ப்புண்டு.

இந்துக்களில் சிவனை மூலதெய்வமாகக் கருதி வழிபடுபவர் சைவர்கள் என்றும் விஷ்ணுவை முழுமுதற் கடவுளாகக் கருதி வழிபடுபவர்களை வைஷ்ணவர்கள் என்றும் சக்தியை மூலதெய்வ

---

4. Kosambi, D.D. 1956, P. 45.

மாகக் கருதி வழிபடுபவர்களைச் சாக்தர்கள் என்றும் கூறுகின்றனர். சைவ மதத்தைச் சார்ந்தவர்கள் பார்வதியைச் சிவனின் மனைவியாகக் கருதினாலும் சிவனுக்கே முதன்மை அளிக்கிறார்கள். அதே போன்று வைணவ மதத்தைச் சார்ந்தவர்கள் லெட்சுமியை விஷ்ணுவின் மனைவியாக ஏற்றுக் கொண்டாலும் விஷ்ணுவுக்கே முதன்மை அளிக்கப்படுகிறது. ஆனால் சாக்த மதத்தைச் சார்ந்தவர்கள் சக்தியே முழுமுதற்தெய்வமாகவும் அவனில்லாமல் எதுவும் இயங்க முடியாது; தோன்ற முடியாது என்று கூறுகின்றனர். யோக சாஸ்திரங்கள் (Yoga – Sastras) மனிதனிடத்தில் மறைந்து கிடக்கும் சக்தி வடிவினை அல்லது குண்டலினி சக்தியை வெளிப்படுத்துவதையும் அறிவதையுமே முக்கியமாகக் கூறுகிறது. இக்குண்டலினி சக்தி முதுகுத்தண்டுவடத்தில் (Spinal Cord)அடியில் காணப்படும் மூலாதாரத்தில் (Muladhara) இருப்பதாகக் கூறப்படுகிறது. மூலாதாரத்தில் மறைந்து கிடக்கும் இச்சக்தியை வெளிப்படுத்துவதினால் அல்லது உணருவதினால் ஆத்ம விடுதலையும் மோட்சமும் கிடைப்பதாகக் கூறப்படுகிறது. யோகத்தை மேற்கொண்டு மூலாதாரத்தில் அமைதியாக இருக்கும் இக்குண்டலினி சக்தியை மந்திரங்கள் மூலமாக யோகிகள் எழுப்புகின்றனர். ''இவ்வாறு குண்டலினி சக்தி எழுப்பப்படும்போது அது மூலாதாரத்தினின்றும் மேற் கிளம்பி, முதுகுத் தண்டு வடத்தில் அடுத்து அமையும் மையமான சுவாதிஷ்டானா (Swadhisthana)வுக்கு வருகிறது. அடுத்து மணிபுரம் (Manipura) அனாஹதம் (Anahata) போன்ற மையங்களுக்குச் செல்கிறது. அனகடாவில் சக்தி ஒலியாக மாறுகிறது. அடுத்து வாசுத்தி (Visuddhi) என்ற மையத்தைச் சென்று அடைகிறது. அங்கு அது சத்விக நிலையை அடைகிறது. இறுதியாக ஆக்ஞா (Ajna) என்ற மையத்தைச் சென்று சேர்கிறது. இங்கு சக்தி ஒளிவடிவினைப் பெறுகிறது''[5] யோகத்தின் மூலம் மூச்சை அடக்குகின்ற முறைகளினால் இவ்வாறு செய்துகொண்டே இருந்தால் இச்சக்தியின் ஒளியினைக் காணலாம்.

மேலே கூறப்பட்ட இந்த ஆறு மையங்களிலும் நிகழ்கின்ற விளைவுகளை வரைபடம் மூலம் (Diagramatic Sketch) காட்டு

---

5. GopinathaRao, T. A. 1971, P. 329.

கிறார்கள். இந்த வரைபடங்களைச் 'சக்கரம்' அல்லது 'யந்திரம்' என்று கூறுகிறார்கள். ''தந்திர சாஸ்திரங்களில்' சக்கரம்' என்பதை ஒரு படம் என்றும் அதில் கோண வரிகளும் (Angles) பூவிதழ் போன்ற பாகங்களும் வரையப்படுகின்றன என்று கூறுவர். கோண வரிகள் மட்டுமேயுள்ள படங்களை 'யந்திரம்' என்பர். இந்த யந்திரங் களிலும் சக்கரங்களிலும் சில எழுத்துக்கள் சில பாகங்களில் எழுதப் படுகின்றன. இவற்றை 'பீஜாக்ஷரம் என்பர்''[6] இந்த பீஜாக் ஷரங்கள் குறியீட்டுச் சொற்கள் போல் (Code-words) எழுதப்படு கின்றன. யோகத்தை மேற்கொள்கின்றவர்களுக்கே அவ்வெழுத்துக் களின் முக்கியத்துவம் தெரியும். யந்திரங்களில் ஸ்ரீ சக்ரமே மிகவும் முக்கியமானதாகும். இந்த யந்திரத்தில் 43 முக்கோணங்கள்வரையப் பட்டுள்ளன. இவ்வியந்திரங்கள் சில உலோகத் தகடுகளில் பொறிக் கப்படும். வெள்ளி, தங்கம், பித்தளை போன்ற உலோகங்களில் இவை எழுதப்படும். தென்னிந்தியாவில் அமைந்துள்ள சில சக்திக் கோயில்கள் சக்தி பீடாலயம் என்று அழைக்கப்படுகின்றன. இக் கோயில்களில் ஒரு பீடம் பலி பீடத்தைப்போல் (மேரு) அமைக்கப் பட்டுள்ளது. இப்பீடத்தில் ஸ்ரீசக்ரம் உலோகத்தகடு வைக்கப் படுகிறது. இப்பீடத்திற்கு ஒழுங்காகப் பூசை செய்யப்படும். காஞ்சி காமாட்சி கோயிலில் இதனைக் காணலாம். மேலும் பல்வேறு சக்திக் கோயில்களிலும் பீடத்தின் அடியில் சில யந்திரங்கள் வைக்கப்படும் மரபு உண்டு.

சக்தியானவள் பல்வேறு வடிவங்களில் வழிபடப்படுகிறாள். அவளது வீரச் செயலுக்காகச் சிலவேளைகளில் அவள் சில பெயர் களில் அழைக்கப்படுகிறாள். மகிசாசுரனை அழித்தமையால் மகி சாசுரமர்த்தினி என அழைக்கப்படுகிறாள். மார்க்கண்டேய புராணத்தில் காணப்படும் தேவி மகாத்மியத்தில் தேவியே கூறு வதாவது :— ''கலியுகத்தின் தொடக்கத்தில் சும்ப, நிசும்பன் என்ற அசுரர்கள் பிறப்பார்கள், நானும் நந்தகோபாலன் மகளாக நந்தா என்ற பெயரில் பிறப்பேன்; விந்திய மலையில் என்னு டைய இருப்பிடத்தை அமைத்துக் கொள்வேன். பின்பு துவபரயுகத்தின் முடிவில் நான் விபரசித்தா குடும்பத்தில் பிறக்கும் இவ்வசுரர்களை அழிப்பேன் என்று கூறுகிறாள். நான்

6. Ibid, P. 330.

அவர்களைக் கொன்று உண்பதால் என்னுடைய பற்கள், முடி, உடல், ஆயுதங்கள் அனைத்தும் ரத்தம்போல் சிவப்பாகும். அதன் காரணமாக நான் ரத்தசாமுண்டா என்று அழைக்கப்படுவேன். அடுத்து அடுத்து இவ்வுலகத்தில் நூறு ஆண்டுகளுக்கு ஒரு பஞ்சம் தோன்றும். அப்போது ஒரு சொட்டுத் தண்ணீர் இவ்வுலகில் கிடைக்காது. முனிவர்கள் என்னை வழிபட்டு வேண்டுவதன் காரணமாக நான் அச்சமயத்தில் பார்வதியின் உடம்பிலிருந்து வெளிப்படுவேன். என்னை எல்லோரும் அப்போது ஷடாக்ஷி என்று அழைப்பார்கள். பின்பு இவ்வுலகத்தினைக் காப்பதற்காகச் செடிகொடிகளையும் பிற வாழ்க்கைக்கு வேண்டிய பொருட்களையும் பஞ்சத்திலிருந்து மக்களை விடுவிக்கப் படைப்பேன். அப்போது மக்கள் சகானுபாகி சாகம்பரி என்று அழைப்பார்கள். இவ்வடிவத்தில் நான் துர்க்கமா என்ற அசுரனைக் கொல்வேன், அதன் பின்பு என்னை எல்லோரும் துர்க்கா தேவி என்று அழைப்பர். பிறகு நான் இமயமலைக்குச் சென்று பீமா என்ற பயங்கர உருவத்தை எடுப்பேன். அருணா என்ற அசுரனைக் கொல்வேன் அவனைப் பிரமர (வண்டு) வடிவத்தில் (Swarm of Wasps) ஒழிப்பேன். இதனால் நான் 'பிரமரி' என்று அழைக்கப்படுவேன்.''[7] இவ்வாறாக மார்க்கண்டேய புராணத்திலுள்ள தேவி மகாத்மியம் தேவியின் பல்வேறு வடிவங்களின் தோற்றங்களையும் பெயர்களையும் நமக்குத் தருகிறது. வராக புராணம், வாமனபுராணம் முதலியன மகிசாசுர மர்த்தினியின் தோற்றம் பற்றி வேறு கதைகளைப் புனைந்துள்ளன.

தேவியானவள் முழுமுதற் கடவுளாகவும் பிற தெய்வங்களின் தோற்றத்திற்குக் காரணமான மகாலெட்சுமி என்ற ஆதிசக்தியாகவும் கருதப்படுகிறாள். அதற்கான விளக்கங்களையும் மார்க்கண்டேய புராணதேவி மகாத்மியம் நமக்கு வழங்குகிறது. அதில் கூறப்படுவதாவது:- ''குப்தரூப தேவியான சக்தி (unmanifested) முதலில் லெட்சுமி, மகாகாளி, சரஸ்வதி என்ற வடிவங்களை எடுக்கிறது. இவை ராஜச, சாத்விக, தாமச குணங்களை முறையே பெற்றுள்ளன''[8] எனக்கூறுகிறது.

7. See Gopinatha Rao, T. A. 1971, p. 334.
8. See Gopinatha Rao, T.A 1971, p. 334.

8. தஞ்சை நகரிய சக்திக் கோயில்கள்

சக்தியானவள் உலகப் படைப்புக் காலத்தில் மகாகாளியாகத் தோன்றிப் பிரம்மாவைத் தனது கட்டுப்பாட்டில் வைத்து இவ்வுல கத்தைத் தோற்றுவிக்கிறாள். அடுத்துப் பிரளய காலத்தில் அல்லது உலக அழிவுக் காலத்தில் அவள் மகாமாரியாக அழைக்கப்படு கிறாள். செல்வத்தையும் செழிப்பையும் கொடுப்பதற்காக அவள் லெட்சுமியாகவும் செல்வத்தையும் செழிப்பையும் அழிக்கின்றபோது அலெக்சுமியாகவும் ஜேஷ்டாதேவியாகவும் கருதப்படுகிறாள்.

படைப்புக் காலத்தில் சக்தியானவள் கருமை நிறமுடைய பெண்ணாகத் தோன்றுகிறாள். அவள் மகாமாயா, மகாகாளி, மகா மாரி சுந்தா, டிரிஷா, நிர்தா, ஏகவீர, களராத்திரி, துரஷ்யா என்ற பெயர் களைத் தாங்கி வெளிவருகிறாள். மகாலெட்சுமியின் கட்டளைப்படி இவள் தன்னை இரண்டு பாகங்களாகப் பிரித் துக் கொள்கிறாள். அதில் ஒரு ஆண்பாகம் நீலகண்ட, ரக்தபாகு, சுவேதங்கா, சந்திரசேகர, ருத்ரா, சங்கரா, ஸ்தானு, திரிலோசனா என்ற பெயர்களில் அழைக்கப்படுகிறார். பாகமானது வெள்ளை நிறமுடைய வித்யா, பாசா, ஸ்வர, அக்ஷர, காம தேனு என்ற பெயர்களைத் தாங்கித் தோன்றுகிறது.

அதேபோல சத்வ வடிவானது அக்கமாலை, அங்குச, வீணை, கங்களுடன் மகாலெட்சுமியால் தோற்று விக்கப்படுகிறது. மகா லெட்சுமியின் கட்டளைப்படி இவ்வடிவமானது மகாவித்யா, மகாவாணி, பாரதி, வாக், சரஸ்வதி, ஆர்யா, பிரம்மி, காம தேனு, வேதகர்மா, தி, ஈஸ்வரி என்று அழைக்கப்படுகிறாள். இவள் தன்னை ஆண், பெண் பாகங்களாக மகாலெட்சுமியின் கட்டளையினால் பிரிக்கிறாள். அவ் ஆண் வடிவம்தான் விஷ்ணு, கிருஷ்ண, ஹரிஹர், வாசுதேவ, ஜனார்த்தனன் என்று கூறப்படுகி றது. அப்பெண்ணுருவம் உமா, கௌரி, சண்டி, சுந்தரி என்று அழைக்கப்படுகிறாள்.

மகாலெட்சுமியின் ராஜச வடிவம்தான் லெட்சுமி இவள் தன்னை "ஆண், பெண் என இரண்டு பாகங்களாகப் பிரித்து ஹிரண்ய கர்பா, பிரமன் என்ற பெயர்களைத் தாங்கி ஆண் வடிவத்தையும் ஸ்ரீ, பத்மா, கமலா; லெட்சுமி என்னும் பெயர்களில் அழைக்கப்படும் பெண் தெய்வத்தையும் படைக்கிறாள்.

பின்பு மகாலெட்சுமி பிரம்மாவிடம் சரஸ்வதியை மனைவியாக ஏற்றுக் கொள்ளும்படி செய்கிறாள். பிரம்மாண்டம் இச்சேர்க்கையினால் ஏற்படுகிறது. சிவன் அல்லது ருத்ரன் கௌரியைத் திருமணம் செய்து கொள்கிறார். லட்சுமி விஷ்ணுவின் மனைவியானார். அவர்கள் உலகத்தைக் காக்கப் புறப்பட்டார்கள். ஆதலால் தேவி மகாத்மியத்தின் மூலம் எல்லாக் கடவுளர்களும் மகாலெட்சுமி என்ற ஆதிசக்தியிலிருந்தே தோன்றியது என அறியலாம்.

சாக்த மதம் விரைவாகப் பரவி வளர்ந்த காலத்தில் பெண் தெய்வ வழிபாடுகள் சிறப்படைந்தன. முன்பே இருந்து வந்த பல நாட்டுப்புற, பழங்குடி பெண் தெய்வங்கள் சக்தியின் வேறு வடிவங்களாகவும் அவதாரங்களாகவும் அம்சமாகவும் மாறின. அவை சக்தி வழிபாட்டில் ஒருங்கிணைந்தன. இதற்காகப் பல புராணங்களும் எழுந்தன. அவற்றை அங்கீகரித்தன.

தமிழ்நாட்டில் சக்தி வழிபாடு சங்க காலத்திலிருந்தே தொடர்ந்து வருவதை நாம் காண்கிறோம். சங்க இலக்கியங்கள் துர்க்கை, காளி வடிவங்களைப் பற்றிக் கூறுகின்றன. 'கொற்றவை' என்ற துர்க்கை வடிவம் வெற்றியைத் தரும் தெய்வமாகக் கருதப்படுகிறாள். சங்க இலக்கியம் 'பழையோள்' என்ற பழமையான காளியைப் பற்றிக் கூறுகிறது. காளி காட்டில் இருப்பதால் 'காடுகாள்' எனக் கூறப்படுகிறாள். திருமுருகாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, குறுந்தொகை, அகநானூறு, கலித்தொகை போன்ற இலக்கியங்கள் இவ்வடிவங்களைப் பற்றிக் கூறுகின்றன. 'கொற்றவை நிலை' என்று தொல்காப்பியம் விளங்குகிறது. சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற காப்பியங்கள் துர்க்கையைப் பற்றிக் கூறுகின்றன. சிலப்பதிகாரத்தில் வேட்டுவவரியில் 'கொற்றவை' பற்றிய செய்திகள் விரிவாகவே கூறப்பட்டுள்ளன. பன்னிரு திருமுறைகளில் திருமந்திரம் சக்தியைப் பற்றியும் சாக்த மதத்தின் பல்வேறு அம்சங்களையும் யந்திரங்களையும் சக்ரங்களையும் விரித்துக் கூறுகிறது எனலாம்.[9] தொடர்ந்து பரணி இலக்கியங்கள் காளி பற்றிய செய்திகளை விரிவாகவே எடுத்து இயம்புகின்றன.

---

Nagaswami, R 1982, p. 46 - 64.

இவ்விலக்கியங்கள் சக்தி வழிபாடு தமிழ்நாட்டில் பல நூற்றாண்டு களாகவே நிலைபெற்று வருவதை நமக்கு எடுத்துக்காட்டுகின்றன. இக்கொற்றவை பின்பு சிவனின் மனைவியாக மாறியது.

இலக்கியங்கள் மட்டுமல்லாமல் தமிழ்நாட்டில் பல்லவர் குகைக் கோயில்களிலும் கட்டுமானக் கோயில்களிலும் சக்தியின் பலவடிவங் கள் வடிக்கப்பட்டுள்ளதைக் காணலாம் (கி. பி. 7—9 ஆம் நூற் றாண்டு) சோழர் காலத்தில் தஞ்சையிலும் தாராசுரத்திலும் சிதம் பரத்திலும் அம்மன் சிலைகளும் சன்னதிகளும் மிகுந்தே காணப்படு கின்றன. மதுரை மீனாட்சியம்மனும், காஞ்சி காமாட்சியம்மனும் குமரி பகவதியம்மனும் சக்தி வழிபாடு தமிழகத்தில் காலம் கால மாக வளர்ந்து வந்துள்ள நிலையினை எடுத்துக்காட்டுகிறது.

தஞ்சை நகரில் அமைந்துள்ள சக்திக் கோயில்கள் பலவாகும். சோழர் காலத்திற்கு முன்பும் பின்பும் நாயக்கர், மராட்டியர் காலத்திலும் இச்சக்தி வழிபாடு வளர்ச்சியடைந்தே வந்துள்ளது. தஞ்சை நகரத்தில் விவசாய அடிப்படையில் எழுந்த பல சமூகங் களில் கிராம தேவதைகளின் வழிபாடும் நிலைபெற்றே வந்துள்ளன. இக்கிராம தேவதைகள் உயர் இந்துமத சக்தி கோயில்களில் குறிப் பிட்ட காலத்தில் இடம் பெற்றுள்ளன; அல்லது உயர் சமய மரபில் இணைக்கப்பட்டன. பல உயர் சக்தி வடிவங்கள் கிராம தேவ தைகளின் கோயிலில் இடம் பெற்றன. இருப்பினும் சில கிராம தேவதைகள் எத்தகைய கலப்பும் இல்லாமல் கிராம மக்களிடையே நிலவி வருவதுபோல் சில சக்திக் கோயில்களும் கிராம தேவதை களை அங்கீரிக்காமல் தனித்து நிற்கின்றன.

தஞ்சை நகரத்தில் ஏறத்தாழ அறுபதுக்கும் மேற்பட்ட சக்தி, கிராம தேவதைகளின் கோயில்களைப் பார்க்கலாம். இப்பெண் தெய்வ வழிபாடுகள் தஞ்சை நகரத்தில் பரவலாக ஆங்காங்கே தெருவார்களின் ஆதரவில் நடைபெற்று வருகிறது. இவற்றில் சியாமளாதேவி அம்மன், காளியம்மன், செங்கமல நாச்சியம்மன், திரௌபதையம்மன், காமாட்சியம்மன் வழிபாடுகளே பெருவாரி யாகத் தஞ்சைப் பகுதியில் சிறப்புற்று விளங்குகின்றன. அவற்றில் சியாமளாதேவி அம்மன் வழிபாடே பதினாறு கோயில்களில் செய்

யப்படுகிறது. சியாமளாதேவி அம்பிகையின் ஒரு வடிவமாகக் கருதப் படுகிறது. காஞ்சி காமாட்சியம்மன் கோயிலில் சியாமளாதேவிக்குத் தனிச் சன்னதி உள்ளது. கலைஞர்கள் மிகுந்த தஞ்சையில் இவ்வழி பாடு மிகுதியாக இருக்கிறது. நாயக்கர் காலத்திலிருந்தே இவ்வழி பாடு சிறப்புற்று விளங்குகிறது எனலாம். காளியம்மன் வழிபாடு சோழர் காலத்திலிருந்தே புகுத்தப்பட்டது. விஜயாலயன் தஞ்சையில் நிசும்பசூதனிக்குக் கோயில் எடுத்தான் என்ற செய்தி திருவாலங்காட் டுச் செப்பேடுகளில் கூறப்பட்டுள்ளது.[10] இக்காளியம்மன் தஞ்சை நகரத்தில் கருவக்காட்டுப் பகுதியில் அமைந்துள்ள நிசும்பசூதனி என்று அழைக்கப்பகிற உக்ரகாளியம்மன் ஆகும் என்பது அறிஞர் கள் முடிவு. போருக்குச் செல்லுமுன் வழிபடப்படும் தெய்வமாக வும் வெற்றியைத் தரும் தெய்வமாகவும் இக்காளியம்மன் கருதப்படு கிறாள். இதனைத் தொடர்ந்து தஞ்சையில் பல காளியம்மன் கோயில்கள் எழுந்தன. புள்ளமங்கை, திருநாகேச்சுரம் போன்ற இடங்களிலுள்ள கோயில்களிலும் இவ்வம்மன் உருவம் புடைப்புச் சிற்பங்களாக ஆங்காங்கே வடிவாக்கப்பட்டுள்ளன. சோழர் காலத் தில் காளியம்மன் வழிபாடே தஞ்சையில் உயர் சமய மரபில் சிறப் புற்று விளங்கியது எனக் கருதலாம். மேலும் தஞ்சை தெற்குவீதி காளிகாபரமேஸ்வரி, மேலலங்கம் வடபத்ரகாளியம்மன், சிரேஸ் சத்திரம் வடபத்ர காளியம்மன் ஆகியவை சோழர் காலத்தில் சிறப் புற்று விளங்கின. இதில் வடபத்ர காளியம்மன், காளிகா பரமேஸ் வரி சிற்பங்கள் பலவகையிலும் ஒரே அம்சங்களைப் பெற்றுள்ளன. தஞ்சை கோடியம்மனும் இக்காலத்தில் சிறப்புடன் விளங்கியிருக்க லாம். நாயக்கர் காலத்தில் அங்காள பரமேச்வரி, சியாமளாதேவி கோயில்கள் தோன்ற ஆரம்பித்தன எனலாம். நாயக்கர்கள் கட்டிய ராஜகோபால்சாமி கோயில் தஞ்சையில் பிரசித்திப் பெற்றதாகும். இதில் அவர்கள் தோற்றுவித்த 'மகிசாசுர மர்த்தினி' என்ற காளி யம்மன் கோயில் விசேடமானதாகும். ஏராளமான சிற்பங்களுடன் (ஏறத்தாழ 160) அம்மனின் பல வடிவங்களையும் இங்கு காண லாம். மேலும் நாயக்கர்கள் மேலலங்கம் வடபத்ர காளியம்மன், தெற்குவீதி அங்காளம்மன் கோயில்களைப் புதுப்பித்திருக்கலாம். மராட்டியர் காலத்திலும் இக்கோயில்களில் திருப்பணிகள் நடை

---

10. See: Nagaswami, R. 1982, p. 175.

பெற்றுள்ளன. தஞ்சை ராஜகோபால்சாமி கோயில் தெருவில் காணப்படும் சியாமளாதேவி அம்மன் கோயிலில் நாயக்க அரச குடும்பத்தினரின் சிலைகள் அஞ்சலி முத்திரையுடன் காட்சியளிக்கின்றன. ஆதலால் அவர்கள் காலத்திலிருந்தே சியாமளா தேவி வழிபாடு இப்பகுதியில் வளர்ந்தது எனலாம். மராட்டியர்கள் காலத்தில் தஞ்சை கீழவாசல் பூமால் ராவுத்தன் கோயிலருகே கட்டப்பட்ட வடபத்ர காளியம்மன் சிறந்து விளங்குகிறது. மராட்டியர் காலத்தில் ராஜகோபல்சாமி காளிகோயிலில் பெண்களைப் பலியிடும் வழக்கம் இருந்ததாகக் கூறப்படுகிறது. மராட்டியர்கள் கட்டிய பிற கோயில்களில் பங்காரு காமாட்சியம்மன் கோயில், எல்லையம்மன் கோயில் ஆகியவை விசேடமானதாகும். மேலும் கொடிமரத்து மூலை முத்துமாரியம்மன் கோயிலும் இவர்கள் காலத்தில் கட்டப்பட்டது. காமாட்சியம்மன் வழிபாடு காஞ்சியிலிருந்து இப்பகுதியில் வந்து சேர்ந்ததாகும். மராட்டியர்களின் குலதெய்வமான அம்பா பவானி வழிபாடு மராட்டியர்கள் காலத்தில் இப்பகுதியினை அடைந்தது. அம்பா பவானிக்குத் தனிக்கோயில் தஞ்சையில் காணப்படுகிறது. இச்சிறிய கோயில் தஞ்சை சொக்க நாயக்கன் தெருவில் உள்ளது. மராட்டியர்களின் ஒரு பிரிவினரான குந்தளக்காரர்கள் குந்தாளம்மனை வழிபட்டு வருகின்றனர். குந்தாளம்மன் வழிபாடும் ராணுபாய், சட்டுபாய் வழிபாடும் தஞ்சையில் மராட்டியர் காலத்திலிருந்து தோன்றியவையாகும். ராணுபாய் சட்டுபாய் சிலைகள் மராட்டியர் காலத்தில் மசிசாசுர மர்த்தினி கோயிலில் வைக்கப்பட்டன எனலாம். தஞ்சை குந்தளக்காரர்கள் தெருவிலும் இச்சிலைகளைக் காணலாம். எல்லையம்மனை மராட்டியர்கள் 'எல்லம்மா' என்று அழைக்கின்றனர். மகாராஷ்டிராவில் 'எல்லம்மா' கோயில்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது. அதே போன்று எல்லையம்மன் தமிழ்நாட்டிலும் ஆந்திராவிலும் கர்நாடகாவிலும் எல்லம்மா எனற பிரசித்திப் பெற்ற தேவியாக இருப்பதும் இங்கு நோக்கத்தக்கது.

காத்தாயி அம்மன், செல்லியம்மன், மாரியம்மன், செங்கமல நாச்சியம்மன், பேச்சியாயி, கோடியம்மன், காட்டேரி அங்காளம்மன் போன்றவை கிராம தேவதைகளாக இருந்தவை. திரௌபதையம்மனும் கிராம தேவதையாகவே வழிபடப்படுகிறது. செ

கமல நாச்சியம்மன் வழிபாடு தஞ்சையில் பிரசித்திப்பெற்றதாகும். இவ்வழிபாடு இப்பகுதியிலேயே தோன்றி வளர்ந்ததாகும். மாரியம்மன் வழிபாடு தொன்று தொட்டுக் கிராம மக்களிடையே நிலவி வருகிறது. தஞ்சை புவனைநல்லூர் மாரியம்மன் வழிபாடு தஞ்சை மாவட்டத்தில் சிறந்த வழிபாட்டு ஸ்தலமாகும். அதனைத் தொடர்ந்து தஞ்சை நகரத்திலும் பல மாரியம்மன் கோயில்கள் மராட்டியர் காலத்திலும் அதனைத் தொடர்ந்தும் சிறப்புற்றன. காத்தாயி அம்மன், செல்லியம்மன், பேச்சியாயி, அங்காளம்மன், காட்டேரி போன்றவைகளும் லாடமுனி, மதுரைவீரன் இடும்பன், அய்யனார் போன்ற கிராம தெய்வங்களும் தமிழ்நாட்டின் பல இடங்களிலும் வழிபடப்படும் கிராம தெய்வங்களாகும். அங்காளம்மன் உயர் சமய மரபுடன் இணைந்து அங்காளபரமேஸ்வரியாக மாறியது. திரௌபதையம்மன் கிராம தேவதையாகவே இன்றும் மக்களிடையே வழிபடப்பட்டு வருகிறது. நாயக்கர் காலத்திலிருந்தே இவ்வழிபாடு இப்பகுதியில் தோன்றி வளர்ந்திருக்கலாம். மகாபாரதக் கதையிலிருந்து தோன்றிய திரௌபதையம்மன் கதைப் பாடல்கள் மக்கள் மத்தியில் இக்காலத்தில் பரவலாகத் தமிழ் நாட்டின் பல பகுதிகளிலும் படிக்கப்பட்டன. திரௌபதையம்மன் வழிபாடு தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் காணப்படுகின்ற ஒரு வழிபாடாகும். இலக்கியத்தில் சிறப்பிக்கப்பட்ட ஒரு பெண் தெய்வமாக மக்கள் மத்தியில் பிரபலமடைந்துள்ளது சிறப்பான செய்தியாகும். தமிழ்நாட்டில் நாயக்கர்கள் ஆட்சிக் காலத்தில் பிரதேச உணர்வுகளும் பண்புகளும் வளர்ந்தன. நாயக்கர் காலத்தில் எழுந்த பள்ளு, குறவஞ்சி, நொண்டி நாடகம் போன்ற இலக்கியங்கள் பிரதேச உணர்வுகளையும், பண்புகளையும் மக்களிடையே வளர்த்தன.[11] உயர் சமயத்தவரும் தாழ்ந்த சமயத்தவரும் ஒருங்கிணைந்தனர். கோயில்கள் காணப்படும் நகரப் பகுதிகளிலேயே இவ்வுணர்வுகளை வளர்ப்பதற்கு வாய்ப்புகள் மிகுந்திருந்தன.[12] இதனால் கிராம தேவதைகளும் உயர் சமய வழிபாடும் ஒருங்கிணைந்தன. மேலும் இக்காலத்தைத் தொடர்ந்து தோன்றிய ஜனநாயகப் பண்புகளும் பல கிராம, உயர் தெய்வங்களின் இணைப்பினைக்

11 See. Kulathuran, G. 1980.

12. Josuha A Fishman, 1969 p. 18.

கோயில்களில் ஏற்படுத்தியது. மராட்டியர் காலத்திலிருந்தே தேசிய உணர்வுகளும் விரைவாக வளர ஆரம்பித்தன. இதனால் பல மரபுகள் ஒருங்கிணைந்தன.

உயர் சமயம், பழங்குடி அல்லது நாட்டுப்புறச் சமயம் ஆகிய வற்றின் பண்புகள் எவை? இவற்றைப் பிரிக்கும் பண்புகள் எவை என்பதை எச்மன் என்பவர் கூறுகிறார் அவையாவன:

''உயர் இந்து மதத்தில் கடவுளின் உருவம் அதாவது மனிதனைப் போன்ற உருவமைத்த சிலை முக்கியமான பங்கு வகிக்கின்றது. சிலையில் இறைவன் இருப்பதாகவும் பக்தன் அச்சிலையைக் கண்டு வணங்குவதால் தரிசனம் பெறுகிறான் என்றும் கொள்ளப்படுகிறது. இச்சிலைக்குப் பலவகையான உபசாரங்கள் செய்வதின் மூலம் அச்சிலையில் இறைவன் இருப்பது உறுதி செய்யப்படுகின்றது. வழிபாடும் பூசையும் தவறாமல் ஒழுங்காகச் செய்யப்படுகின்றன. திருவிழாக்களும் ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிட்ட இடைவெளிகளில் கொண்டாடப்படுகின்றன. முறையாகவும் அடிக்கடியும் செய்யப்படும் சடங்குகளின் விளைவாக மேலும் பல சிக்கலான சடங்குகள் தோன்றுகின்றன. ஆகம விதிகளின் படியும் வேத நெறிப் படியும் சடங்குகள் செய்யப்படுகின்றன. இதனால் இத்தகைய சடங்குகளில் ஈடுபட்டு அவற்றைச் செய்துமுடிக்க மேலும்பல ஆட்கள் தேவைப்படுகின்றன. இதன் விளைவாகப் பூசாரிகளில் வேலைப் பிரிவுகளும் பல சிக்கலான நிலைகளும் கொண்ட சமுதாய அமைப்பும் தோன்றுகின்றன. பெரியசைவ, வைணவக் கோயில்களில் வழிபாடு முறையாகத் தவறாமல் நடைபெறுகின்றது. திருவிழாக்கள் குறிப்பிட்ட இடைவெளியில் நடைபெறுகின்றன. கடவுளர்களின் சிலை மனித உருவத்தில் அமைந்துள்ளன. இச்சிலைகளும் கோயில்களும் சிற்ப சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ள விதிகளைப் பின்பற்றி அமைக்கப்பட்டுள்ளன. சமுதாய அமைப்பிற்குத் தகுந்தாற்போல் பல குருக்கள் கடவுளர்களுக்குத் தொண்டு செய்கின்றனர். குருக்கள் அந்தணர் இனத்தைச் சார்ந்தவர்களாக இருப்பார்கள். கடவுளுக்குச் சைவ உணவே படையலாக்கப்படுகிறது. தூய்மை

விதிகள் கடுமையாகக் கடைப்பிடிக்கப்படுகின்றன. ஆகம விதிகளின் படி வழிபாடுகள் நடைபெறுகின்றன. கோயில்களின் தலபுராணங் களில் அவ்வூரிலுள்ள தெய்வங்கள் பொதுவாக இந்து மதத்தி லுள்ள தெய்வங்களுடன் தொடர்புபடுத்திக் கூறப்படுகின்றன. உயர்ந்த மதத்தில் பெண் தெய்வம் சிவனுக்கோ அல்லது விஷ்ணுக் கோ மனைவியாக இருக்கின்ற நிலையில் காணமுடிகின்றது. பழங் குடி மக்களிடையே நிலவும் சமயத்தில் கடவுளர்களின் சிலைகள் அபூர்வமாகவே காணப்படுகின்றன. மலைவாழ் பழங்குடிகளின் கோயில்கள் பொதுவாகச் சிலைகளின்றிக் காலியாகவே இருக்கும். சில இடங்களில் மரத்தூண்களோ அல்லது மண்தூண்களோ ஆகிய உருவமற்ற (un-iconical) குறியீடுகள் காணப்படும். இன்னும் சில இடங்களில் அடிப்படைக் குறியீடுகளான கற்களோ, மரங்களோ அமைந்திருக்கும். பழங்குடி மக்களின் சமயத்தில் கடவுள் மனிதரிடத் திலேயே மனிதர் வழியாக வெளிப்படுகின்றனர். மனிதர்கள் வழி யாகவே கடவுள் பக்தர்களை எதிர்கொண்டு பேசுகிறார். தேவை ஏற்படும் போதோ அல்லது எந்த நேரத்திலோ கடவுள் மனிதர் வழியாகத் தோன்றுவார். பலியிடுதலோ பண்டிகைகளோ முறை யாகச் செய்யப்படுவதில்லை.[13]

''நாட்டுப்புறச் சமயம் என்பது சிறு தெய்வங்களைப்பற்றி யோ, அல்லது கிராம தெய்வங்களைப் பற்றியோ அல்லது பொது வாக உயிர்ப்பலி படைக்கப்படுகின்ற தெய்வங்களைப் பற்றியோ ஆய்கின்ற ஓர் இயல் என்று கூறலாம். அதாவது சைவப் படையல்கள் அளிக்கப்படுகின்ற, அந்தணர்களைக்கொண்டு தொண்டு செய்கின்ற தெய்வங்களுக்கு எதிரானது நாட்டுப்புறத் தெய்வங்கள் என்றுகூறலாம். இருப்பினும் ஒருதெய்வத்திற்கு ஓரிடத்தில் அந்தணர் களும் வேறோரிடத்தில் வேறு தாழ்ந்த ஜாதிப் பூசாரிகளும்தொண்டு புரிகின்ற நிலையை நாட்டுப்புறத் தெய்வங்கள் குறித்து ஆய்வதற் கான இக்களப்பணி மேற்கொள்கையில் காணமுடிகின்றது. அவ்வாறே ஒரே தெய்வத்திற்கு ஓரிடத்தில் உயிர்ப்பலிப் படையலும் பிறிதோ ரிடத்தில் சைவப்படையலும் அளிக்கும் நிலையையும் காண முடிகின்றது.''[14] ''மேலும் நாட்டுப்புற மதத்தில் கோயிலும் சிலை

---

13. See. Evlyn Masilomony Mayer, 1987, Pp. 208-209.
14. Ibid. p 207.

யும் அவசியமில்லாத ஒன்று. ஒரு கல்லே கடவுளைக் குறிக்க நடப்பட்டிருக்கலாம். வழிபாடுகளும் திருவிழாக்களும் தேவையான பொழுதே மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் இவை கண்டிப்பான விதிமுறைகளைப் பின்பற்றி நடத்தப்படுவதில்லை. அந்தணரல்லாத வேற்றுச் சாதிக்காரர்களே பூசை செய்கின்றனர். மனிதன் மேல் சாமிவருவது முக்கியமான பண்பாகும். கடவுளர்களுக்கு உயிர்ப்பலி கொடுக்கப்படும். கடவுளர்களும் பெண் தெய்வங்களும் துன்பந்தரவல்லன என்று கருதப்படும். பெண் தெய்வங்கள் திருமணமாகாது கன்னிகளாகக் கருதப்படுவார்கள். தெய்வங்களைப் பற்றிய கதைகள் பெரும்பாலும் வரலாற்று உண்மைகளும் தொன்மங்களும் இணைந்து இயற்றப்பட்டதாகும்.''[15] இப்பாகுபாட்டின் அடிப்படையில் தஞ்சை நகரத்துச் சக்திக் கோயில்களைப் பாகுபடுத்தலாம் எச்மனுடைய வரையறைகள் உயர் சமயக் கோயில்களையும் சிறு தெய்வக் கோயில்களையும் பிரித்து அறிய உதவுகின்றன.

இந்து சமயக்கோட்பாட்டில் இரண்டு வகையான மரபுகள் காணப்படுகின்ற என ராபர்ட் ரெட்ஃபில்டு என்பவர் கூறியுள்ளார். ''ஒன்று பெருமரபு (**Great Tradition**) மற்றொன்று சிறுமரபு (**Little Tradition**) ஆகும்.''[16] பெருமரபு பள்ளிகளிலும் கோயில்களிலும் வளர்க்கப்படுவது. அது சான்றோரால் நினைவு கூர்ந்தும் செப்பம் செய்யப்பட்டு வளர்க்கப்படுகிறது. ஞானிகள், சமயச்சான்றோர், இலக்கிய ஆசிரியர் ஆகியோரின் மரபு பெருமரபாகும். சிறுமரபோ எழுத்தறிவற்ற பாமர மக்களிடம், அவர்களது கிராம சமுதாயத்தில் தானே தோன்றி வளர்வதாகும். அவை செப்பம் செய்யப்பட்டும் வளர்க்கப்படுவதில்லை. பெருமரபினை நூல்களின் மூலம் அறிந்து கொள்ள முடியும். சிறுமரபினை மக்கள் வழக்கின் மூலமே அறிந்து கொள்ள இயலும். பெருமரபு சிறுமரபு ஆகிய இரண்டிற்கும் இடையே நிகழும் எதிர் எதிர்ச் செயல்களை விளக்குவதற்கு மெக்கிம் மேரியம் என்பார் விரிநிலை ஆக்கம் (**Universalisation**) குறுநிலை ஆக்கம் (**Parochialisation**) என்னும் இரண்டு கருத்துப் படிவங்களை அளித்துள்ளார்.[17] சிறு

---

15. Ibid. p. 210.
16. See. M. Veluswamy, 1987, p. 236.
17. See M. Veluswamy, 1987, p. 236.

மரபின் கூறுகள் ஏற்ற மாற்றங்களுடன் பெருமரபில் இணைவதற்கு விரிநிலை ஆக்கம் என்று பெயர். பெருமரபின் கூறுகள் ஏற்ற மாற்றங்களுடன் சிறுமரபினைச் சென்று சேருவதற்குக் குறுநிலை ஆக்கம் என்று பெயர்.

மேற்கண்ட சில கருத்துக்களின் பின்னணியில் தஞ்சை நகரத்திலுள்ள சக்திக் கோயில்களையும் கிராம தேவதைகளின் கோயில்களையும் பாகுபடுத்துவதில் ஏற்படும் சிக்கல்களையும் இரண்டிற்கும் இடையே நிகழும் எதிர் எதிர்ச் செயல்களையும் விளக்கலாம்.

பல கிராம தெய்வங்கள் உயர் இந்துமத சாக்த கோயில்களில் இடம் பெற்றுள்ளன. இவை திருச்சுற்றுகளிலும் கோஷ்டங்களிலும் ஆங்காங்கே வைக்கப்பட்டுள்ளன. இவற்றை உக்ர காளியம்மன், அங்காளம்மன், மாரியம்மன், காமாட்சியம்மன் கோயில்களில் காணலாம். அங்காள பரமேஸ்வரி கோயில்களில் பேச்சியாயி, இருளப்பன், காட்டேரி, பாவாடைராயன், மதுரை வீரன், வெள்ளையம்மாள், பொம்மி ஆகியோர் இடம் பெறுகின்றனர் (கோயில்: 1). முத்துமாரியம்மன் கோயிலில் பேச்சியாயி, இடும்பன், மதுரைவீரன், ஐயனார், சங்கிலிக் கருப்பன் போன்றோரின் சிலைகள் உள்ளன (கோயில் : 59). உக்ர காளியம்மன் கோயில் கருப்பண்ணசாமி, லாடமுனி, மாடன், சாம்பன், மதுரைவீரன், வெள்ளையம்மாள், பொம்மி சிலைகள் உள்ளன (கோயில் : 16). மதுரைவீரன் வழிபாடு நாயக்கர் காலத்திலிருந்து தமிழ்நாட்டின் பலகோயில்களிலும் இணைக்கப்பட்டுள்ளன. மதுரை வீரன் வழிபாடு பிரதேச உணர்வுகளை வளர்க்கவும் உதவுகின்றன. மதுரைவீரன் படிமங்களைத் தஞ்சை நகரத்தில் அங்காளம்மன் (கோயில் : 1, 2) காளியம்மன் (கோயில் : 19, 16) சிங்களநாச்சியம்மன் (கோயில் : 43) திரௌபதையம்மன் (கோயில் : 51, 55) காத்தாயி அம்மன் (கோயில் : 8) கோயில்களில் காணலாம்.

பல கிராம தேவதைகளின் கோயில்களில் உயர் தெய்வங்கள் சில இடம் பெறுகின்றன. காத்தாயி அம்மன் (கோயில் : 8) திரௌபதையம்மன் (கோயில் : 54, 52) செல்லியம்மன் (கோயில் : 50) கோடியம்மன் (கோயில் : 26) ஆகியவற்றில் பல உயர் தெய்வப் படிமங்கள் வைக்கப்பட்டுள்ளன. காத்தாயி அம்மன் கோயிலிலுள்ள

பல கிராம தெய்வங்கள் விரிநிலை ஆக்கம் பெற்றுள்ளன. பச்சையம்மன் பார்வதி தேவியாகவும் காத்தாயி அம்மன் தினைப்புனம் காத்த வள்ளியாகவும் பார்வதியின் மருமகளாகவும் லாடமுனி, வேதமுனி போன்றோர் வள்ளியின் சகோதரர்களாகவும் மாறியுள்ளனர் (கோயில் : 8.). திரௌபதையம்மன் கோயிலில் (கோயில் : 52) இலிங்கத்திற்குத் தனிச்சன்னதி கட்டப்பட்டுள்ளது. செல்லியம்மன் கோயிலில் பைரவர் சிலை வைக்கப்பட்டு வணங்கப்படுகிறது (கோயில் : 50). கரந்தை சிவன் கோயில் அம்மனான ஆனந்தவல்லியம்மன் தஞ்சாசுரனை அழிப்பதற்காகப் பல்வேறு வடிவங்களை எடுத்தாள் எனவும், அவ்வடிவங்கள்தான் கோடியம்மன், செல்லியம்மன் போன்றவை எனவும் கூறப்படுகிறது. இவை சகோதரிகளாகவும் கதை கூறப்படுகின்றன. இது விரிநிலை ஆக்கம் நடைபெற்றுள்ளதைக் காட்டுகிறது.

சில கோயில்கள் உயர் இந்துமத சாக்த கோயில்களாகவே மாற்றமடையாமல் காணப்படுகின்றன. பூமால் ராவுத்தன் கோயில் தெரு வடபத்ர காளியம்மன், தெற்குவீதி காளிகா பரமேஸ்வரி கோயில், சிரேஸ் சத்திர வடபத்ர காளியம்மன் முதலியன. பங்காரு காமாட்சியம்மன் கோயிலும், சியாமளா தேவி கோயில்களும் அவ்வாறே காணப்படுகின்றன.

கிராம தேவதைகளின் கோயில்களாகவே நிலைபெற்றுள்ளவை சிங்கள நாச்சியம்மன் (கோயில் : 43) திரௌபதையம்மன் கோயில் (கோயில்: 56). இக்கோயில்களில் கிராம தெய்வங்களின் உருவமில்லாத கற்கள் சில வேளைகளில் வழிபடப்படுகின்றன. சிங்கள நாச்சியம்மன் கோயிலில் ஐயனார் 'பட்டவன்' கற்கள் வைக்கப்பட்டு வழிபடப்படுகின்றன. மேலும் ஐயனார் லாடமுனி, முன்னடியாள், சம்பளதேவி, பட்டவன் கற்களும் சூலமும் வழிபடப்படுகின்றன (கோயில் : 46). செங்கமல நாச்சியம்மனும் அவ்வாறே சூலவடிவில் வழிபடப்படுகிறாள் (கோயில் : 46).

தஞ்சையில் இருளர்கள் என்ற மலை ஜாதியினர் வழிபடும் தெய்வங்களைப் பாவாடைராயன், இருளப்பன் போன்ற தெய்வங்கள் காணப்படுகின்றன (கோயில் : 8, 1). மகாலெட்சுமி என்ற உயர் சாக்த மத தெய்வத்தைக் குறும்மர்கள் என்ற மலைஜாதி

மக்கள் வழிபடுகின்றனர் (கோயில் : 58). இக்கோயிலில் மலை ஜாதியினர் சடங்குகளும், பூசைகளும் நடைபெறுகின்றன. பலியிடுதல் போன்ற நிகழ்ச்சிகளும் நடைபெறும். மேலும் இக்கோயிலில் பல உயர் தெய்வங்களின் சிலைகளும் வைக்கப்பட்டுள்ளன. இது குறுநிலை ஆக்கமாகும். ஆடு, கோழி பலியிடும் வழக்கம் சாக்த உக்ர காளியம்மன் (கோயில்: 16) கோயிலிலும் காணலாம். மேலும் சில உயர்ந்த சாக்த கோயில்களில் பலியிடும் வழக்கம் பலகாலமாக நடைபெற்றுவந்தது (கோயில்: 19, 23) தற்காலத்தில் அவ்வழக்கம் நிறுத்தப்பட்டுள்ளது.

பல காளியம்மன் கோயில்களிலும் பிற சக்தி வடிவக் கோயில்களிலும் அந்தணர்களால் ஆகமநெறிப்படிப் பூசைகள் செய்யப்படுகின்றன. அவையாவன: காளிகா பரமேச்வரி (கோயில் : 18) வடபத்ரகாளியம்மன் (கோயில்: 19) முத்துமாரியம்மன் (கோயில்: 59) பங்காரு காமாட்சியம்மன் கோயில் (கோயில் : 10) அன்னபூரணி அம்மன் (கோயில் : 5) சியாமளாதேவி (கோயில் : 29,32) புற்று மாரியம்மன் (கோயில்: 61) காமாட்சியம்மன் (கோயில்: 15) முதலியனவாகும். பிற அனைத்துக் கோயில்களிலும் அந்தணர் அல்லாதாரே பூசை செய்கின்றனர். உயர் தெய்வமான மகாலெட்சுமி கோயிலில் மலைஜாதியினர் பூசை செய்கின்றனர். சியாமளாதேவி அம்மன் கோயிலில் பள்ளர் என்ற அரிஜனங்கள் பூசை செய்கின்றனர் (கோயில்: 35). பல சியாமளாதேவி கோயில்களிலும் அந்தணரல்லாதாரே பூசை செய்கின்றனர். சைவ வேளாளர்கள் அங்காளம்மன் (கோயில் : 3) சிங்கள நாச்சியம்மன் (கோயில் : 43) உக்ர காளியம்மன் (கோயில் : 16) கோயில்களில் பூசை செய்கின்றனர். மேலும் வேறு பல ஜாதியினரும் வெவ்வேறு கோயில்களில் பூசை செய்கின்றனர். சிறுதெய்வமான திரெளபதையம்மன் கோயில்களில் அந்தணரல்லாதாரே பூசை செய்கின்றனர். இதனால் அந்தந்த ஜாதியினர் செய்கின்ற வழிபாட்டு முறைகளும் பூசைகளுமே அவ்வக் கோயில்களில் நடைபெறுகிறது. சில வேளைகளில் திரெளபதையம்மன் கோயில்களில் (கோயில் : 54) அந்தணர்கள் பூசை செய்கின்றனர். மாரியம்மன் கோயிலில் (கோயில் : 59) மாரியம்மனுக்

கும் பிற சிறு தெய்வங்களுக்கும் அந்தணர்களே பூசை செய்கின்றனர். இந்நிலையை விரிநிலை ஆக்கம் எனலாம்.

மேலும் சிற்பங்களிலும் கோயில் அமைப்பிலும் கட்டிடக் கலையிலும் சிறுதெய்வ, உயர் சமயக் கோயில்களின் பண்புகளையும் தொடர்புகளையும் தொடர்ந்து காணலாம்.

# 2. சிற்பக் கலை

புராணங்களிலும், ஆகமங்களிலும் சிற்ப சாத்திரங்களிலும் காளி, துர்க்கை. அன்னபூரணி, சியாமளாதேவி, மகிசாசுர மர்த்தினி, பார்வதி, மகாலெட்சுமி போன்ற வடிவங்களுக்கு அமைய வேண்டிய சிற்ப அமைப்பு எடுத்துக் கூறப்பட்டுள்ளது. இம்மரபில் பல இடங்களிலும் சிற்பங்கள் பல வடிவங்களுக்கு அமைக்கப்பட்ட போதிலும் கலைஞர்களின் விருப்பத்திற்கேற்ப சில இடங்களில் சில மாற்றங்களுடன் அமைகின்றன. தஞ்சை நகரத்தில் அமைந்துள்ள அம்மன் வடிவங்கள் சிற்ப சாஸ்திர, ஆகம மரபுகளைப் பின்பற்றிய போதிலும் அவை பல நிலைகளில் மாற்றங்களுடன் காணப்படுகின்றன எனலாம். கிராம தேவதைகள் எனக் கூறப்படும் செங்கமல நாச்சியம்மன், குந்தாளம்மன், திரௌபதையம்மன், செல்லியம்மன், கோடியம்மன், மாரியம்மன் போன்றவை உயர் மரபுகளைப் பின்பற்றியே வடிக்கப்பட்டுள்ளன. கருப்பண்ணசாமி, முனிகள், காத்தாயி அம்மன், காட்டேரி, பாவாடைராயன், மதுரைவீரன், வடிவங்கள் பல நிலைகளிலும் புதிய வடிவ அமைப்பைப் பெறுகிறது. இவை சிற்ப சாஸ்திர நெறிகளைப் பின்பற்றியதாகத் தெரியவில்லை.

பெரும்பான்மையான கோயில்களில் மூலவர்சிலை கருங்கல்லாலானது. கோடியம்மன் உருவம் மரத்தாலானது. எல்லையம்மன் உருவம் சுதையாலானது. சிறு தெய்வங்கள் என்று கருதப்படும் மதுரைவீரன், வெள்ளையம்மாள், பொம்மி, பேச்சியாயி, காட்டேரி, பாவாடைராயனும் அவரது மனைவிகளும், இருளப்பன் போன்ற படிமங்கள் மரத்தால் செய்யப்பட்டுள்ளன. (கோயில் : 1, 8) பெரும்பான்மையும் சிறு தெய்வங்கள் சுதையால் செய்யப்பட்டுள்ளன. முனிகளின் சிலைகளும், கருப்பண்ணசாமி, மதுரைவீரன், வெள்ளையம்மாள், பொம்மி, இடும்பன், சாம்பன், பேச்சியாயி படிமங்களும் சுதையால் செய்து வைக்கப்படுகின்றன. திரௌபதியம்மன் கோயில்களில் காணப்படும் பஞ்சபாண்டவர் படிமங்கள் அனைத்தும் மரத்தாலானவை. இக்கோயில்களில் காணப்படும் காளி தலை செம்பாலானது. இவை எந்தச் சிற்ப சாஸ்திர, ஆகம மரபுகளையும் பின்பற்றியதாகத் தெரியவில்லை. வழிவழியாகக் கிராம மக்களிடையே நிலைத்து

வருகின்ற கலைத்திறமையினால் இத்தகைய சிற்பங்கள் செய்யப் படுகின்றன. சில வேளைகளில் சிறு தெய்வங்களும் கருங்கற் களால் செய்து வைக்கப்படுகின்றன. அப்போதும் சில சிற்ப சாஸ்திர முறைமைகள் பின்பற்றப்பட வாய்ப்புண்டு. சிங்கள நாச்சியம்மன், செல்லியம்மன், குந்தாளம்மன் போன்ற மூலவர் படிமங்கள் கருங்கல்லால் சிற்ப சாஸ்திர முறைகளைப் பின்பற்றி அமைக்கப்பட்டவையாகும்.

சக்தி வடிவமானது சைவ மதத்துடன் நெருங்கிய தொடர் புடையது. வைணவத்தோடு மிகுந்த நெருக்கம் இல்லை. உத்தர காமிகாகமத்தில் சிவனின் மனைவியாகத் தேவி இணைக்கப்பட்டு அவளின் வடிவ அமைப்பு கூறப்பட்டுள்ளது.[18] அவள் நான்கு கைகளையுடையவளாகவும் தலையில் கரண்ட மகுடத்தைத் தரித் திருப்பவளாகவும் பட்டாடைகளை அணிந்திருப்பவளாகவும் கூறப் படுகிறது. மேலும் அவளது மேலிரண்டு கைகளில் பாசம் அங் குசம் ஆகியவற்றையும் கீழிரண்டு கைகள் அபய வரத முத்திரை யுடனும் விளங்குகின்றன என உத்தர காமிகாகமம் கூறுகிறது. சிவனோடு இணைந்து நிற்கும்போது தேவியானவள் இரண்டு கை களுடன் காட்சியளிக்கிறாள். கடக முத்திரையில் அமைந்துள்ள வலது கையில் தாமரை மலரை வைத்துள்ளாள் பிறிதொரு கை தொங்கல் நிலையில் (டோலஹஸ்த) காணப்படுகிறது. அவளுக்கு இரண்டு கண்களே உள்ளன. சில வேளைகளில் ஒரு கையில் கிளியையும் அல்லது கண்ணாடியையும் பிறிதொரு கையில் நீலோற்பல (Blue-lily) மலரையும் வைத்திருப்பாள். சூலத்தை யும் பாசத்தையும் சில வேளைகளில் இரண்டு கைகளிலும் பெற் றிருக்கலாம். அல்லது வேறு ஆயுதங்களைக் கலைஞர்கள் தங்கள் விருப்பம் போல் அமைத்துக் கொள்ளலாம். சிவனுடன் இணைந்து நிற்கும்போது அவள் உடம்பில் இரண்டு பங்க (Dibanga) வளைவுகளுடனோ அல்லது நேராக நிமிர்ந்து வளைவில்லாமல் (Samabanga) அமைக்கலாம். சிவனுடன் தேவி காணப்படும் போது அவளை மனோன்மணி, கௌரி என்று அழைக்கின்றனர். தஞ்சை ராஜகோபால்சாமி

---

18. See. **Gopinatha Rao, T. A.** 1971, p. 338

காளியம்மன் கோயிலில் அமைந்துள்ள சிவனோடு இணைந்து நிற்கின்ற தேவி வடிவங்கள் மேற்கண்ட உடல் வளைவுகளுடனும் கைகளுடனும் முத்திரைகளுடனும் காட்சியளிக்கின்றன. (கோயில்: 23) சுப்ரபீடாகமம் தேவியின் வடிவத்தைக் கூறும்போதும் அவர் மார்பகம் பெரிதாக இருக்க வேண்டும், அழகிய ஆபரணங்களை அணிந்திருக்க வேண்டும் என்று கூறுகிறது.[19] சிவனுடன் சேர்ந்து நிற்கும் தேவியானவள் பவானி என்று அழைக்கப்படுகிறாள் எனப் பூர்வகாரணாகமம் கூறுகிறது.[20] பவானி என்ற பெயரில் தஞ்சை சக்க நாயக்கன் தெருவில் அமைந்துள்ள அம்பா பவானி சிவனுடன் காணப்படுகிறது. மேலும் அவள் அமர்ந்த நிலையிலேயே காணப்படுகிறாள் (படம் : 4அ).

தஞ்சையில் துர்க்கையின் சிலை பல சக்திக் கோயில்களில் வைக்கப்பட்டுள்ளது. மகிசாசுர மர்த்தினி கோயில் (கோயில்:23) உக்ர காளியம்மன் கோயில் (கோயில் : 16) நவதுர்க்கை கோயில் (கோயில் : 57) வடபத்ர காளியம்மன் கோயில் (கோயில் : 17) திரௌபதியம்மன் கோயில் (கோயில் : 54) கோடியம்மன் கோயில் (கோயில் : 26) ஆகியவற்றில் காணலாம். விஷ்ணு துர்க்கா, சிவ துர்க்கா போன்ற வடிவங்கள் மகிசாசுர மர்த்தினி கோயிலில் பெரிய அளவில் அமைக்கப்பட்டுள்ளன.

பல சிற்ப சாஸ்திரங்களிலும் ஆகமங்களிலும் துர்க்கை நான்கு அல்லது அதற்கும் மேற்பட்ட கைகளுடன் அமைக்கப்படுகிறாள் எனக் கூறுகின்றன. அவள் மூன்று கண்களையுடையவளாகவும் கருமை நிறம் பொருந்தியவளாகவும் வடிக்கப்படுவதுண்டு. அழகான பார்வையையும் விரிந்த மார்பகங்களையும் தடித்த தொடைகளையும் பெரிய இடையினையும் உடையவளாக வடிக்கப்படுகிறாள். அவள் மஞ்சள் நிற ஆடையை அணிந்திருப்பாள். தலையில் கரண்ட மகுடத்தை அணிந்திருப்பாள். பல ஆபரணங்களை அணிந்திருப்பாள். வலது முன் கை அபய

---

19. Gopinatha Rao, T.A Op. cit. p 340.
20. Ibid. p. 340.

முத்திரையிலும் அதற்கு நேர் மேற்கை சக்கரத்தையும் உடைய தாக அமைக்கப்படும். இடது முன்கை கடக முத்திரையுடனும் அதற்கு மேற்கை சங்கையுடையதாகவும் காட்டப்படும். அவள் ஒரு பத்மாசனத்தின் மேல் நின்ற கோலத்தில் நிமிர்ந்து (சமபங்க) நிற்பாள். சில வேளைகளில் ஒரு எருமைத் தலையின் மேல் நிற் பாள். அல்லது சிங்கத்தின் மீது அமர்ந்து கொண்டிருப்பாள். சில சமயங்களில் அவளுடைய மார்பகங்கள் நாகப்பாம்பினால் கட்டப்பட்டிருக்கும். சுப்ரபீடாகமம் அவளை விஷ்ணுவின் தங்கை யென்றும் ஆதிசக்தியிலிருந்து தோன்றியவள் என்றும் கூறுகிறது. இவ்வாகமத்தின்படி அவளுக்கு நான்கு அல்லது எட்டுக் கைகள் இருக்கும். அவளுக்கு எட்டுக் கைகள் இருக்கும் போது அவள் சங்கு, சக்கரம், சூலம், வில், அம்பு, கத்தி, கேடயம், பாசம் முதலியவற்றை வைத்திருக்கவேண்டும் என்று கூறுகிறது.[21] உக்ர காளியம்மன் கோயில் துர்க்கை சிலை இவ்வாறாக அமைக்கப் பட்டது போல் தெரிகிறது (படம் : 16ஐ) நான்கு கைகளுடன் வடிக்கப்பட்ட துர்க்கை தஞ்சை நவதுர்க்கை கோயிலில் காணலாம்.

ஆகமகங்களில் துர்க்கைக்கு ஒன்பது வடிவங்கள் கற்பிக்கப் பட்டு அவை நவ துர்க்கா என்று அழைக்கப்படுகின்றன. அவை யாவன நீலகாந்தி, க்ஷேமாங்கரி, ஹராரித்தி, ருத்ராம்ச துர்க்கா, வனதுர்க்கா, அக்னி துர்க்கா, ஜெயதுர்க்கா, விந்தியா வாசினி துர்க்கா, ரிபுமாரி துர்க்கா முதலியன. தஞ்சையில் ராஜகோபால் சாமி கோயிலில் விஷ்ணு துர்க்கா, சிவதுர்க்கா என்ற வடிவங் கள் காணப்படுகின்றன. ஆகமங்களில் ருத்ராம்ச துர்க்கா இரண்டு கண்களுடன் வடிக்கப்பட வேண்டும் எனக் கூறப்படுகிறது. அவள் கருமை நிறமுடையவளாகவும் சிவப்புநிற ஆடைகளை அணிந்த வளாகவும் தலையில் கிரீட மகுடத்தையுடையவளாகவும் தங்க ஆபரணங்களை அணிந்தவளாகவும் கூறப்பட்டுள்ளது. அவளது நான்கு கைகளில் சூலம், கத்தி, சங்கு, சக்கரம் முதலியவை காணப்பட வேண்டும். அவளுடைய வாகனம் சிங்கமாகும்.

---

21. See **Gopinatha Rao**, Op. cit p. 342.

அவளது இருபக்கங்களிலும் சந்திர, சூரியன் இருக்க வேண்டும் எனக் கூறுகிறது. மகாபலிபுரம் சிற்பக் கல்லூரியில் காணப்படும் சிற்ப சாஸ்திரச் சுவடி ஒன்றில் விஷ்ணுதுர்க்கா கீழ்க்கண்ட லட்சணங்களைப் பெற்றுள்ளதாகக் கூறுகிறது.[22] அவளது மேல் கையில் சங்கும் சக்கரமும் இருக்க வேண்டும். கீழ்க்கையில் அபயமும் கடியும் காணப்பட வேண்டும். அவள் வெண்ணிறமுடையவள். மகிசத்தின்மேல் அவள் நிற்கிறாள். அவளுக்கு மூன்று கண்கள் எனக் கூறுகிறது. அல்லது அவள் சங்கு, சக்கரம், அம்பு, வில், சூலம், கேடயம், கபாலம், தர்ஜனி முத்திரை ஆகியவற்றுடனும் கிரீட மகுடத்தையும் அதில் பிறைச் சந்திரனையும் அணிந்து விளங்க வேண்டும் எனக் கூறுகிறது. தஞ்சை ராஜகோபால்சுவாமி கோயிலில் அமைந்துள்ள விஷ்ணு துர்க்கா, சிவதுர்க்கா வடிவ அமைப்புகள் சற்று மாறுபட்டுக் காணப்படுகின்றன. விஷ்ணு துர்க்கா நின்ற கோலத்தில் எட்டுக் கைகளுடன் சமபங்கத்துடன் காட்சியளிக்கிறாள். வலது கைகளில் சக்கரம், அங்குசம், கத்தி, சூலம் முதலியவற்றையும் இடது கைகளில் சங்கு, பாசம், கத்தி, மணி முதலியவற்றையுமுடையவள். சிவதுர்க்காவானவள் நின்ற கோலத்துடனும் சமபங்கவளைவுடன் நான்கு கைகளையுடையவளாகக் காட்சியளிக்கிறாள். வலது இரண்டு கைகளில் டமருகம், கத்தி முதலியனவும் இடது கைகளில் சூலம், கபாலம் ஆகியவற்றுடன் காட்சியளிக்கிறாள். ஸ்ரீ தத்துவநிதி என்ற சிற்ப சாஸ்திர நூலும் நவதுர்க்கை வடிவ அமைப்பைப் பற்றிக் கூறுகிறது. மகாபலிபுரம் சிற்பக் கல்லூரியில் காளி, பத்ரகாளி, மகாகாளி, காளிகா, அங்காளம்மன், பவானி, அன்னபூரணி, மகிசாசுரமர்த்தினி ஆகியோரின் சிற்ப அமைப்பினைக் கூறும் பல சிற்ப சாஸ்திரச் சுவடிகள் உள்ளன. அவற்றை நாகசாமி அவர்கள் விளக்கியுள்ளார்.[23] மேலும் அவர் மதுரை மீனாட்சியம்மன் கோயில் மகாலெட்சுமி, சியாமளாதேவி வடிவங்கள் பற்றியும் கூறியுள்ளார்.[24] தஞ்சையில் காணப்படும் இப்பல்வேறு வடிவங்கள் மேற்கண்டவற்றிலிருந்து மாறுபட்டும் சில வேளைகளில் ஒன்றுபட்டும் காணப்படுகின்றன.

---

22. See Nagaswami, R. 1982. p. 133.
23. See Nagaswami, R. 1982, pp. 134-136.
24. Ibid. pp. 203, 204.

சில்பரத்னம் என்ற சிற்ப சாஸ்திர நூலில் துர்க்கை மகிசாசுர மர்த்தினையாகக் கூறப்படுகிறாள்.[25] அவளுக்கு மூன்று கண்களும், தலையில் ஜடாமகுடமும் அதில் பிறைச்சந்திரனும் காணப்படும். அவள் உயர்ந்த மார்பகங்களையுடையவள். கண்கள் நீலோற்பல மலர்போன்றும் அல்லிபோன்றும் விளங்கு கிறது. அவளது உடம்பில் மூன்று வளைவுகள் (Tribanga) காணப்படும். அவள் பத்துக் கைகளையுடையவள். வலது கையில் திரிசூலம், கத்தி, சத்தியயுத்தர, சக்கரம், அம்பு முதலியனவும் இடது கையில் பாசம், அங்குசம், கேடயம், பரசு, மணி முதலி யனவும் வைத்திருப்பாள். அவளது காலடியில் எருமைத்தலையும் அதன் கழுத்திலிருந்து இரத்தம் வடிந்து கொண்டிருப்பது போல வும் காணப்படும். எருமையின் கழுத்திலிருந்து அசுரனின் உடல் வெளிப்பட்டுக் காணப்படும். அவன்மேல் தேவியின் நாகபாசம் குத்தி நிற்கும். அசுரனின் கைகளில் வாளும் கேடயமும் காணப் படும். அவள் உக்ரமான பார்வையுடனும் உயர்ந்து தடித்த இமைகளுடனும் காட்டப்பட்டுள்ளாள். தேவி தன் வலது காலைச் சிங்கத்தின் மேல் வைத்திருப்பாள் இடது கால் மகிசாசுரன் உடம்பின்மேல் தொட்டிருக்கும் எனக்கூறுகிறது. மகிசாசுரமர்த் தினிக்குத் தஞ்சையில் இராஜகோபால்சாமி கோயிலில், மூலவர் படிமம் காணப்படுகிறது. இதன் அமைப்பு சிறிது வேறானது. (கோயில் : 23) விஷ்ணு தர்மோத்தரா புராணம் மகிசாசுர மர்த்தினியைச் சண்டிகா என்று அழைக்கிறது. ராஜகோபால்சாமி கோயிலில் காணப்படும் மகிசாசுர மர்த்தினி படிமம் ஒன்றைச் சண்டிகேஸ்வரி என அழைக்கிறார்கள் (கோயில் : 23).

தேவியின் வடிவம் பல்வேறு வடிவங்களில் பல்வேறு இடங் களில் பல்வேறு பெயர்களில் காணப்படுகின்றன. அவை பல அம்சங்களையுடையதாகவும் வடிக்கப்படுகின்றன. கோபிநாதராவ் அவர்களும் தொல்பொருள் ஆய்வாளர் நாகசாமி அவர்களும் இந்தியாவில் காணப்படும் பல்வேறு வடிவங்களை விளக்கி யுள்ளனர். தஞ்சையில் காணப்படும் வடிவங்களின் அமைப்பு பற்றி இங்குச் சிறுகுறிப்பு தரப்படுகிறது, விளக்கங்களைத் தொகுப்புக் கட்டுரைகளில் கண்டு கொள்க.

---

25. See Gopinadha Rao, T.A. Op. cit. p. 345.

## தஞ்சை நகரிய சக்திக் கோயில்களில் காணப்படும் சிற்பங்கள் - வடிவமைப்பு

1. அ. **அங்காள பரமேச்வரி** *(கோயில் எண் : 1)*
அமர்ந்த கோலம், 4 கைகள்
வலது : டமருகம் இடது : பாசம்
சூலம் கபாலம்

ஆ. **அங்காளம்மன்** *(கோயில் : 2)*
அமர்ந்த கோலம், காலடியில் அசுரன் தலை ஒன்று, 4 கைகள்
வலது : டமருகம் இடது : பாசம்
சூலம் கபாலம்

இ **அங்காளம்மன்** *(கோயில் : 3)*
நின்ற கோலம், 4 கைகள்
வலது : கத்தி இடது : டமருகம்
சூலம் கபாலம்

2. **அம்பா பவானி** *(கோயில் : 4)*
அமர்ந்த கோலம், 4 கைகள்
வலது : டமருகம் இடது : சூலம்
கத்தி கபாலம்

3. **அன்னபூரணி** *(கோயில் : 5)*
நின்ற கோலம், 4 கைகள்
வலது : தாமரை இடது : தாமரை
அபயம் வரதம்

4. **எல்லையம்மன்** *(கோயில் : 6)*
அமர்ந்த கோலம், 4 கைகள்
வலது : டமருகம் இடது : சூலம்
கத்தி கபாலம்

5. **பார்வதியம்மன்** *(காத்தாயி அம்மன் கோயில் மூலவர்)*
*(கோயில் : 8)*
அமர்ந்த கோலம், 2 கைகள்
வலது : அபயம் இடது : வரதம்

6. **கன்னிகா பரமேச்வரி** (கோயில் : 7)
அமர்ந்த கோலம், 4 கைகள்
வலது : சூலம் இடது : டமருகம்
கத்தி கபாலம்

7. அ. **காத்தாயி அம்மன்** (கோயில் : 8)
அமர்ந்த கோலம், 2 கைகள்
வலது : அபயம் இடது : ?

ஆ. **காத்தாயி அம்மன்** (கரகத்தின் மேல்) (கோயில் : 9)
அமர்ந்த கோலம், 4 கைகள்
வலது : டமருகம் இடது : பாசம்
கத்தி கபாலம்

8. அ. **பங்காரு காமாட்சியம்மன்** (கோயில் : 10)
நின்ற கோலம், 4 கைகள்
வலது : பாசம் இடது : அங்குசம்
கரும்பு தாமரை

ஆ. **காமகோடி அம்மன்** (பங்காரு காமாட்சியம்மன்)
(கோயில் : 10)
நின்ற கோலம், 4 கைகள்
வலது : பாசம் இடது ; அங்குசம்
கரும்பு தாமரை

இ **காமாட்சியம்மன்** (கோயில் : 11)
அமர்ந்த கோலம், 4 கைகள்
வலது : டமருகம் இடது : சூலம்
கத்தி கபாலம்

ஈ. **காமாட்சியம்மன்** (கோயில் : 12)
அமர்ந்த கோலம், 2 கைகள்
வலது : வரதம் இடது : தாமரை

உ. **காமாட்சியம்மன் கோயில்** (கோயில் : 13)
அமர்ந்த கோலம், 4 கைகள்
வலது : சூலம் இடது : டமருகம்
கத்தி கபாலம்

ஊ. **காமாட்சியம்மன்** *(கோயில் : 14)*

அமர்ந்த கோலம், 4 கைகள்

வலது : சூலம் இடது : டமருகம்

கத்தி கபாலம்

எ. **காமாட்சியம்மன்** *(கோயில் : 15)*

நின்ற கோலம், 2 கைகள்

வலது : டோலஹஸ்த இடது : தாமரை

9. அ. **காளியம்மன்** *(உக்ர காளியம்மன் - நிசும்பசூதனி) (கோயில் : 16)*

அமர்ந்த கோலம், காலடியில் 2 வீரர்கள், 4 கைகள், உக்ரமான பார்வை

வலது : திரிசூலம் இடது : பாசம்

கபாலம் அங்குசம்

ஆ. **காளியம்மன்** *(வடபத்ர காளியம்மன் - நிசும்பசூதனி) (கோயில் : 17)*

அமர்ந்த கோலம் எலும்புருவம், 8 கைகள், உக்ரமான பார்வை 4 வீரர்கள் காலடியில் (கைகளிலுள்ள ஆயுதங்கள் தெளிவில்லை)

இ. **காளியம்மன்** *(வடபத்ர காளியம்மன்) (கோயில் : 19)*

அமர்ந்த கோலம், பீடத்தின் கீழே இடது வலது பக்கங்களில் லக்ஷ்மி, சரஸ்வதி புடைப்புச் சிற்பங்கள், 8 கைகள்

வலது : சூலம் இடது : அக்னி

டமருகம் கேடயம்

கத்தி மணி

கிளி கபாலம்

ஈ. **காளியம்மன்** *(வடபத்ர காளியம்மன்) (கோயில் : 20)*

அமர்ந்த கோலம், புலித்தோலின் மேல் அமர்தல், இடது காலடியில் தஞ்சாசுரன், 8 கைகள்

வலது : சூலம் இடது : அக்னி

கத்தி மணி

டமருகம் கேடயம்

கிளி கபாலம்

உ. **காளியம்மன்** (கோயில் : 18)
**(காளிகா பரமேச்வரி)**
அமர்ந்த கோலம், வலது காலடியில் திரசுராசுரனின் 3 தலைகள் 8 கைகள்.

வலது : சூலம் இடது : அக்னி
டமருகம் கேடயம்
கத்தி கபாலம்
கிளி மணி

ஊ. **காளியமம்மன்** (முத்துகாளியம்மன்) (கோயில் : 21)
அமர்ந்த கோலம், 4 கைகள்

வலது : சூலம் இடது : பாசம்
டமருகம் கபாலம்

எ. **காளியம்மன்** (கோயில் : 22)
அமர்ந்த கோலம், 4 கைகள்

வலது : டமருகம் இடது : பாசம்
சூலம் கபாலம்

ஏ. **காளியம்மன்** (மகிசாசுர மர்த்தினி) (கோயில் : 23)
நின்ற கோலம், 8 கைகள்

வலது : சூலம் இடது : சக்கரம்
கேடயம் வில்
சங்கு கபாலம்
கத்தி மகிசத்தின் நாக்கைப் பிடித்த கை

10. **சாமுண்டீஸ்வரி** (மகிசாசுரமர்த்தினி) (கோயில் : 23)
நின்ற கோலம், 4 கைகள்

வலது : சூலம் இடது : கேடயம்
கத்தி மகிசத்தின் நாவினைப் பிடித்தகை

11. **விஷ்ணுதுர்க்கா** (கோயில் : 23)
நின்ற கோலம், 8 கைகள்

வலது : சக்கரம் இடது : சங்கு
அங்குசம் பாசம
கத்தி கத்தி
சூலம் மணி

12. **சிவதுர்க்கா** *(கோயில் : 23)*
நின்ற கோலம், 4 கைகள்
வலது : டமருகம் இடது : சூலம்
கத்தி கபாலம்

13. **மகாலெட்சுமி** *(மகிசாசுர மர்த்தினி கோயில்) (கோயில்: 23)*
நின்ற கோலம், 4 கைகள்
வலது : சுதாயுதம் இடது : கேடயம்
கத்தி கபாலம்

14. அ. **குந்தாளம்மன்** *(கோயில் : 24)*
அமர்ந்த கோலம், 4 கைகள்
வலது : டமருகம் இடது : பாசம்
சூலம் கபாலம்

ஆ. **குந்தாளம்மன்** *(கோயில் : 25)*
அமர்ந்த கோலம், சிங்க வாகனத்தின் மேல் 4 கைகள்
வலது : டமருகம் இடது : பாசம்
சூலம் கபாலம்

15. **கோடியம்மன்** *(கோயில் : 26)*
அமர்ந்த கோலம், இடது காலடியில் அசுரன். 8 கைகள்
வலது : சூலம் இடது : பாசம்
டமருகம் கேடயம்
கத்தி வில்
அம்பு கபாலம்

16. அ. **சியாமளாதேவி** *(கோயில் : 27)*
நின்ற கோலம், இரண்டு கைகள் (உற்சவர்)
வலது : கடகமுத்திரை இடது : டோலஹஸ்த
(கரகத்தின் மேல் அம்மன்)
அமர்ந்த கோலம், 4 கைகள்
வலது : பாசம் இடது : டமருகம்
கத்தி கபாலம்

ஆ. **சியாமளாதேவி** *(கோயில் : 28)*
அமர்ந்த கோலம், 4 கைகள்
வலது : டமருகம் இடது : பாசம்
கத்தி கபாலம்

இ. **சியாமளாதேவி** (கோயில் : 29)

அமர்ந்த கோலம், 4 கைகள்
வலது : டமருகம் இடது : பாசம்
சூலம் கபாலம்

ஈ. **சியாமளாதேவி** (கோயில் : 32)

அமர்ந்த கோலம், 4 கைகள்
வலது : டமருகம் இடது : சூலம்
கத்தி கபாலம்

உ. **சியாமளாதேவி** (கோயில் : 33)

அமர்ந்த கோலம், 4 கைகள் (கரகத்தின் மேல்)
வலது : பாசம் இடது : டமருகம்
சூலம் கபாலம்

ஊ. **சியாமளாதேவி** (கோயில் : 34)

அமர்ந்த கோலம், 4 கைகள் (கரகத்தின் மேல்)
வலது : டமருகம் இடது : பாசம்
கத்தி கபாலம்

எ. **சியாமளாதேவி** (கோயில் : 38)

அமர்ந்த கோலம், 4 கைகள்
வலது : டமருகம் இடது : பாசம்
சூலம் கபாலம்

ஏ. **சியாமளாதேவி** (கோயில் : 39)

அமர்ந்த கோலம், 2 கைகள்
வலது : கத்தி இடது : கபாலம்

ஐ. **சியாமளாதேவி** (கோயில் : 40)

அமர்ந்த கோலம், 4 கைகள்
வலது : டமருகம் இடது : பாசம்
சூலம் கபாலம்

ஒ. **சியாமளாதேவீ** (கோயில் : 42)

அமர்ந்த கோலம், 4 கைகள், வலது காலடியில் அசுரன்
வலது : சூலம் இடது : டமருகம்
பாசம் கபாலம்

17. அ. **செங்கமல நாச்சியம்மன்** *(சிங்கள நாச்சியம்மன்)*
*(கோயில் : 43)*

அமர்ந்த கோலம், 4 கைகள்
வலது : டமருகம் இடது : பாசம்
சூலம் கபாலம்

ஆ. **செங்கமல நாச்சியம்மன்** *(சிங்கள நாச்சியம்மன்)*
*(கோயில் : 44)*

அமர்ந்த கோலம், 4 கைகள்
வலது : டமருகம் இடது : பாசம்
சூலம் கபாலம்

இ. **செங்கமல நாச்சியம்மன்** *(சிங்கள நாச்சியம்மன்)*
*(கோயில் : 45)*

அமர்ந்த கோலம், 4 கைகள்
வலது : டமருகம் இடது : பாசம்
சூலம் கபாலம்

ஈ. **செங்கமல நாச்சியம்மன்** *(சிங்கள நாச்சியம்மன்)*
*(கோயில் : 47)*

அமர்ந்த கோலம், 4 கைகள்
வலது : டமருகம் இடது : பாசம்
சூலம் கபாலம்

உ. **செங்கமல நாச்சியம்மன்** *(சிங்கள நாச்சியம்மன்)*
*(கோயில் : 48)*

அமர்ந்த கோலம், 4 கைகள்
வலது : டமருகம் இடது : பாசம்
சூலம் கபாலம்

ஊ. **செங்கமல நாச்சியம்மன்** *(சிங்கள நாச்சியம்மன்)*
*(கோயில் : 49)*

அமர்ந்த கோலம், 4 கைகள்
வலது : டமருகம் இடது : பாசம்
சூலம் கபாலம்

18. **செல்லியம்மன்** *(கோயில் : 50)*
அமர்ந்த கோலம், 8 கைகள் இடது காலடியில் அசுரன்

வலது : சூலம் இடது : விஸ்மய
டமருகம் அங்குசம்
கத்தி கேடயம்
பாசம் கபாலம்

19. அ திரௌபதியம்மன் (கோயில் : 51)

நின்ற கோலம், 2 கைகள்
வலது : கிளி இடது : தாமரை

ஆ. திரௌபதியம்மன் (கோயில் : 52)

நின்ற கோலம், 2 கைகள்
வலது : தாமரை இடது : டோலஹஸ்த

இ. திரௌபதியம்மன் (கோயில் : 53)

நின்ற கோலம், 2 கைகள்
வலது : தாமரை இடது : டோலஹஸ்த

ஈ. திரௌபதியம்மன் (கோயில் : 54)

நின்ற கோலம், 2 கைகள்
வலது : கடகஹஸ்த இடது : டோலஹஸ்தா

உ. திரௌபதியம்மன் (கோயில் : 55)

நின்ற கோலம், 2 கைகள்
வலது : தாமரை இடது : டோலஹஸ்த

ஊ. திரௌபதியம்மன் (கோயில் : 56)

நின்ற கோலம், 2 கைகள்
வலது : தாமரை இடது : டோலஹஸ்த

20. துர்க்கா (நவதுர்க்கை) (கோயில் : 57)

நின்ற கோலம், 4 கைகள்
வலது : சக்கரம் இடது : சங்கு
அபயம் வரதம்

21. மகாலெட்சுமி (கோயில் : 58)

அமர்ந்த கோலம், 4 கைகள்
வலது : அங்குசம் இடது : பாசம்
தாமரை தாமரை

22. அ. **மாரியம்மன்** *(முத்து) (கோயில் : 59)*

அமர்ந்த கோலம், 4 கைகள்

| | | | |
|---|---|---|---|
| வலது : | சூலம் | இடது : | டமருகம் |
| | கத்தி | | கபாலம் |

ஆ. **மாரியம்மன்** *(கோயில் : 60)*

அமர்ந்த கோலம், இரண்டு கைகள்

| | | | |
|---|---|---|---|
| வலது : | கத்தி | இடது : | கபாலம் |

இ. **மாரியம்மன்** *(புற்று—உற்சவர்) (கோயில் : 61)*

அமர்ந்த கோலம், 4 கைகள்

| | | | |
|---|---|---|---|
| வலது : | டமருகம் | இடது : | பாசம் |
| | கத்தி | | கபாலம் |

ஈ. **மாரியம்மன்** *(கோயில் : 62)*

அமர்ந்த கோலம், 4 கைகள்

| | | | |
|---|---|---|---|
| வலது : | டமருகம் | இடது : | அங்குசம் |
| | கத்தி | | கபாலம் |

# 3. கோயில் அமைப்பும் கட்டடக் கலையும்

தஞ்சை நகரத்தில் அமைந்துள்ள சக்தி வடிவக் கோயில் களிலும் பிற கிராம தேவதைகளின் கோயில்களும் அளவில் சிறிய கோயில்களாகும். பல்லவ, சோழ, பாண்டிய, விஜய நகரக் கட்டடக்கலை வரலாற்றோடு இவற்றை இணைத்தும் பார்க்க வேண்டியதில்லை. இச்சிறிய கோயில்கள் ஆங்காங்கே தெருக்களில் சிறிய அளவில் கட்டப்பட்டுள்ளன. காளிகா பரமேஸ்வரி, பங்காரு காமாட்சியம்மன், எல்லையம்மன் கோயில் களே சற்றும் பெரிதானவை. சோழர், நாயக்கர், மராட்டா காலக் கட்டடக் கலையின் சில கூறுகளை இக்கோயில்களில் காணலாம்.

கிராம தேவதைகள் சில வேளைகளில் பொது இடங்களில் சாலை ஓரங்களில் ஒரு பீடத்தின் மேல் தனிச்சிலையாகவோ அல்லது சூலம் மட்டுமோ அமைக்கப்பட்டு வழிபடப்படுவதைக் காணலாம். சில வேளைகளில் உருவமில்லாத கற்கள் நடப் பட்டு வழிபடப்படுவதையும் காணலாம். தஞ்சை கிராம தேவ தைகள் கோயில்களிலும் உயர் சாக்த மரபுக் கோயில்களிலும் இதனைக் காணலாம். செங்கமல நாச்சியம்மன் (கோயில் : 43, 46) கோயில்களில் சில சிறு தெய்வக் கோயில்களைக் காணலாம். இக்கோயில்களில் சிறு தெய்வங்களுக்கு அமைக்கப்பட்ட சன்னதி களைக் கீழே காணலாம்.

குடிசை போல் அமைந்த சன்னதிகள் தஞ்சை எல்லையம் மன், செங்கமல நாச்சியம்மன் (கோயில் : 43,46) திரௌபதை யம்மன் (கோயில் : 56) கோயில்களில் காணலாம். (படம் : 43 ஊ, ஓ; 46ஈ, 56ஐ). மதுரை வீரன், பட்டவன், ஐயனார், லாடமுனி சிலைகளும் கற்களும் இவற்றில் வைக்கப்படுகின்றன.

ஒரு பீடத்தின் மேல் சில வேளைகளில் குடிசைபோல் அமைந்த சன்னதிகளை உக்ர காளியம்மன், சிங்கள நாச்சியம்மன் கோயில்களில் காணலாம். (படம் : 46ஈ). தஞ்சை முன்னுக்காரத் தெருவில் இருக்கும் சியாமளாதேவி அம்மன் கோயில் பள்ளர்

களால் மண்ணாலும் ஓலைகளாலும் குடிசைபோல் அமைக்கப் பட்டுள்ளது. மண்ணாலான கருவறைச் சுவரும் அதன்மேல் ஓலை பால் கூரை அமைக்கப்பட்டுள்ளது.

நீள் அரைவட்ட அமைப்பில் காணப்படும் சன்னதிகளைச் செங்கமல நாச்சியம்மன் (கோயில் : 43, 46), உக்ரகாளியம்மன் கோயில்களில் காணலாம் (படம்: 16.உ, 46அ, ஆ, இ, உ, ஊ).

சில வேளைகளில் இந்நீள் அரைவட்ட அமைப்புச் சன்னதி கள் ஒரு பீடத்தின்மேல் உக்ர காளியம்மன், செங்கமல நாச்சி யம்மன் (கோயில் : 46) கோயில்களில் அமைக்கப்பட்டுள்ள (படம் : 46.அ, ஆ, இ) தனிச்சூலங்கள் சிலவேளைகளில் சதுரமான கற்களின் மேல் அமைக்கப்பட்டு வழிபடப்படுகின்றன. செங்கமல நாச்சியம்மன் கோயிலில் (கோயில் : 46) பட்டவன், சன்னதி, முன்னடியான் சூலங்கள் இவ்வாறு நாட்டப்பட்டுள்ளன (படம் : 46எ, ஏ).

ஆக, வாஸ்து சாஸ்திர விதிகளின்படி உயர்சமயக் கோயில் கள் அமைக்கப்படுவதை அறிவோம். கிராம தேவதைகளின் கோயில்கள் அவ்விதிகளின்படி அமைக்கப்படுவதில்லை. சன்னதி கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக ஒழுங்கமைப்பில்லாமல் கட்டப்படுகின்றன. உயர் சமயக் கோயில்களில் கருவறை, அந்தரானம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், முகமண்டபம் என்ற முறைவைப்பில் கோயில் அமையும். பின்பு திருச்சுற்றுகளும் தொடர்ந்து பிற சன்னதிகளும் குறிப்பிட்ட திசை நோக்கி அமையும். இதனைப் பங்காரு காமாட்சியம்மன் கோயில், காளிகா பரமேஸ்வரி கோயில், முத்து மாரியம்மன் கோயில், எல்லையம்மன் கோயில் ஆகியவற்றில் காணலாம். ஆனால் கிராம தேவதைகளின் கோயில்களில் இவ்வொழுங் கான முறைவைப்பைக் காணமுடிவதில்லை திருச்சுற்றுகளும் அமையப் பெறவில்லை. தற்காலத்தில் கட்டப்பட்ட திரௌப தையம்மன் கோயில் (கோயில் : 53) சிங்கள நாச்சியம்மன் கோயில் (கோயில் : 43) ஆகியவற்றில் உயர் சமயக் கோயில் களின் அமைப்பைக் காணலாம்.

காளிகா பரமேஸ்வரி கோயிலிலும், முத்துமாரியம்மன் கோயிலிலும் அங்காளம்மன், காத்தாயி அம்மன் கோயில்களிலும் நந்தி, பலிபீடம் ஆகியவை அர்த்த மண்டபத்திலோ அல்லது முன் திருச்சுற்றிலோ வைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். சிங்கள நாச்சியம்மன் கோயிலில் (கோயில் : 43) பலிபீடம், சூலம் ஆகியவை காணப்படும். திரௌபதையம்மன் கோயில்களில் பொதுவாக நாகம், வீரபத்திரர், கூம்பு வடிவக் கல் முதலியனவும் சிலவேளைகளில் பலிபீடமும் இணைந்து காணப்படும். இவை அம்மனை நோக்கி முன் மண்டபத்திலோ அல்லது வெளியில் அமைக்கப்பட்டிருக்கும் (படம் : 51 ஓ, ஓ 52ஊ) கோடியம்மன் கோயிலிலும் நந்தி, பலிபீடம் ஆகியவை வெளியே அம்மனை நோக்கி வைக்கப்பட்டுள்ளன. கோடியம்மன் கோயிலில் உயர் சமயக் கோயில்களைப் போன்ற கருவறை, அந்தரானம், அர்த்த மண்டபம், மகாமண்டபம் என்ற முறைவைப்பும் திருச்சுற்றும் அமைக்கப்பட்டுள்ளது. நந்தி, பலிபீடம் ஆகியவை பொதுவாகச் சிவன் கோயில்களில் காணப்படும். ஆனால் இங்கு அம்மன் கோயில்களிலும் இவை அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். பரமேஸ்வரனின் அம்சமாகக் கருதப்படும் அங்காள பரமேஸ்வரி, பச்சையம்மன் என்ற பார்வதி ஆகியோருக்கு முன்னால் நந்தி, பலிபீடம் வைக்கப்பட்டுள்ளன.

அங்காள பரமேஸ்வரி, கோடியம்மன், முத்துமாரியம்மன் அங்காளம்மன் கோயில்களில் அர்த்த மண்டபச் சுவர் கோஷ்டங்களிலோ சுவரருகிலோ பல்வேறு சிலைகள் வைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். திரௌபதையம்மன் கோயில்களில் கருவறையை அடுத்து அமையும் சிறிய பகுதிகளில் காளியின் தலை வைக்கப் பட்டிருக்கும் (படம் : 51ஆ, 56ஊ). மேலும் பஞ்சபாண்டவர் சிலைகளும் குறிப்பிட்ட இடங்களிலோ சுவர் கோஷ்டங்களிலோ வைக்கப்பட்டிருக்கும். முன் திருச்சுற்றில் அங்கங்கே வரிசையாகப் படிமங்களோ கற்களோ காணப்படுவதும் உண்டு (படம்: 56ஓ,ஔ).

பொது நிலையில் மேற்கண்ட அமைப்பினைச் சற்றுப் பெரிதான கோயில்களிலேயே காணமுடிகின்றது. பெரும்பான்மையான கோயில்களில் கருவறையையும் அதனையடுத்துச் சிறிய முன் அறை அல்லது மண்டபத்தையும் காணலாம். சில வேளைகளில்

கருவறை மண்டப அமைப்பில் அமைவதுண்டு (கோயில் : 44, 23). வெட்டுக்காரத் தெரு செங்கமல நாச்சியம்மன் கோயிலில் (படம் : 44ஆ) அம்மன் மண்டபத்தில் சுவர் கோஷ்டத்தில் அமைக் கப்பட்டுள்ளன. சில வேளைகளில் ஆங்காங்கே வீதிகளில் அல்லது சாலைகளில் வீட்டுச் சுவர் கோஷ்டங்களில் சில சியாமளாதேவி, செங்கமல நாச்சியம்மன், குந்தாளம்மன் கோயில்கள் அமைந் துள்ளன. கிராம தேவதைக் கோயில்களான சிங்கள நாச்சியம்மன் கோயில், குந்தாளம்மன் கோயில் கருவறைகளில் ஒரு நபர் நுழைய முடியாதபடி மிகவும் சிறியதாகக் கருவறை அமைக்கப்பட்டுள்ளது. மேலும் சக்தி அல்லது கிராம தேவதைக் கோயில்களில் கருவறை யைச் சுற்றி வெளிச்சுவர்களில் கோஷ்டங்கள் அமைக்கப்படு வதில்லை. கோஷ்டங்கள் சில கோயில்களில் அமைந்திருப்பினும் அவற்றில் சிற்பங்கள் அமைவதில்லை. அங்காள பரமேச்வரி, காளி காபரமேச்வரி, பங்காரு காமாட்சியம்மன் கோயில்கள் கருங்கல் லால் கட்டப்பட்டுள்ளன. பிற கோயில்கள் யாவும் செங்கல்லால் கட்டப்பட்டுள்ளன.

பெரும்பான்மையான இக்கோயில்களில் கருவறையின் கீழ் அமையும் அதிட்டானம் சிற்ப சாஸ்திரங்களை அடியொற்றி அமைக்கப்பட்டதில்லை. எவ்வித வரிகளும் (mouldings) இல்லாத அதிட்டானங்களையே காணமுடிகிறது. காளிகா பரமேஸ்வரி, பங்காரு காமாட்சியம்மன், எல்லையம்மன் கோயில்களில் சிற்ப நூல்களில் கூறப்பட்ட பத்மக, கபோதபந்த அதிட்டான வகை களைக் காணலாம். பத்மக, கபோதபந்த அதிட்டானங்கள் பராந்தக சோழன் காலத்தில் (கி. பி. 907–955) உயர் சமயக் கோயில்களில் பெருவாரியாக வழக்கிற்கு வந்தன[26] பங்காரு காமாட்சியம்மன் கோயில் கருவறையின் கீழ் அமையும் அதிட்டான அமைப்பில் இரண்டு வகை அதிட்டானங்களின் இணைவினைக் காண்கிறோம். ஒவ்வொரு பக்கத்திலும் பத்மக, கபோதபந்த அதிட்டானங்கள் இணைந்துள்ளன. இரண்டு வகை அதிட்டானங் களை இணைக்கும் மரபு பல்லவர் காலத்திலேயே நிகழ்ந்துள்ளது[27] கருவறைச் சுவர் கோஷ்டத்தின் நேர் கீழ் அமையும் அதிட்டானம்

26. Maichelw Meister & Daky (Ed). 1983, p. 152.
27. Ibid. p. 294.

கபோதபந்த அதிட்டானமாகும். அதன் இருமருங்கிலும் பத்மக அதிட்டானங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாறாக ஒவ்வொரு திசையிலும் காணப்படுகின்றன. காளிகா பரமேஸ்வரி, எல்லையம்மன் கோயில் கருவறையின் கீழ் பத்மக அதிட்டானமும் அதன் கீழ் ஓர் உபபீடமும் அமைக்கப்பட்டுள்ளது. காளிகா பரமேஸ்வரி கோயிலில் வேதிபத்ரா உபபீடத்தைக் காண்கிறோம். ஓர் உயர்ந்த உபபீடத்தின் மேல் ஒரு வகை அதிட்டான அமைப்பை அங்காள பரமேஸ்வரி கோயிலில் காணலாம். இது வேதிபத்ரா உபபீட அமைப்பையுடையது. இக்கோயிலின் கபோதத்தின் கீழ் பத்ம வரிசைகளும் கபோதத்தின்மேல் யாளிவரிசைகளும் அமைக்கப்பட்டுள்ளன. யாளிவரிசை இக்கோயிலில் மட்டுமே காணப்படுகிறது. பங்காரு காமாட்சியம்மன் கோயிலில் கபோதத்தின் கீழ் பத்ம வரிசைகளைக் காணமுடிகின்றது. இக்கோயில்களின் கருவறைச் சுவர்களில் அரைத்தூண்களையும் சாலை (சாலா) கோஷ்டங்களையும் காணலாம். அங்காள பரமேஸ்வரி கோயிலில் அரைத்தூண்கள் மட்டுமே உள்ளன.

கருவறைமேல் அமையும் விமானம் பெரும்பான்மையான கோயில்களில் அல்பவிமானமாகவே அமைந்துள்ளது. கபோதத்தின் மேல் நேராக நான்குபட்டை, ஆறுபட்டை, எண்பட்டைச் சிகரங்களையும் அதன் மேல் ஸ்தூபியையும் காணலாம். காளிகா பரமேஸ்வரி, பங்காரு காமாட்சியம்மன், சிங்கள நாச்சியம்மன் கோயில்களில்விமானம் இரண்டுதளங்களிலோ, மூன்றுதளங்களிலோ அமைக்கப்பட்டுள்ளன. சிற்ப சாஸ்திர மரபைப் பின்பற்றியே இவை அமைக்கப்பட்டுள்ளன. இவற்றின் சிகரங்கள் வட்டமானதாகவும் நான்கு அல்லது எட்டு நாசிக்களையுடையதாகவும் அமைக்கப்பட்டுள்ளன. பட்டைகளில் அமையாத சிகரங்கள் வட்டமானதாகவோ அல்லது சால அமைப்புடையதாகவோ காணப்படும். மேலலங்கம் வடபத்ர காளியம்மன் கோயில், கோடியம்மன் கோயில் ஆகியவற்றில் சால அமைப்புடைய சிகரங்களைக் காணலாம். இச்சிகரங்களின் கிரீவத்தின் மூலைகளில் சிங்க வாகனங்களே உள்ளன. எல்லையம்மன், பங்காரு காமாட்சியம்மன் காளிகா பரமேஸ்வரி கோயில்களிலும் சிங்க வாகனங்களே அமைந்துள்ளன. அங்காள பரமேஸ்வரி (கோயில் : 1), காத்தாயி அம்மன் (கோயில்: 8), அங்காளம்மன் (கோயில் : 3) கோயில்களில் காளை வாகனங்களைக் காணலாம்.

பல தளங்களையுடைய கோபுரங்களின் தளங்கள் ஒவ்வொன்றும் முறையே கர்ணகூடு—நீடம்—சாலை—நீடம்—கர்ணகூடு என்ற அமைப்பு வரிசையில் அமைந்துள்ளது. இவை காளிகா பரமேச்வரி, அங்காள பரமேச்வரி, அங்காளம்மன் (கோயில் : 3) பங்காரு காமாட்சியம்மன், எல்லையம்மன் கோயில்களில் அமைந்துள்ளன. இத்தகைய அமைப்பு ள் பல்லவர் காலத்திலிருந்தே காணப்படுகின்றன.

தஞ்சையிலுள்ள சக்திக் கோயில்களில் சில சோழர் காலத்திலிருந்தே கட்டப்பட்ட போதிலும் அவை சோழ அரசர்களால் கட்டப்படவில்லை. நாயக்கர்களும், மராட்டியர்களும் கட்டிய சில கோயில்களை அவற்றின் சில அம்சங்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம். எல்லையம்மன் கோயில், பங்காரு காமாட்சியம்மன் கோயில், முத்துமாரியம்மன் கோயில், வடபத்ர காளியம்மன் கோயில் (கோயில் : 17) காளிகா பரமேஸ்வரி கோயில், உக்ர காளியம்மன் கோயில் ஆகியவை மராட்டியர்களால் கட்டப்பட்டவை. அங்காள பரமேஸ்வரி, மேலலங்கம் வடபத்ர காளியம்மன் கோயில், ராஜகோபால்சாமி மகிசாசுரமர்த்தினி கோயில் ஆகியவை நாயக்கர் காலத்தில் கட்டப்பட்டவை. நாயக்கர்கள் கட்டிய கோயில்களில் மராட்டியர்கள் தொடர்ந்து திருப்பணிகள் செய்துள்ளனர். மராட்டியர்கள் கோயில்களில் கட்டிய மண்டபங்களின் அமைப்பு நாயக்கர்கள் தங்கள் அரண்மனையிலும் பிற மதச்சார்பற்ற கட்டிடங்களிலும் பயன்படுத்திய கட்டிடக்கலைக் கூறுகளேயாகும் (Indo-Sarasenic Style)[28] நாயக்கர்களைப் பின்பற்றியே மராட்டியர்கள் தங்கள் கட்டிடங்களையும் மண்டபங்களையும் அமைத்தனர். இவற்றில் ஆங்கிலேயே—இந்திய கட்டிடக் கலைக் கூறுகளையும் (Anglo-Indian) காணலாம். நாயக்கர்கள் கட்டிய மண்டபங்களிலும் அரண்மனையிலும் அரைவட்ட வளைவுகள் (Cusped arch) கூர்மையான (Pointed arch) முடிவுள்ள வரைவுகள் பரல் வளைவுகள் (Foliated arch) ஆகியவற்றைக் (வ. படம் 1, 2, 3) காணலாம். இவற்றையே மராட்டியர்களும்

28. Saletore, R.N. 1982. p. 86.

தங்கள் மண்டபங்களிலும் பிற இடங்களிலும் பயன்படுத்தினர். நாயக்கர், மராட்டியர் கட்டிடங்களில் வட்டமான தூண்களோ, சதுரத் தூண்களோ காணப்படும். தூண்களின் மேற்பகுதி மடிப்பு களையுடையது. கீழ்ப்பகுதியில் எவ்வகை அதிட்டான அமைப்பும் இல்லை (வ. படம் 6, 7). மேலும், நாயக்கர், மராட்டிய மண்டபங்களின் கூரை கூம்பு வடிவிலோ அல்லது அரைவட்ட வடிவிலோ அமையும். அரைவட்டத்தில் அமைந்த கூரைகளை யுடைய மண்டபங்களைப் பொதுவாக வவ்வால் நத்தா (Vaulted) மண்டபம் என்பர். இதில் வவ்வால் வந்து தங்க வசதியில்லை. வவ்வால் நத்தா மண்டபக் கூரை அமைப்பு பொதுவாக அர்த்த மண்டபங்களிலும் கூம்பு வடிவக் கூரை அமைப்பு முன் மண்டபங் களிலும் காணலாம். இவ்வமைப்பை மராட்டியர்கள் தஞ்சை மாவட்டத்தில் திருப்பணி செய்த அனைத்துக் கோயில்களிலும் (வ. படம் 4, 5) காணலாம்.

வரை படம் : 1



வரை படம் : 2



வரை படம் : 3



வரை படம் : 4



குறுக்கு வெட்டுத் தோற்றம்



வெளித் தோற்றம் – 1



வெளித் தோற்றம் – 2



வரை படம் : 5



வெளித் தோற்றம் – 1



குறுக்கு வெட்டுத்தோற்றம்

வெளித் தோற்றம் – 2



## அ) கோயில்களும் வீதிகளும்

1. அங்காளம்மன் கோயில் (தெற்குவீதி)
2. அங்காளம்மன் கோயில் (செக்க நாயக்கன் தெரு)
3. அங்காளம்மன் கோயில் (கீழ் நீத்துக்காரத் தெரு, கரந்தை)
4. அம்பா பவானி அம்மன் கோயில் (சக்கா நாயக்கன் தெரு)
5. அன்னபூரணியம்மன் கோயில் (தெற்கு வீதி)
6. எல்லையம்மன் கோயில் (எல்லையம்மன் கோயில் தெரு)
7. கன்னிகா பரமேச்வரியம்மன் கோயில் (எல்லையம்மன் கோயில் தெரு)
8. காத்தாயி அம்மன் கோயில் (கீழராஜவீதி-கொத்தன் சந்து)
9. காத்தாயி அம்மன் கோயில் (கீழவாசல்-இரட்டை வார்காரத் தெரு)
10. காமாட்சியம்மன் கோயில் (மேலவீதி)
11. காமாட்சியம்மன் கோயில் (கரந்தை)
12. காமாட்சியம்மன் கோயில் (கீழவீதி-காந்திஜி ரோடு)
13. காமாட்சியம்மன் கோயில் (மானமுத்துச் சாவடி - வாடி வாசல் வைக்கோல்காரத் தெரு)
14. காமாட்சியம்மன் கோயில் (கீழவாசல்-ஓட்டக்காரத் தெரு)
15. காமாட்சியம்மன் கோயில் (பூக்காரத் தெரு)
16. காளியம்மன் கோயில் (கீழவாசல் - குயவர் தெரு)
17. காளியம்மன் கோயில் (கீழவாசல்-பூமால் ராவுத்தன் கோயில் தெரு)
18. காளியம்மன் கோயில் (தெற்கு ராஜவீதி)
19. காளியம்மன் கோயில் (மேல அலங்கம்)
20. காளியம்மன் கோயில் (சிரேஸ் சத்திரத் தெரு)
21. காளியம்மன் கோயில் (கீழவாசல்-தட்டான் தெரு)
22. காளியம்மன் கோயில் (கரந்தை - மேலகுருவிக்காரத் தெரு)
23. காளியம்மன் கோயில் (ராஜகோபால் சாமி கோயில் தெரு)
24. குந்தாளம்மன் கோயில் (கரந்தை-கோடியம்மன் கோயில் அருகே வேலூர் தெரு)
25. குந்தாளம்மன் கோயில் (கரந்தை-அன்ன சத்திரம் கடைத்
26. கோடியம்மன் கோயில் (கரந்தை - நெடுஞ்சாலை)
27. சியாமளாதேவி அம்மன் கோயில் (ராஜகோபால்சாமி கோயில் தெரு)

28. சியாமளாதேவி அம்மன் கோயில் (கீழவாசல்—சுண்ணாம்புக் காரத்தெரு)
29. சியாமளாதேவி அம்மன் கோயில் (நாகமரச்சந்து)
30. சியாமளாதேவி அம்மன் கோயில் (கீழவாசல் - டபீர்குளம் ரோடு)
31. சியாமளாதேவி அம்மன் கோயில் (மகர்நோம்புச்சாவடி - வாடிவாசல் வைக்கோல்காரத் தெரு)
32. சியாமளாதேவி அம்மன் கோயில் (சாமாந்தன் குளம்-தாத்தோஜியப்பா சந்து)
33. சியாமளாதேவி அம்மன் கோயில் (வடக்கு வாசல்)
34. சியாமளாதேவி அம்மன் கோயில் (ராணி வாய்க்கால் தெரு)
35. சியாமளாதேவி அம்மன் கோயில் (கீழவாசல்-முள்ளுக்காரத் தெரு)
36. சியாமளாதேவி அம்மன் கோயில் (மானோஜியப்பாதெரு-மேளக்காரச் சந்து)
37. சியாமளாதேவி அம்மன் கோயில் (தட்டான்குளம்)
38. சியாமளாதேவி அம்மன் கோயில் (நாணயக்காரச் செட்டித் தெரு)
39. சியாமளாதேவி அம்மன் கோயில் (கீழவீதி – தாஸ்தாமால் சந்து)
40. சியாமளாதேவி அம்மன் கோயில் (அவுல் பட்டரைத் தெரு)
41. சியாமளாதேவி அம்மன் கோயில் (தெற்குவீதி – மாட்டு மேஸ்திரிசந்து)
42. சியாமளாதேவி அம்மன் கோயில் (சக்காநாயக்கன் தெரு)
43. செங்கமல நாச்சியம்மன் கோயில் (குந்தவை நாச்சியார் பெண்கள் கல்லூரி சமீபம்)
44. செங்கமல நாச்சியம்மன் கோயில் (வெட்டுக்காரத் தெரு)
45. செங்கமல நாச்சியம்மன் கோயில் (பூக்கார வடக்குத்தெரு)
46. செங்கமல நாச்சியம்மன் கோயில் (குந்தவை நாச்சியார் மகளிர் கல்லூரி சமீபம்)
47. செங்கமல நாச்சியம்மன் கோயில் (போகித் தெரு)
48. செங்கமல நாச்சியம்மன் கோயில் (மருதய்யாப்பிள்ளைத் தெரு)

49. செங்கமல நாச்சியம்மன் கோயில் (கீழவாசல் — சிக்காரிமால் தெரு)

50. செல்லியம்மன் கோயில் (கரந்தை—செல்லியம்மன் கோயில் தெரு)

51. திரௌபதையம்மன் கோயில் (மானோஜியப்பா வீதி)

52. திரௌபதையம்மன் கோயில் (கரந்தை—பூக்குளம்—மேலதிருவாதி சாலை)

53. திரௌபதையம்மன் கோயில் (கீழவாசல்—பூமால் ராவுத்தன் கோயில் தெரு)

54. திரௌபதையம்மன் கோயில் (கரந்தை—மந்தாரடித்தெரு)

55. திரௌபதையம்மன் கோயில் (கரந்தை—மேல் நீத்துக்காரத் தெரு)

56. திரௌபதையம்மன் கோயில் (கரந்தை—கீரைக்காரத் தெரு)

57. நவதுர்க்கை (மானோஜியப்பா வீதி)

58. மகாலெட்சுமி அம்மன் கோயில் (கரந்தை—சுண்ணாம்புக் காரத்தெரு)

59. மாரியம்மன் கோயில் (கீழராஜவீதி—கொடிமரத்து மூலை)

60. மாரியம்மன் கோயில் (கீழ அலங்கம்)

61. மாரியம்மன் கோயில் (கரந்தை—வடவாற்றங்கரை)

62. மாரியம்மன் கோயில் (மேலராஜவீதி)

63. வாராகி கோயில் (தஞ்சைப் பெரிய கோயில் திருச்சுற்றில்)

# ஆ) கோயில் பற்றிய விபரங்கள்

## 1. அங்காள பரமேச்வரி அம்மன் கோயில்

இத்திருக்கோயில் தஞ்சை தெற்கு வீதியில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. சோழர் காலத்தில் தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய ஸ்தபதிகளின் குலதெய்வமாக இவ்வங்காள பரமேஸ்வரியம்மன் வழிபடப்பட்டாள் என அறியப்படுகிறது. இத்தெருவிலுள்ள விச்வகர்மா ஜாதியினரின் குலதெய்வமாகவே இவ்வம்மன் இன்றும் வழிபடப்படுகிறாள். மேலும், நாயக்கர்கள், செட்டியார்கள் ஆகியோரும் இவ்வம்மனை குலதெய்வமாக வழிபட்டு வருகின்றனர். தஞ்சை நாயக்கர் காலத்திலும் மராட்டியர் காலத்திலும் இக்கோயிலில் திருப்பணிகள் நடைபெற்றுள்ளன. தஞ்சையில் அமைந்துள்ள அங்காளம்மன் கோயில்களில் இக்கோயிலே காலத்தால் பழமையானது. இக்கோயிலின் நீள அகலம் 7 × 7 மீட்டர் ஆகும்.

இக்கோயில் கருவறையில் அங்காள பரமேஸ்வரியம்மன் அமர்ந்த கோலத்தில் காணப்படுகிறாள். அம்மன் நான்கு கைகளையுடையவள். வலது காலை தூக்கி மடக்கி பீடத்தில் வைத்துக் கொண்டும் இடது காலை தொங்கல் நிலையிலும் வைத்துள்ளாள். அம்மனின் வலது இரண்டு கைகளிலும் முறையே மேலிருந்து கீழாக சூலமும் டமருகத்துடன் இணைந்த பாம்பும் உள்ளன. இடது கைகளில் பாசமும் கபாலமும் முறையே மேல், கீழ் கைகளில் உள்ளன. அம்மனின் அருகே நின்ற கோலத்தில் அவளது கணவன் பாலகுருநாதன் காட்சியளிக்கிறார். இவற்றின் உற்சவர்களும் கருவறையில் வைக்கப்பட்டுள்ளன. பாலகுருநாதர் உற்சவர் சிலை சற்றுப் பெரிதானது. அம்மன் சிலை சிறிதானது. நின்ற கோளத்திலேயே இருவரும் காணப்படுகின்றனர்.

கருவறையை அடுத்து அர்த்த மண்டமும் அதன் முன்பு சிறிய முன்மண்டபமும் உள்ளன. அர்த்த மண்டபத்தில் சிவலிங்கம், விநாயகர் கற்சிற்பங்கள் வலது பக்கச் சுவர் கோஷ்டங்களிலும் அகோர வீரபத்திரர் மற்றும் முருகன் சிலைகள் இடது

பக்கச் சுவர் கோஷ்டங்களிலும் வைக்கப்பட்டுள்ளன. அகோர வீரபத்ரர் அம்மனுடனும் தன் குழந்தையுடனும் நின்ற கோலத்தில் காணப்படுகிறார். இச்சிலைகள் கருங்கல்லாலானவை. இவ்வர்த்த மண்டபத்தின் நடுவில் நந்தி சிலை ஒன்றும் அம்மனை நோக்கி வைக்கப்பட்டுள்ளது.

முன் மண்டபத்தின் வடக்கில் சுவர் கோஷ்டத்தில் ஆஞ்சனேயர் சிலை அஞ்சலி முத்திரையுடன் அமைக்கப்பட்டுள்ளது. அர்த்த மண்டபமும் முன் மண்டபமும் நாயக்கர் காலத்தில் நான்கு தூண்களையுடைய ஒரே மண்டபமாக இருந்தது. மராட்டியர் காலத்தில் இவை இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

இக்கோயில் முன்திருச்சுற்றின் தெற்கிலும் கிழக்கிலும் அமைந்துள்ள மராட்டிய மண்டபங்களில் சிறு தெய்வங்கள் பல காணப்படுகின்றன. இம்மண்டபங்கள் வட்டமான தூண்களையும் சுவர் வளைவுகளையும் உடையவை. கருங்கல்லாலான காட்டேரி, கருப்பண்ணசாமி படிமங்கள் கிழக்கு மண்டபத்தில் உள்ளன. காட்டேரி நின்ற கோலத்தில் நான்கு கைகளுடன் காட்சியளிக்கிறாள். வலது கைகளில் டமருகம், கத்தி முதலியனவும் இடது கைகளில் பாசம், கபாலம் முதலியனவும் வைத்துள்ளாள். காலடியில் அசுரன் கிடந்த நிலையில் காணப்படுகிறான் இவை கிழக்கு மண்டபத்தில் உள்ளன. இருளப்பன், பேச்சியம்மன், வெள்ளையம்மன்-மதுரைவீரன்-பொம்மி அம்மன் சிலைகளும் மற்றும் பாவாடைராயன் தன் இரு மனைவிகளுடன் காணப்படும் சிற்பங்கள் தெற்கு மண்டபத்தில் உள்ளன. இப்படிமங்கள் யாவும் மரத்தாலானவை.

இக்கோயிலின் விமானம் அல்பவிமானமாகும், இதன் வட்டமான சிகரத்தில் ஒரு கலசம் உள்ளது. கருவறை அர்த்த மண்டபம் முதலியவை கருங்கல்லால் கட்டப்பட்டவை. கருவறைச் சுவர்களில் கோஷ்டங்கள் எதுவுமில்லை. அரைத்தூண்கள் சுவர்களில் உள்ளன. கபோதத்தின் மேலும் கீழும் முறையே யாளி வரிசைகளும் பத்ம வரிசைகளும் உள்ளன. சிகரத்தில் எட்டு நாசிகள் அமைந்துள்ளன. நான்கு பெரிய நாசிகளிடையே நான்கு சிறிய

நாசிகள் உள்ளன. கிரீவ மூலைகளில் திசைக்கு இரண்டாக காளை வாகனங்கள் அமைந்துள்ளன. கருவறை வெளிச்சுவர்களில் திசைக்கு நான்கு அரைத்தூண்கள் அமைந்துள்ளன. உயரமான உபபீடத்தின் மேல் சிறிய அதிட்டானப் பகுதியும் அதன் மேல் கருவறையும் எழுப்பப்பட்டுள்ளன.

இக்கோயில் ஏறத்தாழ 900 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டது எனக் கூறப்படுகிறது. தற்போதைய அர்த்த மண்டபம் முன் மண்டபம் ஆகியவை நாயக்கர் காலத்தில் கட்டப்பட்டவை. திருச்சுற்றிலுள்ள மண்டபங்கள் மராட்டியர் காலத்தில் கட்டப்பட்டவை. சிறிய இராஜகோபுரம் ஒரு தளத்தையுடையது. இக்கோபுரம் சால சிகரத்தையுடையது. இதன் கிரீவ மூலைகளில் காளை வாகனங்கள் அமர்ந்துள்ளன. இராஜகோபுரத்தின் தளத்தில் கர்ணகூடு - நீடம் சாலை — நீடம் - கர்ணகூடு என்ற அமைப்பு வரிசை ஒவ்வொரு முகத்திலும் காணப்படுகிறது. செங்கல்லால் கட்டப்பட்ட இச்சிறிய இராசகோபுரம் நாயக்கர் காலத்தில் கட்டப்பட்டது.

இக்கோயிலில் சைவ, அசைவ பூஜைகள் நடைபெறுகின்றன. பலியிடுதல் வழக்கம் உள்ளது. பல ஜாதி மக்களின் குல தெய்வமாக இவ்வம்மன் தற்போது வழிபடப்படுகிறாள்.

## 2. அங்காளம்மன் கோயில்

அங்காளம்மன் கோயில் தஞ்சை செக்க நாயக்கன் தெருவில் தெற்கு நோக்கி அமைந்துள்ளது. இக்கோயில் நாயக்கர் காலத்தில் கட்டப்பட்டதாகத் தெரிகிறது. மராட்டியர் காலத்திலும் செப்பனிடப்பட்டுள்ளது. இக்கோயிலின் நீள, அகலம் 12 6 மீட்டர் ஆகும்.

இக்கோயில் கருவறையில் அம்மன் அமர்ந்த கோலத்தில் காட்சி தருகிறாள். அம்மன் நான்கு கைகளையுடையவள். வலது இரண்டு கைகளிலும் மேலிருந்து கீழாக முறையே டமருகத்துடன் இணைந்த பாம்பும் சூலமும் உள்ளன. இடது இரண்டு

கைகளிலும் மேலிருந்து கீழாக முறையே பாசமும் கபாலமும் உள்ளன. அம்மன் இடது காலை மடக்கி பீடத்தில் வைத்துக் கொண்டும். வலது காலை தொங்கல் நிலையிலும் வைத்துள்ளாள். அம்மனின் வலது காலடியில் ஓர் அசுரன் தலை காணப்படுகிறது.

கருவறையை அடுத்து அமையும், அந்தராளப் பகுதியின் இடது புறத்தில் நாகம், ஆஞ்சனேயர், இலிங்கம், பெரியாண்டவர் முதலிய கற்சிலைகள் கிழக்கு நோக்கி அமைந்துள்ளன. பெரியாண்டவர் நின்ற கோலத்தில் காணப்படுகிறார். பெரியாண்டவரின் வலது கையில் சூலமும் இடது கையில் கபாலமும் உள்ளன.

அந்தராளத்தைத் தொடர்ந்து அமையும் அர்த்த மண்டபம் இரண்டு சதுர தூண்களையுடையது. இவை செங்கல்லாலான தூண்கள் ஆகும். மராட்டியர் பாணி வளைவுகளும் (arches) தூண்களிடையில் மேற்பகுதியில் அமைந்துள்ளன. இம்மண்டபம் வவ்வால் நத்தா (vault) மண்டப வடிவத்தையும் கூறையையும் உடையது. இம்மண்டபத்தில் விநாயகர், பூங்காவனத் தம்மன் சிலைகள் முறையே கிழக்கு, தெற்குத் திசைகள் நோக்கி மண்டபத்தின் மேற்குபாகத்தில் அமைந்துள்ளன. பூங்காவனத்தம்மன் அங்காளம்மனின் அம்சமாகவே காணப்படுகிறது. பூங்காவனத்தம்மன் நான்கு கைகளையுடையவள். வலது இரண்டு கைகளிலும் மேலிருந்து கீழாக முறையே டமருகத்துடன் இணைந்த பாம்பும் சூலமும் உள்ளன. இடது இரண்டு கைகளிலும் மேலிருந்து கீழாக முறையே பாசமும் கபாலமும் உள்ளன. இவ்வம்மன் இடது காலை மடக்கி பீடத்தில் வைத்துக் கொண்டும் வலது காலை தொங்கல் நிலையிலும் வைத்துள்ளாள். வலது காலடியில் மூன்று அசுரர்களின் தலைகள் காணப்படுகின்றன. வலது இரண்டு கைகளில் மேலிருந்து கீழாக முறையே உடுக்கை, சூலம் முதலியனவும் இடது இரண்டு கைகளில் மேலிருந்து கீழாக முறையே பாசம், கபாலம் முதலியனவும் உள்ளன. மேலும் இவ்வர்த்த மண்டபத்தில் வள்ளி, முருகன், சிலைகளும், பாவடைராயன் நின்ற கோலத்தில் தன் இரண்டு மனைவிகளுடன் காணப்படும் சிலைகளும் உள்ளன. இவற்றைத் தொடர்ந்து மதுரைவீரன்,

வெள்ளையம்மாள், பொம்மியம்மாள், சுதை சிற்பங்கள் காணப் படுகின்றன. அகோர வீரபத்திரர் சிலை ஒன்று இதனையடுத்து காணப்படுகின்றது. இது கருங்கல்லாலான சிலையாகும். இதற் கடுத்தாற்போல் பிரம்ம சிரகண்டேஸ்வரர் சிலை ஒன்று காணப் படுகிறது. இது கருங்கல்லாலான சிலையாகும். பிரம்ம சிரகண் டேஸ்வரர் நான்கு கைகளையுடையவர். வலது இரண்டு கை களிலும் மேலிருந்து கீழாக டமருகமும் கபாலமும் காணப்படு கின்றன. இடது இரண்டு கைகளில் மேலிருந்து கீழாக முறையே மான், பிரம்மன் தலை முதலியன உள்ளன. இதனையடுத்து சுதையாலான பேச்சியாயி உருவம் ஒன்றும் வைக்கப்பட்டுள்ளது இச்சிலை சிறிது சிதிலமடைந்துள்ளது.

அர்த்த மண்டபத்தைத் தொடர்ந்து இக்கோயிலின் முன் மண்டபம் அமைந்துள்ளது. இது வட்டமானத் தூண்களையுடை யது. முன்மண்டபத்தின் முன்னால் நந்தி, பலிபீடம் ஆகியவை அம்மனை நோக்கி அமைந்துள்ளன. இதன் மூலம் ஒரு நான்கு பட்டை சிகரத்தையுடைய அல்ப விமானம் உள்ளது. இச்சிகரத் தில் ஒரு கலசம் காணப்படுகிறது. இக் கோயிலின் கருவறையின் மேல் ஆறுபட்டைகளால் அமைந்துள்ள சிகரத்தையுடைய அல்ப விமானம் காணப்படுகின்றது. இச்சிகரத்தின்மேல் ஒரு கலசம் அமைந்துள்ளது.

இக்கோயிலில் நிதியா பூசை தினமும் காலையில் நடை பெறுகிறது. மாசி, புரட்டாசி மாதங்களில் பாற்குடம், கரக உற்சவங்கள் நடைபெறுகின்றன. செட்டியார் இனத்தவர்களின் பரிபாலனத்தில் இக்கோயில் செயற்பட்டு வருகிறது.

## 3. அங்காளம்மன் கோயில்

இத்திருகோயில் தஞ்சை கரந்தைப்பகுதியில் கீழ்நீத்துக்காரத் தெருவில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. இப்பகுதியில் வாழ் கின்ற சைவ வேளாளர் குலத்தைச் சார்ந்த ஒரு குடும்பத் தினருக்கு இக்கோயில் காலம் காலமாக சொந்தமாக இருந்து வரு கிறது. இக்கோயில் ஏறத்தாழ முந்நூறு ஆண்டுகளுக்குமுன்

கட்டப்பட்டதாகும். மேலும் பல ஜாதியினரும் இவ்வங்காளம்மனை குலதெய்வமாக வழிபட்டு வருகின்றனர். தஞ்சை செக்க நாயக்கன் தெருவிலும் தெற்கு வீதியிலும் மற்றும் இரு அங்காளம்மன் கோயில்கள் அமைந்துள்ளன. இவற்றை முறையே செட்டியார், விச்வகர்மா மரபினர் வழிபட்டு வருகின்றனர். இக்கோயிலின் நீள, அகலம் 7 × 4 மீட்டர் ஆகும்.

இக்கோயில் கருவறையில் அம்மன் நின்ற கோலத்தில் நான்கு கைகளுடன் காட்சி தருகிறாள். வலது கைகளில் மேலிருந்து கீழாக முறையே கத்தி, சூலம் முதலியனவும் இடது கைகளில் மேலிருந்து கீழாக முறையே பாம்புடன் இணைந்த உடுக்கையும் கபாலமும் உள்ளன. கருவறையை அடுத்து அமையும் அந்தராளப் பகுதியில் அங்காளம்மனுக்கும் சிவனுக்கும் உற்சவ மூர்த்திகள் வைக்கப்பட்டுள்ளன. மூலவரைப்போன்றே அம்மனின் உற்சவ சிலையும் வடிக்கப்பட்டுள்ளது. உற்சவராகிய சிவன் நின்ற கோலத்தில் காணப்படுகிறார். அவரது வலது கையில் சூலமும் இடது கையில் கபாலமும் உள்ளன. இச்செப்புத் திருமேனிகள் அழகானவை.

அடுத்து அமையும் சிறிய மண்டபத்தில் வலது புறம் விநாயகர் படிமமும் இடது புறம் தண்டபாணி படிமமும் அமைந்துள்ளன. துவாரபாலகர்கள் சிலைகள் புடைப்புச் சிற்பங்களாக பெரிய அளவில் சுவரில் வடிக்கப்பட்டுள்ளன.

இப்பகுதியைத் தொடர்ந்து அமையும் அர்த்த மண்டபம் நான்கு வட்டமான தூண்களையுடையது. தூண்களின் மேல் வளைவுகள் அமைக்கப்பட்டுள்ளன. இம்மண்டபம் வவ்வால் நத்தா மண்டபமாக அமைந்துள்ளது. இவ்வர்த்த மண்டபத்தின் தெற்குப் பகுதியில் பேச்சியாயின் சன்னதி உள்ளது. பேச்சியாயி படிமம் பெரிய வடிவத்தில் சுதையால் செய்யப்பட்டுள்ளது. பேச்சியாயி அமர்ந்த கோலத்தில் சில ஆயுதங்களுடனும் மடியில் குழந்தையை வைத்துக்கொண்டு அதன் வயிற்றைக் கிழிப்பது போலும் அமைக்கப்பட்டுள்ளது. பௌத்த நூல்கள் கூறும் ஹாரிதி

என்ற பெண் தேவதையுடன் இவளை ஒப்பிடலாம். இம்மண்டபத்தில் நந்தி, பலிபீடம் ஆகியவை அம்மனை நோக்கி மண்டபத்தின் நடுவில் வைக்கப்பட்டுள்ளன.

இக்கோயில் விமானம் ஓர் அல்பவிமானமாகும். இதன் வட்டமான சிகரத்தின் மேல் ஒரு கலசம் உள்ளது. வட்டமான சிகரத்தில் நான்கு பெரிய நாசிகள் திசைகள் ஒன்றாக அமைந்துள்ளன. அவற்றிடையே நான்கு சிறிய நாசிகள் உள்ளன. இவ் விமானத்தின் நான்கு மூலைகளிலும் நான்கு கர்ணகூடுகள் நிறுத்தப் பட்டுள்ளன. இக்கோயில் செங்கல்லால் கட்டப்பட்டுள்ளது. கிரீவ தள மூலைகளில் திசைக்கு இரண்டு காளை வாகனங்கள் வைக்கப் பட்டுள்ளன.

வாயில் கோபுரம் இரண்டு தளங்களையுடையது. சால சிகரத்தில் மூன்று கலசங்கள் காணப்படுகின்றன. கர்ண கூடுகள், நீடங்கள் சாலைகள் தளங்களில் அடுத்தடுத்து அமைக்கப்பட் டுள்ளன. நான்கு கோபுரத் தாங்கிகள் கோபுரத்தில் உள்ளன. தளங்களின் பத்ர சால வாயில்களின் இருமருங்கிலும் துவார பாலகிகள் சிற்பங்கள் உள்ளன. அம்மன் சிலைகள் விமானத்தில் சாலப் பகுதிகளில் காணப்படுகின்றன. இக்கோயிலில் மாசிமாதம் ஐந்து நாட்கள் உற்சவம் நடைபெறுகிறது.

## 4. அம்பா பவானி அம்மன் கோயில்

இச்சிறிய கோயில் தஞ்சை சக்கா நாயக்கன் தெருவில் வடக்கு நோக்கி அமைந்துள்ளது. மராட்டியர்களின் குலதெய்வமாக இவ்வம்மன் வழிபடப்படுகிறாள். ஒரு மராட்டிய குடும்பத்தினரின் பரம்பரைக் கோயிலாக இது இருந்து வருகிறது. தஞ்சையில் இவ்வம்மனுக்கென்று தனிக் கோயிலாக இது ஒன்றே காணப் படுகிறது. ஏறத்தாழ 200 ஆண்டுகளாக இக்கோயில் செயற் பட்டு வருகிறது. இக்கோயிலின் நீள, அகலம் 5 × 3 மீட்டர் ஆகும்.

இக்கோயிலின் கருவறையில் அம்பா பவானி அம்மன், காண்டேராயா, மணிமல்லேஸ்வரர் ஆகியோரின் கற்சிலைகள் வடக்கு நோக்கி வைக்கப்பட்டுள்ளன. காண்டேராயர் சிலை

நடுவிலும் அதன் இடது புறத்தில் அம்பாபவானி சிலையும் வலது புறத்தில் மணிமல்லேஸ்வரர் சிலையும் அமைந்துள்ளன.

அம்பா பவானி இரண்டு கைகளையுடையவன். வலது கையில் கத்தியையும் இடது கையில், மலரையும் வைத்துள்ளான். வலது காலை மடக்கி பீடத்தில் வைத்துக் கொண்டும் இடது காலை தொங்கல் நிலையிலும் வைத்துள்ளான். காண்டேராயர் நான்கு கைகளையுடையவர். அவர் அமர்ந்த கோலத்தில் காணப் படுகிறார். வலது இரண்டு கைகளிலும் மேலிருந்து கீழாக முறையே டமருகம், கத்தி முதலியன வைத்துள்ளார். இடது கைகளில் மேலிருந்து கீழாக முறையே சூலம், கபாலம் ஆகியவை உள்ளன. அவர் இடது காலை மடக்கி பீடத்தில் வைத்துக் கொண்டும் வலது காலை தொங்கல் நிலையிலும் வைத்துள்ளார். காண்டேராயரின் வலது காலடியில் மூன்று சிறிய தலைகள் காணப்படுகின்றன. மணிமல்லேஸ்வரர் இரண்டு கைகளை யுடையவர். வலது கையில் கத்தியை வைத்துள்ளார். இடது கை வரத முத்திரையில் அமைந்துள்ளது. இடது காலை மடக்கி பீடத்தின் மேல் வைத்துக்கொண்டும் வலது காலை தொங்கல் நிலையிலும் வைத்துள்ளார். இடது காலின் பாதம் மேல் நோக்கிக் காணப்படுகிறது. இச்சிலைகள் மிகவும் அழகுடன் வடிக்கப்பட்டுள்ளன.

மேலும் கருவறையில் இரண்டு நாகங்களும் அவற்றிடையே விநாயகர் சிலையும் கிழக்கு நோக்கி அமைந்துள்ளன. நவராத்ரி யின் போது விசேட அலங்காரங்கள் இச்சிலைகளுக்குச் செய்யப் படுகின்றன.

கருவறையின் முன்னால் அமையும் மண்டபங்கள் மராாட் டியர் பாணி மண்டபங்களாக வளைவான கூரைகளுடன் அமைந் துள்ளன. கருவறைமேல் அல்ப விமானம் ஆறுபட்டை சிகரத் துடன் அமைந்துள்ளது. சிகரத்தின்மேல் ஒரு கலசம் உள்ளது.

## 5. அன்னபூரணியம்மன் கோயில்

இச்சிறிய கோயில் தஞ்சை தெற்கு வீதியில் வடக்கு நோக்கி அமைந்துள்ளது. இச்சிறிய கோயில் 100 ஆண்டுகளுக்கும் முற்பட்டதாக இருக்கலாம். இக்கோயில் நீள, அகலம் 4 × 4 மீட்டர் ஆகும்.

இக்கோயில் ஒரு தனிச் சன்னதியுடன் அமைந்துள்ளது. கருவறை மட்டுமே காணப்படுகிறது. அம்மன் நின்ற கோலத்தில் காணப்படுகிறாள். அம்மன் நான்கு கைகளையுடையவள், மேலிரண்டு கைகளில் மலர்களைத் தாங்கியுள்ளாள். கீழிரெண்டு கைகளுடன் அபய வரத முத்திரையுடன் வடிக்கப்பட்டுள்ளன. இச்சிலை 4 அடி உயரமுள்ளது.

இக்கோயிலின் மேற்குச்சுவரின் பின்புறம் மதுரைவீரன் சிலையுள்ளது. தெருவார்களே இக்கோயிலை பரிபாலனம் செய்து வருகின்றனர். நவராத்திரியின் போது அம்மனுக்கு அலங்காரம் செய்விக்கப்படுகிறது.

## 6. எல்லையம்மன் கோயில்

எல்லையம்மன் என்று அழைக்கப்படுகிற ரேணுகாதேவி கோயில் தஞ்சை எல்லையம்மன் கோயில் தெருவில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. இக்கோயில் மராட்டிய மன்னர் இரண்டாம் சரபோசி காலத்தில் செங்கல்லால் கட்டப்பட்டது. இக்கோயிலின் நீள, அகலம் 15 × 15 மீட்டர் ஆகும்.

இக்கோயில் கருவறையில் ரேணுகாதேவி அமர்ந்த கோலத்தில் ஒரு பீடத்தின் மேல் இருக்கிறாள். தனது இடதுகாலை மடக்கி பீடத்தின் மேல் வைத்துக் கொண்டும் வலது காலை தொங்க விட்ட நிலையிலும் அம்மன் அமர்ந்துள்ளாள். அம்மன் நான்கு கைகளையுடையவள். வலது மேல் கையில் டமருகத்துடன்

இணைந்த பாம்பும் வலது கீழ்க்கையில் கத்தியும் தாங்கியுள்ளாள். இடது மேல் கையில் சூலமும் இடது கீழ்க்கையில் கபாலமும் அம்மன் வைத்திருக்கிறாள். அம்மன் தலையில் கரண்ட மகுடமும் காதுகளில் பத்ர குண்டலங்களும் காணப்படுகின்றன. இச்சுதை யாலான உருவம் அழகானது. அபிஷேகங்கள் இவ்வம்மனுக்குச் சாத்தப்படுவதில்லை. சுதையாலான இவ்வுருவத்தில் சாம்பிராணி, தைலம், புனுகு, ஜவ்வாது முதலியன சாத்தப்படுகின்றது. தைலக் காப்பு மட்டுமே அம்மனுக்கு சாத்தப்படுகிறது. அமர்ந்த கோலத் திலிருக்கும் அம்மனின் முன்னால் ரேணுகா தேவியின் தலை காணப் படுகிறது. அது கிழக்கு நோக்கி அமைந்துள்ளது.

இரேணு என்ற வருமராசன் மகளும் சமதக்னி முனிவரின் மனைவியும் பரசுராமர் தாயும் இரேணுகாதேவி ஆவார். இவ் வம்மனைப் பற்றிய புராணம் பின்வருமாறு :

சமதக்னி முனிவரின் பூசைக்கு வேண்டிய தண்ணீர் கொண்டு வர ஆற்றிற்குச் சென்றாள் ரேணுகை. ஆற்றில் அமர்ந்திருந்து தண்ணீர் எடுக்கும் போது வானத்தில் கந்தர்வன் ஒருவன் அவ் வழியாகச் சென்றான். அவன் உருவம் நீரில் தெரிந்தது. அதனைக் கண்ணுற்ற ரேணுகை கந்தர்வன் அழகைக் கண்டு வியந்தாள். மனைவியின் நிலையை சமதக்னி முனிவர் உணர்ந்தார். அவளது சிரசை கொய்துவிட தனது மகன்கள் மூன்று பேருக்கும் உத்தர விட்டார். ஆனால் பரசுராமரே தன் தாயாரின் தலையை வெட்ட முன் வந்தார்; தலையை வெட்டினார். இதனால் பரசுராமருக்கு சமதக்னி முனிவர் வரம் அளிப்பதாகக் கூறினார். பரசுராமர் தன் தாயார் மீண்டும் உயிர்பெற்று எழ வரம் கேட்டார். அப்போது அப்பகுதியில் நீசன் ஒருவன் மனைவியின் தலையும் வெட்டப்பட்டுக் கிடந்தது. அந்த முண்டத்தோடு ரேணுகையின் தலையையும் இணையும்படி முனிவர் முயற்சி செய்தார். ஆனால் ரேணுகையின் தலை அம்முண்டத்தோடு இணையாமல் முனிவரின் காலடியில் வீழ்ந்தது. பெரும்பான்மையான ரேணுகாதேவி கோயில்களில் இதனால் தலை மட்டுமே உருவமாக வைக்கப்பட்டு வழிபடப் படுகிறது. இக்கோயிலிலும் அவ்வாறே தலைமட்டும் அமர்ந்த கோலத்திலிருக்கும் அம்மன் முன்னால் வைக்கப்பட்டுள்ளது.

இக்கோயிலில் கருவறையை அடுத்து சிறிய அந்தராளப் பகுதியும் அதனைத் தொடர்ந்து அர்த்த மண்டமும் உள்ளது. அர்த்த மண்டபத்தில் அந்தரான வாயிலின் இருமருங்கிலும் துவார பாலகிகள் சிலைகள் உள்ளன. வலது கையில் கத்தியும் இடது கையில் கேடயமும் ஏந்திய நிலையில் அவை காணப் படுகின்றன.

அர்த்த மண்டபத்தைத் தொடர்ந்து மகாமண்டபம் மராட்டிய மண்டப பாணியில் ஆறு வட்டமான தூண்களுடன் கட்டப் பட்டுள்ளது. மகாமண்டப தூண்களின் இடைப்பட்ட மேற் சுவர் களில் கூம்பிக் கூர்மையான வளைவுகளும் (Pointed arches) பல சிறு வளைவுகள் இணைந்துள்ள பெரிய வளைவுகளும் அமைக் கப்பட்டுள்ளன. அழகிய மராட்டா ஓவியங்களை இம்மண்டபத் தின் சுவர்களில் காணலாம். அவையாவன :

தெற்குச்சுவரில் (1) மன்னார்குடி ராஜகோபால் சுவாமி யும் அவர் துணைவியர் இருவரும் நிற்கின்ற காட்சி (2) அகோர வீரபத்திரர் (3) தத்தாத்ரேயர் (திரிமூர்த்தி) (4) அர்த்த நாரீஸ் வரர் முதலிய ஓவியங்கள் காணப்படுகின்றன. மேற்குச் சுவரின் தெற்கில் சரப மூர்த்தியும் வடக்கில் யசோததை கிருஷ்ணன் ஓவியங்களும் தீட்டப்பட்டுள்ளன. சரபமூர்த்தி ஓவியத்தின் கீழ் கருங்கல்லாலான விநாயகர் சிலை வைக்கப்பட்டுள்ளது. தூண் களின் மேற்சுவரில் ராதாகிருஷ்ணன் ஓவியங்கள் தீட்டப்பட்டுள் ளன. வடக்குச் சுவரில் கலியாணசுந்தரர், காளி, ஊர்த்தவ தாண்டவம், மகிசாசுரமர்த்தினி ஓவியங்கள் அழகுடன் தீட்டப் பட்டுள்ளன.

மகாமண்டபத்தின் முன்னால் பலிபீடமும் அதனையொட்டி அமைந்துள்ள சிறு பலகைக் கல்லில் போத்ராஜா ஒருபுறமும் அவரது மனைவி குந்தளாதேவி மறுபுறமும் புடைப்புச் சிற்பங்க ளாக செதுக்கப்பட்டுள்ளன. போத்ராஜா உருவம் கிழக்கு நோக்கி அமைக்கப்பட்டுள்ளது. குந்தளாதேவி உருவம் மேற்கு நோக்கி செதுக்கப்பட்டுள்ளது. அவள் தனது வலது கையில் தன் மகனின் இடது கையைப் பிடித்துக் கொண்டு நிற்கும் காட்சியுள்ளது.

போத்ராஜா தனது வலது கையில் ஓர் ஆயுதத்தைத் தாங்கியுள்ளார். தன் சிரசை வெட்டுவது போன்று அவ்வுருவம் அமைக்கப்பட்டுள்ளது. போத்ராஜா, குந்தளாதேவி ஆகியோர் கணவன்-மனைவி ஆவர். இத்தம்பதிகளை குலதெய்வமாக மராட்டிய இனத்தை சார்ந்த கொந்தளர்கள் வழிபடுகின்றனர். 'குந்தளம் போடுதல்' என்பது மராட்டியர்கள் திருமணத்தின் போது செய்யும் சடங்காகும். அக்கால நான்கு நாள் திருமணச் சடங்குகளில் முதல் நாள் குந்தளம் போடுவார்கள். அச்சடங்கு நடத்துவதற்கு முன்னால் மராட்டியர்கள் இக்கோயிலுக்கு வருகை தந்து இக்குந்தளா தேவியை வழிபட்ட பின்னரே முதல் நாள் 'குந்தளம் போடுதல்' சடங்கை நடத்துவர். மராட்டியர்கள் எல்லையம்மனை 'எல்லம்மா' என்று அழைக்கின்றனர், மகாராஷ்ட்டிராவிலும் எல்லம்மாவுக்கு கோயில்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது. மராட்டிய இனத்தவர்கள் 'கொந்தளங்காரர்' என்ற ஒரு பிரிவினரின் குலதெய்வமாக 'குந்தாளம்மன்' வழிபடப்படுகிறாள் எனக் கருத இடமுண்டு.

இக்கோயில் தெற்குச் திருச்சுற்றில் மகாமண்டபத்தின் எதிரில் ஆலமரம் ஒன்று காணப்படுகிறது. அதனைச் சுற்றி நாகங்கள் வைக்கப்பட்டுள்ளன. நாக வழிபாடு இக்கோயிலில் பொதுமக்களால் விருப்பத்துடன் செய்யப்படுகிறது. ஆல மரத்தின் அருகேவடக்கு நோக்கி மாதங்கி அம்மனுக்கு ஒரு சன்னதி அமைக்கப்பட்டுள்ளது. இச்சன்னதியில் மாதங்கியம்மன் அமர்ந்த கோலத்தில் காணப்படுகிறாள். நவராத்திரியின்போது மராட்டியர்கள் இவ்வம்மனை விரும்பி வழிபடுகின்றனர். மராட்டியர் காலத்தில் பலிகளும் இவ்வம்மனுக்கு கொடுக்கப்பட்டதாகச் செய்தி அறியப்படுகிறது. இவ்வம்மன் காதுகளில் பத்ர குண்டலங்கள் காணப்படுகின்றன. தலையில் கொண்டை அமைக்கப்பட்டுள்ளது. இவ்வம்மனின் இரு மருங்கிலும் துணைப் பெண்கள் அமர்ந்த நிலையில் உள்ளனர். கூத்துக்குரிய பெண்ணாகக் கலம்பக நூல்களில் மதங்கியார், என்ற பெண்பாலார் குறிக்கப்படுவது வழக்கம். மதங்க குலத்துப் பெண் மாதங்கி ஆவாள். ரோணுகாதேவிக்கும் மாதங்கி என்று

பெயர் உண்டு''.[1] தற்காலத்தில் இச்சன்னதி எதிரே துளசி மாடம் ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

இக்கோயிலின் தெற்குச் திருச்சுற்றில் தென்மேற்குப் பகுதியில் கிழக்கு நோக்கி நாக கன்னிகையின் சிற்பம் ஒரு சந்நதியில் வைக்கப்பட்டுள்ளது. நாக கன்னிகை இரண்டு கைகளுடனும் கீழ்ப்பாதி பாம்பு உடலுடனும் காணப்படுகிறாள். தனது இரு கைகளிலும் இரண்டு நாகங்களை வைத்துள்ளாள். அவளது இரு மருங்கிலும் இரண்டு நாகத் துணைப் பெண்கள் கீழ்ப்பாதி பாம்பு உடலுடன் நாக கன்னிகையைப் போன்றே காணப்படுகின்றனர். அவர்களது தலையின் மேல் ஐந்து தலை நாகப்படங்கள் காணப்படுகின்றனர்.

வடக்குத் திருச்சுற்றின் வடமேற்கில் ஒரு சன்னதி அமைந்துள்ளது. இச்சன்னதியில் சண்டிகேஸ்வரி அமர்ந்த நிலையில் காணப்படுகிறாள். இடது காலை மடக்கி பீடத்தில் வைத்துக் கொண்டு வலது காலை தொங்க விட்ட நிலையில் அவள் அமர்ந்துள்ளாள். அவள் தனது இடது கையை தொடையின் மேல் வைத்துள்ளாள். வலது கையில் தண்டாயுதத்தை வைத்துள்ளாள். இச்சன்னதியின் வாயில் சுவரின் இரு மருங்கிலும் ஆறு சிற்பங்கள் சுவரில் பதிக்கப்பட்டுள்ளன. வலது பக்கத்தில் மூன்று சிற்பங்களும் இடது பக்கத்தில் மூன்று சிற்பங்களும் காணப்படுகின்றன. இவை பெண் உருவங்களாகக் காட்சி தருகின்றன. இடது பக்கத்துச்சிற்பங்களில் ஒன்று குதிரைமுகத்தையுடையதாகக் காணப்படுகின்றன. இவற்றில் ஜேஷ்டாதேவி, அய்யனார் சிற்பங்களும் இருப்பதாகக் கூறுகின்றனர். இக்கோயிலின் பல இடங்களில் நாகங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. பிராகாரத்தின் வடகிழக்குச் சுவரில் பைரவர் சிலை ஒன்று காணப்படுகிறது. ஆனால் பைரவருடன் நாய் காணப்படவில்லை.

இக்கோயிலின் கருவறை கொண்டு அமையும் விமானம் ஏகதளத்தையுடையது. இதன் சிகரம் வட்டமானதாகும். அதில்

---

1. இராசு, செ. 1987 தஞ்சை மராட்டியர் கல்வெட்டுகள் பக் : 26

செம்பாலான கலசம் ஒன்றுள்ளது. நான்கு பெரிய நாசிகள் சிகரத்தின் நான்கு திசைகளிலும் அமைந்துள்ளள. நான்கு சிறிய நாசிகள் அவற்றிடையே உள்ளன. நான்கு பெரிய நாசிகளினுள் அமைந்துள்ள கிரீவ கோஷ்டத்தில் மூலவர் சிலையைப் போன்ற உருவமுடைய அம்மன் சிற்பங்கள் அமைந்துள்ளன. கிரீவ மூலைகளில் சிங்க வாகனங்கள் உள்ளன. இக்கோயிலின் கருவறை தேவ கோஷ்டங்களில் சிற்பங்கள் எதுவுமில்லை கருவறை அதிட்டானம் பத்மக வகையைச் சார்ந்தது. கருவறை அதிட்டானத்தின் கீழ் ஓர் உபபீடம் உள்ளது. கருவறையின் அதிட்டானத்தின் கீழ் அமையும் உபபீடம் அர்த்த மண்டபம் வரை நீண்டு காணப்படுகிறது. விமானத்தின் மூலைகளில் சிங்க வாகனங்கள் உள்ளன. இக்கோயில் செங்கல்லால் கட்டப்பட்டதாகும்.

இக்கோயிலின் வாயில் கோபுரம் இரண்டு தளங்களையுடையது. கர்ணகூடு—நீடம்—சாலை—நீடம்—கர்ணக்கூடு என்ற அமைப்பில் தளவரிசை ஹாரம் அமைந்துள்ளது. கோபுரத்தின் சால சிகரத்தில் ஐந்து கலசங்கள் உள்ளன. கிரீவ மூலைகளில் நான்கு சிங்க வாகனங்கள் உள்ளன. பத்ர சால வாயில்களின் இருமருங்கிலும் துவார பாலகிகள் சிற்பங்கள் உள்ளன. எட்டு கோபுரந்தாங்கிப் பெண்கள் கோபுரத்தின் மேற்கு கிழக்குப் பகுதிகளில் உள்ளனர்.

இக்கோயில் நுழைவாயிலின் இடப்பக்க நிலையில் மராட்டிய கல்வெட்டு ஒன்றுள்ளது. இக்கல்வெட்டில் இக்கோயிலில் 1803—ஆம் ஆண்டு இரண்டாம் சரபோசி மன்னர் பல திருப்பணிகளைச் செய்ததையும் கருவறை, பிற மண்டபங்கள், முன் கோபுரம், மடைப்பள்ளி, தளவரிசை, சுற்றுச்சுவர், வாயில் படிக்கட்டு ஆகிய அனைத்தையும் புதியதாகச் சரபோசி அமைத்த விவரத்தை இக்கல்வெட்டுக் கூறுகிறது.[2]

---

2. இராசு, செ. 1987 தஞ்சை மராட்டியர் கல்வெட்டுக்கள். பக் : 27.

இக்கோயில் அரண்மனை தேவஸ்தானத்தின் நிர்வாகத்தின் கீழ் பரிபாலனம் செய்யப்படுகிறது. நித்யபூசை தினமும் காலையில் நடைபெறுகிறது. ஆடிமாதம் கடைசி வெள்ளிக்கிழமை அல்லது செவ்வாய்கிழமை தெருவார்கள் அம்மனுக்கு பாற்குடம் சாத்துகிறார்கள். இக்கோயிலில் ரேணுகாதேவி, பரசுராமர், விநாயகர், அஸ்திர தேவர் முதலிய உற்சவ மூர்த்திகள் உள்ளன. தற்காலத்தில் உற்சவம் எதுவும் நடைபெறுவதில்லை. அஸ்திர தேவர் இருப்பதால் பல வருடங்களுக்கு முன்பு உற்சவங்கள் இக்கோயிலில் விமரிசையாக நடைபெற்றிருப்பதாகத் தெரிகிறது.

## 7. கன்னிகா பரமேச்வரியம்மன் கோயில்

இக்கோயில் தஞ்சை எல்லையம்மன் கோயில் தெருவில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. வைசியர்கள் இக்கோயிலைப் பரிபாலனம் செய்து வருகின்றனர். இக்கோயிலின் நீள, அகலம் 9 × 6 மீட்டர் ஆகும்.

கருவறையில் அம்மன் அமர்ந்த கோலத்தில் காட்சி தருகிறாள். உற்சவ மூர்த்தம் போன்ற உலோக பேரம் மட்டுமே கருவறையில் வைக்கப்பட்டு வழிபடப்படுகிறது. அம்மன் இடது காலை மடக்கி பீடத்தில் வைத்துக்கொண்டும் வலது காலை தொங்கல் நிலையிலும் வைத்துள்ளாள். அம்மன் நான்கு கைகளையுடையவள். வலது இரண்டு கைகளில் மேலிருந்து கீழாக முறையே சூலம், கத்தி முதலியனவும் இடது கைகளில் மேலிருந்து கீழாக பாம்புடன் இணைந்த டமருகம், கபாலம் முதலியனவும் உள்ளன.

கருவறையை அடுத்து சிறிய அந்தராளப்பகுதி உள்ளது. அதன் முன்பு எட்டு சதுர தூண்களையுடைய முன்மண்டபம் உள்ளது. தூண்களிடையே அமைந்துள்ள மேற்சுவரில் வளைவுகள் காணப்படுகின்றன. ஒரு கிணறும் மண்டபத்தின் தெற்குத் திசையில் உள்ளது. மண்டப முன்வாயிலின் மேல் சால அமைப்புடைய சிகரத்தைக் கொண்ட சிறிய கோபுரமும் (துவாரசோபை) உள்ளது.

இக்கோயிலில் வைகாசி மாதம் உற்சவம் நடைபெறுகிறது. நவராத்திரியின் போது அம்மனுக்கு அலங்காரம் செய்விக்கப் படுகிறது.

## 8. காத்தாயி அம்மன் கோயில்

இக்கோயில் தஞ்சாவூர் கீழராஜவீதி கொத்தன் சந்துவில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. தினைப்புனம் காத்தமையால் வள்ளி காத்தாயி அம்மன் என்று அழைக்கப்படுகிறாள். காத்தாயி அம்மன் என்ற பெயரில் இக்கோயில் அழைக்கப்பட்ட போதிலும் இக்கோயிலின் மூலவராக கருவறையில் பச்சையம்மன் என்று அழைக்கப்படுகிற பார்வதி தேவியே இரு கைகளுடனும் அபய வரத முத்திரையுடனும் அமர்ந்த கோலத்தில் அருள் பாலிக் கிறாள். பச்சையம்மன், காத்தாயி அம்மன் என்ற கிராம தேவதை களே இடைக்காலத்தில் பார்வதியம்மன் வள்ளி என்று முறையே அழைக்கப்பட்டனர். நகர்மயப்படுதல் காலத்தில் உயர் ஜாதியினர் இப்பகுதியில் குடியேறி இத்தெய்வங்களை வழிபட்ட போது இத் தேவதைகள் உயர் தெய்வங்களாக மாற்றப்பட்டன போலும். இக் கோயிலின் நீள, அகலம் 9 × 8 மீட்டர் ஆகும்.

கருவறையில் பச்சையம்மன் என்ற பார்வதிதேவி மூலவராக ஒரு பீடத்தின்மேல் அமர்ந்த கோலத்தில் கிழக்கு நோக்கிக் காட்சி யளிக்கிறாள். கருவறையை அடி அடுத்து அமையும் சிறிய அந்த ராளத்தில் கருவறை வாயிலின் தெற்குப் பகுதியில் கிழக்கு நோக்கி காத்தாயி அம்மன் என்ற வள்ளி அன்னத்தின் மேல் சுகாசன நிலையில் அமர்ந்துள்ளாள். பஞ்சமுக நாகபடம் அவளது தலையின் மேல் காட்சியளிக்கிறது. காத்தாயி அம்மன் இரு கைகளையுடை யவள். அவள் வலது இடது தோள்களில் இரண்டு கிளிகள் உள்ளன.

அவளது வலது கால் தரையை நோக்கித் தொங்கிக் கொண் டும் இடது கால் மடங்கிய நிலையில் அன்னத்தின் மீதும் உள் ளது. இடது தொடையில் அவள் ஒரு கைக்குழந்தையை வைத் திருக்கிறாள். குழந்தை இல்லாததாலும் குழந்தை வேண்டுமென்ற ஆசை காரணமாகவும் காத்தாயி தனது தோளின் மேல் உள்ள

கிளியைக் குழந்தையாக மாற்றி வைத்துக்கொண்டாள் என்று கதை கூறப்படுகிறது. பழனியாண்டி கோலத்தில் முருகன் அந்தராளத்தில் கருவறை வாயிலின் இடது புறத்தில் கிழக்கு நோக்கி நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறார். காத்தாயி அம்மன் வள்ளியாக மாறிய காலத்தில் பழனியாண்டி கோலமும் இக்கோயிலில் இணைக்கப்பட்டது போலும். காத்தாயி அம்மன், பழனியாண்டி சிற்பங்கள் சுதையாலானவை.

கருவறையை அடுத்து அமையும் சிறிய அர்த்த மண்டபத்தில் அந்தராள வாயிலின் வடக்குப் பகுதியில் கிழக்கு நோக்கிக் குசேலரும் தெற்குப் பகுதியில் அவரது மனைவி முடியாலழகியும் காணப்படுகின்றனர். இராமனின் மகனான குசலவர் சுகாசன நிலையில் செம்மறி ஆட்டின் மேல் அமர்ந்துள்ளார். அவரது வலது கை வலது தொடையின் மேலும் இடது கை இடது தொடையின் மேலும் உள்ளன. குசலவரின் மனைவியான முடியாலழகி சுகாசன நிலையில் யானை வாகனத்தின்மேல் அமர்ந்துள்ளாள். அவளது வலது கையில் தாமரை மலர் காணப்படுகிறது. இடது கை இடது தொடையின் மேல் உள்ளது. இக் குசலவர்-முடியாலழகி வழிபாடு ஆந்திரப் பகுதியில் காணப்படுவதாகத் தெரிகிறது. தஞ்சை நாயக்கர்களின் ஆட்சிக் காலத்தில் தஞ்சைப் பகுதியில் இவ்வழிபாடு பரவியிருக்கக் கூடும். இவ் வைணவ வழிபாட்டுக் கூறு தஞ்சையில் பிற கோயில்களில் காணப்படவில்லை. குசலவரை முருகனாகவும் முடியாலழகியை வள்ளியாகவும் கூறுவர் சிலர்.

அர்த்த மண்டபத்தின் தெற்குச் சுவரின் நடுவில் அமைக்கப்பட்டுள்ள கோஷ்டத்தில் ரிஷபதேவர் சிற்பம் இடைக்காலத்தில் சுதையால் செய்யப்பட்டு வைக்கப்பட்டுள்ளது. குசலவர், முடியாலழகி சிற்பங்களும் சுதையாலானவை.

அர்த்த மண்டபம் வவ்வால் நத்தா மண்டபமாகக் காணப்படுகிறது. இக்கோயிலில் கருவறை கொண்ட ஒரு அல்ப விமானம் உள்ளது. அதன் மேல் ஒரு கலசத்தையுடைய வட்டமான சிகரமும் உள்ளது. கருவறை செங்கல்லால் கட்டப்பட்டுள்ளது. கிரீவ

கோஷ்டங்களில் அம்மன் உருவங்கள் உள்ளன. மூலைகளில் காளை வாகனங்கள் காணப்படுகின்றன. சிகரத்தில் திசைக்கு ஒன்றாக நான்கு நாசிகளே உள்ளன. கிரீவத்தைச் சுற்றிலும் சில சிறிய சிற்பங்கள் அமைந்துள்ளன.

அர்த்த மண்டபத்தின் வெளியே நுழை வாயிலின் தெற்கில் விநாயகர் சிலை உள்ளது. வாயிலின் வடக்குப் பகுதியில் சிறிய விநாயகர் சிலையும் நாகமும் உள்ளன. வாயிலின் எதிரே நந்தியும் பலிபீடமும் தொடர்ந்து அமைக்கப்பட்டுள்ளன. இவை தற்காலத்தில் வைக்கப்பட்டதாகும். நந்தி, பலிபீடத்தின் மேல் தற்காலத்தில் நான்கு தூண்களையுடைய ஒரு சிறிய மண்டபமும் அதன் மேல் கூம்பு வடிவமுள்ள ஒரு கலசத்தையுடைய சிறிய சிகரம் தூபியுடன் அமைக்கப்பட்டுள்ளது.

நந்தி விமானத்தின் பின்னால் மேற்கு நோக்கிக் கருங்கல்லாலான நாகம், அனுமார், அக்னிவீரன் சிற்பங்கள் ஒரு சிறிய பீடத்தின் மேல் வைக்கப்பட்டுள்ளன. அக்னிவீரன் வலது கையில் ஏற்றிய வாளுடனும் இடது கையில் கத்தியை உடையவராகவும் காட்சியளிக்கிறார்.

முன் திருச்சுற்றின் தெற்கில் வடக்கு நோக்கிச் சுவர் அருகே வரிசையாக வள்ளியின் சகோதரர்களாகக் கூறப்படுகின்றன கிராம தெய்வங்களான முத்துமுனி, செம்முனி, லாடமுனி, வேதமுனி, கொடு முனி, கருமுனி ஆகியோர் சிற்பங்கள் சுதையால் அழகுறச் செய்யப்பட்டு வைக்கப்பட்டுள்ளன. இச்சிற்பங்கள் அளவில் பெரியவை ஏறத்தாழ ஏழடி உயரமுள்ள 'இச்சிற்பங்கள் அதனதன் வாகனத்தில் அமர்ந்த நிலையில் காட்சியளிக்கின்றன.

அர்த்த மண்டபத்தை அடுத்து முதலாவதாக முத்துமுனி குதிரை வாகனத்தின் மேல் அமர்ந்த நிலையில் இருக்கிறார். இவரைத் தொடர்ந்து செம்முனி சிங்கத்தின் மீதும், லாடமுனி, புலியின் மீதும், வேதமுனி காளையின் மீதும், கொடுமுனி யானையின் மீதும், கருமுனி செம்மறி ஆட்டின் மீதும் அமர்ந்துள்ளனர். வால்முனி அல்லது குழந்தை முனி இச்சகோதரர்களில் இளையவர்

ஆவார். இவரது வாகனம் சிறுத்தையாகும். இவரது சிற்பம் திருச்சுற்றில் கருவறையின் அருகே, வெளியே, வடக்கில் வடக்கு நோக்கி அமைந்துள்ளது. ஒரு மேடையின் மேல் அமர்ந்த நிலையில் காட்சி தருகிறார். அம்மேடையின் வெளிச்சுவரில் சிறுத்தை வாகனம் வரையப்படுள்ளது. முத்துமுனி வலது கையில் வாளுடன் காட்சியளிக்கிறார். செம்முனியின் வலது கையில் வாளும் இடது கையில் கபாலமும் உள்ளன. லாடமுனியின் கையில் எதுவும் இல்லை. வேதமுனி வலது கையில் வேத புத்தகத்தையுடையவர். இடது கையில் கத்தியை வைத்துள்ளார். கொடுமுனி வலது கையில் சூலத்தையும் இடது கையில் கத்தியையும் உடையவர். கருமுனி வலது கையில் கதாயுதத்தையும் இடது கையில் கத்தியையும் வைத்துள்ளார். வால்முனி வலது கையில் வாளையும் கபாலத்தையும் உடையவர். அவரது இடது கையில் கத்தி ஒன்றுள்ளது. இச்சிறு தெய்வங்களைத் தமிழகத்தின் பல கிராமக் கோயில்களில் காணலாம்.

கிராம தெய்வங்களான இம்முனிகள் இடைக்காலத்தில் வள்ளியின் சகோதரர்கள் என்ற நிலைக்கு இக்கோயில் மாற்றப்பட்டனர். வள்ளியின் சகோதரர்களான இம்முனிகள் வள்ளியின் வளர்ப்புத் தந்தையான நம்பிராஜனின் மகன்களாகக் கருதப்படுகின்றனர். இம்முனிகள் பச்சையம்மன் என்ற பார்வதிதேவி தவம் செய்த காலத்தில் இடையூறு செய்ய வந்த அட்டதிக்கு பாலகர்களைக் கொன்றதாகத் தலபுராணம் கூறுகிறது. இம்முனிகளில் இளையவரான குழந்தை முனியே இவ்வட்டதிக்கு பாலகர்களைக் கொன்றார். அவ்வட்டதிக்கு பாலகர்களின் தலையை ஒவ்வொரு சகோதரருக்கும் ஒரு தலை வீதம் பகிர்ந்தளித்தார். குழந்தை முனி இரு தலைகளைத் தனக்கு வைத்துக்கொண்டார். அவ்வட்டதிக்கு பாலகர்களின் தலைகளும் முண்டங்களும் தரையில் கிடந்தால் அவை மீண்டும் இணைந்து உயிர் பெற்றுவிடும் என்ற எண்ணத்தில் அத்தலைகளை இச்சகோதரர்கள் தங்கள் வலது காலின் அடியில் வைத்து அழுத்திக் கொண்டனர். அத்தலைகளை இச்சிற்பங்களின் வலது காலடியில் காணலாம். குழந்தை முனி இரண்டு தலைகளைப் பெற்றுக்கொண்டதால் ஒரு தலையைத் தன் வலது காலடியிலும் பிறிதொரு தலையைத்தன் வலதுகையிலும்

வைத்துள்ளார். பிற முனிகளின் சிற்பங்களை விடக் குழந்தை முனி சிலை சிறிது உயரம் கூடுதலானது. இதன் உயரம் ஏறத்தாழ எட்டடி ஆகும். அமர்ந்த நிலையிலேயே வால்முனியும் காட்சியளிக்கிறார்.

இக்கோயிலில் சிறு தெய்வங்களான மதுரைவீரன், காட்டேரி, இருளப்பன் போன்றவை வடமேற்கு மூலையில் ஒரு சன்னதியில் உள்ளது. இச்சன்னதியில் சிறிய கருவறையும் அதன் முன்பு சிறிய அந்தராளப் பகுதியும் உள்ளது. இக்கோயிலில் கருவறை கொண்டது ஒரு அல்ப விமானம், ஒரு கலசத்துடன் அமைந்துள்ளது. விமான சிகரம் கூம்பு வடிவினையுடையது. கருவறையில் மதுரை வீரன் நின்ற கோலத்தில் காணப்படுகிறார். அவரருகே நாய் ஒன்று நிற்கிறது. அவரது வலது பக்கத்தில் தாசியான வெள்ளையம்மனும் இடது பக்கத்தில் மனைவியான பொன்னியம்மனும் நின்ற கோலத்தில் காணப்படுகின்றனர். வெள்ளையம்மனின் இடது கையில் தாமரை மலரும் பொன்னியம்மனின் வலது கையில் நீலோற்பலமும் உள்ளன. மதுரைவீரன் வலது கையில் கதாயுதத்தையும் தாங்கியுள்ளார். வெள்ளையம்மன் அருகே இருளப்பன் சிற்பமும் பொன்னியம்மன் அருகே காட்டேரியின் சிற்பமும் உள்ளன. சிறு தெய்வங்களான இருளப்பனும் காட்டேரியும் கணவன் மனைவியாவர். இச்சிற்பங்கள் மரத்தாலானவை. மதுரைவீரன், நாய், பொன்னியம்மன், வெள்ளையம்மன் சிற்பங்கள் சுதையாலானவை. மதுரைவீரன் சன்னதி செங்கல்லால் கட்டப்பட்டுள்ளது.

இக்கோயில் ஏறத்தாழ 500 ஆண்டுகளுக்கு முற்பட்டது என அறியப்படுகிறது. தஞ்சையில் வாழ்கின்ற ஒரு சைவவேளாளர் குடும்பத்தினருக்குப் பரம்பரைச் சொத்தாக இக்கோயில் இருந்து வருகிறது. பச்சையம்மன், காத்தாயி அம்மன் ஆகிய தெய்வங்களை குல தெய்வங்களாக வழிபட்டு வரும் பல்வேறு ஜாதியினர் இக்கோயிலுக்கு வருகை தருகின்றனர். சைவம், வைணவம், சாக்தம், கௌமாரம், காணபத்யம், சிறு தெய்வ வழிபாடு ஆகியவை இக்கோயிலில் ஒருங்கிணைந்துள்ளன. ஆரம்ப காலத்தில் பச்சையம்மன் என்ற பார்வதி தேவியே இக்கோயிலில் இருந்திருக்க வேண்டும். பின்பு இதைத் தொடர்ந்து காத்தாயி அம்மன்

என்ற கிராம தேவதையும் மதுரைவீரன் என்ற கிராம தேவதையும் பிற முனிகள் வழிபாடுகளும் இணைந்திருக்க வேண்டும். கிராம தேவதைகளுக்கான இக்கோயிலில் பிற்காலத்தில் உயர் ஜாதியினரின் தலையீட்டின் காரணமாகப் பச்சையம்மன் பார்வதி தேவியாகவும் அவளது மருமகளாகக் காத்தாயி அம்மன் வள்ளியாகவும் மாறவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. பிற கிராம தேவதைகளான முனிகளும் வள்ளியின் சகோதரர்களாக மாறினர். குசலவர், முடியாலழகி போன்ற வைணவ வழிபாடுகளும் இங்கு நாயக்கர் காலத்தில் ஏற்பட்டுள்ளன. மேலும் இடைக்காலத்தில் முனிகளும் சைவ, வைணவக் குறிகளைப் பெற்றுத் திகழ்ந்தன.

இக்கோயில் பிராகாரத்தின் மேற்குப் பகுதியில் திருக்கலியாண மண்டபம் சிறிதாகத் தற்காலத்தில் கட்டப்பட்டுள்ளது. இம்மண்டபத்தில் சித்திரை மாதத்தில் வள்ளி—முருகன் திருக்கலியாணம் சிறப்பாக நடைபெறுகிறது. மாசி மாத சிவராத்திரியில் விசேட பூசைகள் உண்டு. ஆடிமாதம் அம்மனுக்குச் சந்தனக்காப்பு சாத்தப்படுகிறது, கரகம் எடுத்தல் சிவராத்திரியின் போது நடைபெறுகிறது. இக்கோயிலில் உற்சவர்களாகக் காத்தாயி அம்மன், பச்சையம்மன், வள்ளி—தெய்வானை—முருகன் முதலியன காணப்படுகின்றன. வாகனங்களும் உற்சவ மூர்த்திகளில் புறப்பாடும் இக்கோயிலில் இல்லை. ஆகம நெறியில் பூசைகள் எதுவும் நடைபெறுவதில்லை. நித்ய பூசை தினமும் காலையில் இக்கோயிலில் பரம்பரை சைவ வேளாளர் குடும்பத்தினரே செய்து வருகின்றனர்.

## 9. காத்தாயி அம்மன் கோயில்

இக்கோயில் தஞ்சை கீழவாசலில் இரட்டை வார்காரத் தெருவில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. இக்கோயில் ஏறத்தாழ நூறு ஆண்டுகளுக்கும் முற்பட்டதாகும். இக்கோயிலின் நீள, அகலம் 7×7 மீட்டர் ஆகும்.

காத்தாயி அம்மன் கரகத்தில் ஆவாதனம் செய்யப்பட்டு வைக்கப்பட்டுள்ளாள். இக்கரகத்தின் மேல் அம்மனின் உருவம் நெட்டியால் செய்யப்பட்டு வைக்கப்பட்டுள்ளது. அம்மன் நான்கு

கைகளுடன் அமர்ந்த கோலத்தில் காணப்படுகிறாள். வலது இரண்டு கைகளில் மேலிருந்து கீழாக முறையே டமருகத்துடன் இணைந்த பாம்பும் கத்தியும் உள்ளன. கீழிரண்டு கைகளில் மேலிருந்து கீழாக முறையே பாசமும் கபாலமும் உள்ளன. அம்மன் வலது காலை மடக்கி இடது காலைத் தொங்கல் நிலையில் வைத்துள்ளாள்.

இக்கோயிலில் கருவறையை அடக்கி நான்கு பட்டைகளாவான சிகரத்தையுடைய அல்ப விமானம் உள்ளது. அதன் மேல் ஒரு கலசம் உள்ளது. கருவறை முன் ஒரு முன்மண்டபம் உள்ளது. இது தற்காலத்தில் கட்டப்பட்டதாகும்.

இக்கோயிலில் சிவராத்திரியின் போது உற்சவம் நடைபெறுகிறது. பாற்குடம் எடுத்தல் விசேட நிகழ்ச்சியாகும். தினமும் காலை நித்ய பூசை நடைபெறுகிறது. தெருவார்கள் இக்கோயிலைப் பராமரித்து வருகின்றனர்.

## 10. (பங்காரு) காமாட்சியம்மன் கோயில்

இத்திருக்கோயில் தஞ்சை மேலவீதியில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. தங்கத்தாலான இவ்வம்மன் மூர்த்தம் காஞ்சிபுரம் காமாட்சியம்மன் கோயிலிலிருந்து கொண்டுவரப்பட்டதாகும். தெலுங்கு மொழியில் பங்காரு என்பதின் பொருள் தங்கம், சுவர்ணம் என்பதாகும். ஆதலால் இவ்வம்மன் பங்காரு காமாட்சியம்மன் என்றழைக்கப்படுகிறாள். இக்கோயிலின் சிறப்புக்குக் காரணம், காஞ்சியில் முகலாயர்களின் படையெடுப்பின் காரணமாக (16-ஆம் நூற்றாண்டு) காஞ்சி காமாட்சியம்மன் கோயில் இருந்த இவ்வம்மன் முகலாயர்களால் கவரப்பட்டுவிடும் என்று அஞ்சி கோயிலைச் சார்ந்தவர்கள் இத்தங்கத்தாலான பிம்பத்தைப் பல இடங்களுக்கு எடுத்துச் சென்று இறுதியில் தஞ்சையில் இக்கோயிலில் பிரதிட்டை செய்து வழிபட்டனர் என்பதனாலாகும். இக்கோயிலின் நீள, அகலம் 22×22 மீட்டர் ஆகும்.

முகலாயர்களின் படையெடுப்பின்போது காஞ்சியிலிருந்த இத்தங்கச் சிற்பத்தை அக்கோயிலைச் சார்ந்தவர்கள் செஞ்சிக்குக் கொண்டு சென்று பதினைந்து வருடங்கள் மறைத்து வைத்தனர். பின்பு உடையார் பாளையத்தில் ஐம்பது வருடங்களும் திருவாரூரில் ஐம்பது வருடங்களும் அணக்குடியில் பதினைந்து ஆண்டுகளும் இவ்வம்மன் தங்கிவிட்டு இறுதியில் தஞ்சையில் 1766-ஆம் ஆண்டு வந்து சேர்ந்தது. தஞ்சையில் மூல அனுமார் ஆலயத்தில் சில வருடங்களும் கொங்கணேஸ்வரர் ஆலயத்தில் சில வருடங்களும் இருந்த பின்பு 1786இல் தற்போதைய கோயிலில் வைக்கப்பட்டது. மராட்டிய அரசர்களில் பிரதாப்சிங் என்பவரை அடுத்து ஆட்சி செய்த துளஜா—1 இக்கோயிலை விரிவுபடுத்திக் கட்டிக் கும்பாபிஷேகம் செய்தார். இக்கோயில் கட்டப்பட்டுள்ள இடம் ஆரம்பகாலத்தில் மராட்டியர்களின் குதிரை லாயமாக இருந்தது. இக்கோயிலைக் கட்டுவதற்குத் தஞ்சை மேல் சிங்கப் பெருமாள் கோயிலின் கற்கள் உபயோகப்படுத்தப்பட்டன. தற்போது சிங்கப் பெருமாள் கோயில் இருக்கும் இடம் வேறானதாகும்.

இக்கோயில் அம்மனின் புராணம் காஞ்சிபுராணத்தில் விளக்கப்பட்டுள்ள காமாட்சியம்மன் கோயில் தல வரலாறோடு தொடர்புடையது. தேவர்கள் வேண்ட பண்டகாசுரனை அழிக்க காமாட்சி தோன்றினாள். காமாட்சியானவள் பங்காரு காமாட்சியாகவும், மூலவராகவும், பிலாபாசத்திலும், ஸ்ரீ சக்கரத்திலும், தபஸ் காமாட்சி நிலையிலும் காணப்படுகிறாள். பங்காரு காமாட்சி தஞ்சைக்கு வந்து சேர்ந்துவிட்டாள். பிற காமாட்சி வடிவங்கள் காஞ்சி காமாட்சியம்மன் ஆலயத்திலேயே வீற்றிருக்கின்றன. பங்காரு காமாட்சியானவள் காஞ்சி காமாட்சியம்மன் கோயிலின் தற்போதைய மூலவர் காமாட்சி அமர்ந்துள்ள காயத்ரி மண்டபத்தின் தெற்கில் அமைந்துள்ள மேடையில் தனிச்சன்னதியில் வீற்றிருந்தார். தற்போது அங்குபங்காருகாமாட்சி இருந்த இடத்தில் அவளது பாதங்கள் செய்விக்கப்பட்டு 1942இல் காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதியால் பிரதிட்டை செய்யப்பட்டு வைக்கப்பட்டது.

தஞ்சை பங்காரு காமாட்சியம்மன் கோயில் கருவறையில் மூலவரான பங்காரு காமாட்சியம்மன் இரண்டு கைகளுடன் நின்ற கோலத்தில் வெள்ளி மஞ்சத்தின் மீது காணப்படுகிறாள். அவள் தனது வலது கையில் கிளியை ஏந்தியுள்ளாள். இடது கை டோல ஹஸ்த (தொங்கல்) முத்திரையுடன் காணப்படுகிறது. மஞ்சத்தில் பங்காரு காமாட்சியம்மன் பின்னால் வெள்ளி பிரபாவளி அமைக் கப்பட்டுள்ளது. கருவறையை அடுத்து அமையும் மண்டபத்தில் அம்மன் நான்கு கரங்களுடன் காணப்படுகிறாள். தீர்த்தவாரியின் போது இது பயன்படுத்தப்படுகிறது. வலது மேல் கையில் பாச மும் வலது கீழ்க்கையில் கரும்பும் காணப்படுகிறது. இடது மேல் கையில் அங்குசமும் இடது கீழ்க்கையில் புஷ்பமும் உள்ளது. உற்சவரான காமகோடி அம்மன் அந்தராளப் பகுதியின் வடக்கே அமைக்கப்பட்டுள்ள சன்னதியில் வெள்ளி மஞ்சத்தின்மேல் நான்கு கரங்களுடன் நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறாள். பிரபை ஒன்று இப்படிமத்தைச் சுற்றி அமைந்துள்ளது. இந்த உற்சவர் வெள்ளியாலானது. ஸ்தபன மூர்த்தியைப் போன்று நான்கு கைகளும் ஆயுதங்களும் புஷ்பங்களும் உடையவள். காமகோடி அம்மனாகும். அந்தராளப் பகுதியில் ஸ்தபன மண்டபத்தின் வாயிலின் இருமருங்கிலும் துவார சக்திகளின் சிற்பங்கள் சிறிதாக அழகுடன் அமைக்கப்பட்டுள்ளன. வலது பக்கத்தில் சிறிய கோஷ் டத்தில் இருக்கும் துவாரசக்தியின் மேல் வலது கையில் அங்குசமும் கீழ் வலது கையில் கதாயுதமும் உள்ளன. மேல் இடது கை பாசத்துடனும் கீழ் இடது கை தர்ஜனி முத்திரையுடனும் சிங்கத் தின் மேல் நின்ற கோலத்துடன் காட்சியளிக்கிறாள். முன் மண்டபத்தின் வாயிலில் இடது பாகத்தில் அமைந்துள்ள துவார சக்தி நேர் மாறான கைகளில் ஆயுதங்களையும் முத்திரைகளை யும் பெற்றுள்ளாள்.

அந்தராளப் பகுதியில் உற்சவ காமகோடி அம்மனின் நேர் எதிரே, வாயிலின் வெளியே, திருச்சுற்றில் அமைநதுள்ள திருக் கலியாண மண்டபத்தில் சிம்ம வாகனம் உள்ளது. இது சிறிது காலத்திற்கு முன்பு வைக்கப்பட்டது. திருக்கலியாண மண்டபம் தற்காலத்தில் பெரிதாகத் தெற்குச் திருச்சுற்றில் கட்டப்பட் டுள்ளது.

அந்தராளத்தைத் தொடர்ந்து அமைந்துள்ள அர்த்த மண்டபம் நான்கு பெரிய வட்டமான தூண்களுடன் வவ்வால் நத்தா மண்டப அமைப்புடன் கூடியது. இது மராட்டியர் காலத்தில் கட்டப்பட்டதாகும். அந்தராள நுழைவாயிலின் இருமருங்கிலும் அர்த்த மண்டபத்தினுள் சிம்ம வாகனங்கள் உள்ளன. அர்த்த மண்டபத்தின் தெற்கிலும் வடக்கிலும் வாயில்கள் உள்ளன. 1895—ஆம் ஆண்டு தஞ்சையிலிருந்த புகைப்படக்காரர் ஒருவரின் மனைவியான மீனாட்சி அம்மாள் அவர்களால் இம்மண்டப வடக்கு வாயில் கட்டப்பட்டுள்ளது. அவருடைய சிற்பத்திற்கு மேல் புகைப்படக் கருவியும் சிற்பமாகத் தீட்டப்பட்டுள்ளது. அதற்குரிய தற்காலக் கல்வெட்டும் வாயில் சுவரில் காணப்படுகிறது.[1] இவ்வாயில் அழகிய புடைப்புச் சிற்பங்களுடன் அமைக்கப்பட்டுள்ளது.

அர்த்த மண்டபத்தைத் தொடர்ந்து அமையும் மகாமண்டபம் மராட்டியர் காலத்தில் கட்டப்பட்டது. இம்மண்டபத்தில் வட்டமான தூண்களும் சதுரமான தூண்களும் காணப்படுகின்றன. கூர்மையான வளைவுகளும் (Pointed arch) மடிப்பு வளைவுகளும் (Foliated curves - cusped arches) தூண்களின் இடைப் பகுதியில் மேல்சுவரில் காணப்படுகின்றன. அர்த்த மண்டப நுழைவாயிலின் இருமருங்கிலும் துவார சத்திகள் மராட்டியர் காலத்தில் செய்யப்பட்டு வைக்கப்பட்டுள்ளன. காமாட்சியம்மன் அமர்ந்த நிலையில் காணப்படும் மராட்டிய ஓவியங்கள் இம்மண்டபத்தின் மேற்குச் சுவரில் காணப்படுகின்றன. லட்சுமி, சரஸ்வதி, பிறர் சாமரம் வீசும் பெண்கள் நிற்கின்ற காட்சியை இதில் காணலாம். மேலும் மகாமண்டபத்தில் தூண்களின்மேல் அஷ்டலட்சுமிகளின் சுதை வடிவங்கள் சிறிது காலத்திற்கு முன்பு செய்து வைக்கப்பட்டுள்ளன. கஜலட்சுமி, சௌபாக்ய லட்சுமி, தனலெட்சுமி, வித்யாலட்சுமி முதலிய வடிவங்கள் தெற்குத் தூண்களில் வடக்கு

---

காண்க செ. இராசு, 1987 தஞ்சை மராட்டியர் கல்வெட்டுக்கள். பக்: 60.

நோக்கியும் வீரலெட்சுமி, சந்தான லட்சுமி, தான்ய லெட்சுமி காருண்யலெட்சுமி முதலியன தெற்கு நோக்கி வடக்குத் திசையி லும் வைக்கப்பட்டுள்ளன.

இம்மண்டபத்தின் கூரையில் 1963-இல் நடத்தப்பட்ட கும் பாபிஷேகத்தின் போது அம்மனின் புராண அடிப்படையில் எழுந்த சில ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. அவையாவன :

1. அருளழகி காமாட்சியம்மன் கழுத்தில் ஏகாம்பரேசுவரர் திருமாங்கல்யத்தை அளித்தல்.

2. அகத்தியர், லோபமுத்திரை, துர்வாசகர், ஹயக்ரிவர், தௌம் யர், மூகர், பரசுராமர் முதலியோரால் அம்மன் ஆராதிக்கப் படுதல்.

3. போக நிலையிலுள்ள தக்ஷபிராஜா பதியினால் செய்யப்பட்ட சிவநிந்தையைச் சகியாத தாக்ஷாயனி யோகாக்னியினால் தன் உடலைத் தியாகம் செய்தல்.

4. மைவரும் கண்டத்தார் மெய்யில் இணைந்து ஸ்ரீ அம்பிகை ஒளிருகிறாள்.

5. தென்னாட்டுக் குழந்தை திருஞான சம்பந்தப் பெருமானுக்கு இறைவி தனது திருமுலைப் பாலளித்தல்.

6. ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள் ஸௌந்தர்ய லஹரியில் தியானித் தவாறு ஸ்ரீ ராஜராஜேஸ்வரி காட்சியளிக்கிறாள்.

7. யாழைப்பழித்த ஸ்ரீ அம்பிகையின் குரல் இனிமையினால் வெட்கமடைந்த சரஸ்வதி தன் வீணையை உரையிலிட் டிருத்தல்.

8. லெட்சுமியும் சரஸ்வதியும் வெண்சாமரசம் வீச பிரம்மா, விஷ்ணு, ருத்ரன், ஈசானனன் கால்களாகவும் ஸ்தாசிவன் மேற்பலகையாகவும் உள்ள மஞ்சத்தில் ஸ்ரீ ராஜராஜேஸ்வரி வீற்றிருக்கிறாள்.

9. சீதாப்பிராட்டியைத் தேடிச் செல்லும்பொழுது சக்கரவர்த்தி திருமகளான ஸ்ரீ ராமன் அருளுருவான ஸ்ரீ அம்பிகையை முறைப்படி உளமுருகி வழிபடுகிறார்.

10. இறைவி கம்பா நதிக்கரையில் இறைவனை வழிபடும்போது கம்பா நதியில் வெள்ளம் வருவதைக் கண்டு அஞ்சி அரையனைத் தழுவிக் கொள்கிறாள்.

11. பண்டாசுரயுத்தத்தின்போது ஸோமகன், ராவணன், பலி, ஹிரண்யாக்ஷன் முதலிய அரக்கர்களை ஸாவரஸுர, அஸ்திரத்தினால் பிடித்து அம்பிகையைப் பண்டாசுரன் எதிர்த்தான். அவ்வரக்கர் கூபீடத்தை அழிக்க ஸ்ரீ அம்பிகை தன் கை நகங்கள் பத்தினின்றும் மகாவிஷ்ணுவின் பத்து அவதாரங்களையும் உற்பத்தி செய்தாள்.

12 சங்கீத மும்மூர்த்திகளுள் ஒருவரும் ஸ்ரீ காமாட்சியை ஆராதித்த ஸ்தானிகர்களில் ஒருவருமான ஸ்ரீ காமாட்சி தாச சியாமா சாஸ்திரிகளுக்கு அம்பாள் காட்சியளிக்கிறாள்.

13. சக்தி சேனைகள் புடைசூழ ஸ்ரீ அம்பிகை பண்டாசுரனை வதம் செய்தல்.

14. தன் பக்தர் அபிராமி பட்டரின் சொல்லை மெய்ப்பிக்க ஸ்ரீ அம்பிகை தன் கை தாடங்கத்தை ஆகாயத்தில் வீச அமாவாசை பௌர்ணமி ஆனது. சரபோஜி இதனைக் காணும் காட்சி.

இக்கோயிலின் கருவறைச் சுவர்களில் கோஷ்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால் சிற்பங்கள் எதுவும் காணப்படவில்லை. கபோதத்தின் கீழ் பத்ம வரிசைகள் உள்ளன. கருவறையின் மேல் அமையும் மேற்கட்டு இரண்டு தளங்களையுடையது. இதன் வட்டமான சிகரத்தில் ஒரு கலசம் உள்ளது. சிகரத்தில் நான்கு பெரிய நாசிகளும் அவற்றிடையே நான்கு சிறிய நாசிகளும் உள்ளன. கிரீவத்தின் மூலையில் நான்கு சிங்க வாகனங்கள் உள்ளன. நான்கு

சிறிய கர்ணகூடுகளும் கிரீவத்தின் மூலையில் உள்ளன. கர்ணகூடு, நீடம், சாலைகோஷ்டங்களில் அம்பாளின் பிற வடிவங்கள் சுதையால் செய்யப்பட்டு வைக்கப்பட்டுள்ளன. கர்ணகூடு—நீடம்—சாலை நீடம்—கர்ணகூடு என்ற அமைப்பில் தளவரிசை ஹாரம் அமைந்துள்ளது. தேவ கோஷ்டங்களில் சிற்பங்கள் எதுவும் இல்லை. பத்மபந்த கபோதபந்த அதிட்டானங்களின் இணைப்பை இக்கோயில் அதிட்டானம் காட்டுகிறது. பத்மபந்த அதிட்டானத்தில் திரிபட்ட குமுதமும் கபோதபந்த அதிட்டானத்தில் அரைவட்ட குமுதமும் காணப்படுகின்றன. கருவறையின் வடமேற்கில் வில்வ மரம் தலவிருட்சமாக உள்ளது. அதனைச் சுற்றி நாகக்கற்கள் உள்ளன. தலவிருட்சத்தின் சிறிது கிழக்கில் ஒரு வட்டமான தூண் அருகே சில நாகக்கற்கள் தற்காலத்தில் வைக்கப்பட்டுள்ளன.

காமகோடி அம்மன் விமானத்தின் மேல் அமையும் மேற்கட்டு இரண்டு அடுக்குகளையுடையது. அதன் வட்டமான சிகரத்தில ஒரு கலசம் உள்ளது. சிகரத்தில் நான்கு பெரிய நாசிகளும் நான்கு சிறிய நாசிகளும் உள்ளன. விமானத் தளஹாரம்—கர்ணக்கூடு—நீடம்—சாலை—நீடம்—கர்ணக்கூடு என்ற அமைப்பில் உள்ளது.

வாயில் இராஜகோபுரம் மூன்று நிலைகளையுடையது. அதன் சால சிகரத்தில் ஏழு கலசங்கள் உள்ளன. விமானத் தளஹாரங்கள் கர்ணகூடு—நீடம் சாலை அல்லது மாடபஞ்சரம்—நீடம்—சாலை— நாசிகோஷ்டம் – மாடபஞ்சரம்-நீடம் - கர்ணக்கூடு என்ற அமைப்பில் அமைக்கப்பட்டுள்ளன. சால வாயில்களின் இருமருங்கிலும் துவார பாலகிகள் சிற்பங்கள் காணப்படுகின்றன. அம்பாளின் பிற வடிவங்கள் பிற கோஷ்டங்களில் கோபுரத்தில் உள்ளன. எட்டு கோபுரத் தாங்கிகள் கோபுரத்தின் கிழக்கு மேற்குத் திசைகளில் அமைக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு சாலப் பகுதியிலும் சிறிய வாயில் உள்ளது. பிராகாரத்தின் வடகிழக்கு மூலையில் ஓர் அல்ப விமானம் வட்டமான சிகரத்துடன் அமைந்துள்ளது. இது மணிக்கூண்டின் மேல் உள்ளது. இதன் கிரீவத்தில் காளை, சிம்ம வாகனங்கள் உள்ளன.

இக்கோயிலின் மடப்பள்ளி திருச்சுற்றின் வடமேற்கு மூலையில் உள்ளது. இக்கோயில் நுழைவாயிலின் வலது பக்கத்தில் வரத கணபதி சிலையைக் காண்கிறோம். இது தற்காலத்தில் பிரதிட்டை செய்து வைக்கப்பட்டுள்ளது.

இக்கோயிலில் நித்யபூசை தினமும் ஏழு காலம் நடைபெறுகிறது. விஸ்வரூபம், உஷத்காலம், காலசந்தி, உச்சிக்காலம், சாயரட்சை, இரண்டாம் காலம், அர்த்த ஜாமம் முதலிய காலங்களில் பூசைகள் நடைபெறுகின்றன. நவராத்திரியின் போது ஒன்பது நாட்களும் பங்காரு காமாட்சி அம்மனுக்குப் பதினொரு அபிஷேகம் நடைபெறுகிறது. ஐப்பசி பூர நட்சத்திரத்தில் 1 நாள் அபிஷேகம் உண்டு. அது ஜன்மதின உற்சவம் ஆகும். பங்குனி உத்திரம் நட்சத்திரத்தில் ஏகாம்பரருடன் திருக்கலியாண உற்சவம் நடைபெறுகிறது. காமகோடி அம்மனுக்கு மாதப்பிறப்பு, அமாவாசை வெள்ளிக்கிழமை, தட்சிணாயன, உத்தராயணபுண்யகாலங்களில் விசேட பூசைகள் நடைபெறும். மேலும் தீபாவளி, சந்திர, சூரிய கிரஹண நாட்களிலும் விசேட பூசைகள் உண்டு. இக்கோயிலில் வடமர்களான அந்தணர்கள் வைதீக பூசை முறைகளைப் பின்பற்றிப் பூசை செய்கின்றனர். ஆகம விதிப்படி பூசைகள் எதுவும் நடைபெறுவதில்லை. துர்வாசகர் எழுதிய சௌபாக்ய சிந்தாமணி எனும் நூலைப் பின்பற்றிப் பூசைகள் செய்யப் படுகின்றன. இக்கோயிலில் தினந்தோறும் சாமவேதம், யஜுர் வேதம் முதலியன மாலையில் ஓதப்படுகிறது. பல்லக்கு, வெள்ளிக் குடை, வெள்ளி தீவட்டி முதலியன இக்கோயிலில் உள்ளன.

இக்கோயில் உள்ளூர் தர்மகர்த்தாக்களிடம் (5பேர் அடங்கிய குழு) பல ஆண்டுகளாக இருந்து வந்தது. 1912இல் ஸ்தானீகர் வசம் இதன் நிர்வாகம் ஒப்படைக்கப்பட்டது. இக்கோயிலின் பரம்பரை தர்மகர்த்தா காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரியார் சுவாமிகள் ஆகும். மேலும் இப்பகுதியைச் சார்ந்த இரண்டு வடமவகுப்பு அந்தணர்கள் ஸ்தானீகர்களாகப் பொறுப்பேற்று 3 பேர் அடங்கிய குழு நிர்வாகத்தைக் கவனித்து வருகிறது. இக்கோயில் இந்து சமய அறநிலையத் துறை ஆட்சி

குட்பட்டது. ஏராளமான சொத்துக்களும் நகைகளும் இக்கோயிலுக்கு உண்டு.

இக்கோயில் 1941, 1963 ஆகிய ஆண்டுகளில் காஞ்சி சந்திரசேகர ஜெயேந்திர சரஸ்வதி காமகோடி பீடாதிபதியால் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. காஞ்சி பச்சையப்ப முதலியாரால் இக்கோயிலுக்கு 1842–ஆம் ஆண்டு சாயரட்சை விளக்குப் போடுதல், இரண்டாம் கால பூசை முதலியவற்றிற்கான கொடையளிக்கப்பட்டுள்ளது. இதனைக் குறித்த தற்காலக் கல்வெட்டு கோயில் நுழைவாயிலில் உள்ளது.

இரண்டாம் சரபோசி மன்னர் 1805–ஆம் ஆண்டு இக்கோயிலுக்குப் பல திருப்பணிகள் செய்துள்ளார். 1874–ஆம் ஆண்டு சிவாஜி மன்னரின் மனைவியார் காமாட்சியம்பாபாயி சாகிப் அவர்களால் சில கொடைகள் இக்கோயிலுக்கு அளிக்கப்பட்டுள்ளன. இவ்விரண்டு கல்வெட்டுக்களும் மராத்தி மொழியில் உள்ளன.[2]

## 11. (அருள்மிகு) காமாட்சி அம்மன் கோயில்

அருள்மிகு காமாட்சியம்மன் கோயில் தஞ்சை கரந்தைப் பகுதியில் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தினருகே மேற்கு நோக்கி அமைந்துள்ளது. அகம்படியர் குலத்தினர் இக்கோயிலைப் பராமரித்து வருகின்றனர். இக்கோயில் மராட்டியர் காலத்திற்கு முன்பே இருந்து வருகிறது எனத் தெரிகிறது. இக்கோயிலின் நீள, அகலம் 16×12 மீட்டர் ஆகும்.

இக்கோயில் கருவறையில் அம்மன் அமர்ந்த கோலத்தில் காட்சியளிக்கிறாள். அம்மன் இடது காலை மடக்கி வலது காலைத் தொங்கல் நிலையில் வைத்துள்ளாள். அம்மன் நான்கு கைகளையுடையவள். வலது கைகளில் மேலிருந்து கீழாக முறையே

---

2. செ. இராசு 1987 தஞ்சை மராட்டியர் கல்வெட்டுக்கள் பக் 60

பாம்புடன் இணைந்த டமருகமும் கத்தியும் உள்ளன. இடது கைகளில் சூலமும் கபாலமும் பெற்றுள்ளாள். அம்மனின் முன்னால் சிறிய பலிபீடம் ஒன்றுள்ளது.

கருவறை நுழைவாயிலின் இருமருங்கிலும் துவாரபாலகிகள் சிற்பங்கள் உள்ளன. அவர்களது இரண்டு கைகளில் கத்தியும் கதாயுதமும் உள்ளன. கருவறையை அடுத்து சிறிய அந்தராளப்பகுதி அமைந்துள்ளது.

அந்தராளத்தைத் தொடர்ந்து அர்த்த மண்டபம் காணப்படுகிறது. இம்மண்டபத்தில் அந்தராள வாயிலின் அருகே விநாயகர், சுப்ரமணியர் சிலைகள் உள்ளன. மேலும் அந்தராள வாயிலின் இருமருங்கிலும் சுவர் கோஷ்டங்களில் அஞ்சலி முத்திரையில் இரண்டு பக்தர்கள் உள்ளனர். இவை நாயக்கர் பாணியில் அமைந்துள்ளன. அர்த்த மண்டபத்தின் தெற்கு வடக்குப் பகுதிகளில் காணப்படும் வாயில்கள் வழியாகத் திருச்சுற்றிற்கு நுழையலாம். அர்த்த மண்டபத்தின் முன்னால் சிறிய முன் மண்டபம் உள்ளது. இது மராட்டா பாணி மண்டபமாக அமைந்துள்ளது. அழகிய பரல் வளைவுகள் பொருந்திய மண்டபமாகும்.

நாயக்கர், மராட்டா காலத்திலிருந்தே இக்கோயில் இப்பகுதியில் நிலைத்து வருகிறது. இக்கோயில் கருவறை கொண்ட அல்ப விமானம் ஆறு பட்டை சிகரத்துடன் அமைந்துள்ளது. அதன் மேல் ஒரு கலசம் காணப்படுகிறது. இக்கோயில் செங்கற்களால் கட்டப்பட்டுள்ளது. தற்காலத்தில் முன் வாயிலின் மேல் சால சிகர அமைப்புடைய சிறிய கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது. சிகரத்தின் மேல் மூன்று கலசங்கள் உள்ளன. அம்மனின் சுதையுருவம் வாயில் மேல் வைக்கப்பட்டுள்ளது. இரண்டு பூதங்களும் இரண்டு சாமரம் வீசும் பெண்களும் இரண்டு சிங்கங்களும் முன்மண்டபத்தின் மேல் புதிதாய்ச் செய்து வைக்கப்பட்டுள்ளது.

இக்கோயிலில் நித்ய பூசை தினமும் காலையில் நடைபெறுகிறது. நவராத்திரியின் போது விசேட அலங்காரம், பூஜைகள் நடைபெறுவது உண்டு.

## 12. காமாட்சியம்மன் கோயில்

இக்கோயில் தஞ்சை கீழவீதி (காந்திஜிரோடு)—யில் மேற்கு நோக்கி அமைந்துள்ளது. தனியார் ஒருவர் இக்கோயிலைப் பராமரித்து வருகிறார். இக்கோயிலின் நீள, அகலம் 3 × 5 மீட்டர் ஆகும்.

இக்கோயிலில் கருவறை மட்டுமே உள்ளது. கருவறையில் அம்மன் அமர்ந்த கோலத்தில் காட்சியளிக்கிறாள். அம்மன் இடது காலை மடக்கி வலதுகாலைத் தொங்கல் நிலையில் வைத்துள்ளாள். அம்மனின் இடது கை மலருடனும் வலது கை வரத முத்திரையுடனும் அமைந்து இருக்கின்றன. அம்மன் கரண்ட மகுடத்தையுடையவள். அம்மனின் நேர் எதிரே நந்தியும் பலிபீடமும் கருவறையினுள் வைக்கப்பட்டுள்ளன. வடக்குச்சுவர் கோஷ்டத்தில் நந்திகேஸ்வரர் நின்ற கோலத்தில் அஞ்சலி முத்திரையுடன் காணப்படுகிறார்.

இக்கோயில் ஏறத்தாழ 90 ஆண்டுகளாக இருந்து வருகிறது. இவ்வம்மன் உருவம் சற்றுப் பழமையானதாகும். இக்கீழவீதியில் இச்சிலை தனியாகச்சிலகாலமாக இருந்து வந்துள்ளது. 90 ஆண்டுகளுக்கு முன் இதை இவ்வீதியிலேயே தற்போதுள்ள இடத்திற்கு மாற்றி வைத்துக் கோயில் கட்டி வழிபடுகின்றனர். கருவறைமேல் நீள்பட்டை (4 பக்கங்கள்) சால வடிவத்தில் சிகரம் அமைக்கப்பட்டுள்ளது. அதன்மேல் மூன்று கலசங்கள் உள்ளன. கருவறை மேல் சுவர் வவ்வால் நத்தா மண்டப கூரை வடிவில் அமைந்துள்ளது.

இக்கோயிலில் நித்ய பூசை காலையில் நடைபெறுகிறது. நவராத்திரியின்போது அம்மனுக்கு அலங்காரம் செய்விக்கப்படுகிறது. சந்தனக்காப்பு முதலியனவும் சாத்தப்படுகின்றன.

## 13. காமாட்சியம்மன் கோயில்

தஞ்சை மானம்புச் (மகர் நோன்பு) சாவடியில் வாடிவாசல் வைக்கோல்காரத் தெருவில் கிழக்கு நோக்கி இக்கோயில் அமைந்துள்ளது. இக்கோயில் ஏறத்தாழ 200 வருடங்களுக்கும்

முற்பட்டதாகத் தெரிகிறது. இக்கோயிலின் நீள அகலம் 4x4 மீட்டர் ஆகும்.

இக்கோயில் கருவறையில் அம்மன் அமர்ந்த கோலத்தில் காட்சி தருகிறாள். அம்மன் இடது காலை மடக்கி வலது காலைத் தொங்கல் நிலையில் வைத்துள்ளாள். வலது கையில் மேலிருந்து கீழாக முறையே சூலமும் கத்தியும் உள்ளன. இடது கைகளில் மேலிருந்து கீழாக முறையே டமருகத்துடன் இணைந்த பாம்பும் கபாலமும் காணப்படுகின்றன.

கருவறையின் முன்னால் அமைந்துள்ள சிறிய முன்மண்டபத்தில் விநாயகர், சுப்ரமண்யர் படிமங்கள் தற்காலத்தில் செய்து வைக்கப்பட்டுள்ளன. இம்மண்டபத்தின் கீழ் சப்தகன்னியர் எழுவருக்கும் நீள் சதுரக் கற்கள் பதிக்கப்பட்டுள்ளன. இவை வடக்குத் திசையில் தெற்கு நோக்கி வைக்கப்பட்டுள்ளன. முன் மண்டபத்தின் கீழ் கிழக்கு நோக்கி முனியாண்டவர் சன்னதி ஒன்றுள்ளது. அம்மனை நோக்கிப் பலிபீடமும் மூஞ்சூறு வாகனமும் வைக்கப்பட்டுள்ளன.

இக்கோயில் கருவறை செங்கல்லாலானது. இக்கோயிலில் கருவறை கொண்ட ஓர் அல்ப விமானம் கூம்பு வடிவ சிகரத்துடனும் ஒரு கலசத்துடனும் காணப்படுகிறது.

இக்கோயிலில் மார்கழி மாதம் 30 நாட்களிலும் விசேட பூசைகள் நடைபெறுகின்றன. மாசி மாத சிவராத்திரி விசேடமாகக் கொண்டாடப்படுகிறது. அன்று தான் இக்கோயிலில் கரக உற்சவம் சிறப்பாக நடைபெறுகிறது.

இக்கோயிலில் தெருவார்கள் மேற்பார்வையில் இயங்கி வருகிறது.

## 14. காமாட்சியம்மன் கோயில்

இக்கோயில் தஞ்சை கீழவாசல் ஒட்டகாரத் தெருவில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. இக்கோயில் ஏறத்தாழ 200 ஆண்டுகளுக்கும் முற்பட்டதாக இருக்கலாம். இக்கோயிலின் நீள, அகலம், 6x6 மீட்டர் ஆகும்.

இக்கோயில் கருவறையில் அம்மன் அமர்ந்த கோலத்தில் வீற்றிருக்கிறாள். அம்மன் சிலை கருங்கல்லாலானது. அம்மன் நான்கு கைகளையுடையவள். வலது இரண்டு கைகளில் மேலிருந்து கீழாக முறையே சூலம், கத்தி முதலியனவும் இடது கைகளில் மேலிருந்து கீழாக டமருகத்துடன் இணைந்த பாம்பும் கபாலமும் உள்ளன. அம்மன் இடது காலை மடக்கி வலது காலைத் தொங்கல் நிலையில் வைத்துள்ளாள். இச்சிலையின் பின்னால் சுதையாலான பிறிதொரு அம்மன் படிமம் அதே அம்சங்களுடன் காணப்படுகின்றது. பாம்புபடம் ஒன்று கூடுதலாக அம்மனின் பின்னால் உள்ளது.

கருவறையை அடுத்து அமையும் சிறிய அந்தராளத்தில் கருவறை வாயிலின் வலது புறத்தில் விநாயகரும் இடது புறத்தில் கரகம் அல்லது பூர்ணகும்பம் உள்ளன. இவை கிழக்கு நோக்கி வைக்கப்பட்டுள்ளன. அந்தராளத்தைத் தொடர்ந்து அமையும் அர்த்த மண்டபம் கருங்கல்லாலானது. இதன் நடுவில் நந்தி, பலி பீடம் ஆகியவை அம்மனை நோக்கி வைக்கப்பட்டுள்ளன. அர்த்த மண்டபத்தின் தெற்கில் வடக்கு நோக்கி மதுரை வீரன், வெள்ளையம்மாள், பொம்மியம்மாள் படிமங்கள் உள்ளன. இவை கருங்கல்லாலானவை. மதுரைவீரன், வலது கையில் கத்தியும் இடது கையில் கதாயுதமும் தாங்கியுள்ளார். அர்த்த மண்டபத்தின் வடக்கில் கருப்பண்ணசாமிக்குப் படிமம் ஒன்று வைக்கப்பட்டுள்ளது. இப்படிமம் கருங்கல்லாலானது. அவரது இரண்டு மனைவிகளும் அவரருகே காணப்படுகின்றனர். கருப்பண்ணசாமி நின்ற கோலத்தில் காணப்படுகிறார். வலது கையில் கத்தியும் இடது கையில் கேடயமும் தாங்கியுள்ளார்.

கருவறையைச் சுற்றிச் சிறிய திருச்சுற்று உள்ளது. அர்த்த மண்டபத்தின் இருமருங்கிலும் திருச்சுற்றுச் செல்லச் சிறிய வழிகள் உள்ளன. திருச்சுற்றின் தென் மேற்கில் விநாயகர் படிமமும் வடமேற்கில் அம்மன் சிலையும் சிறிய கோஷ்டங்களில் வைக்கப்பட்டுள்ளன.

கருவறை மேல் சிறிய அறுபட்டை சிகரத்தையுடைய விமான மேற்கட்டு உள்ளது. சிகரத்தின் மேல் ஒரு கலசம் உள்ளது. கருவறை செங்கல்லால் கட்டப்பட்டுள்ளது.

கோயிலின் நுழைவாயிலின் மேல் அம்மன் நின்ற கோலச் சுதையுருவம் உள்ளது. அவளது இருபக்கங்களிலும் சாமரம் வீசும் பெண்கள் நிற்கின்றனர். பூத கணங்களும் சிங்க வாகனங்களும் வாயிலின் மேல் மண்டப மூலைகளில் உள்ளன.

இக்கோயிலில் மார்கழி 30 நாட்களிலும் சிவராத்திரியிலும் விசேட பூசைகள் நடைபெறுகின்றன. தினமும் காலையில் நித்ய பூசை நடைபெறுகிறது. இக்கோயிலைத் தெருவார்கள் பரிபால னம் செய்து வருகின்றனர்.

காஞ்சியில் கோயில் கொண்டுள்ள காமகோடி-காமாட்சி ஒரு சக்ர பிரதிஷ்டா தேவியாக, வைதீக மரபு பூசை பெற்று உயர் குடியினரின் தேவியாக விளங்கினாலும் தமிழ் நாட்டில் பரவலாகக் காமாட்சி என்ற பெயரில் ஒரு கிராம தேவதையாகப் பிராமணரல் லாத பூசாரியின் பூசையோடு உயிர்ப்பலியும் சில இடங்களில் பெற்று ஒரு எளிய கோயில் தெய்வமாக விளங்குவதைக் காண்கி றோம்.

## 15. காமாட்சியம்மன் கோயில்

இச்சிறிய கோயில் தஞ்சை பூக்காரத் தெருவில் வடக்கு நோக்கி அமைந்துள்ளது. இத்தெருவில் அமைந்துள்ள சுப்பிரமணி யர்கோயில் நிர்வாகத்தின் கீழ் இக்கோயில் செயற்படுகிறது. இக் கோயிலின் நீள, அகலம் $7 \times 4$ மீட்டர் ஆகும்.

ஆரம்பகாலத்தில் இக்கோயில் ஒரு சாவடியாக இருந்தது. அது தெருவார்களின் பொறுப்பில் இருந்தது. பின்பு காத்தாயி அம்மனின் கரகம் இக்கோயில் கருவறையில் முதலில் வெகுகாலம் வைக்கப்பட்டிருந்தது. அதன் பின்பு காமாட்சியம்மன் சிலை இங்கு பிரதிட்டை செய்யப்பட்டது. காமாட்சியம்மன் சிலை மிகவும் பழமையானது. இது ஆரம்பத்தில் தஞ்சையில் பிறிதொரு இடத் தில் சில காலம் இருந்த பின்பு சுப்பிரமணியர் சுவாமி கோயிலுக்குக் கொண்டுவரப்பட்டுப் பிரதிட்டை செய்யப்பட்டது. அதன் பின்பு இக்கோயிலிலிருந்து காத்தாயி அம்மன் கோயிலுக்கு மாற்றப்பட்டு, காத்தாயி அம்மன் கரகம் நீக்கப்பட்டு, காமாட்சி அம்மன் அவ் விடத்தில் பிரதிட்டை செய்யப்பட்டாள்.

இக்கோயில் கருவறையில் அம்மன் நின்ற கோலத்தில் காணப்படுகிறாள். அம்மன் இரண்டு கைகளையுடையவள். இடது கையில் தாமரையுடனும் வலது கையை டோலஹஸ்த முறையில் வைத்த நிலையிலும் காணப்படுகிறாள். இக்கோயிலில் கருவறை அடங்கிய சிறிய விமானம் சதுரமானசிகரத்துடன் காணப்படுகிறது. அதில் ஒரு கலசம் உள்ளது. சிகரத்தின் முன்னால் சுதையாலான அம்மன்சிலை உள்ளது. இச்சிலை சிதிலமடைந்துள்ளது. கருவறையைச் சுற்றி ஓர் அறை (நாழி / இடைகழி) அமைக்கப்பட்டுள்ளது. கருவறையின் முன்னால் ஓடு வேயப்பட்ட சிறிய எட்டு சதுர தூண்களையுடைய மண்டபம் உள்ளது. இக்கோயில் கருவறையும் வெளி அறைச்சுவரும் செங்கல்லாலானவை.

இக்கோயிலில் நித்ய பூசை இரண்டு வேளை நடைபெறுகிறது. நவராத்திரி பத்து நாட்களும் விசேட பூசைகள் நடைபெறுகின்றன. பாற்குடம் முதலியன விசேட நாள்களில் எடுக்கப் படுகின்றன.

## 16. காளியம்மன்

(கருவக்காடு நிசும்பசூதனி—உக்கிர காளியம்மன்)

உக்கிர காளியம்மன் என்று அழைக்கப்படுகிற நிசும்பசூதனி அம்மன் கோயில் தஞ்சாவூர் குயவர் தெருவில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. இக்கோயில் அமைந்துள்ள இடம் தஞ்சாவூரில் கீழவாசல் பகுதியின் கோயில் ஆகும். கருவக்காடு நிறைந்த இடமாக முற்காலத்தில் இவ்விடம் காணப்பட்டதால் இவ்வம்மன் கருவக்காடு நிசும்பசூதனி என்றழைக்கப்பட்டாள். இக்கோயிலின் நீள, அகலம் 12×6 மீட்டர் ஆகும்.

விஜயாலய சோழன் தஞ்சையில் நிசும்பசூதனிக்குக் கோயிலெடுத்தான் எனத் திருவாலங்காட்டுச் செப்பேடுகள் குறிக்கின்றன. இது குறிக்கும் நிசும்பசூதனி இவ்வம்மனாகும் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். கீழவாசலில் பிறிதொரு நிசும்பசூதனி கோயில் பூமால் ராவுத்தன் கோயில் தெருவில் உள்ளது. ''வடபத்ரகாளியம்மன் கோயில் என்றழைக்கப்படும். இக்கோயில்தான்

விஜயாலய சோழன் எடுத்த கோயில் என்று தொல்பொருள் துறை இயக்குநர் நாகசாமி குறிப்பிடுகிறார். ஆனால் தமிழக வரலாற்றுச் செய்திகள் என்ற நூலில் தஞ்சைப் பேராசிரியர் கோவிந்தராசனார் கருவக்காட்டில் அமைந்துள்ள கோயிலில் இருக்கும் அம்மனே நிசும்பசூதனி என விளக்குகிறார்''[1] 'சோழர் கலை' பற்றி எழுதிய எஸ். ஆர். பாலசுப்ரமணியம் அவர்களும் கருவக்காட்டுக் கோயிலையே விஜயாலய சோழன் அமைந்த நிசும்ப சூதனிக் கோயில் எனக் குறிப்பிடுகிறார்.[2]

கருவக்காட்டில் அமைந்துள்ள அம்மன் நான்கு கைகளை யுடையவள். இவ்வம்மன் அமர்ந்த கோலத்தில் காணப்படுகிறாள். அவளது வலது காலடியில் ஒரு வீரனும் இடது காலடியில் ஒரு வீரனும் கிடந்த நிலையில் காணப்படுகின்றனர். இவர்கள் அசுரர் களாகும். ஜடாபாரத்தைத் தாங்கியுள்ள இவ்வம்மன் பிற ஆரம்ப காலச் சோழர் சிற்பங்களை ஒத்த தோற்றத்தில் உள்ளது. இதனால் இது விஜயாலய சோழன் எடுத்த நிசும்பசூதனி எனலாம். தற் போதைய கோயிலில் புதிதாக மராட்டிய ராணி சாகிப் (19–ஆம் நூற்றாண்டு) எடுத்த புதிய நிசும்பசூதனி அம்மன் சிலை கரு வறையில் உள்ளது. அதனருகே முன் மண்டபத்தின் வடக்கில் பழைய விஜயாலய சோழன் அமைத்த சிலை வைக்கப்பட்டுள் ளது. ஆரம்ப காலத்தில் இச்சிலை இருந்த இடம் தற்போதைய கோயிலருகே பிறிதொரு சன்னதியாக இருக்க வாய்ப்புண்டு. இக் கோயிலில் பழைய சிவன் கோயில் சின்னங்கள் பல உள்ளன. விநாயகர், துர்க்கை, மாயாசக்தி, சனீஸ்வரன் முதலிய சிற்பங் களும் கோயில் கட்டிய கபோத கூடுகளும் உள்ளன. அர்த்த நாரீஸ்வரர், சிவசக்தி முதலியன தஞ்சை அரண்மனை கலைக் கூடத்தில் இக்கோயிலிலிருந்து எடுத்து வைக்கப்பட்டுள்ளன. வெண் ணாற்றின் கரையில் அமைந்திருந்த இக்கோயிலும் பிறிதொரு சிவன் கோயிலும் வெள்ளப் பெருக்கினாலோ பிற காரணங்களினாலோ அழிவுப்பட்டிருக்கவேண்டும். தற்போது இக்கோயிலில் காணப்படும்

---

1. காண்க பரணிதரன் ஆனந்தவிகடன், 1983 பக். 40.

2. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம், 1966, பக். 43.

பழைய சின்னங்கள் சிவன் கோயிலும் அம்மன் கோயிலும் இருந்த தற்கான சான்றுகளாகும். சோழர்காலக் கபோதக் கூடு ஒன்று இக்கோயில் தலவிருட்சத்தின் அடியில் வைக்கப்பட்டுள்ளது. அதில் அம்மன் அமர்ந்த கோலத்தில் அபயவரத முத்திரையுடன் காட்சி யளிக்கிறாள். பூமால் ராவுத்தன் கோயில் தெருவில் அமைந் துள்ள காளியம்மன் என்ற வடபத்ர காளியம்மன் கோயில் மகா ராஷ்டிரர்கள் இடைக்காலத்தில் தஞ்சையில் எழுப்பிய பிற கோயில் களைப் போன்றது. மேலும் இக்கோயிலில் வீற்றிருக்கும் அம்மன் வடநாட்டுக் காளிகளை ஒத்த தோற்றத்தில் காணப்படுகிறது. மராட்டிய அரசர்களின் வழிபாட்டுக் காளியாகவும் இது இருந்தி ருக்க வேண்டும். 'ரர்சாகாளி' என்று மக்களால் இது அழைக்கப் படுகிறது. இவ்வம்மனின் காலடியில் நான்கு வீரர்கள் காணப் படுகின்றனர். இங்கும் சும்ப நிசும்ப அசுரர்கள் காணப்படவில்லை. அம்மன் சதைப்பற்றில்லாமல் எலும்புக்கூடு நிலையில் காணப் படுகிறாள் அதனால் மட்டுமே இது பழமையானது என்று கூறு வதற்கில்லை. தஞ்சை கீழ்வாசல் கருவக்காடு பகுதியில் அமைந் துள்ள நிசும்பசூதனி கோயில் கொண்டுள்ள இடம் விஜயாலய சோழன் காலத்தில் சிறந்த தலமாக இருந்திருக்க வேண்டும். அதற்கான சின்னங்கள் இவ்விடத்தில் அமைந்துள்ளன.

இக்கோயிலின் தற்போதைய கருவறை, அந்தராளம், முன் மண்டபம் முதலியன மராட்டா ராணிசாகிப் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டதாகும். கருவறை அந்தராளம் முதலியன செங்கல் லால் கட்டப்பட்டுள்ளது. இம்முன்மண்டபம் பழமையானதாக இருக்கலாம். கருவறையில் காணப்படும் அம்மன் சிலை மராட்டிய ராணிசாகிப் காலத்தில் பழைய நிசும்பசூதனியின் உருவத்தைப் போன்று செய்து புதிதாகப் பிரதிட்டை செய்யப்பட்டது. அந்த ராளத்தின் தெற்கில் கிழக்கு நோக்கி விநாயகர் காணப்படுகிறார். வடக்கில் தெற்கு நோக்கி கேதாரி அம்மன் என்ற சிறுதெய்வம் காணப்படுகிறது.

அந்தராளத்தைத் தொடர்ந்து அமைந்துள்ள முன்மண்டபம் இடிந்த நிலையில் உள்ளது. அது தற்காலத்தில் புதுப்பிக்கப்பட் டுள்ள இம்மண்டபத்தின் தெற்குப் பகுதியின் மேற்கூரையில்

மராட்டா ஓவியங்கள் உள்ளன. மலர்கள் அலங்கார நிலையில் வரையப்பட்டுள்ளன.

இம்மண்டபத்தின் வடக்கில் கிழக்கு நோக்கிப் பழைய நிசும்ப சூதனி அம்மன் சிலை காணப்படுகிறது. ஜடாபாரத்தையும், சக்தி கவச குண்டலங்களையும் பெற்றுள்ள இவ்வம்மன் நான்கு கரங்களையுடையவள். அவற்றின் இரண்டு கைகள் சற்றுச் சிதில மடைந்துள்ளன. கைகளில் வலது மேல் கையில் திரிசூலமும், கீழ்க்கையில் கபாலமும் உள்ளன. அம்மனின் வலது காலடியில் ஓர் அசுரனின் உடல் தெற்கு நோக்கி தலையை வைத்துக் கொண்டு கிடந்த நிலையில் காணப்படுகிறது. இடது காலடியில் பிறிதொரு அசுரன் வடக்கு நோக்கி தலைவைத்து; கிடந்த நிலையில் காணப்படுகிறான்.

இச்சன்னதியை அடுத்து ஒரு சன்னதி வடக்கு மூலையில் முன்மண்டபத்தில் அமைந்துள்ளது. இதில் பழைய சிவன் கோயில் நிசும்பசூதனி கோயில் சின்னங்கள் உள்ளன. எட்டு கைகளுடன் துர்க்கை மகிசத்தின்மேல் நிற்கின்றாள். இதனருகே பத்மழாசனத் தில் விநாயகர் சிலையும் சிங்க வாகனத்துடன் மாயா சக்தியின் சிற்பமும் காணப்படுகின்றன. இவை கிழக்கு நோக்கி வைக்கப் பட்டுள்ளன. தெற்கு நோக்கி ஐந்து தலை நாகத்தின்மேல் ராகுகால காளி சிற்பம் உள்ளது. மேலும் சன்னதியின் முன்பு கிழக்கு நோக்கி சனீஸ்வரன் சிற்பம் உள்ளது. இவற்றில் விநாய கர், துர்க்கை, மாசிாசக்தி சிலைகள் பழைய சிவன், காளி கோயில் களின் சின்னங்களாகும். மேலும் இக்கோயில்களில் இருந்த அர்த்த நாரீஸ்வரர், சிவசக்தி முதலிய சிலைகள் தற்போது தஞ்சை அரண்மனை கலைக் கூடத்தில் வைக்கப்பட்டுள்ளன.

இக்கோயிலின் முன் மண்டபத்தின் முன்னால் பலிபீடம் ஒன்றுள்ளது. பலிபீடம் பத்ம பீடத்தின் மேல் உள்ளது. இப் பீடத்தின் அடிப்பகுதியில் நான்கு திசைகளிலும் குறுவடிவ அசுரர்கள் உள்ளனர். பலிபீடத்தின் பின்னால் சக்திக் கொடி வைப்பதற்காகக் கல் ஒன்று நாட்டப்பட்டுள்ளது.

கிருபானந்தவாரியார் ஆண்டுதோறும் ஆடிமாதம் சக்திக்கொடியை ஏற்றி வைக்கிறார். இப்பலிபீடத்தினருகே சூலப்பிடாரி, சக்தி முதலியன நாட்டப்பட்டுள்ளன.

பலிபீடத்தின் எதிரே தெற்கில் கருப்பணசாமி (மலையாளக் கருப்பு), லாடமுனி சுதை சிற்பங்கள் சிறிய சன்னதிகளில் காணப்படுகின்றன. வடக்கில் மதுரைவீரன் வெள்ளையம்மாள், பொன்னியம்மாள் ஆகியோருடன் ஒரு சன்னதியிலும் முனீஸ்வரர் ஒரு சன்னதியிலும் காணப்படுகின்றனர். மேலும் சிறு தெய்வங்களான சாம்பனுக்கு ஒரு சன்னதி பலிபீடத்தின் நேர் எதிரே பின்னால் வைக்கப்பட்டுள்ளது. மாடன் சுதை சிற்பம் இக்கோயிலின் தலவிருட்சமான ஆலமரத்தினடியில் வைக்கப்பட்டுள்ளது.

தலவிருட்சத்தைச் சுற்றில் பாம்புப் புற்றுகள் உள்ளன. அவ்வபோது மக்கள் பால், முட்டை முதலியன இவற்றிற்குப் படைக்கின்றனர். நாகங்கள் சிலைகளும், சூலம், சக்தி ஆயுதங்களும் ஆலமரத்தடியில் நாட்டப்பட்டுள்ளன. ஆலமரத்தின் அடியில் பழைய கோயில் கபோதக்கூடு ஒன்று வைக்கப்பட்டுள்ளது. அதில் அம்மன் அபயவரத முத்திரையுடன் காணப்படுகிறாள். பிறிதொரு கபோதக்கூடு பலிபீடத்தினருகே காணப்படுகிறது. சிறு தெய்வங்கள் மராட்டியர் காலத்திலும் தற்காலத்திலும் வைக்கப்பட்டுள்ளன. இக்கோயிலின் தீர்த்தம் வடக்குத் திசையில் அமைந்துள்ளது. இதன் வடக்கில் வட்டவாறு ஓடுகிறது.

இக்கோயில் கருவறை கோஷ்டங்களில் சிற்பங்கள் எதுவும் இல்லை. இக்கோயிலின் விமானம் அல்பவிமானமாகும். வட்டமான சிகரத்தில் ஒரு கலசம் உள்ளது. கிரீவம் இங்கு காணப்படவில்லை. நான்கு மூலைகளிலும் சிங்கங்கள் வைக்கப்பட்டுள்ளன.

இக்கோயிலில் நித்யபூசை தினமும் காலையில் நடைபெறுகிறது. ஆடிமாதம் பூச்செறிதல் நடைபெறுகிறது. நவராத்திரி ஒன்பது நாட்களும் அஷ்டலட்சுமி அலங்காரம் செய்யப்படுகிறது.

ஆடி கடைசி வெள்ளிக் கிழமைகளில் சந்தனக்காப்பு நடைபெறுகிறது. மார்கழி மாதத்தில் நவசக்தி அருள்காம்ய க்ஷேமபூசை நடைபெறுகிறது. இப்பூசையின்போது குத்து விளக்கேற்றி சக்தியை எழுப்பி வணங்குகின்றனர். குயவர் தெருவார்கள் கார்த்திகை மாதம் ஆடுபலி கொடுத்தல் முதலிய சடங்குகள் செய்கின்றனர். அப்போது விசேடபூசைகள் நடைபெறுகின்றன. பாற்குடம், அபிஷேகம் முதலியவற்றையும் செய்கின்றனர். உற்சவர் வீதி உலா, கரகம், சிலம்பாட்டங்கள் முதலியன சித்திரை, தை மாதங்களில் நடைபெறுகின்றன. இப்பகுதி சலவைத் தொழிலாளிகள் முக்கிய நாட்களில் அம்மனுக்குப் பொங்கல் படைக்கின்றனர். ராகுகாலத்தில் ராகுகாளிக்கு வெள்ளிக்கிழமைகளில் விசேட பூசைகள் நடைபெறுகின்றன. அன்று பொதுமக்கள் ஆர்வத்துடன் இக்கோயிலுக்கு வருகை தந்து ராகுகாளியை வழிபடுகின்றனர். மணமாகாத பெண்கள் திருமணம் வேண்டி ராகுகாளியை வழிபடுவது வழக்கம்.

தற்போது இக்கோயில் தஞ்சை அரண்மனை தேவஸ்தானத்தின் நிர்வாகத்தில் நடைபெறுகிறது. சைவ வேளாளர் மரனபச் சார்ந்த ஒரு பூசகர் இக்கோயிலில் பூசகராகப் பணி செய்கிறார். நகைகள், சொத்துக்கள் முதலியன இக்கோயிலுக்கு உண்டு. முக்கிய நாட்களில் தேவாரம் முதலியன இக்கோயிலில் பூசையின் போது பாடப்படுகின்றன.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இக்கோயிலை வெளிநாட்டவரும் விரும்பிப் பார்க்க வருகின்றனர்.

## 17. காளியம்மன் கோயில்

(வடபத்திர காளியம்மன் – நிசும்பசூதனி)

வடபத்திர காளியம்மன் என்று அழைக்கப்படுகிற நிசும்பசூதனி கோயில் தஞ்சை கீழவாசல் பூமாலை ராவுத்தன் கோயில் தெருவில் வடக்கு நோக்கி அமைந்துள்ளது. இக்காளியைப் பொதுமக்கள் 'ராஜாகாளி' என்று அழைக்கிறார்கள். முற்காலத்தில் அரசர்களால் வணங்கப்பட்டமையால் இக்காளி 'ராஜாகாளி'

என்று அழைக்கப்படுகிறாள். மராட்டியர் வருகையைத் தொடர்ந்து தான் இக்காளி 'ராஜாகாளி' என்று அழைக்கப்படுகிறாள் எனத் தெரிய வருகிறது. இக்கோயிலின் நீள, அகலம் 9 × 4 மீட்டர் ஆகும்.

தஞ்சையில் விஜயாலய சோழனால் நிசும்பசூதனிக்குக் கோயில் எழுப்பப்பட்டது எனத் திருவாலங்காட்டுச் செப்பேடுகள் குறிக்கின்றன. தொல்பொருள் துறை இயக்குநர் நாகசாமி அவர்கள் இக்கோயிலே விஜயாலய சோழனால் எழுப்பப்பட்டது எனக் கூறுகிறார். ஆனால் தஞ்சைப் பேராசிரியர் வித்வான் கோவிந்தராசனார் இக்கோயில் மராட்டியர்கள் காலத்தில் எழுப்பப்பட்டது எனக் கூறுகிறார்.[1] இக்கோயிலில் காணப்படும் காளியின் படிமம் வடநாட்டில் காணப்படும் காளி சிலைகளை ஒத்தவை. கருங்கல்லால் கட்டப்பட்ட இச்சிறிய கோயிலைப் போன்று மராட்டியர்கள் தஞ்சையில் பல கோயில்களைக் கட்டியுள்ளனர். தஞ்சைக் கருவக்காட்டில் அமைந்திருக்கும் உக்ரகாளியம்மனே விஜயாலய சோழனால் தோற்றுவிக்கப்பட்டது என்பது ஆய்வாளர்கள் பலரது முடிபாகும்.

இக்கோயில் கருவறையில் நிசும்பசூதனி எட்டு கைகளுடன் அமர்ந்த கோலத்தில் காட்சி தருகிறாள். அவள் பாதங்களின் அடியில் நான்கு வீரர்களின் கிரீடம் அணிந்த தலைகள் காணப்படுகின்றன. வலது கால் அடியில் பிறிதொரு தலை மட்டும் காணப்படுகிறது. அவள் கைகளில் காணப்படும் ஆயுதங்கள் தெளிவாகத் தெரியவில்லை. வலது மேல் கையில் சூலாயுதம் ஒன்றை வீரர்களைத் தாக்குவது போலத் தாங்கியுள்ளாள். இவ்வம்மனின் உடல் அஸ்தி காய ரூபத்தில் (எலும்புக்கூடு நிலையில்) காணப்படுகிறது. கருவறையில் பலிபீடம் ஒன்று காளி முன்பு காணப்படுகிறது.

கருவறையை அடுத்து அமையும் அந்தராளத்தில் கருவறை வாயிலின் இருபுறமும் வடக்கு நோக்கிச் சிங்க வாகனத்துடன் இரண்டு துவார பாலகிகள் சிலை சுதையால் அமைக்கப்பட்டு

1. காண்க. உக்ரகாளியம்மன் கோயில்-கருவங்காடு நிசும்பசூதனி.

சில ஆண்டுகளுக்கு முன்பு வைக்கப்பட்டுள்ளன. இத்துவார் பால கிகள் நான்கு கைகளுடன் காணப்படுகின்றனர். அந்தராளத்தை அடுத்து தற்காலத்தில் எட்டு சதுர தூண்களையுடைய மகாமண் டபம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. மகா மண்டபத்தின் மத்தியில் அம்மனை நோக்கி சூலப்பிடாரி ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

இக்கோயில் கருவறை கொண்ட ஏகதள விமானமாகக் கட்டப்பட்டுள்ளது. இது தற்காலத்தில் கட்டப்பட்டதாகும். விமானத்தில் காணப்படும் சால சிகரத்தில் மூன்று கலசங்கள் காணப் படுகின்றன. சால சிகரத்தின் கிழக்கு மேற்குத் திசைகளில் காணப் படும் வாசிகளில் அம்மன் தலைகள் வைக்கப்பட்டுள்ளன. விமா னத்தின் மூலைகளில் இரண்டு சிங்க உடலும் ஒரு தலையுமுள்ள சிங்கவாகனங்கள் நான்கு மூலைகளிலும் வைக்கப்பட்டுள்ளன.

இக்கோயிலின் கிழக்கு அந்தராளச் சுவரின் வெளியே அம் பாள் சிலை ஒன்று கிழக்கு நோக்கி காணப்படுகிறது. நின்ற கோலத்துடன் காணப்படும் இவ்வம்பாள் இடது கையில் பத்மமும் வலது கையில் ருத்திராக்கமும் உடையவளாகக் காணப்படுகிறாள். நான்கு கைகளையுடைய இவ்வம்பாளின் நான்கு கைகளில் கீழ் இரண்டு கைகளும் சிதிலமடைந்துள்ளன. இச்சிலை அருகே தெற்கு நோக்கி பிறிதொரு சிலை காணப்படுகிறது. இதன் கிரீடம் விசேடமானது. இச்சிலை பூமால் ராவுத்தன் எனக் கூறப் படுகிறது. இச்சிலைகள் இக்கோயிலின் அருகாமையிலுள்ள பூமால் ராவுத்தன் கோயில் சிலைகள் எனக் கூறப்படுகின்றன.

இக்கோயிலில் நித்யபூசை தினமும் காலையில் நடைபெறு கிறது. காமிகாகம அடிப்படையில் பூசைகள் நடத்தப்படுகின்றன. ராகுகால வெள்ளிக்கிழமையில் விசேட பூசைகள் நடைபெறுகின் றன. அன்று ஏராளமான பொதுமக்கள் இக்கோயிலில் அம்மனை வழிபடுகின்றனர். இக்கோயிலில் நவராத்திரி ஒன்பது நாட்களும் அபிஷேகங்கள் நடைபெறுகின்றன. பத்தாவது நாள் சந்தனக் காப்பு சாத்தப்படுகிறது. தை மாதம் மூன்றாவது வெள்ளிக்கிழமை

தெருவார்கள் அம்மனுக்குப் பாற்குட அபிஷேகம் செய்கின்றனர். இக்கோயிலில் தற்காலம் முஸ்லீம் பெண்களும் அம்மனை வழிபட வருகின்றனர்.

இக்கோயில் அரண்மனை தேவஸ்தானத்தின் நிர்வாகத்தில் செயற்படுகிறது.

## 18. காளியம்மன் கோயில்

(காளிகா பரமேச்வரி அம்மன் கோயில்)

காளிகா பரமேச்வரி அம்மன் கோயில் என்று அழைக்கப் படும் இத்திருக்கோயில், தஞ்சை தெற்கு ராஜவீதியில் வடக்கு நோக்கி அமைந்துள்ளது. இக்காளி பரமேச்வர அம்சத்தை உடையவளாக இருப்பதால் காளிகா பரமேஸ்வரி என்று அழைக் கப்படுகிறாள். பரமேச்வரனைப்போல் வலது காதில் மகர குண்டலத்தையும் இடது காதில் பத்ர குண்டலத்தையும் அணிந் துள்ளாள். காளிகா பரமேச்வரி ஜ்வாலா கேசத்தையுடையவ ளாகக் காணப்படுகிறாள். தலையில் கங்கை, சந்திரன், சூரியன், நாகம் முதலிய பரமேச்வர அம்சங்கள் காணப்படுகின்றன. காளி பரமேச்வர அம்சத்தில் காணப்படுவதால் நந்தியும் நந்தி மண்ட பத்தில் அம்மனை நோக்கி அமைக்கப்பட்டுள்ளது. இக்கோயிலின் நீள, அகலம் 15 × 7 மீட்டர் ஆகும்.

காளிகா பரமேச்வரி கருவறையில் அமர்ந்த கோலத்தில் அருள் பாலிக்கிறாள். அம்மன் எட்டு கைகளுடன் (அஷ்டபுஜம்) பத்மாசனத்தில் அமர்ந்துள்ளாள். வலது நான்கு கைகளிலும் மேலிருந்து கீழாக முறையே சூலம், டமருகம், கட்கம் (கத்தி), கிளி (சுகம்) போன்ற ஆயுதங்களையும் உயிரினங்களையும் உடை யவளாகக் காணப்படுகிறாள். இடது கைகளில் மேலிருந்து கீழாக அக்னி, கேடகம், கபாலம், மணி முதலியவற்றை வைத்திருக் கிறாள். இவ்வம்மனின் வலதுகால் உத்குடிக நிலையிலும் இடது கால் லலித நிலையிலும் காணப்படுகின்றன. வலதுகாலின் நேர் கீழ் திரிசிராசுரன் என்ற அசுரனின் மூன்று தலைகள் வரிசையாக

அமைக்கப்பட்டுள்ளன. இவ்வசுரன் காத்தல், அழித்தல், படைத்தல் என்ற மூன்று சச்திகளையும் உடையவன். அழித்தல் தொழில் செய்த காலத்தில் இவ்வசுரனைக் காளிகா பரமேச்வரி சம்ஹாரம் செய்தாள். இடது காலின் அடியில் மகிசாசுரனைச் சம்ஹாரம் செய்வது போல் இச்சிற்பத்தில் காட்டப்பட்டுள்ளது. இக்காளியின் சிற்பத்தின் பின்னால் பித்தளையாலான பிரபை (திருவாசி) ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

கருவறையை அடுத்து சிறிய அந்தராளப் பகுதி உள்ளது. அந்தராளத்தின் கிழக்கில் வடக்கு நோக்கி காளிகா பரமேச்வரி உற்சவமூர்த்தி காணப்படுகிறது. மூலவரைப் போன்ற இச்சிற்பம் வெண்கலத்தில் வடிக்கப்பட்டுள்ளது. மூலவர் சிலை கருங்கல்லாலானது. அந்தராளத்தைத் தொடர்ந்து அமையும் நந்தி மண்டபம் அல்லது அர்த்த மண்டபத்தில் நந்தியும் பலிபீடமும் உள்ளன. நந்தி அம்மனை நோக்கி அமர்ந்துள்ளது. சக்தி பீடங்களும் யந்திரங்களும் இங்கு காணப்படவில்லை. அர்த்த மண்டப நுழைவாயிலின் இருமருங்கிலும் துவார சக்திகள் காணப்படுகின்றன. இவை சுதையால் செய்யப்பட்டவை. அர்த்த மண்டபம் மராட்டிய கால கட்டிடக் கலைக் கூறுகளைப் பெற்றுள்ளது. இது வவ்வால் நத்தா மண்டப அமைப்பையுடையது.

அர்த்த மண்டபத்தைத் தொடர்ந்து அமையும் மகாமண்டபம் நான்கு பெரிய வட்டமான தூண்களையுடையது. தூண்களுக்கு இடைப்பட்ட மேற்பகுதி வளைவுகள் கூர்மையான முடிவை உடையதாகவுள்ளது. மேலும் கூறைகள் வளைவான வவ்வால் நத்தா மண்டபக் கூரையினையுடையது. பூ வேலைப்பாடுகளும் பிராணிக்ளின் புடைப்புச் சிற்பங்களும் சதுரவடிவில் கூரையினுள் அமைக்கப்பட்டுள்ள அலங்கார அமைப்புகளில் காணப்படுகின்றன.

கருவறையைச் சுற்றி திருச்சுற்று அமைந்துள்ளது. அதனையொட்டி திருச்சுற்று மண்டபம் மராட்டியர் காலத்தில் கட்டப்பட்டுள்ளது. திருச்சுற்று மண்டபத்தில் விக்னேஸ்வரர் சன்னதி மேற்கில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. இதனையடுத்து

மேற்குச் திருச்சுற்று மண்டபத்தின் நடுவில் வள்ளி—தெய்வானை: முருகன் சன்னதி அமைந்துள்ளது. இது அல்பவிமானத்தை யுடையது. இவ்விமானம் வட்டமான சிகரத்தையும் ஒரு கலசத் தையுமுடையது. இச்சன்னதியில் முருகன் ஆறு முகங்களுடனும் பன்னிரண்டு கைகளுடனும் மயில் வாகனத்தோடு காணப்படு கிறார். இச்சன்னதியும் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. இச் சன்னதியைத் தொடர்ந்து மேற்குத் திருச்சுற்று மண்டபத்தில் ஏகாம்பரேஸ்வரர் இலிங்க வடிவில் ஆவுடையாருடன் காணப் படுகிறார். இதனையொட்டி ஐந்து நாகக்கற்கள் காணப்படுகின் றன. இவற்றைத் தொடர்ந்து ஆவுடையார் இல்லாமல் தனி பாணலிங்கம் ஒன்று வைக்கப்பட்டுள்ளது. திருச்சுற்று நடை வழி யாக மகாமண்டபத்திற்குள் நுழைவதற்கு மேற்கிலும் கிழக்கி லும் வழிகள் அமைக்கப்பட்டுள்ளன. மராட்டிய சுற்றுப் பிரகார மண்டபத்தின் தூண்கள் சதுரமானவை. சதுரத் தூண்களின் இடைப்பட்ட மேற்பகுதி சுவர் வளைவுகளுடையவை. அவை கூர்மையான வளைவுகளையுடையதாகவும் சிறு சிறு பரல் வளைவு களையுடையதாகவும் **(Squnched arches)** அமைக்கப்பட்டுள் ளன. தூண்கள் $1\frac{1}{2}$ அடி சதுர பரப்புள்ளவை. மகாமண்டபத் தில் காணப்படும் நான்கு பெரிய வட்டமான தூண்களும் இரண் டடி விட்டமுடையவை. சுற்றுத் திருநடை மண்டபத்தின் கிழக் குப் பகுதியில் இரண்டு இரண்டு சுற்றுத் திருநடை மண்டபங் களில் இணைவினைக் காணலாம். அவற்றின் கிழக்கு மூலையில் விக்னேஸ்வரருக்கு நேர் எதிரே மடப்பள்ளி ஒன்று காணப்படு றது. கிழக்குச் சுற்றுத்திருநடை மண்டபத்தின் அருகே திருச் சுற்று நடையின் மத்தியில் கிணறு ஒன்று காணப்படுகிறது. தல விருட்சம் எதுவும் இக்கோயிலில் இல்லை.

இக்கோயிலின் கருவறை கொண்டு அமையும் விமானம் இரண்டு தளங்களையுடையது. பிற சோழர்கால விமானங்களைப்போல் இல்லாமல் இங்கு கபோதமோ, கபோதக் கூடுகளோ சிறப்பான முறையில் அமையவில்லை. கபோதத்தின்மேல் யாளி வரிசைகளோ கபோதத்தின் கீழ் பூத வரிசைகளோ, பத்ம வரிசைகளோ காணப் படவில்லை. இரண்டு தளங்களையுடைய இவ்விமானம் கர்ணகூடு-நீடம்—சாலை—நீடம்—கர்ணகூடு என்ற அமைப்பு வரிசையில் நான்கு

திசைகளில் அமைக்கப்பட்டுள்ளன. அதில் சால, கர்ணகூடு நாசி கோஷ்டங்களில் அம்மனின் பிற வடிவங்கள் சுதையால் அமைக் கப்பட்டுள்ளன. கிரீவ கோஷ்டத்தில் (மஹாநாளிகைகள்) நான்கு திசைகளிலும் மூலைகளில் காளை வாகனங்கள் அமர்ந்துள்ளன. சிகரம் வட்டமானது. அதன்மேல் ஒரு கலசம் உள்ளது. கருவறை தேவ கோஷ்டங்களில் சிற்பங்கள் எதுவும் இல்லை. கருவறை அதிட்டானம் பத்மக வகையைச் சார்ந்ததாகும். கருங்கல்லாலான இக்கோயிலின் அதிட்டானத்தின் கீழ் ஓர் வேதிபத்ர உபபீடம் உள்ளது. குடும்ப பஞ்சர அமைப்புகள் எதுவும் கருவறை அர்த்த மண்டபச் சுவர்களில் காணப்படவில்லை. விமான முதல் தளத்தின் மூலைகளில் ஒவ்வொரு திசையிலும் இரண்டு கோபுரத் தாங்கிகள் காணப்படுகின்றன. இக்கருவறையும் விமானமும் மராட்டியர் காலத்தில் கட்டப்பட்டதாக இக்கோயில் கல்வெட்டுச் செய்தி கூறுகிறது.

இக்கோயிலின்வாயிலில் அமைந்துள்ளராஜகோபுரம் மூன்று அடுக்கு களையுடையது. கர்ணகூடு—நாசிகை—சாலை—நாசிகை—கர்ணகூடு— சாலை — கர்ணகூடு — நீடம் — சாலை — நாசிகை — கர்ணகூடு என்ற அமைப்பில் தள வரிசைகள் அமைந்துள்ளன. சிற்பங்கள் எதுவும் கோபுரத்தில் காணப்படவில்லை. ஒன்பது கலசங்கள் (பித்தளை, சாலசிகரத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

இக்கோயிலில் நித்யபூசை தினமும் காலை ஒருவேளை நடைபெறுகிறது. நவராத்திரியில் அம்மனுக்கு அலங்காரங்கள் செய்யப்படுகின்றன. இதனை விஸ்வகர்ம சாதியினர் நாற்பது வருடங்களாகத் தொடர்ந்து செய்து வருகின்றனர். பாலரூபம், சதஸ், படை திரட்டல், சிவ பூசை, தபஸ், லெட்சுமி, சரஸ்வதி, ராஜராஜேஸ்வரி, மகிசாசுரமர்த்தினி, ராஜஉடை முதலிய அலங் காரங்கள் நவராத்திரியின் போது உற்சவமூர்த்திக்குச் செய்யப் படுகின்றன. மேலும் பங்குனி மாதம் பிரம்மோத்சவம் இக்கோயி லில் விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. விஸ்வகர்ம சமூகத் திற்குச் சக்தி வழிபாடு தொன்று தொட்டு இன்றுவரை இருந்து வருகிறது. இதை பதினெண் புராணங்களில் ஒன்றான காளிகா புராணத்தில் விரிவாகக் காணலாம்.

முதலாம் ராஜராஜன் தஞ்சையில் சிவனுக்கு ஒரு மாபெ ரும் கற்றளி எழுப்ப விரும்பினார். அதற்காகப் பற்பல நாடுகளில் சிதறுண்டிருந்த சிற்பாச்சாரியார்களை ஒன்று திரட்டி அவர்க ளிடம் தன் கருத்தை வெளியிட்டான். ராஜராஜன் கருத்திற் கிசைய பிரகதீஸ்வரர் ஆலயம் கட்ட தீர்மானமாயிற்று. எந்த ஆலயம் கட்டுவதாக இருந்தாலும் சிற்பாச்சாரியர்களுடைய குல தெய்வமான ஸ்ரீ காமாட்சி என்னும் ஸ்ரீ காளிகா பரமேஸ்வரி ஆலயம் எழுப்பி சக்தி பூசையைச் செய்து அவன் அனுக்ரகத்தைப் பெற்ற பின் தான் அஸ்திர பூசை செய்து ஆலயம் கட்ட வேண் டிய ஸ்தலத்தை வாஸ்து விதிப்படி அளந்து ஆலயத்தைக் கட்டத் தொடங்குவது வழக்கம். பெரிய தேவாலயங்கள் உள்ள ஸ்தலங் களில் கம்மாளத் தெருவும் ஸ்ரீ காமாட்சி அம்மன் அல்லது ஸ்ரீ காளிகா பரமேஸ்வரி ஆலயமும் அக்கசாலை விநாயகர் ஆலயமும் இருப்பதை இன்றும் காணலாம். சிற்பாச்சாரியார்களின் விருப்பப் படியும் அக்கால மரபுப்படியும் இன்றைய தஞ்சை தெற்கு வீதியில் ஸ்ரீகாமாட்சி என்கிற ஸ்ரீ காளிகா பரமேச்வரி ஆலயம் ராஜராஜ சோழ மன்னன் ஆதரவினால் கட்டப்பட்டு சாலிவாஹன சகாப்தம் 924க்கு (கி.பி. 1002) சரியான சுபகிருது வருஷம் ஆவணி மாதம் 19—ஆம் தேதியில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. அன்றைய தினமே பெருவுடையார் ஆலயத்தை நிர்மாணிக்க அடிக்கல் நாட்டி னார்கள். அன்று முதல் இன்று வரை விஸ்வகர்ம சமூகத்தினர் ஸ்ரீ காளிகா பரமேச்வரியை வழிபட்டு வருகிறார்கள்.

ஸ்ரீ காளிகா பரமேச்வரி ஆலயத்திற்கு ராஜகோபுரமும் மகாமண்டபம், திருமால் பத்தி முதலியவைகளைக் கட்டியும் சாலிவாஹன சகாப்தம் 1195—க்கு (கி.பி. 1273) சரியான ஆங் கிரஸ வருஷம் ஆவணி மாதம் 8—ஆம் தேதியில் விஸ்வ பிரம்ம சமூக ஐந்து ஜாதி நாட்டாண்மை மகாலிங்க ஆச்சாரியால் கும்பா பிஷேகம் நடைபெற்றது. இதன் விபரங்களனைத்தும் இக்கோயில் கல்வெட்டுக்களிலும் ராஜ கோபுரத்திலுள்ள ஒன்பது கலசங்களி லும் வெட்டப்பட்டுள்ளது.[1]. இக்கோயில் மகாமண்டப கிழக்குத்

---

1. ஜீ. நடராஜ ஆச்சாரி 1978 ஸ்ரீ காளிகா பரமேச்வரி ஆலயம் கும்பாபிஷேகம் வேண்டுகோள் : பக். 5.

தூணின் அருகே சுவரில் ஒரு கல்வெட்டு 700 ஆண்டுகளுக்கு முன்பு வெட்டப்பட்டுள்ளது. இதில் காளிகா பரமேச்வரி அம்மன் கோயில் திருப்பணி வேலை முன்கோபுரத்தில் யாகவரி முதல் யாளிவரி, கொடுங்கை, மடப்பள்ளி உட்பட கைலாச வாகனம், ரிஷப வாகனம், குதிரை வாகனம், பெருச்சாளி வாகனம், மயில் வாகனம், சுப்ரமணிய ஆசாரி மகன் வைத்தி முத்தையன் ஆசாரி உபயம்' என்று எழுதப்பட்டுள்ளது. தற்போது இக்கோயிலில் சிம்ம வாஹனம் மஞ்சம் முதலியன உள்ளன. பிற வாகனங்கள் எதுவுமில்லை. உற்சவ மூர்த்திகளின் புறப்பாடும் தற்போது இல்லை. கருவறை, அர்த்தமண்டபச் சுவர்ப்பட்டையில் கிழக்கு, தெற்கு, மேற்கு ஆகிய பக்கங்களில் கல்வெட்டுக்கள் உள்ளன. 1759-ஆம் ஆண்டு, தஞ்சாவூர் மராட்டிய மன்னர் பிரதாபசிங் அவர்கள் ஆட்சிக் காலத்தில் இராசா சரபோசி அவுல்தார் அவர்கள் குமாரர் வாலோசி அப்பா அவர்கள் வேண்டுகோளின்படி பாஞ்சாளத்தார் எனப்படும் அஞ்சு சாதியார் இக்காளி கோயிலின் கருவறை, அர்த்த மண்டபம், மகாமண்டபம் முதலியவைகளைக் கருங்கல் திருப்பணியாகக் கட்டி வைத்தனர் என்று இக்கல்வெட்டுக்கள் கூறுகின்றன.[2] இடங்கை சாதியரான பாஞ்சாலத்தார் தங்களுக்குக் கிடைத்த ஒரு சமூக வெற்றியின் அறிகுறியாக இக்கோயிலைக் கட்டினர் என்ற குறிப்பு கல்வெட்டில் காணப்படுகிறது.

இக்கோயிலின் நிர்வாகம் தஞ்சை விச்வ பிரம்ம சபையினரிடம் இருந்து வருகிறது. மராட்டிய அரசர்களின் ஆட்சிக்கு முன்பே இக்கோயிலின் நிர்வாகம் விச்வகர்ம ஜாதியினரிடம் இருந்து வருகிறது. இக்கோயிலின் மராட்டா அரண்மனைத் தேவஸ்தானத்தைச் சார்ந்தவர்கள் உபயதாரர்களாக இருக்கின்றனர். இறுதி சிவாஜி மகாராசாவின் மூத்த மனைவி காமாட்சியம்மாள் பாகிசாப் இக்கோயிலில் பூசை வழிபாடுகளைச் செய்ய ஏற்பாடு செய்துள்ளார். இன்றளவும் அது தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அக்காலத்தில் விச்வகர்ம சபையினரிடம் ஏற்பட்ட கோஷ்டி பூசல் காரணமாகப் பூசைகள் நிறுத்தப்பட்டன.

---

2. செ. இராசு, 1987, தஞ்சை மராட்டியர் கல்வெட்டுக்கள், பக். 31–34.

யார் பூசை வழிபாடுகளை நடத்துவது என்ற கோஷ்டி சண்டையில் கோயில் பூசைகள் நிறுத்தி வைக்கப்பட்டன. இந்நிலையில் தான் காமாட்சியம்மாள் பாகிசாப் பூசை வழிபாடுகளை அரண்மனை தேவஸ்தானத்தினர் ஏற்றுக் கொள்ளும்படிச் செய்தார். இக்கோயில் பூசைகளை அந்தணர்கள் ஆகம விதிப்படிச் செய்து வருகின்றனர்.

## 19. காளியம்மன் கோயில்

(வடபத்ர காளியம்மன் கோயில்)

இத்திருக்கோயில் தஞ்சை மேற்கு அலங்கத்தில் வடக்கு நோக்கி அமைந்துள்ளது. தஞ்சையில் எட்டு திக்குகளில் காவல் தெய்வங்களாக இருக்கும் அம்மன்களில் இவ்வம்மன் மேற்குத் திசையில் காவல் தெய்வமாக அமர்ந்துள்ளாள். இக்கோயிலின் நீள, அகலம் $8 \times 5$ மீட்டர் ஆகும்.

கருவறையில் அமர்ந்த கோலத்தில் அம்மன் காட்சி தருகிறாள். இச்சிலை கருங்கல்லாலானது. ஒரு பீடத்தின் மேல் அமர்ந்த நிலையில் இருக்கும் அம்மன் எட்டு கைகளையுடையவள். வலது நான்கு கைகளிலும் மேலிருந்து கீழாக முறையே சூலம், டமருகம், கத்தி, கிளி முதலியவற்றையும் இடது கைகளில் மேலிருந்து கீழாக முறையே அக்னி, கேடயம், மணி, கபாலம் ஆகியவற்றையும் உடையவளாகக் காட்சி தருகிறாள். தனது வலது காலைப் பீடத்தில் தூக்கி மடக்கிய நிலையிலும் இடது காலைக் கீழே கிடந்த நிலையிலுள்ள அசுரனின் மேலும் வைத்திருக்கிறாள். மேலும் பீடத்தின் கீழ் வலது பக்கத்தில் லட்சுமியும் இடது பக்கத்தில் சரஸ்வதியும் புடைப்புச் சிற்பமாகச் சிறிதாக வடிக்கப்பட்டுள்ளன. தற்காலத்தில் பெரிய சூலாயுதம் செம்பால் செய்யப்பட்டு அம்மனின் வலது மேல்கையில் இணைக்கப்பட்டுள்ளது. அது கீழ் நோக்கித் தரையில் குத்தி நிற்கிறது. அம்மன் அகோர அல்லது உக்ர முகத்துடன் இக்கோயிலில் காட்சி தரவில்லை. சாந்த ரூபமாகவே காட்சி தருகிறாள். தலையில் ஜீவாலா கிரீடம் காணப்படுகிறது. இக்கோயிலில் அம்மனுக்கு உற்சவர் இல்லை.

கருவறையை அடுத்து சிறிய இடைநாழிகை அல்லது அந்தராளப் பகுதி அமைந்துள்ளது. அந்தராளத்தைத் தொடர்ந்து திருச்சுற்று அமைந்துள்ளது. வாயிலின் இருமருங்கிலும் துவார சத்தி, துவார பாலகர் (பெண், ஆண்) சிலைகள் மிகப்பெரிய அளவில் (6') அமர்ந்த நிலையில் சுதையால் அமைக்கப் பட்டுள்ளன. துவார சத்தியும், துவார பாலகரும் அகோர முகத்துடன் காணப்படுகிறார்கள். இடது காலைத் தூக்கி மடக்கிய நிலையிலும் வலது காலைப் பீடத்தில் மடக்கி வைத்த நிலையிலும் காட்சியளிக்கிறார்கள். இவர்கள் நான்கு கைகளையுடையவர்கள். வலது மேல் கையில் கத்தி உள்ளது. வலது கீழ்க் கையில் ஒன்றுமில்லை. இடது மேல் கையில் கேடயமும் இடது கீழ்க் கையில் கபாலமும் உள்ளன. இதைப்போன்ற பெரிய அளவிலான துவாரசத்தியும் துவாரபாலகரும் பிற அம்மன் கோயில்களில் காணப்படவில்லை. முற்றிலும் மாறுபட்ட நிலையில் இக் கோயிலின் இச்சுதைத் சிற்பங்கள் காணப்படுகின்றன. இச்சிற்பங்கள் மிகவும் பழமையானவை என்று கருதப்படுகிறது. நாயக்கர் காலத்திலும் மராட்டியர் காலத்திலும் இக்கோயிலில் திருப்பணிகள் செய்யப்பட்டுள்ளன என அறியப்படுகிறது.

திருச்சுற்றின் தென்மேற்கில் விநாயகர் சிலை வைக்கப்பட்டுள்ளது. அமர்ந்த கோலத்தில் பத்மாசனத்தில் காணப்படும் விநாயகர் படிமம் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. இது சோழர்காலக் சிற்பக்கலையை எடுத்துக்காட்டுகிறது. பிற கோயில்களிலிருந்து இவ்விடத்திற்கு இப்படிமம் மாற்றப்பட்டிருக்கலாம். இவ்விநாயகர் சிலை முன்பு மூஞ்சூறு வாகனம் உள்ளது. இப்படிமத்தின் அருகே தெற்குச் சுவரில் வடக்கு நோக்கி ஒரு சிறிய கோஷ்டத்தில் மதுரைவீரன் படிமம் வைக்கப்பட்டுள்ளது. கிழக்கு வாயிலை நோக்கிப் பிராகாரத்தின் வடமேற்கு மூலையில் இக்கோயிலில் திருப்பணிகள் செய்த மராட்டிய படைத்தளபதி காண்டேராவ் சிலை உள்ளது. அவர் தனது வலது கையில் வாளையும் இடது கையில் கேடயத்தையும் தாங்கியுள்ளார். வாள் தரையை நோக்கி குத்திட்டுள்ளது. கருங்கல்லாலான இப்படிமம் அழகானது.

வடகிழக்கு வாயிலின் இருமருங்கிலும் துவார பாலகிகள் நின்ற கோலத்தில் காணப்படுகின்றனர். வலது பக்கத்திலுள்ள துவாரபாலகியின் வலது மேல் கையில் சூலாயுதமும் இடது மேல் கையில் அங்குசமும் உள்ளன. அவ்வாறே இடது பக்கத்திலுள்ள துவார பாலகியும் காணப்படுகிறாள். வலது கீழ்க்கை தர்ஜனி முத்திரையுடனும் இடது கீழ்க்கை கதாயுதத்தையும் வலது பக்கத்திலுள்ள துவார பாலகி பெற்றுள்ளாள். இடது பக்கத்திலுள்ளவள் நேர் மாறாக முத்திரையையும் சூதாயுதத்தையும் தாங்கியுள்ளாள். இக்கோயிலில் விநாயகருக்கு நேர் எதிரே தென் கிழக்குப் பக்கத்தில் ஒரு வாயிலும் தெற்கில் ஒரு மடப்பள்ளியும் உள்ளன.

இக்கோயிலின் விமானம் இரண்டு தளங்களையுடைது. கர்ணகூடு—நீடம்—சாலை—நீடம்—கர்ணகூடு என்ற அமைப்பில் விமானத் தளங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சால சிகரத்தில் மூன்று கலசங்கள் உள்ளன. கிரீவ மூலைகளில் நான்கு மூலைகளிலும் எட்டு சிங்கங்கள் திசைக்கு இரண்டாக உள்ளன. கிரீவ கோஷ்டத்தில் அம்மன் சிலைகள் வைக்கப்பட்டுள்ளன. செங்கல்லாலான இக்கோயில் நாயக்கர் காலத்தில் கட்டப்பட்டதாகும். பின்பு வந்த மராட்டியர்கள் இக்கோயிலில் திருப்பணிகள் பல செய்திருக்கலாம். காண்டேராவ் திருப்பணி செய்தவர்களில் ஒருவராக இருக்கலாம். இத்திருக்கோயிலில் 1881-இல் இக்கோயில் தெருவைச் சார்ந்தவர் ஒருவர் கீழ் வாசற்படிகளையும் அதற்குத் தேவையான கற்கள் மற்றும் சாளரங்களை வாங்கிக் கொடுத்த செய்தி முன் சாளரத்தின் கீழ் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டில் காணப்படுகிறது.

இக்கோயில் அரண்மனை தேவஸ்தானத்தின் நிர்வாகத்தில் இருந்து வருகிறது. நித்ய பூசை தினமும் காலையிலும் மாலையிலும் நடைபெறுகிறது. ஒவ்வொரு பௌர்ணமியிலும் விசேட பூசைகள், அபிஷேகங்கள் உண்டு. நவராத்திரியின் போது பத்து நாட்களிலும் அம்மனுக்கு அலங்காரம் செய்யப்படுகிறது. இறுதி நாள் பூச்சொறிதல் நடைபெறுகிறது. அன்னபூரணி, காயத்ரி, லெட்சுமி, சரஸ்வதி, ராஜராஜேஸ்வரி, சந்தனக்காப்பு,

மகிசாசுர மர்த்தினி, சிவபூசை, தபஸ், படைதிரட்டல் முதலிய அலங்காரங்கள் அம்மனுக்கு நவராத்திரியின் போது செய்யப் படுகின்றன. இக்கோயிலின் தெருவைச் சார்ந்த மாதர் சங்கம் இவ்விசேட பூசைகளைச் செய்கின்றது. ஆடு பலியிடுதல் முற் காலத்தில் இக்கோயிலில் நடைபெற்று வந்தது. தற்காலத்தில் பலிகொடுத்தல் வழக்கம் மறைந்து விட்டது.

## 20. காளியம்மன் கோயில்

(வடபத்ர காளியம்மன் கோயில்)

தஞ்சை சிரேஸ் சத்திரத் தெருவில் அமைந்துள்ள ஞானாம் பிகை சமேத கேசவ சதுர்த்தீச்வரர் கோயிலில் இவ்வடபத்ர காளியம்மன் வடக்கு நோக்கி ஒரு சன்னதியில் காணப்படுகிறாள். சோழர் காலத்திலேயே இச்சுதையாலான வடபத்ர காளியம்மன் படிமம் அமைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இவ்வம்மன் தஞ் சையில் எல்லைக் காளிகளில் ஒருத்தியாவாள். இக்கோயிலின் நீள, அகலம் 3×4 மீட்டர் ஆகும்.

இச்சன்னதி கருவறைக்குள் காளி எட்டு கைகளுடன் அமர்ந்த கோலத்தில் காணப்படுகிறாள். கருவறைச் சுவருடன் இணைந்தே இவ்வுருவம் அமைக்கப்பட்டுள்ளது. ஏறத்தாழ ஏழடி உயரமுள்ள இப்பிம்பம் பார்ப்பதற்கு மிகவும் விசேடமானது. வலது நான்கு கைகளிலும் மேலிருந்து கீழாக முறையே சூலம், நாகபடத்துடன் இணைந்த டமருகம், கத்தி, கிளி ஆகியவை உள்ளன. சூலம் அம்மனின் இடது காலடியில் கிடக்கும் தஞ்சா சுரனின் மீதுள்ளது. நான்கு இடது கைகளிலும் மேலிருந்து கீழாக முறையே அக்னி, கேடயம், மணி, கபாலம் முதலியன உள்ளன. அம்மன் வலது காலை உயர்த்தி மடக்கி பீடத்தில் வைத்துள்ளாள். இடது கால் தஞ்சாசுரனின் மேல் உள்ளது. அம்மன் தலையில் ஜ்வாலா கிரீடம் காணப்படுகிறது. அம்மனைச் சுற்றிப் பிரபை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. புலித்தோலின் மேல் அம்மன் அமர்ந்துள்ளாள். காதுகளில் நாகபட குண்டலங் கள் உள்ளன. அம்மனின் இரண்டு பற்கள் வாயில் வலது இடது

பக்கங்களில் கோரமாகக் காட்சியளிக்கின்றன. அம்மனின் முன்னால் இச்சன்னதியில் பலிபீடம் ஒன்றுள்ளது.

இக்கோயிலில் நித்ய பூசை தினமும் காலையில் ஒரு வேளை நடைபெறுகிறது. சித்திரை மாதம் உபயதாரர்கள் அம்மனுக்கு பாற்குடம் சாத்துகின்றனர். தஞ்சை அரண்மனை தேவஸ்தானத்தின் கீழ் இக்கோயில் நிர்வாகம் செயற்படுகிறது.

## 21. காளியம்மன் கோயில்

(ஸ்ரீ முத்துகாளியம்மன் கோயில்)

இச்சிறிய கோயில் தஞ்சை கீழவாசல் தட்டான் தெருவில் வடக்கு நோக்கி அமைந்துள்ளது. இக்கோயிலின் நீள, அகலம் 4 × 3 மீட்டர் ஆகும்.

இக்கோயிலின் கருவறையில் முத்துகாளியம்மனின் பழைய படிமம் ஒன்றும் புதிய சிலை ஒன்றும் வைக்கப்பட்டுள்ளன. பழைய படிமம் தஞ்சையில் காணப்படும் பல காளியம்மன் படிமங்களைப் போன்றது. இரண்டடி உயரமுள்ள இச்சிலை பார்ப்பதற்கு விசேடமானது. பழைய உருவத்தில் அம்மன் நான்கு கைகளையுடையவள். வலது கைகளில் மேலிருந்து கீழாக முறையே டமருகம், சூலம் முதலியன உள்ளன. இடது கைகளில் மேலிருந்து கீழாக முறையே பாசம், கபாலம் ஆகியவற்றை அம்மன் பெற்றிருக்கிறாள். இடது கால் கீழே வீழ்ந்திருக்கும் அசுரனின் மேல் மிதித்துள்ளது. வலதுகால் பீடத்தின் மேல் வைக்கப்பட்டுள்ளது. புதிய சிலையும் அவ்வாறே அமைக்கப்பட்டுள்ளது. ஆனால் இதில் வலது கால் பீடத்தின் மேல் தூக்கி மடக்கி வைக்கப்பட்டுள்ளது. காளியின் இரண்டு கோரைப் பற்கள் வெளியே நீட்டிக்கொண்டு அகோரமாகக் காட்சியளிக்கின்றன. ஜ்வாலா கிரீடத்தைக் காளி தரித்திருக்கிறாள். பழைய சிலை ஏறத்தாழ 200 ஆண்டுகளுக்கு முற்பட்டதாக இருக்கலாம்.

இக்கோயிலில் கருவறை மட்டுமே உள்ளது. செங்கல்லாலான இக்கோயிலில் கருவறையைக் கொண்டு ஓர் அல்ப விமானம் ஆறு

பட்டை சிகரத்துடன் காணப்படுகிறது. சிகரத்தின் மேல் வட்ட மான தட்டைப் பகுதியும் ஒரு கலசமும் உள்ளன.

இக்கோயிலில் வைகாசி மாதம் தெருவார்கள் பாற்குடம் சாத்துகின்றனர். மார்கழி மாதம் மூன்று வாரங்கள் மண்டகப்படி அபிஷேகம் உண்டு. செவ்வாய், வெள்ளி கிழமைகளில் விசேட பூசைகள் உண்டு.

இக்கோயிலின் நிர்வாகத்தைத் தட்டான் தெருவார்களே கவனித்து வருகின்றனர்.

## 22. காளியம்மன் கோயில்

இச்சிறிய கோயில் தஞ்சாவூர் கரந்தை மேல குருவிக்காரத் தெருவில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. நகரத்திலிருந்து வெளியே கிராமப்புறத்தில் அரிஜனங்கள் வாழும் பகுதியில் இக் கோயில் அமைந்துள்ளது. அரிஜனங்களே இவ்வம்மனை வழிபடு கின்றனர். நகரத்திலுள்ளோர் விசேட நாட்களில் இங்கு வந்து வழிபடுகின்றனர். அரிஜனங்களே இக்கோயிலைப் பரிபாலனம் செய்தும் வருகின்றனர். இக்கோயிலின் நீள, அகலம் 5 × 5 மீட்டர் ஆகும்.

இக்கோயில் கருவறையில் அம்மன் அமர்ந்த கோலத்தில் இருக்கிறாள். இது கல்லாலான படிமமாகும். அம்மனின் வலது கைகளில் மேலிருந்து கீழாக முறையே டமருகத்துடன் இணைந்த பாம்பும் சூலமும் உள்ளன. இடது கைகளில் மேலிருந்து கீழாக முறையே பாசமும் கபாலமும் உள்ளன. அம்மன் இடது காலை மடக்கி பீடத்தில் வைத்துக்கொண்டும் வலது காலைத் தொங்கல் நிலையிலும் வைத்திருக்கிறாள். அவளது வாயிலிருந்து இரண்டு கோரைப்பற்கள் வெளியே நீட்டிக் கொண்டிருக்கின்றன. அம்ம னின் தலையில் ஜ்வாலா கிரீடம் காணப்படுகிறது.

இக்கோயிலின் செங்கல்லாலான கருவறை கொண்டு ஓர் அல்ப விமானம் அமைந்துள்ளது. அதன் வட்டமான சிகரத்தில்

ஒரு கலசம் காணப்படுகிறது. கிரீவ மூலைகளில் நான்கு சிங்கங்கள் உள்ளன.

இக்கோயிலில் வைகாசி மாதம் திருவிழா நடைபெறுகிறது. கரகம் எடுத்தல், ஆட்டுக்கிடா பலிகொடுத்தல் முதலியன விமரிசையாக இக்கோயிலில் நடைபெறுகின்றன. தஞ்சை கரந்தையில் அமைந்துள்ள குந்தாளம்மனின் தங்கையான இக்காளியம்மன் கருதப்படுகிறாள். குந்தாளம்மன் கோயிலில் விழா எடுக்கும்போது இக்கோயிலிலும் விழா எடுக்கிறார்கள். இரண்டு கோயிலுக்கும் இணைப்பு காணப்படுகிறது. குந்தாளம்மன் கோயில் தோன்றிய சிறிது காலத்திற்கும் பின்பு இக்கோயில் தோன்றியிருக்க வேண்டும். மராட்டியர் காலத்தில்தான் இக்கோயிலும் இப்பகுதியில் அரிஜனங்களால் கட்டப்பட்டிருக்க வேண்டும்.

## 23. காளியம்மன் கோயில்

*(மகிஷாசுரமர்த்தினி)*

இத்திருக்கோயில் தஞ்சை ராஜகோபால்சாமி கோயில் தெருவில் அமைந்துள்ள சாரங்கபாணி கோயிலின் உள்ளே பிராகாரத்தினுள் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. இக்கோயில் ஒரு பெரிய மண்டபமாகவே அமைந்துள்ளது அல்லது ஒரு மண்டபம் காளி கோயிலாக மாற்றப்பட்டுள்ளது எனக் கூறலாம். தஞ்சை நாயக்கர் காலத்தில் கட்டப்பட்ட ராஜகோபால்சாமி கோயிலானது பின்பு சாரங்கபாணி கோயிலாக மாறியது. ராஜகோபால்சாமி சிலை மன்னார்குடி கோயிலுக்கு மாற்றப்பட்டுள்ளது. தொடர்ந்து இக்கோயில் பிராகாரத்தின் வடகிழக்கில் அமைந்துள்ள ஒரு மண்டபம் காளிகோயிலாக மாற்றப்பட்டது. ராஜகோபால்சாமி கோயிலை (சாரங்கபாணி கோயில்) தற்போது பொதுமக்கள் காளிகோயில் என்றே அழைக்கின்றனர். காளி வழிபாடு மராட்டா காலத்தில் இக்கோயில் மிகவும் பிரசித்திப் பெற்று விளங்கியது. நாயக்கர் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட இக்காளிகோயில் மராட்டியர் காலத்தில் மக்கள் மத்தியில் பிரபலமடைவதற்குச் சில காரணங்கள் துணையாக உள்ளன. மராட்டியர் காலத்தில் இக்கோயிலில் பெண்களைப் பலியிடும் வழக்கம் இருந்ததாகச் செய்திகள் தெரிவிக்

கின்றன.[1] ஏறத்தாழ 25 ஆண்டுகளுக்கு முன்பு கூட இக்கோயிலுக்குப் பொதுமக்கள் விரும்பிச் செல்வது கிடையாது. ஓர் அச்சம் பொதுமக்களிடம் நிலவி வந்தது. தற்காலத்தில் பொதுமக்கள் இக்கோயிலுக்கு விரும்பிச் செல்கிற ஒரு நிலையினைக் காண்கிறோம். இக்கோயிலின் நீள, அகலம் 15 × 15 மீட்டர் ஆகும்.

இக்கோயிலின் கருவறையோ அதன்மேல் தனி சிகரமோ இல்லை. ஒரு மண்டபத்தின் வடமேற்கில் மகிஷாசுரமர்த்தினி சிலை காணப்படுகிறது. எட்டு கைகளுடன் நின்ற கோலத்தில் அம்மன் காட்சியளிக்கிறாள். வலது நான்கு கைகளில் மேலிருந்து கீழாக முறையே சூலம், கேடயம், சங்கு, கத்தி முதலியன உள்ளன. சூலம் கீழே படுத்திருக்கும் மகிஷாசுர எருமையைத் தாக்குவதாக உள்ளது. இடது கைகளில் மேலிருந்து கீழாக முறையே சக்கரம், வில், கபாலம் முதலியனவும் உள்ளன. இறுதி இடது கை மகிஷத்தின் நாக்கைப் பிடித்துக் கொண்டு காட்சியளிப்பது புதிதானதாகும். இது வெளிநாட்டுத் தாக்கத்தினால் ஏற்பட்டது என்று கூறுவர். காளி உற்சவ மூர்த்தியும் அவ்வாறே உள்ளது. இச்சிலை ஏறத்தாழ 4½’ உயரமானது. இதனருகே வலது புறத்தில் 3½’ உயரத்தில் பிறிதொரு மகிஷாசுரமர்த்தினி படிமமும் உள்ளது. சாமுண்டீஸ்வரி படிமம் என்று இது கூறப்படுகிறது. இதற்கு நான்கு கைகள் உள்ளன. வலது கைகளில் மேலிருந்து கீழாக முறையே சூலமும் கத்தியும் உள்ளன. இடது மேல் கையில் கேடயம் உள்ளது. இடது கீழ்க்கை மகிஷத்தின் வாயினைப் பிடித்துள்ளது. மகிஷாசுரமர்த்தினி மூலவரின் இடது பக்கத்தில் ராணுபாய், சட்டுபாய் என்ற மராட்டியர் குலதெய்வங்கள் வைக்கப்பட்டுள்ளன. ராணுபாய் அமங்கலியாகவும் சட்டுபாய் சுமங்கலியாகவும் காணப்படுகிறாள். மராட்டியர்கள் தங்களுக்குக் குழந்தை பிறந்தவுடன் இங்கு வந்து இவர்களை வழிபடுகின்றனர். கல்லாலான இச்சிலைகள் முன்பு அதன் உற்சவ செப்புச் சிலைகளும் உள்ளன. இவை

---

1. காண்க கே. எம். வேங்கடராமையா. 1987 தஞ்சை மராட்டிய மன்னர்கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும், பக். 360.

$1\frac{1}{2}$' உயரமுடையவை. இதனருகே வடக்கில் கஜலெட்சுமிக்குத் தனிச் சன்னதி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அதன் வாயிலருகே இரண்டு துவார பாலகிகள் சிற்பங்கள் சாந்தமுகத்துடன் அழ காகக் காட்சியளிக்கின்றன. இவை கைகளில் ஆயுதங்கள் எதுவும் தாங்கி நிற்கவில்லை. இச்சன்னதியின் அருகே வடகிழக்கு மூலை யில் விநாயகர் இரண்டு அம்பாள் சிலைகள் மற்றும் சப்த கன்னிகை கள் சிலைகள் உள்ளன. விநாயகர், அம்பாள் சிலைகள் கிழக்கு நோக்கி அமைந்துள்ளன. சப்த கன்னிகைகள் சிலைகள் தெற்கு நோக்கியுள்ளன. அதில் ஐந்து சிலைகள் அமர்ந்த நிலையிலும் இரண்டு சிலைகள் நின்ற கோலத்துடனும் காட்சியளிக்கின்றன. மகிசாசுர மர்த்தினி, சாமுண்டீஸ்வரி, ராணுபாய், சட்டுபாய் சிலைகள் கிழக்கு நோக்கி அமைந்துள்ளன. கஜலெட்சுமி சன்னதி தெற்கு நோக்கி காணப்படுகிறது.

இம்மண்டபத்தின் தென்மேற்கில் மேலும் பல அழகான உயரமான படிமங்கள் உள்ளன. கங்கா யமுனாவுக்குச் சிலைகள் வைக்கப்பட்டுள்ளன. இவை ஓர் அடி உயரமுடையவை. இவை இரண்டு கைகளுடன் நின்ற கோலத்தில் அபய வரத முத்திரை களுடன் காட்சியளிக்கின்றன. இவற்றைத் தொடர்ந்து விஷ்ணு துர்க்காவின் சிலை உள்ளது. இது ஏறத்தாழ ஆறு அடி உயர முடையது. நின்ற கோலத்தில் எட்டு கைகளுடன் விஷ்ணு துர்க்கா காட்சியளிக்கிறாள். கிழக்கு நோக்கி இச்சிற்பம் வைக் கப்பட்டுள்ளது. இதன் வலது நான்கு கைகளிலும் மேலிருந்து கீழாக முறையே சக்கரம், அங்குசம், கத்தி, சூலம் முதலியன உள்ளன. இடது கைகளில் மேலிருந்து கீழாக சங்கு, பாசம், கத்தி, மணி முதலியனவும் உள்ளன. கரண்ட மகுடம் தலையில் உள்ளது. இதனைத் தொடர்ந்து கோலாப்பூர் மகாலட்சுமியின் படிமம் காணப்படுகிறது. இவள் கோலாப்பூரின் காவல் தெய் வம் ஆவாள். மராட்டியர்கள் மகாலட்சுமியைக் கோலாப்பூர் மகாலட்சுமி என அழைக்கின்றனர். நின்ற கோலத்தில் காட்சி யளிக்கும் இவ்வம்மன் தலையில் காணப்படும் கிரீடத்தில் ஐந்து தலை நாகம் பதிக்கப்பட்டுள்ளது. அதன் நடுவே சிவலிங்கம் உள்ளது. பார்வதி அம்சமாகவே இது காட்சியளிக்கிறது. இவ்

வம்மனுக்கு நான்கு கைகள் உள்ளன. வலது கைகளில் கதாயுதமும், கத்தியும் உள்ளன. இடது கைகளில் கேடயமும் கபாலமும் முறையே மேல், கீழ்க் கைகளில் காணப்படுகின்றன. இச்சிலை ஏறத்தாழ ஆறு அடி உயரமுள்ளது, இதனைத் தொடர்ந்து சிவதுர்க்கா படிமம் வைக்கப்பட்டுள்ளது. இப்படிமமும் ஏறத்தாழ ஆறு அடி உயரமுடையது. நான்கு கைகளுடன் நின்ற கோலத்தில் காட்சியளிக்கும் இவ்வம்மன் வலது மேல் கையில் பாம்பு படத்துடன் இணைந்த டமருகமும் வலது கீழ்க் கையில் கத்தியும் உள்ளன. இடது மேல் கையில் சூலமும் இடது கீழ்க் கையில் கபாலமும் வைத்திருக்கிறாள்.

இதனையடுத்து மார்த்தாண்ட பைரவர் என்ற சிவ படிமம் உள்ளது. இதனருகே அம்பாள் படிமமும் உள்ளது. மார்த்தாண்ட பைரவர் அமர்ந்த கோலத்தில் காட்சியளிக்கிறார். அவர் அமர்ந்திருக்கும் பீடத்தின் கீழ் நாயின் உருவம் செதுக்கப்பட்டுள்ளது. இவரருகே அமர்ந்துள்ள அம்பாளும் அமர்ந்த கோலத்தில் நான்கு கைகளுடன் காட்சி தருகிறாள். இவள் வலது காலை மடக்கி பீடத்தில் வைத்துள்ளாள். இடது கால் தொங்கல் நிலையில் உள்ளது. வலது மேல் கையில் சூலமும் வலது கீழ் கையில் கத்தியும் காணப்படுகின்றன. அவள் இடது மேல் கையில் பாம்புடன் இணைந்த டமருகமும் இடது கீழ்க்கையில் கபாலமும் பெற்றுள்ளாள். இவளருகே மேலும் இரண்டு அம்பாள் சிலைகள் உள்ளன. ஒரு கையில் மலரை வைத்துள்ளாள். பிறிதொரு கை டோலஹஸ்த நிலையில் வைத்துள்ளாள். அடுத்து பைரவர் படிமம் ஒன்றும் பைரவ அம்பாள் படிமம் ஒன்றும் வைக்கப்பட்டுள்ளன. பைரவ அம்பாள் இரண்டு கைகளுடன் நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறாள். வலது கையில் தாமரை மலரைப் பிடித்துள்ளாள். இடது கை டோலஹஸ்த நிலையில் உள்ளது. மேலும் மார்த்தாண்ட பைரவர் படிமம் பின்னால் இரண்டு குதிரைகளில் மார்த்தாண்ட பைரவர் அம்பாளுடன் இருக்கும் சிலைகள் உள்ளன. இவை விசேடமான சிற்பங்களாகும்.

மகிஷாசுரமர்த்தினி நிற்கின்ற இக்காளி கோயில் மண்டபத்தில் மேற்கண்ட படிமங்கள் உள்ளன. இக்கோயிலின் நுழைவாயில் தெற்குப் பகுதியில் மண்டபத்தின் நடுவில் அமைந்துள்ளது. இக்காளிகோயில் மண்டபத்தின் மேற்கில் நடுவில் ஒரு வாயில் உள்ளது. அதன் வழியாக வடமேற்கில் மகிஷாசுரமர்த்தினி மண்டபத்தின் பின்னால் அமைந்துள்ள பிறிதொரு மண்டபத்திற்குச் செல்லலாம். அதில் ஏராளமான சைவ, வைணவ சிற்பங்கள் உள்ளன. நாயக்கர் கால சிற்பக்கலையின் பல்வேறு அம்சங்களை இம்மண்டபத்தில் காணலாம்.

இம்மண்டபத்தின் தெற்கில் அமைந்த நுழைவாயில் வழியாக உள்ளே நுழைந்ததும் இடது பக்கத்தில், தெற்கில், வடக்கு நோக்கிப் பல சிலைகள் வைக்கப்பட்டுள்ளன. முதலாவதாக விஷ்வக் சேனன் சிலை காணப்படுகிறது. விநாயகர் நெற்றியில் நாமமிட்டுள்ளார். சங்கு, சக்கரம் முதலியவற்றையும் கைகளில் தாங்கியுள்ளார். வைஷ்ணவ அம்சம் இவ்விநாயகர் சிலையில் பொருத்தப்பட்டுள்ளது. இதன் பின்னால் நான்கு காலகன் சிலைகளும் அதனருகே அதற்குரிய எட்டு அம்பாள் படிமங்களும் வைக்கப்பட்டுள்ளன. இவற்றைத் தொடர்ந்து தெற்கில் மூன்று இராஜகோபால்சாமி சிலைகள் உள்ளன. அதன் இருபுறமும் ஸ்ரீதேவி, பூதேவி சிலைகள் உள்ளன. இச்சிலையின் முன்னே கருடன் சிலை இராஜகோபால்சாமி படிமத்தை நோக்கி அமைந்துள்ளது. அதன் பின்னால் பலிபீடம் ஒன்று காணப்படுகிறது. இராஜகோபால்சாமி வலது கையில் சாட்டையை பிடித்துள்ளார். ஆறு அம்பாள் படிமங்கள் அவரது இருபக்கங்களிலும் உள்ளன. அம்பாள் இரண்டு கைகளுடன் காட்சி தருகிறாள். தாமரை மொட்டு ஒரு கையில் காணப்படுகிறது. பிறிதொரு கை டோலஹஸ்த முத்திரையில் உள்ளது. இவற்றைத் தொடர்ந்து $5\frac{1}{2}$' உயரத்தில் ஆஞ்சனேயர் சிலை உள்ளது. அவரது வலது கை அபயமுத்திரையுடனும் இடது கை சஞ்சீவ பர்வதத்தைத் தாங்கியும் அமைந்துள்ளன. ஆஞ்சனேயர் நின்ற கோலத்தில் காணப்படுகிறார்.

மேற்கில் வல்லப கணபதி பத்துக் கைகளுடன் அம்பாளை மடியில் வைத்துக்கொண்டு அமர்ந்த நிலையில் காட்சியளிக்கிறார். அதனருகே பிறிதொரு கணபதி சிலை நான்கு கைகளுடன் காணப்படுகின்றது. அவரின் முன்னால் மூஞ்சூறு வாகனம் உள்ளது. அங்குசம், கொம்பு முதலியன விநாயகரது வலது கைகளிலும் பாசம், மோதகம் முதலியன அவரது இடது கைகளிலும் காணப்படுகின்றன. இவரருகே ஜேஷ்டாதேவி சிலை குள்ளமாக அமைக்கப்பட்டுக் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. ஜேஷ்டாதேவி வலது கையில் மலரை வைத்துள்ளாள். அடுத்து மேற்கில் தண்டாயுதபாணி நின்ற கோலத்தில் காணப்படுகிறார். இச்சிலை ஐந்தடி உயரமுள்ளது. இதன் முன்னால் பத்து தலை நாகம் ஒன்று இரண்டடி உயரத்தில் அழகாக அமைக்கப்பட்டுள்ளது. இதன் இருமருங்கிலும் பாம்பு உடலுடன் கூடிய நாக கன்னிகைகள் சிலைகள் உள்ளன. இவற்றின் முன்னால் வள்ளி—தெய்வானை—முருகன் சிலைகள் வைக்கப்பட்டுள்ளன. இவை யாவும் கிழக்கு நோக்கி அமைந்துள்ளன. அடுத்து தெற்கு நோக்கி வடக்கில் பல சிலைகள் வைக்கப்பட்டுள்ளன. ஐந்து இலிங்கங்கள் இராஜகோபால்சாமி சிலைகளின் நேரெதிரே வரிசையாக வைக்கப்பட்டுள்ளன. இலிங்கத்தின் இருமருங்கிலும் அம்பாள் சிலைகள் வைக்கப்பட்டுள்ளன. இறுதி இலிங்கத்தின் முன்னால் நந்தியும் பலிபீடமும் வைக்கப்பட்டுள்ளன. இதில் அம்பாள் நான்கு கைகளுடன் காட்சியளிக்கிறாள். வலது மேல் கையில் உருத்திராக்கமும் இடது மேல் கையில் மலரும் பிற கைகளில் அபய வரத முத்திரையும் காணப்படுகின்றன. இச்சிற்பங்களைத் தொடர்ந்து வடக்கில் தெற்கு நோக்கி பூதேவி—மகாவிஷ்ணு—ஸ்ரீ தேவி சிற்பங்கள் இரண்டு ஜோடி உள்ளன. இதன் முன்னால் சிவன்—அம்பாள் சிற்பங்கள் நின்ற கோலத்துடன் இரண்டு ஜோடிகள் உள்ளன. சிவன் அபய, வரத முத்திரையுடனும் மழு, மானைத் தாங்கியும் நிற்கிறார். அம்பாள் வலது கையில் மலரை வைத்துள்ளாள். இடது கை டோலஹஸ்தா முத்திரையில் அமைந்துள்ளது. இச்சிற்பங்கள் இரண்டடி உயரமுள்ளவை.

அடுத்தாற்போல் நவகிரகங்களின் சிற்பங்கள் அமைக்கப் பட்டுள்ளன. இவை பார்ப்பதற்கு விசேடமானவை. நடுவில் சூரியன் தன் மனைவிகளான உஷா, பிரத்யுஷா ஆகியோருடன் காணப்படு கிறார். இத்தகைய இரண்டு ஜோடி சூரியன் சிற்பங்கள் வைக்கப் பட்டுள்ளன. மேலும் தனியாகச் சூரியன் சிலை ஒன்றும் வைக்கப் பட்டுள்ளது. சூரியன் சிற்பங்கள் கிழக்கு நோக்கி அமைந்துள்ளன. சூரியனின் பின்னால் மேற்கு நோக்கிச் சனிபகவான் தன் இரு மனைவிகளுடன் காட்சி தருகிறார். சனிபகவானின் தெற்கிலும் வடக்கிலும் முறையே கேது, ராகு சிற்பங்கள் வைக்கப்பட்டுள்ளன. கேது தெற்கு நோக்கி வைக்கப்பட்டுள்ளது. ராகு வடக்கு நோக்கி வைக்கப்பட்டுள்ளது. சூரியனின் முன்னால் கிழக்கில் சுக்ரன் தன் மனைவியுடன் கிழக்கு நோக்கி அமைக்கப்பட்டுள்ளார். அவரின் தெற்கிலும் வடக்கிலும் முறையே சந்திரன், புதன் சிற்பங்கள் வைக்கப்பட்டுள்ளன. சந்திரன் தன் இரு மனைவிகளுடன் மேற்கு நோக்கி நிற்கின்றார். புதன் வடக்கு நோக்கி அமைக்கப்பட்டுள் ளது. புதனுக்கும் ராகுவுக்கும் இடையில் குருபகவான் தன் மனைவியுடன் வடக்கு நோக்கிக் காணப்படுகிறார். சந்திரனுக்கும் கேதுவுக்கும் இடையில் செவ்வாய் தெற்கு நோக்கி அமைக்கப் பட்டுள்ளது. இந்நவகிரகங்களின் உயரம் ஏறத்தாழ 2' முதல் 4' வரையில் அமைக்கப்பட்டுள்ளது. சூரியன் முதலாக ஒன்பது கிரக தேவதைகளும் தம்தம் தேவியருடன் அமையக் காண்பது ஓரிரு இடங்களில்தான் காணப்படுகிறது. திருச்சி மாவட்டம் முத்தரச நல்லூரை அடுத்து பழுவூர் காசி விச்வநாதர் கோயிலில் தம்தம் தேவியுடன் நவகிரகங்கள் உள்ளன.

இவற்றைத் தொடர்ந்து வடக்கில் மீனாட்சி சுந்தரேசர் இலிங்கம் காணப்படுகிறது. மீனாட்சி சுந்தரேசர் இலிங்கத்தின் அருகில் அம்பாள் சிலை உள்ளது. நந்தி பலிபீடம் ஆகியவையும் முன்னால் வைக்கப்பட்டுள்ளன. இதன் முன்னால் சோமசுந்தரேச வடிவங்கள் வைக்கப்பட்டுள்ளன. அதாவது மூன்று சிவ மூர்த்தங் கள் ஒன்றன் முன் ஒன்றாக வைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மூர்த்த சிலையின் பக்கத்திலும் அம்பாள் நின்ற கோலத்தில் காணப்படுகிறார். சிவன் மழு, மான் ஆகியவற்றுடனும் அபய,

வரத முத்திரைகளுடனும் காட்சி தருகிறார். அம்பாள் வலது கையில் தாமரை மொட்டை வைத்துள்ளாள். இடது கை டோலஹஸ்த நிலையில் காணப்படுகின்றது. இச்சிற்பங்களின் அருகே பஞ்சமுக இலிங்கம் ஒன்று வைக்கப்பட்டுள்ளது. அதன ருகே அம்பாள் இருந்த கோலத்தில் காணப்படுகிறாள். அம்பாள் இடது காலை மடக்கி பீடத்தில் வைத்துக் கொண்டும் வலது காலைத் தொங்க விட்ட நிலையிலும் காட்சியளிக்கிறாள். இரண்டு கைகளையுடைய இவ்வம்பாளின் வலது கையில் மலர்மொட்டும் இடது கை வரத முத்திரையுடனும் காணப்படுகின்றன. பஞ்சமுகேஸ் வரரின் முன்னால் நான்முகன் படிமம் உள்ளது. இச்சிலையில் மூன்று முகங்கள் கீழ்ப்பகுதியிலும் அவற்றின் மேல் ஒரு முகமும் அமைக்கப்பட்டுள்ளன. இரண்டு கைகளுடன் அபய வரத முத்தி ரையில் நான்முகன் அமர்ந்த நிலையில் காணப்படுகிறார். இவ ரருகே அம்பாள் நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறார். வலது கையில் மலரும் இடது கை வரத முத்திரையுடனும் காணப்படு கின்றன. இதனைத் தொடர்ந்து வடக்கில் தட்சிணாமூர்த்தி, சண்டிகேஸ்வரர் சிற்பங்கள் தெற்கு நோக்கி வைக்கப்பட்டுள்ளன. இதனருகே இருமுக அக்னீஸ்வரர் நான்கு கைகளுடன் காட்சி தருகிறார். அவரருகே அம்பாள் படிமம் உள்ளது அம்பாளின் இடது கையில் மலருள்ளது. வலது கை டோலஹஸ்த நிலையில் அமைக்கப்பட்டுள்ளது. இருமுக அக்னியின் முன்னால் இரண்டு கைகளுடன் காணப்படும் அக்னி படிமம் உள்ளது. அதனருகே யுள்ள அம்பாள் வலது கையில் மலரைத் தாங்கியுள்ளாள். இடது கை டோலஹஸ்த நிலையில் அமைக்கப்பட்டுள்ளது. இவள் நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறாள்.

மண்டபத்தின் கிழக்கில் மேற்கு நோக்கி பண்டரிபுரம் பாண்டுரங்கன் சிலைகள் நான்கு வரிசைகளில் வைக்கப்பட்டுள் ளன. இவை ஏறத்தாழ நான்கடி உயரமுள்ளவை. இரு கை களையுடைய இச்சிற்பங்களில் இரண்டு கைகளும் இரண்டு தொடைகளின் மேல் இடுப்பில் வைக்கப்பட்டுள்ளன. பாண்டு ரங்கன் நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறார். பாண்டுரங்கன் சிலைகளின் இருபக்கமும், ராதா, ருக்மணி படிமங்கள் (4 + 4)

வைக்கப்பட்டுள்ளன. ராதா, ருக்மணியை மராட்டியர்கள் ராதா, ருக்குமாய் என அழைக்கின்றனர். அப்பெயர்கள் தற்போதும் இக் கோயிலில் வழங்கப்படுகின்றன. இச்சிலைகளின் முன்னால் லட்சு மணர்–ராமர். சீதை படிமங்கள் உள்ளன. மேலும் லக்ஷ்மி நரசிம்மன் சிலையும் உள்ளது. இவை சற்றுப் பெரிதானவை; ஐந்தடி உயரமுடையவை. அவர் தனது வலது மேல் கையில் சங்கும் இடது மேல் கையில் சக்கரமும் வைத்துள்ளார். வலது கீழ்க்கை வரத முத்திரையிலும் இடது கீழ்க்கை டோலஹஸ்த நிலையிலும் உள்ளன. வெங்கடாசலபதியின் இருமருங்கிலும் ஸ்ரீதேவி பூதேவி சிற்பங்கள் இரண்டு படிமங்களுக்கும் உள்ளன. இவை ஒரு கை மலருடனும் பிறிதொரு கை டோலஹஸ்த நிலையிலும் காணப்படுகின்றன. இப்படிமங்களின் முன்னால் பலி பீடம் ஒன்று உள்ளது. இதற்கடுத்தாற்போல் தெற்கில் நான்கு வேணுகோபாலன் சிலைகள் வரிசையாக ஒன்றன்முன் ஒன்றாக வைக்கப்பட்டுள்ளன. அவரருகே பசு நிற்கிறது. கால் மாற்றி வைத்து புல்லாங்குழல் வாசிக்கும் நிலையில் அவர் காட்சி தரு கிறார். அவரின் இரு பக்கங்களிலும் அம்பாள் சிலைகள் நின்ற கோலத்தில் காட்சியளிக்கின்றன. சங்கு, சக்கரம் முதலியவற்றை அவர் தாங்கியுள்ளார். அம்பாளின் ஒரு கையில் தாமரை மலர் காணப்படுகிறது. பிறிதொரு கை டோலஹஸ்த நிலையில் உள்ளது.

மேற்கண்ட சிற்பங்கள் இருக்கும் மண்டபத்தின் தெற்கில் பிறிதொரு மண்டபம் உள்ளது. அது தற்காலத்தில் சிதிலமடைந் துள்ளது. இம்மண்டபத்திற்கும் சிற்பங்கள் நிறைந்திருக்கும் மண்ட பத்திற்கும் இடையில் மேற்கில் ஒரு வழி அமைக்கப்பட்டுள்ளது. அதன் வழியாகச் சாரங்கபாணி கோயில் திருச்சுற்றிற்கு வந்து சேரலாம்.

இக்கோயிலில் நித்ய பூசை தினமும் காலையிலும் மாலை யிலும் இருவேளை நடைபெறுகிறது. ஆடி மாதம் செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் சந்தனக்காப்பு அம்மனுக்குச் சாத்தப்படு கிறது. அலங்காரங்களும் இந்நாட்களில் செய்யப்படுகின்றன. இத் திருக்கோயில் தஞ்சை அரண்மனை தேவஸ்தானத்தின் நிர்வாகத் தில் உள்ளது.

## 24. குந்தாளம்மன் கோயில்

குந்தாளம்மன் கோயில் கரந்தை கோடியம்மன் கோயிலருகே வயலில் வடக்கு நோக்கி அமைந்துள்ளது. இப்பகுதி வேலூர் தெரு ஆதிதிராவிடர் (பள்ளர்) மரபினர் இக்கோயிலைப் பராமரித்து வருகின்றனர். மராட்டியர் காலத்திலிருந்தே இவ்வம்மன் வழிபாடு இப்பகுதியில் இருந்து வருவதாகத் தெரிகிறது. மராட்டியர்கள் குந்தாளம்மனை வழிபட்டு வருகின்ற செய்தியைத் தஞ்சை எல்லையம்மன் கோயில் கல்புடைப்புச் சிற்பம் நமக்கு எடுத்துக் காட்டுகிறது. இவ்வம்மனை கொந்தளக்காரர்கள் என்ற மராட்டிய இனத்தவர் வழிபடுகின்றனர். இவர்கள் ஒரு வகை நடனம் ஆடுபவர்கள் ஆகும். இக்கோயிலின் நீள, அகலம் 6 x 6 மீட்டர் ஆகும்.

இக்கோயில் கருவறையில் அம்மன் அமர்ந்த கோலத்தில் காட்சி தருகிறாள். இடது காலை மடக்கி பீடத்தில் வைத்துக் கொண்டு வலது தொங்கல் நிலையில் அம்மன் வைத்துள்ளாள். அம்மன் நான்கு கைகளையுடையவள். வலது இரண்டு கைகளிலும் மேலிருந்து கீழாக முறையே பாம்புடன் இணைந்த டமருகமும் சூலமும் உள்ளன. இடது கைகளில் பாசமும் கபாலமும் உள்ளன.

கருவறையின் முன் சிறிய அந்தராளப் பகுதி உள்ளது. அதில் கருவறை வாயிலின் இடது பக்கத்தில் வடக்கு நோக்கி பெண் தெய்வம் ஒன்று நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறது. அவள் வலது கையில் மலரையும் இடது கையைத் தொங்கல் நிலையிலும் (டோலஹஸ்த) வைத்துள்ளாள்.

அந்தராளத்தைத் தொடர்ந்து அர்த்த மண்டபம் இரண்டு பெரிய சதுர தூண்களுடன் அமைந்துள்ளது. செங்கல்லாலான இம்மண்டபம் மராட்டா பாணியில் வளைவுகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. இம்மண்டபத்தின் மத்தியில் அம்மனை நோக்கி பலிபீடமும் சூலமும் வைக்கப்பட்டுள்ளன. இம்மண்டபத்தின் தெற்கில் முனீஸ்வரர் மற்றும் சில சிறு தெய்வங்களின் சுதைச்

சிற்பங்கள் காணப்படுகின்றன. அர்த்த மண்டபத்தின் முன்னால் சிறிய முன்மண்டபம் உள்ளது. முன் மண்டபத்தின் மேல் அம்மன் சுதையுருவம் ஒரு பிரபையில் வைக்கப்பட்டுள்ளது.

இக்கோயில் கருவறை செங்கல்லாலானது. இந்த அல்ப விமான ஆறு பட்டைகளையுடைய சிகரத்தையுடையது. சிகரத்தின் மேல் ஒரு கலசம் உள்ளது. நான்கு சிங்கங்கள் விமானத்தின் மூலைகளில் உள்ளன.

இக்கோயிலில் பங்குனி சித்திரை மாதங்களில் உற்சவம் நடைபெறுகிறது. கரகம் எடுத்தல், பாற்குடம் எடுத்தல் முதலிய நிகழ்ச்சிகள் அப்போது நடைபெறும். கடா பலியிடுதல் நிகழ்ச்சிகளும் இக்கோயிலில் உற்சவத்தின்போது நடைபெறும். பதினைந்து நாட்கள் இக்கோயிலில் உற்சவம் நடைபெறுகிறது.

## 25. குந்தாளம்மன் கோயில்

இச்சிறிய கோயில் தஞ்சை கரந்தையில் அன்ன சத்திரம் கடைத் தெருவில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. சாலையின் ருகே அமைந்துள்ள சிறிய சன்னதியில் பிரபையுடன் அமைந்துள்ள சுவர் கோஷ்டத்தில் சிங்க வாகனத்தின் மேல் அம்மன் காட்சி தருகிறாள். இக்கோயிலின் நீள, அகலம் 1 × 2 மீட்டர் ஆகும்.

அம்மன் சுதையுருவம் சிங்கத்தின் மேல் அமர்ந்த கோலத்தில் அமைக்கப்பட்டுள்ளது. அம்மன் நான்கு கைகளையுடையவள். வலது கைகளில் மேலிருந்து கீழாக முறையே பாம்புடன் இணைந்த டமருகமும், சூலமும் உள்ளன. இடது கைகளில் பாசமும் கபாலமும் உள்ளன. அம்மன் ஜ்வாலா கிரீடத்தை அணிந்துள்ளாள். இடது காலை மடக்கி சிங்கத்தின் மீது வைத்துக் கொண்டும் வலது காலைத் தொங்கவிட்டுக் கொண்டும் அம்மன் அமர்ந்துள்ளாள்.

இச்சன்னதியின் வாயில் மேல் அம்மன் சுதையுருவம் காணப் படுகிறது. இரண்டு துவார பாலகிகளும் இரண்டு சிங்கங் களும் அதில் உள்ளன.

இக்கோயிலின் பின்னால் மராட்டியர் கோயில் ஒன்றுள்ளது. முற்காலத்தில் இவ்வம்மனே அதில் வீற்றிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. அக்கோயில் தற்போது வேறு நிலையில் மாற்றப் பட்டுள்ளது.

வேலூர் குந்தாளம்மன் கோயிலில் உற்சவம் நடைபெறும் போது இக்கோயிலிலும் உற்சவம் நடைபெறுகிறது. பங்குனி மாதம் பதினைந்து நாட்கள் உற்சவம் நடைபெறுகிறது.

## 26. கோடியம்மன் கோயில்

கோடியம்மன் கோயில் தஞ்சையில் அமைந்துள்ள கருந் தாட்டன்குடி அருகே நெடுஞ்சாலையில் வடக்கு நோக்கி அமைந் துள்ளது. இத்திருக்கோயில் எல்லை காவல் தெய்வங்களில் மிகவும் பிரசித்திப் பெற்றதாகும். தஞ்சாசுரனை அழிக்கத் தோன்றியவர்களில் இவளும் ஒருத்தியாவாள். இக்கோயிலின் நீள, அகலம் $20 \times 10$ மீட்டர் ஆகும்.

இக்கோயிலின் தலபுராணம் பின்வருமாறு: முன்னொரு காலத்தில் சோழ நாட்டில் மழைவளம் குன்றியது. சோழ அர சன் கவலையுற்று வசிட்ட மகாமுனியை வணங்கிக் கேட்டான். அதற்கு அம்முனிவர், ''உனது நாட்டில் 'உதங்கன்' என்ற பிரா மணன், ஒழுக்கங்குன்றி சண்டாளியுடன் கூடிப் பிள்ளைகளைப் பெற்று வாழ்கிறான். அப்பிள்ளைகளில் ஒருவனைச் சண்டாளி, காலால் உதைத்து வருகிறான். அவர்களை நாட்டை விட்டுத் துரத்தினால் மழை பொழியும்; நாடு செழிக்கும் என்று கூறினார்.

அரசன் அவர்களைத் துரத்த அந்தப் பிராமணன், இச்சோழ மன்னனுக்கு எதிரியான, 'சப்த்துருகோப'னுடன் சேர்ந்து கொண் டான். அதனால், அவன் புகுந்த இடத்திற்குப் பல துன்பங்கள் ஏற்பட்டன. இதனால் கோபங்கொண்ட சத்துருகோபன் சோழ மன்னனுடன் போரிடத் துணிந்து படையெடுத்து வந்தான்.

அப்போது, கிராம தேவதையான 'காளி' என்ற சக்தி, சோழ மன்னனுடைய பக்திக்காகவும், வேண்டுகோளுக்காகவும் கோடி உருவங்கொண்டு, கொள்ளி கட்டையும் கையுமாக சந்துரு கோபனைக் அழித்தாள். இதனால் காளித் தெய்வம் 'கோடியம்மன்' என்று பெயர் பெற்றாள். அரசன், மகிழ்ச்சியடைந்து, கோடியம்மனுக்குக் கோயிலெடுத்து வழி பாடு செய்தான் நாடு செழிக்க மழை பொழிந்தது. அது முதல் கோடியம்மன் எல்லைத் தெய்வமாக நின்று அருள்பாலித்து வருகிறாள். இவ்வம்மன் தஞ்சையில் ஊர்க்கோடியில் இருப்பதால் 'கோடியம்மன்' எனப் பெயர் பெற்றாள் என்று கூறுவாரும் உளர். கோடி – கோடியம்மன் என்ற பெயர் துர்க்கையைக் குறிக் கும். இது வடமொழியில் கோடரி, கோடவி என்ற துர்க்கையைக் குறிக்கும் சொற்களை நினைவூட்டும். தமிழ் அகராதியிலும் 'கோடி' என்ற சொல்லுக்குத் துர்க்கை என்ற பொருளும் காணப்படு கிறது மாமல்லபுரத்து குடைதளியான துர்க்கை கோயில் இன்றும் 'கோடிக்கால்' மண்டபம் என்ற பெயரால் அழைக்கப்படுகிறது.

இக்கோடியம்மன் கருவறையில் அமர்ந்த கோலத்தில் காணப்படுகிறாள். அம்மன் எட்டு கைகளையுடையவள். வலது கால் பீடத்தின் மேல் தூக்கி மடக்கிய நிலையிலும் இடது கால் தஞ்சாசுரனை மிதித்த நிலையிலும் காணப்படுகிறது. சூலம் அசுரனின் நெஞ்சில் பாய்ந்துள்ளது. இச்சிற்பம் மரத்தாலானது. அம்மன் வலது காலை மடித்து இடது காலை ஊன்றி அமர்ந் துள்ளாள். இடது காலின் அடியில், மல்லாந்த பார்வையில் தஞ்சாசுரன் மேற்கே தலையும் கிழக்கே காலுமாகக் காணப்படு கிறான். அம்மனின் எட்டு திருக்கைகள் அழகுடன் காட்சி தருகின் றன. வலது கைகளில் சூலம், கத்தி, உடுக்கை, சிறுசூலம் முதலி யன உள்ளன. இடது கைகளில் மணி, கேடயம், அங்குசம், கபாலம் ஆகியவை காட்சியளிக்கின்றன. நீண்ட நெடிய கிரீடம் தலையில் உள்ளது. கோரைப் பற்களும் முன்பற்களும் இலங்க அம்மன் விளங்குகிறாள்.

கருவறைக்கு வெளியில் அர்த்த மண்டபம் கருவறையைத் தொடர்ந்து அமைகிறது. இதில் கருவறை வாசலின் இருமருங்கிலும் இரு கருங்கல் திருமேனிகள் பவளக்காளி, பச்சைக்காளி ஆகிய பெயர்களைத் தாங்கி விளங்குகின்றன. இம்மண்டபத்தில் மூன்று பிள்ளையார் உருவங்களும் உள்ளன.

பவளக்காளி இடது காலை மடித்து, வலது காலைத் தொங்க விட்டு அமர்ந்த திருக்கோலத்தில் காட்சியளிக்கின்றாள். நான்கு கைகள் உள்ளன. வலது கைகளில், ஒன்று அபயம், மற்றொன்று சூலமேந்தியது. இடது கைகளில் ஒன்று கபாலம் ஏந்தியது, மற்றொன்று இடது துடையின் மேல் ஊன்றியது. கோரைப் பற்களோடு கூடிய இவ்வம்மனின் திருமுகம் கருணை வடிவுடையது. முகத்திற்கு நேரே மேலே ஒரு தலையுடன், தலைவிரி கோலமாக உள்ளது.

அர்த்த மண்டபத்தின் மேற்புறம், கருவறை வாசலின் இடப்புறம், 'பச்சைக்காளி' என்ற பெயருடன் அமர்ந்த திருக்கோலம் காணப்படுகிறது. இவளுக்கு நான்கு கைகள் உள்ளன. வலது கைகளில் ஒன்று அபயம், மற்றொன்று கத்தி ஏந்தியது. இடது கைகளில் ஒன்று இடது துடையில் ஊன்றியது. மற்றையது கேடயம் தாங்கியது. கோரைப் பற்களோடு கூடிய திருமுகம் கருணை வடிவானது.

மகாமண்டபத்தின் தெற்கேயுள்ள, அர்த்த மண்டபத்தின் நுழைவாயிலின் மேலே சுதையுருவில், அருள்மிகு இராசேசுவரி கொலுவீற்றிருக்கிறாள். இவ்வாயிலின் இருமருங்கிலும், துவார பாலகிகள் உள்ளனர். இத் துவார பாலகிகள் இருவரும் சுதையாலான உருவங்களாகும்.

மகாமண்டபத்தின் மேற்கில் சுற்றித் திருமேனிகள் உள்ளன. அவையாவன: 1. பூதம், சண்டிகேஸ்வரி, சண்டிகேசுவரர், ஐயனார், பொற்கொடியாள், விநாயகர், கம்பத்தடியான், விஷ்ணு துர்க்கை, சிவதுர்க்கை, நாகர், சிவலிங்கத் திருமேனி (சிறியது) சிவலிங்கத் திருமேனி (பெரியது), நந்தி, பலிபீடம், பழனியாண்

டவர், சுப்பிரமணியர், விஷ்ணு துர்க்கை, பைரவர், காலபைரவர், தட்சிணாமூர்த்தி, நாகர், மதுரைவீரன் ஆகியவையாகும். இம் மண்டபம் நான்கு அறுபட்டைத் தூண்களைக் கொண்டுள்ளது. இந்த மகாமண்டபத்தின் முன்னர் மிகப்பெரிய கலியாண மண்டபம் இருக்கிறது. மணமேடை கிழக்கு நோக்கி அமைந்துள்ளது.

திருச்சுற்றின் அக்னி மூலையில் ஒரு பாம்புப் புற்று உள்ளது. இதிலுள்ள பாம்புகளுக்குப் பால் வைத்து வழிபடுவது வழக்கமாக இருந்து வருகிறது. இதிலிருந்து பாம்புகள் சில நேரங்களில் கோடியம்மனை வழிபடுவது போல, கோடியம்மன் மேலேயே நிட்டையில் இருக்கும் என்று சொல்லப்படுகிறது. அவைகள் யாருக்கும் தீமை செய்ததில்லை. இதனையடுத்து நந்தவனமும், மடப்பள்ளியும் உள்ளன.

இக்கோயிலின் கலியாண மண்டபத்தின் எதிரே அம்மனை நோக்கி நந்தியும் பலிபீடமும் சூலங்களும் காணப்படுகின்றன.

பச்சைக்காளி, பவளக்காளி ஆகிய இரண்டு காளிகளுக்கும் செப்புத் திருமேனிகள், ஒவ்வொன்றும் நான்கு கைகளையுடையவளாய் அமர்ந்த திருக்கோலத்தில் உள்ளன. ஒரே பீடத்தில், ஒரே திருவாசி (பிரபை)யுடன் விளங்குகின்றன. ஏறத்தாழ $1\frac{1}{2}$ அடி உயரம் உடையதாக, எல்லா அணிகலன்களுடனும் விளங்குகின்றன. இவைகள் தஞ்சாவூர், மேலைப்பெருந்தெருவின் நடுவில் மேல் சரகில் கிழக்கு நோக்கியுள்ள திருஞானசம்பந்தர் மடம் எனப்படும். ஓம் அழகிய பிள்ளையார் கோயிலின், வட பரிசத்தில், உற்சவர் கோடியம்மன் (கோயில்) சந்நதி என்ற பெயருடன் உள்ள கருவறையில் காட்சி தருகின்றன. இச்சந்நிதி, ஏறத்தாழ நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் அமைக்கப்பட்டு விளங்கி வருகின்றது என்பர்.

இக்கோயிலில் உற்சவம் மாசி மாதம் நடைபெறும் அம்மன் 11 நாட்கள் கொலுவிலிருந்து தஞ்சாசுரனைக் கொன்ற நாளாம், செவ்வாய்க்கிழமையில் எழுந்தருளி நகர உலா வந்து, தஞ்சை

மேலைப் பெருந்தெருவில் உள்ள 64 மனை வெள்ளான் செட்டியார்கள் எல்லோருடைய இல்லங்கள் தோறும் எழுந்தருளி, பின்னர் பிறந்தகமாம் களிமேடு சென்று மீளுவாள், மாசிமாத சிவராத்திரியைத் தழுவி நிகழ்வுறும் இவ்வுற்சவம் இத்துடன் நிறைவு பெறும் இம்முறை பிறழாது இன்றும் நடைபெற்று வருகின்றது. இக்கோயிலில் நித்ய பூசை தினமும் காலையில் நடைபெறுகிறது.

இக்கோயிலில் கருவறைகொண்ட அல்பவிமானம் சாலசிகரத்துடன் காணப்படுகிறது. இதில் ஐந்து கலசங்கள் உள்ளன. கிரீவ கோஷ்டங்களில் அம்மன் பிம்பம் உள்ளது. கருவறையின் அதிட்டானத்தின் கீழ் உயரமான உபபீடம் உள்ளது. இரண்டு உடல் ஒரு தலையுடைய சிங்கங்கள் கிரீவ மூலைகளில் உள்ளன.

இக்கோயில் தஞ்சை அரண்மனை தேவஸ்தானம் நிர்வாகத்துக்குட்பட்டது. திருமுழுக்குக்கு எண்ணெய் முதலியவைகளை இக்கோடியம்மன் கோயிலுக்கு இத்தேவதானம் வழங்கி வருகிறது.

இத்தகு சிறப்புவாய்ந்த கோயில் அம்மனை தஞ்சை வெள்ளான் செட்டியார்கள் குலதெய்வமாக வணங்கி வருகின்றனர். பிற ஜாதியினரும் விரும்பி வழிபடுகின்றனர்.

## 27. சியாமளாதேவி அம்மன் கோயில்

இத்திருக்கோயில் தஞ்சை ராஜகோபால்சாமி கோயில் தெருவில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. நாயக்கர், மராட்டியர் காலத்திலிருந்தே இத்திருக்கோயில் இருந்து நிலைபெற்று வருகிறது. இக்கோயிலின் நீள, அகலம் 3×4 மீட்டர் ஆகும்.

இக்கோயில் கருவறையில் அம்மன் கரகம் (மரம்) உள்ளது. கரகத்தில் (பூர்ணகும்பம்—பூர்ண கடம்—பூர்ண கலசம்) வலது பக்கத்தில் நாயக்கர் அரசர் சிலையும் அவரது மனைவி சிலையும் உள்ளன. அவர்கள் நின்ற கோலத்தில் அஞ்சலி முத்திரையுடன் காணப்படுகின்றனர். அவர்கள் அருகே விநாயகர் சிலையுள்ளது.

கரகத்தின் இடது பக்கத்தில் ரங்கநாதர் சிலையுள்ளது. விநாயகர், ஆஞ்சனேயர் சிலைகளும் உள்ளன. நாயக்க அரசனின் மூன்று பிள்ளைகள் நின்ற கோலத்தில் அஞ்சலி முத்திரையுடன் காட்சி தருகின்றனர். கருவறை முன்னால் சிறிய முன்மண்டபம் உள்ளது.

இக்கோயிலுக்கு வெள்ளியாலான கரகம் உள்ளது. இது சக்தி கரகமாகும். இக்கரகத்தின் மேல் அம்மன் அமர்ந்த கோலத்தில் இருக்கிறாள். இடது காலை மடக்கி வலது காலைத் தொங்கல் நிலையில் வைத்துள்ளாள். அம்மன் நான்கு கைகளையுடையவள். வலது இரண்டு கைகளிலும் முறையே மேலிருந்து கீழாக பாசமும் கத்தியும் பெற்றுள்ளாள். இடது கைகளில் பாம்புடன் இணைந்த டமருகமும் கபாலமும் வைத்திருக்கிறாள். கரகத்தின் மேல் இரண்டு யாளி உருவங்களும் அதன் உச்சியில் எட்டு கந்தவர்கள் சுற்றி வளைந்து நிற்கும் கோலமும் காணப்படுகின்றன. இவ்வெள்ளியாலான கரகம் திருவிழாவின்போது தெருவில் கொண்டுவரப்படுகிறது. தற்போது கோயிலில் மரத்தாலான கரகம் வெள்ளிக் கரகத்தைப் போன்ற அமைப்பில் செய்து வைக்கப் பட்டுள்ளது.

அம்மனின் ஐம்பொன் படிமம் ஒன்றும் இக்கோயிலில் உள்ளது. அப்படிமம் நின்ற கோலத்தில் காணப்படுகிறது. வலது கை கடகமுத்திரையிலும் இடது கை டோலஹஸ்த நிலையில் உள்ளன. மனோன்மணி, மகேச்வரி, சியாமளா, யக்ஞருபினி, கௌமாரி, ரௌத்ரி, வைஷ்ணவி, மகாலெட்சுமி என்ற அஷ்டசக்திகளில் ஒருத்தியாக சியாமளாதேவி அம்மன் கருதப்படுகிறாள்.

இக்கோயிலின் கருவறைமேல் நான்குபட்டை சால சிகரம் உள்ளது. அதில் மூன்று கலசங்கள் உள்ளன. அம்மன் சுதையுருவம் கோயில் முன்மண்டப வாயிலின் மேல் உள்ளது. அதனருகே இரண்டு பூதங்கள் இரண்டு பக்கங்களிலும் உள்ளன.

இக்கோயிலில் பங்குனி மாதம் உற்சவம் நடைபெறுகிறது. கரகம், பாற்குடம் முதலியன அப்போது எடுக்கப்படுகின்றன. நவராத்திரியின்போது விசேட அலங்காரங்கள் அம்மனுக்குச் செய்விக்கப்படுகின்றன.

பெரும்பாலான சியாமளாதேவி கோயில்களில் கரகம் மூலஸ்தானத்தில் வைக்கப்பட்டு வழிபடப்படும் சின்னமாக அமைவது சிறப்பானதாகும். தமிழ் நாட்டில் வேறெங்கும் மூலஸ்தானத்தில் கரகம் மட்டும் நிரந்தரமாக வழிபாட்டிற்கு வைக்கப்படுவதில்லை. உற்சவ காலங்களில் தான் கரகம் வைத்து பூசை போட்டு வெளியில் எடுத்துச் செல்வது பெரும்பாலான வழக்கம். தஞ்சையை ஆண்ட நாயக்க, மராட்டியர் காலங்களில் இது வழக்கில் வந்திருக்கலாம். இருப்பினும் விழாக்காலங்களில் பூர்ண கும்பம் அமைப்பது சிலப்பதிகாரம் எழுதப்பட்ட காலத்திலேயே இருந்தமைக்கு சிலப்பதிகாரம் இந்திரவிழவூர் எடுத்த காதை சான்று பகரும்.

பூர்ண கும்பம் எடுப்பது எதிர் கொள்வது என்பது மரியாதை காட்டக் கூடிய ஒரு செய்கை. ஒரு கலசத்திற்குள் (தங்கம், வெள்ளி, செம்பு) நீர் நிரப்பி அதன் வாயில் சுற்றிலும் மாவிலை செறுகி அதன் வெளிப்புறத்தை மெல்லிய நூல் சரடால் பின்னிப்பின்னி சுற்றி அலங்கரித்து வாயில் செறுகிய மாவிலை வட்டத்தில் மஞ்சள் பூசிய தேங்காய் குடுமி மேலாக நிற்க வைத்து அரிசி பரப்பி ஒரு தட்டின் மேல் வைப்பதாகும். இதற்கு பூசை செய்து அதில் எல்லாத் தெய்வங்களையும் உலகங்களையும், நதிகளையும் ஆவாஹனம் செய்து மந்திரங்கள் ஓதி, அதில் பின் அப்பொழுது வேண்டி பூசை செய்யப்படுவதான தெய்வத்தை அதில் ஆவாஹனம் (வரவழைத்தல்) செய்து முழுப்பூசையும் செய்வது வழக்கம். இதற்கு கலச ஆவாஹன பூசை என்பர்.

மற்றும் விஜயநகர, நாயக்கர் காலங்களில் தெலுங்கர், கன்னடியர் தமிழ் நாட்டில் குடியேற்றப்பட்ட காலத்தில் அதன் தாக்கத்தால் தமிழ் அந்தணர் குடும்பங்கள் சிலவற்றிலும் வைசிய குடும்பங்களிலும் ஆறுமாதம் வளர்பிறையில் கடைசி வெள்ளியன்று பெண்கள் வரமகாலெட்சுமி பூசை (விரதம்) செய்வார்கள். பூசைக்கென பூரண அல்லது மங்கல கலசம் தயாரித்து, மந்திரங்கள் சொல்லி பூசை அர்ச்சனை முதலியன நிகழ்த்துவார்கள். வரமகாலட்சுமியை அச்சமயத்தில் ஆவாஹனம் செய்து (வரவழைத்து) வரமகாலட்சுமியாகப் பாவிக்கப்பட்ட அதை வழி

படுவார்கள். பூசை முடிந்ததும் கையில் நோன்புச் சரடு கட்டிக்கொள்வார்கள். இதற்கு பூசா கலசத்தை (வெள்ளி, செம் பாலாகிய கலசம்) சுத்தம் செய்து அதன்மேல் சுண்ணாம்பு பூசி அதன் வயிற்றில் ஒருமுகத்தில் கழுத்தளவான அம்மன் தலை, கரண்ட மகுடத்துடன் வேறுபட்ட வண்ணங்களால் வரைவார் கள். அம்மன் மூக்கின் மேல் அரைத்த மஞ்சளை மூக்கு போல் ஒட்டி அதில் மூக்குத்தி, பிலாக்கு போன்ற ஆபரணங்களைப் பூட்டுவார்கள். இதையெல்லாம் தேவிபரமான பாட்டுக்களையோ தோத்திரங்களையோ சொல்லிக்கொண்டு செய்வார்கள். வெளி யே அலங்காரம் செய்த பின் கலசத்தினுள் பச்சரிசி, மஞ்சள் கிழங்கு, காதோலை, கருப்புக் கண்ணாடி, வளையல்கள், குங்குமப் பொட்டலம், சிறிய கண்ணாடி, வெள்ளி, பொற்காசுகள் போன்ற மங்கலப் பொருள்களை இட்டு அம்மனுக்குக் கழுத்தில் பொட்டு, மஞ்சள் சரடும் பூட்டி, வீட்டிலுள்ள கழுத்துச் சங்கிலி போன்ற கழுத்து மாலைகள் அணிவித்து ஒரு அகன்ற தட்டில் (தாம்பலத் தில்) அரிசி இட்டுப் பரப்பு அத்தகைய பீடத்தின்மேல் கலசத்தை வைப்பார்ாள். கலசத்தின் வாயில் வட்டமாக மாவிலை செருகி, அதன் மத்தியில் கலச வாயை அடைத்தவாறு மஞ்சள் பூசி குடுமி யுடன் கூடிய தேங்காய் ஒன்றை குடுமி மேல் நோக்கியவாறு வைப்பார்கள். இப்படி அமைக்கப்பட்ட கலசத்திற்கு அர்ச்சனை, தூப, தீப நைவேத்யங்கள் செய்து கற்பூர ஆரத்தி செய்து முடிப்பார்கள்.

இவ்வகை வழக்கம் விஜயநகரப் பேரரசு தென்னிந்தியா முழுவதும் வியாபித்த காலத்தில் தெலுங்கர் கண்ணடியர்களால் தமிழ்நாட்டிற்கு வந்து தமிழ் பேசும் மக்களிடையே பரவியது என்று ஊகிக்க இடமுண்டு. கலசத்திலேயே முகம் எழுதாது வெள்ளித் தகட்டில் புடைப்பாகப் பருத்த தேவியின் முகக்கூடு செம்பின் மேல் பசை போல் அரைத்த மஞ்சள் கொண்டு ஒப்பப் படுவதும் உண்டு. மணமான பெண்கள் இவ்வகையில் எடுக்கும் முதல் வரலட்சுமி நோன்பைத் தன் புகுந்த வீட்டில் எடுத்து ஆண்டுதோறும் பூசை செய்யவென்று பெண் வீட்டார் கலி யாணச் சீருடன் கலசம் கொடுப்பது வழக்கம்.

இது கிராம தேவதைகள் மட்டத்திலும் கரகமேற்றி வழி படுதல்; கரகம் எடுத்தல் போன்ற செயல்களில் பிரதிபலிக்கிறது. கரகம் எடுத்து ஆடுதல் (கரக ஆட்டம்) ஒரு கலையாகத் தமிழ் நாட்டில் வளர்ந்துள்ளது.

தஞ்சாவூர் மராட்டியர் காலத்திலிருந்து காகிதக்கூழ் பொம்மைகள், உருவங்கள் செய்யும் தொழிலுக்குப் பெயர் பெற்றது. இத்தொழில் தஞ்சையைத் தவிர வேறு ஊர்களில் பிரபல மாகவில்லை எனலாம். இதன் பின்னணியில் சாத்திரங்களில் கடவுளர் பிரதிமைகளை இயற்றி களி மண், மரம், சுதை, உலோகம், கல் முதலியன சொல்லப்பட்டதற்கும் மேலாக சில சியாமளாதேவி உருவங்கள் காகிதக்கூழால் ஆனது குறிப்பிடத் தக்க சிறப்பம்சமாகும்.

## 28. சியாமளாதேவி அம்மன் கோயில்

இக்கோயில் தஞ்சை கீழவாசல் சுண்ணாம்புக்காரத் தெரு வில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. இக்கோயிலின் நீள, அகலம் 4×3 மீட்டர் ஆகும்.

கருவறையில் அம்மன் கரகத்தில் ஆவாஹனம் செய்யப் பட்டுள்ளார். கருவறையின் முன் சிறிய முன் மண்டபம் உள் ளது. அதன் மேல்வாயிலில் அம்மன் சுதையுருவம் உள்ளது. டமருகத்துடன் இணைந்த பாம்பும், சக்தி, பாசம், கபாலம் முதலியவற்றை அம்மன் கைகளில் பெற்றுள்ளாள். மண்டபத் தின் மேல் சிங்க உருவங்கள் மூலைகளில் வைக்கப்பட்டுள்ளன.

கருவறை உள்ளடக்கி அமையும் அல்பவிமானம் எட்டுப் பட்டை சிகரத்தையுடையது. ஒரு கலசம் அதன் மேல் உள்ளது.

இக்கோயில் கார்த்திகை, சிவராத்திரி நாட்களில் விசேட பூசைகள் உண்டு. தெருவார்கள் இக்கோயிலைப் பரிபாலனம் செய்து வருகின்றனர்.

## 29. சியாமளாதேவி அம்மன் கோவில்

இக்கோயில் தஞ்சை நாகமரச் சந்தில் மேற்கு நோக்கி அமைந்துள்ளது. ஏறத்தாழ 150 ஆண்டுகளாக இவ்வம்மன் இக் கோயிலில் வீற்றிருக்கிறாள். தற்காலத்தில் தெருவார்கள் இக் கோயில் புதுப்பிக்கப்பட்டு அழகுடன் விளங்குகிறது. இக்கோயி லின் நீள், அகலம் 5 × 6 மீட்டர் ஆகும்.

இக்கோயில் கருவறையில் அம்மன் அமர்ந்த கோலத்தில், வீற்றிருக்கிறாள். இடது காலைப் பீடத்தின் மேல் மடக்கி வைத் துக்கொண்டு வலது காலைத் தொங்கல் நிலையில் வைத்துள்ளாள். அம்மனுக்கு நான்கு கைகள் உள்ளன. வலது இரண்டு கைகளி லும் முறையே மேலிருந்து கீழாக டமருகத்துடன் இணைந்த பாம்பும் சூலமும் உள்ளன. இடது கைகளில் பாசமும் கபாலமும் உள்ளன. உற்சவரும் இதேபோல் காணப்படுகிறது. வாயிலின் இடது பக்கத்தில் ஆனந்த கணபதி வீற்றிருக்கிறார். அம்மனின் நேரெதிரே பலிபீடம் உள்ளது.

இக்கோயிலில் கருவறை உள்ளடக்கிய அல்பவிமானம் வட்டமான சிகரத்தில் ஒரு கலசம் உள்ளது. சிகரத்தில் நான்கு திசைகளிலுல் நான்கு பெரிய நாசிகள் உள்ளன. அவற்றிடையே நான்கு சிறிய நாசிகள் உள்ளன. கிரீவ மஹாநாசிகை கோஷ்டத் தில் அம்மன் சிலைகள் உள்ளன. கோயிலின் வாயிலின் முன்னால் சுதையாலான அம்மன் உருவம் உள்ளது. அதன் இருபக்கங்களிலும் சாமரம் வீசும் பெண்கள் உள்ளனர். சிகரத்தின் தெற்கில் கிரீவத்தின் மேல் விநாயகர், பார்வதி, பரமசிவன் சுதையுருவங் கள் உள்ளன. கோயிலின் தெற்கில் சிறிய மண்டபம் உள்ளது. மண்டபத்தின் மேல் மூலைகளில் இரண்டு சிங்கங்களும் அவற்றி டையே பூதகணங்களும் உள்ளன. மேற்கு மூலையில் சிங்கத்தின் மேல் அம்மன் இருப்பது போன்ற சுதையுருவம் உள்ளது.

இக்கோயிலில் தை, பங்குனி மாதங்களில் உற்சவம் நடை பெறுகிறது நவராத்திரியின் போது அலங்காரமும் மார்கழி 30 நாட்கள் விசேட பூசைகளும் செய்யப்படுகின்றன.

## 30. சியாமளாதேவி அம்மன் கோயில்

இச்சிறிய கோயில் தஞ்சை கீழவாசல் டபீர்குளம் சாலையில் வடக்கு நோக்கி அமைந்துள்ளது. இச்சிறிய கோயிலைத் தெருவார்கள் பரிபாலனம் செய்து வருகின்றனர். இக்கோயிலின் நீள, அகலம் 3×3 மீட்டர் ஆகும்.

இக்கோயிலில் கரகத்தில் அம்மன் ஆவாஹனம் செய்து வைக்கப்பட்டுள்ளாள். சிறிய கருவறை மட்டுமே இக்கோயிலில் உள்ளது. அதன் மேல் நீளகூம்பு சிகரம் உள்ளது.

சித்திரை மாதம் உற்சவம் நடைபெறுகிறது. இக்கோயில் நூறு ஆண்டுகளாகச் செயற்பட்டு வருகிறது.

## 31. சியாமளாதேவி அம்மன் கோயில்

இச்சிறிய கோயில் தஞ்சை மகர்நோம்புச்சாவடியில் வாடிவாசல் வைக்கோல் காரத் தெருவில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. இக்கோயில் ஏறத்தாழ 150 வருடங்களாகச் செயற்பட்டு வருகிறது. இக்கோயிலின் நீள, அகலம் 4×2 மீட்டர் ஆகும்.

இக்கோயில் கருவறையில் அம்மன் கரகத்தில் ஆவாஹனம் செய்யப்பட்டிருக்கிறாள். அக்கரகம் பூமாலைகளால் அலங்கரிக்கப்பட்டு மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. மாசிமாத சிவராத்திரியில் கரக உற்சவம் சிறப்பாக நடைபெறுகிறது.

கருவறையை அடுத்து அமையும் சிறிய முன்மண்டபத்தில் விநாயகர் சிலை தெற்கு நோக்கி வைக்கப்பட்டுள்ளது.

இக்கோயில் அல்பவிமானமாக அமைந்துள்ளது. வட்டமான சிகரத்தின்மேல் ஒரு கலசம் உள்ளது. கிரீவ கோஷ்டத்தில் அம்மன் பிம்பங்கள் உள்ளன. நான்கு மூலைகளிலும் சிங்க வாகனங்கள் வைக்கப்பட்டுள்ளன.

## 32. சியாமளாதேவி அம்மன் கோயில்

இத்திருக்கோயில் சாமந்தன் குளம் தாத்தோஜி அப்பா சந்துவில் வடக்கு நோக்கி அமைந்துள்ளது. இக்கோயில் தெரு வார்களின் மேற்பார்வையில் இயங்கி வருகிறது. இக்கோயிலின் நீள, அகலம் 4 × 2 மீட்டர் ஆகும்.

இக்கோயில் கருவறையில் அமைந்துள்ள அம்மன் மூர்த்தம் 300 ஆண்டுகளுக்கும் மேற்பட்டதாகும். விமானமும் கட்டிடமும் தற்காலத்தில் கட்டப்பட்டுள்ளன.

இக்கோயில் கருவறையில் அம்மன் அமர்ந்த கோலத்தில் காட்சியளிக்கிறாள். அம்மன் நான்கு கைகளுடன் வீற்றிருக் கிறாள். வலது காலைப் பீடத்தில் மடக்கி வைத்துக் கொண்டும் இடது காலைத் தொங்கல் நிலையிலும் வைத்துள்ளாள். அம்மனின் வலது இரண்டு கைகளிலும், மேலிருந்து கீழாக முறையே பாம் புடன் இணைந்த டமருகம், கத்தி முதலியனவும் இடது கைகளில் மேலிருந்து கீழாகச் சூலமும் கபாலமும் உள்ளன. அம்மனின் உற்சவர் சிலையும் இதேபோல் காணப்படுகிறது. கருவறையில் இரண்டு நாகக் கற்கள் காணப்படுகின்றன. கருவறை வாயிலில் இரண்டு துவார பாலகிகள் செய்து வைக்கப்பட்டுள்ளன. சிறிய முன்மண்டபத்தின் வடக்கில் கிழக்கு நோக்கி விநாயகர் சிலை வைக்கப்பட்டுள்ளது.

இக்கோயிலில் கருவறை கொண்டு அமையும் விமானம் அல்பவிமானமாகும். வட்டமான சிகரத்தின் மேல் ஓர் கலசம் அமைந்துள்ளது. சிகரத்தில் நான்கு பெரிய நாசிகளும் அவற்றிடை யே நான்கு சிறிய நாசிகளும் உள்ளன. சிங்கங்கள் நான்கு மூலை களிலும் வைக்கப்பட்டுள்ளன. நான்கு திசைகளிலும் கிரீவ கோஷ்டத்தில் அம்மன் உருவங்கள் உள்ளன. சுதையாலான அம்மன் சிலைகள் கோயில் முன்மண்டபத்தின் மேல் வைக்கப்பட் டுள்ளன.

இக்கோயிலில் மாசிமாதம் சக்திக் கரகம் எடுக்கப்படுகிறது. அலங்காரங்கள், சந்தனக் காப்பு, பாற்குடம் முதலியன அம்ம னுக்கு சிறப்பாகச் செய்ப்படுகின்றன. மார்கழி 30 நாட்கள் விசேட பூசைகள் நடைபெறுகின்றன. நவராத்திரி அலங்காரம் விசேடமானது. தினமும் உச்சிக் காலத்தில் நித்ய பூசை நடை பெறுகிறது.

## 33. சியாமளாதேவி அம்மன் கோயில்

இக்கோயில் தஞ்சை வடக்கு வாசலில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. இக்கோயிலைச் சுற்றி வாழ்கின்ற தெருவார் களின் லேற்பார்வையில் இக்கோயில் சிறப்புற நடைபெற்று வரு கிறது. மராட்டியர் காலத்திலேயே இக்கோயில இவ்விடத்தில் இருந்து வருகிறது. மராட்டா அரசர்களிடம் குந்தளக்காரர்கள் (கரகம் ஆடுபவர்கள்) நாட்டியம் ஆடி பொருள் பெறுவது வழக்கம். அவர்கள் தங்கள் நாட்டியத்தைத் தொடங்கு முன் இவ்வம்மனுக்கு எண்ணெய் இட்டு விளக்கிடுவது அக்காலத்தில் வழக்கமாக இருந்தது எனச் செய்தி அறியப்படுகிறது. தற்போதும் குந்தளக் காரர்கள் இவ்வம்மனை வழிபடுவது வழக்கமாகும். இக்கோயிலின் நீள, அகலம் 8×4 மீட்டர் ஆகும்.

இக்கோயில் கருவறையில் சியாமளாதேவி அம்மன் அமர்ந்த கோலத்தில் வீற்றிருக்கிறாள். அம்மன் நான்கு கைகளுடன் காணப் படுகிறாள். வலது கைகளில் மேலிருந்து கீழாக முறையே பாசம், சூலம் முதலியன காணப்படுகின்றன. இடது கைகளில் மேலிருந்து கீழாக முறையே டமருகத்துடன் இணைந்த பாம்பும் கபாலமும் உள்ளன.

இக்கோயிலில் கருவறை உள்ளடக்கிய ஓர் அல்ப விமானம் அமைந்துள்ளது. இவ்விமானத்தில் ஆறுபட்டைகளுடன் காணப்ப டும் சிகரமும் ஒரு கலசமும் உள்ளன. கிரீவ மூலைகளில் சிங்க வாகனங்கள் உள்ளன. கருவறை செங்கல்லாலானது.

கருவறையை அடுத்து அமையும் வெளிச்சுவரின் அருகே நாகம், விநாயகர், ஆஞ்சனேயர் சிலைகள் உள்ளன. அம்மனை நோக்கி நந்தி, பலிபீடம் ஆகியவை முன்மண்டபத்தின் நடுவில் அமைந்துள்ளன. மண்டப வாயிற்படி அருகே ஒரு கல்லும் சூலமும் உள்ளன. இம்மண்டபம் தற்காலத்தில் கட்டப்பட்டதாகும்.

இக்கோயிலில் நித்ய பூசை தினமும் மாலையில் நடைபெறுகிறது. பாற்குடம் எடுத்தல், கரகம் எடுத்தல் போன்ற நிகழ்ச்சிகளும் உற்சவத்தின்போது நடைபெறுகின்றன.

## 34. சியாமளாதேவி அம்மன் கோயில்

இச்சிறிய கோயில் தஞ்சை ராணி வாய்க்கால் தெருவில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. தெருவார்கள் இக்கோயிலைப் புதுப்பித்துள்ளனர். ஏறத்தாழ 50 ஆண்டுகளாக இக்கோயில் செயற்பட்டு வருகிறது. இக்கோயிலின் நீள, அகலம் 4 × 3 மீட்டர் ஆகும்.

இக்கோயிலின் கருவறையில் அம்மன் ஆவாஹனம் செய்யப்பட்டுள்ள கரகம் உள்ளது. கரகத்தில் அம்மன் நான்கு கைகளுடன் அமர்ந்த கோலத்தில் வீற்றிருக்கிறாள். வலது இரண்டு கைகளிலும் மேலிருந்து கீழாக முறையே பாம்புடன் இணைந்த டமருகம், கத்தி முதலியனவும் இடது கைகளில் பாசம், கபாலம் முதலியனவும் உள்ளது. கரகத்தின் முன்னால் அம்மன் கற்சிலை சிறிதாகச் செய்து வைக்கப்பட்டுள்ளது.

கருவறை முன்னால் சிறிய முன்மண்டபம் உள்ளது. இக்கோயிலில் கருவறை கொண்ட அல்ப விமானம் வட்டமான சிகரத்துடன் காணப்படுகிறது. சிகரத்தின் மேல் ஒரு கலசம் உள்ளது. சிகரத்தில் எட்டு நாசிகள் உள்ளன. நான்கு பெரிய நாசிகளும் அவற்றிடையே நான்கு சிறிய நாசிகளும் உள்ளன. கிரீவ கோஷ்டங்களில் அம்மன் சுதையுருவங்கள் உள்ளன.

முன்மண்டபத்தின் வாயில்மேல் அம்மன் சுதையுருவம் உள்ளது. இரண்டு துவார பாலகிகள் இருபக்கங்களில் நிற்கின்னர். இரண்டு சிங்க வாகனங்கள் மூலைகளில் உள்ளன.

அம்மன் நான்கு கைகளையுடையவள். கைகளில் டமருகம், அபயம், பாசம், கபாலம் முதலிய அம்சங்களையுடையவளாக அம்மன் காணப்படுகிறாள்.

மராட்டியர், அகம்படியர், வேளாளர், நாயக்கர், செட்டியார் முதலியோர் இவ்வம்மனைக் குலதெய்வமாக வழிபடுகின்றனர்.

இக்கோயில் பங்குனி சித்திரை மாதங்களில் உற்சவம் நடைபெறுகிறது. கரகம், பாற்குடம் முதலியன அப்போது எடுக்கப்படுகின்றன. மார்கழி 30 நாட்களும் விசேஷ பூசைகள் நடைபெறுகின்றன.

## 35. சியாமளாதேவி அம்மன் கோயில்

சிறிதான ஓலையால் வேயப்பட்ட இக்குடிசை (குரிசில் குடும்பைக்) கோயில் தஞ்சை கீழவாசல் முள்ளுக்காரத் தெருவில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. பள்ளர் ஜாதியினர் அவ்வம்மனை வழிபடுகின்றனர். மேலும் அவர்கள் இக்கோயிலைப் பராமரித்து வருகின்றனர். இக்கோயிலின் நீள, அகலம் 4 × 3 மீட்டர் ஆகும்.

அம்மன் நான்கு கைகளுடன் வாகனத்தின்மேல் அமர்ந்த கோலத்தில் காட்சியளிக்கிறாள். இது சுதையாலான உருவமாகும். ஒரு கரகமும் இச்சிறிய கோயில் கருவறையில் உள்ளது.

மண்ணாலான கருவறைச்சுவரின் மேல் ஓலைக் கூரை வேயப்பட்டுள்ளது. கூரை வேயப்பட்ட சிறிய முன் மண்டபமும் உள்ளது. சூலம் ஒன்று கோயில் எதிரே அம்மனை நோக்கி நாட்டப்பட்டுள்ளது. கரகம், பாற்குடம் முதலியன விசேட காலங்களில் எடுக்கப்படுகின்றன.

## 36. சியாமளாதேவி அம்மன் கோயில்

(ஸ்ரீ நவநீத சியாமளாதேவி அம்மன் கோயில்)

இச்சிறிய கோஷ்ட சன்னதி மானோஜியப்பா தெருவில் மேளக்காரச் சந்துவில் மேற்கு நோக்கி அமைந்துள்ளது. இக்கோயிலின் நீள, அகலம் 1,5×1,5 மீட்டர் ஆகும்.

அம்மன் ஆவாஹனம் செய்யப்பட்டுள்ள கரகமே இக் கோயிலில் உள்ளது. கரகத்தின்மேல் நாகபடம் உள்ளதால் இவ் வம்மன் நவநிதி சியாமளாதேவி அம்மன் எனப்படுகிறாள்.

இக்கோயிலின் விமானம் ஓர் அல்பவிமானமாகும். விமா னத்தின் மேல் கூம்பு வடிவ சிகரம் ஒரு கலசத்துடன் அமைந் துள்ளது. ஆடி மாதம் கரகம் எடுத்தல், பாற்குடம் எடுத்தல், பூச்சொறிதல் முதலிய நிகழ்ச்சிகள் இக்கோயிலில் நடைபெறும். இம்மாதம் சக்திக் கரகம் பிற இடங்களிலிருந்து இக்கோயிலுக்கு வந்து இரண்டு நாட்கள் தங்கிச் செல்லும். அது சென்ற பின்பு புதிய கரகம் அமைத்து சன்னதியில் நிறுத்துவார்கள். கரகத்தில் நெல், தேங்காய், கண்ணாடி வளையல், காதோலை, மஞ்சள், கருவமணி, சில்லரைக் காசுகள் முதலியன இட்டு அம்மனை ஆவாதனம் செய்து வைப்பர். ஒவ்வொரு வருடமும் ஆடிமாதத் தில் கரகம் புதுப்பிக்கப்படும்.

இக்கோயிலைத் தெருவார்கள் பரிபாலனம் செய்து வரு கின்றனர்.

## 37. சியாமளாதேவி அம்மன் கோயில்

இச்சிறிய கோயில் கரந்தை தட்டான் குளத்தில் மேற்கு நோக்கி அமைந்துள்ளது. சியாமளாதேவி அம்மன் கரகமே கரு வறையில் உள்ளது. கருவறையில் வாள்போன்ற ஆயுதங்களும் உள்ளன. கருவறையின் வெளியே விநாயகர், முருகன், மூன்று நாகக்கற்கள் முதலியன காணப்படுகின்றன. கருவறைமேல் ஆறு பட்டைகளையுடைய சிகரம் அமைந்துள்ளது. சிகரத்தின் மேல் ஒரு கலசம் உள்ளது. தெருவார்கள் இக்கோயிலைப் பரிபாலனம் செய்து வருகின்றனர்.

இக்கோயிலின் நீள, அகலம் $3 \times 3$ மீட்டர் ஆகும்.

## 38. சியாமளாதேவி அம்மன் கோயில்

இச்சிறிய கோயில் தஞ்சை நாணயக்காரச்செட்டித்தெருவில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. ஏறத்தாழ 100 வருடங்களுக்கு முன்பு இச்சிறிய கோயில் கட்டப்பட்டுள்ளது. இக்கோயிலின் நீள, அகலம் $6 \times 3$ மீட்டர் ஆகும்.

இக்கோயில் கருவறையில் அம்மன் அமர்ந்த கோலத்தில் காட்சியளிக்கிறாள். அம்மன் நான்கு கைகளையுடையவள். வலது கைகளில் மேலிருந்து கீழாக முறையே டமருகத்துடன் இணைந்த பாம்பும் சூலமும் உள்ளன. இடது கைகளில் பாசமும் கபாலமும் உள்ளன. இடது காலை மடக்கி பீடத்தில் வைத்துக் கொண்டு வலது காலைத் தொங்கல் நிலையில் வைத்துள்ளாள். அம்மனின் சிலை கருங்கல்லாலானது. அம்மனின் முன்னால் காணப்படும் உற்சவர் சிலை மூலவரைப் போன்றே அமைக்கப்பட்டுள்ளது

கருவறையை அடுத்து அமையும் சிறிய அந்தராளத்தில் கருவறை வாயிலின் இருமருங்கிலும் மதுரைவீரன், பேச்சியாயி சிலைகள் உள்ளன. இதனையடுத்து அமையும் சிறிய முன்மண்டபத்தில் வாயிலின் இருமருங்கிலும் விநாயகர், முருகன் சிலைகள் வைக்கப்பட்டுள்ளன. முன் வாயிலின் இருமருங்கிலும் துவார பாலகிகள் நிற்கின்றனர். கோயிலின் முன்பு சிறிய முன்மண்டபம் தற்காலத்தில் கட்டப்பட்டுள்ளது.

இக்கோயிலில் அல்பவிமானம் அமைந்துள்ளது. இது வட்டமான சிகரத்தைக் கொண்டது. நான்கு திசைகளிலும் காணப்படும் கிரீவ கோஷ்டத்தில் அம்மன் சுதையுருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. முன் மண்டபத்தின் வாயில் மேல் சாலசிகரம் துவார சோபையாக அமைக்கப்பட்டுள்ளது. மண்டபத்தின் மேல் முருகன், விநாயகர் மற்றும் அம்மனின் சுதையாலான சிலைகள் உள்ளன.

தெருவார்கள் இக்கோயிலைப் பராமரித்து வருகின்றனர். மார்கழி 30 நாட்களிலும் இக்கோயிலில் விசேட பூசைகள் நடைபெறுகின்றன. தை மாதம் 15 நாட்கள் இக்கோயிலில் உற்சவம் நடைபெறுகிறது. கரகம், பாற்குடம் முதலிய அம்சங்கள் உற்சவத்தின் போது எடுக்கப்படுகின்றன.

## 39. சியாமளாதேவி அம்மன் கோயில்

இச்சிறிய கோயில் தஞ்சை கீழவீதி தாஸ்தாமால் சந்தில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. இக்கோயில் தெருவார்களால் பரிபாலனம் செய்யப்படுகிறது. இக்கோயிலின் நீள, அகலம் 6 × 2 மீட்டர் ஆகும்.

இக்கோயிலின் கருவறையில் அம்மன் அமர்ந்த கோலத்தில் வீற்றிருக்கிறாள். அம்மன் இரண்டு கைகளையுடையவள். வலது கையில் கத்தியையும் இடது கையில் கபாலத்தையுமுடையவள். அம்மன் இடது காலை மடக்கி வலது காலைத் தொங்கல் நிலையில் வைத்துள்ளாள். அம்மன் உருவம் சுதை, காகித அட்டை ஆகியவற்றின் கலவையால் செய்யப்பட்டுள்ளது. ஸ்ரீ சக்கரத் தகடு ஒன்று அம்மன் முன்னால் வைக்கப்பட்டுள்ளது.

கருவறையை அடுத்து அமையும் சிறிய அந்தராளப் பகுதியில் விநாயகர், முனியாண்டவர் சிலைகள் வைக்கப்பட்டுள்ளன. இவை கல்லாலானவை. இச்சிலைகள் கிழக்கு நோக்கி வாயிலின் இருமருங்கிலும் வைக்கப்பட்டுள்ளன. முனியாண்டவர் வலது கையில் கத்தியை வைத்துள்ளார். இடது கையைப் பீடத்தின் மேல் வைத்துள்ளார்.

இக்கோயிலின் முன்னால் சிறிய முன்மண்டபம் உள்ளது. கருவறை கொண்டுள்ள அல்ப விமானத்தின் மேலுள்ள நான்கு பட்டை சிகரத்தில் ஒரு கலசம் உள்ளது. அந்தராள வாயிலின் மேல் அமையும் சால சிகரத்தில் (துவாரசோபை–துவாரசாலை) மூன்று கலசங்கள் உள்ளன. இச்சிறிய கோயில் மராட்டியர் காலத்திலேயே கட்டப்பட்டிருக்க வேண்டும். வாயிலின் மேல் அமையும் சால சிகரம் சற்றுப் பழமையானதாகும். அந்தராளப் பகுதிக் கூரை வவ்வால் நத்தா கூரையாக அமைந்துள்ளது.

இக்கோயிலில் வைகாசி மாதம் உற்சவம் நடைபெறுகிறது. கரகம் எடுத்தல், பாற்குட அபிஷேகம் முதலியன உற்சவத்தின் போது நடைபெறுகின்றன.

## 40. சியாமளாதேவி அம்மன் கோயில்

இத்திருக்கோயில் தஞ்சை அவுல் பட்டரைத் தெருவில் வடக்கு நோக்கி அமைந்துள்ளது. ஏறத்தாழ 50 ஆண்டுகளாக இக்கோயிலில் அம்மன் கரகம் மட்டுமே ஆரம்பத்தில் இருந்தது. 1962இல் அம்மன் சிலை இக்கோயிலில் பிரதிட்டை செய்யப்பட்டது. இக்கோயிலின்நீள, அகலம் 3×3 மீட்டர் ஆகும்.

கருவறையில் அம்மன் அமர்ந்த கோலத்தில் காட்சியளிக் கிறாள். அம்மன் இடது காலை மடக்கி வலது காலைத் தொங்கல் நிலையில் வைத்துள்ளாள். அம்மன் நான்கு கைககளையுடையவள். வலது இரண்டு கைகளில் மேலிருந்து கீழாகப் பாம்புடன் இணைந்த டமருகமும் சூலமும் உள்ளன. இடது கைகளில் மேலி ருந்து கீழாக பாசம் கபாலம் முதலியன உள்ளன.

கருவறை வாயிலில் விநாயகர் ஆஞ்சனேயர் சிற்பங்கள் தற்காலத்தில் வைக்கப்பட்டுள்ளன. அம்மனின் நேர் எதிரே கருவறையின் வெளியே பலிபீடமும் சூலமும் உள்ளன. சில ஆண்டு களுக்கு முன்பு அல்ப விமானம் கட்டப்பட்டுள்ளது. அதன் வட்டமான சிகரத்தில் ஒரு கலசம் வைக்கப்பட்டுள்ளது. எட்டு நாசிகள் சிகரத்தில் பொருத்தப்பட்டுள்ளன. வாயிலின் மேல் சுதையாலான அம்மன் சிலை உள்ளது.

ஆனி மாதம் இக்கோயிலில் உற்சவம் நடைபெறுகிறது. கரகம் எடுத்தல், பாற்குடம் எடுத்தல் முதலியன சிறப்பாக இக் காலத்தில் நடைபெறுகின்றன.

தெருவார்கள் இக்கோயிலைப் பராமரித்து வருகின்றனர்.

## 41. சியாமளாதேவி அம்மன் கோயில்

இச்சிறிய கோயில் தஞ்சை தெற்குவீதி மாட்டு மேஸ்திரி சந்துவில் வடக்கு நோக்கி ஒரு வீட்டின் சுவரில் அமைந்துள்ள கோஷ்டத்தில் உள்ளது. இதன் நீள, அகலம் 1×1 மீட்டர் ஆகும்.

அம்மனின் ஓவியம் இக்கோஷ்டத்தில் தீட்டப்பட்டுள்ளது. மேலும் சுதையாலான சிறிய அம்மன் உருவமும் வைக்கப்பட் டுள்ளது. அது கரகத்தில் இணைக்கப்படுவதற்காகச் செய்யப் பட்டுள்ளது. அம்மன் அமர்ந்த கோலத்தில் நான்கு கைகளுடன் காணப்படுகிறாள். இடது காலை மடக்கி வலது காலைத் தொங் கல் நிலையில் வைத்துள்ளாள். அம்மன் தலையில் ஜ்வாலா கிரீ டம் காணப்படுகிறது. அம்மனின் வலது இரண்டு கைகளில்

மேலிருந்து கீழாக பாம்புடன் இணைந்த டமருகம், சூலம் முதலியனவும் இடது கைகளில் பாசம், கபாலம் முதலியனவும் உள்ளன. கருவறைமேல் சிறிய நான்கு பட்டைகளான சிகரத்தையுடைய அல்பவிமானமாக இக்கோயில் உள்ளது. இக்கோயிலில் மார்கழி 30 நாட்கள் விசேட பூசைகள் நடைபெறுகின்றன. தெருவார்கள் இச்சிறிய கோயிலை நூறு ஆண்டுகளாகப் பரிபாலித்து வருகின்றனர்.

## 42. சியாமளாதேவி அம்மன் கோயில்

இச்சிறிய கோயில் தஞ்சை சக்காநாயக்கன் தெருவில் வடக்கு நோக்கி அமைந்துள்ளது. தெருவார்கள் பரிபாலனத்தில் ஏறத்தாழ 75 ஆண்டுகளாகச் செயற்பட்டு வருகிறது. இக்கோயிலின் நீள, அகலம் 1.5×3 மீட்டர் ஆகும்.

இக்கோயில் கருவறையில் அம்மன் அமர்ந்த கோலத்தில் நான்கு கைகளுடன் காணப்படுகிறாள். கருவறை சுவர் கோஷ்டத்தில் அம்மன் வீற்றிருக்கிறாள். அம்மன் இடது காலை மடக்கி வலது காலைத் தொங்கல் நிலையில் வைத்துள்ளாள். வலது காலின் அடியில் அசுரன் தலை வைக்கப்பட்டுள்ளது. அம்மன் வலது கைகளில் மேலிருந்து கீழாக முறையே சூலமும் பாசமும் காணப்படுகின்றன. இடது கைகளில் மேலிருந்து கீழாகப் பாம்புடன் இணைந்த டமருகமும் கபாலமும் காணப்படுகின்றன. அம்மன் அருகே விநாயகர் சிலை வைக்கப்பட்டுள்ளது.

கருவறை மேல் சால அமைப்புடைய சிகரம் காணப்படுகிறது. அதில் மூன்று கலசங்கள் வைக்கப்பட்டுன்ளன.

## 43. செங்கமல நாச்சியம்மன் கோயில்

(சிங்கள நாச்சியம்மன் கோயில்)

இத்திருக்கோயில் தஞ்சை குந்தவை நாச்சியார் பெண்கள் கல்லூரி சமீபம் ஒரு காட்டில் உள்ளது. இத்திருக்கோயில் செங்கமல நாச்சியம்மன் என்றும் செங்க நாச்சியம்மன் என்றும் தற்காலத்தில் அழைக்கப்படுகிறது. இக்கோயில் இக்காட்டுப் பகுதியில்

வடக்கு நோக்கி அமைந்துள்ளது. இக்கோயிலின் நீள, அகலம் 22×12 மீட்டர் ஆகும்.

இவ்வம்மன் வழிபாடு தஞ்சையில் மிகவும் பிரசித்திப் பெற்றதாகும். இவ்வம்மனை தஞ்சையிலுள்ள 48 தெருவார்கள் வழிபட்டு வருகின்றனர். இக்கோயில் அம்மன் பெருவாரியான தஞ்சை மக்கள் மனத்தில் இடம்பெற வேண்டுமானால் இப்பகுதியில் ஒரு சம்பவம் நிகழ்ந்திருக்க வேண்டும். இச்சம்பவம் மக்களைப் பெரிய பாதிப்புக்குள்ளாக்கியிருக்க வேண்டும் என் அறியலாம்.

சிங்களத் தீவிலிருந்து தஞ்சைக்கு ஓர் அரசன் தன் மனைவியையும் மந்திரியையும் பிற பரிவாரங்களையும் அழைத்துக் கொண்டு வந்து சேர்ந்தான். அக்காலத்தில் முதலாம் இராசராசன் தஞ்சையில் ஆட்சி பீடத்தில் இருந்ததாகச் செய்தி கூறப்படுகிறது. இச்சிங்கள அரசன் இராசராசனின் முந்தைய இரண்டு அழைப்புக்களையும் ஏற்க மறுத்து தஞ்சை வரவில்லை. மூன்றாவது அழைப்பின் போதே மந்திரியின் வேண்டுகோளுக்கிணங்கி சிங்களத் தீவிலிருந்து தஞ்சைக்கு வந்தான். சிங்களம் அப்போது இராசராசன் ஆட்சிக்குட்பட்டதாக இருந்திருக்க வேண்டும். திறை செலுத்த வேண்டிய அரசர்களில் இச்சிங்கள அரசனும் ஒருவனாக இருந்திருக்கக் கூடும். தஞ்சைக்கு வந்த சிங்கள அரசன் இக்கோயிலிருக்கும் இக்காட்டுப் பகுதியில் தன் மனைவியையும் பிற பரிவாரங்களையும் இருக்கும்படி கூறிவிட்டுத் தானும் மந்திரியும் அரசனைப் பார்க்கப் புறப்பட்டார்கள்.

மந்திரியை வெளியில் இருக்கும்படி கூறிவிட்டு சிங்கள அரசனை உள்ளே அழைத்துச் சென்றார்கள். சிங்கள அரசனை இராசராசன் வரவேற்றும் பேசினார். ஆனால் உள்ளே சென்றவர் திரும்பவில்லை. இதனால் மந்திரி ஐயமுற்றார். சிங்கள அரசன் கொல்லப்பட்டதை அறிந்தார். மந்திரி அவ்விடத்திலிருந்து திரும்பினார். மந்திரி அரசன் கொலையுண்ட செய்தியைச் சிங்கள ராணிக்குத் தெரிவித்தார். பிற பரிவாரங்களுடன் சிங்களத்திற்கு உடனே திரும்ப வேண்டுமெனக் கூறினார் மந்திரி. ஆனால் சிங்கள ராணி செல்ல மறுத்தாள். அவ்விடத்திலேயே மாய்த்துக்

கொள்ள விரும்பினார். அக்காட்டிலிருந்து குட்டையில் இறங்கி உடனே சமாதியானவள். அவளே சிங்கள நாச்சியம்மன் ஆகும். பொதுமக்களை அக்காலத்தில் இந்நிகழ்ச்சி பெரிய பாதிப்புக் குள்ளாயிருக்க வேண்டும். ஆதலால்இவ்வம்மன் வழிபாடுதஞ்சையி லுள்ள பல தெருவார்களிடம் இன்றும் தொடர்ந்து காணப் படுகிறது. இக்கோயிலின் உபயதாரர்களாக இத்தெருவார்கள் இருந்து வருகிறார்கள். இவ்வம்மனைப் பற்றிய பாடல்கள் ஏட்டுச் சுவடிகளாகத் தஞ்சை சரஸ்வதி மகாலில் உள்ளது எனக் கூறப் படுகிறது. இக்கதை தொடர்பான கல்வெட்டு ஒன்று தஞ்சைப் பெரிய கோயிலில் உள்ளது என்றும் கூறப்படுகிறது.

இக்கோயில் கருவறையில் அம்மன் அமர்ந்த கோலத்தில் காட்சியளிக்கிறாள். அம்மன் வலது காலை மடக்கி பீடத்தில் வைத்துக் கொண்டு இடது காலைத் தொங்க விட்ட நிலையில் அமர்ந்துள்ளாள். அம்மன் நான்கு க்கைகளையுடையவள். வலது மேல் கையில் பாம்புபடம் இணைந்த டமருகமும் வலது கீழ்க்கையில் சூலமும் உள்ளன. இடது மேல் கையில் பாசமும் இடது கீழ்க் கையில் கபாலமும் உள்ளன செங்கண்மா, செங்கண்ணன் என்பது போல உக்கிரமானதேவி செங்கண்மா நாச்சியாகி பின்பு செங்கமல நாச்சி என அழைக் கப்பட்டிருக்க வேண்டும் எனக் கூறுவர். சாதாரணமாகச் செங் கமல நாச்சியார் என்பது செந்தாமரை மலர் மேல் வீற்றிரு க்கும் லட்சுமி, மகாலட்சுமி எனக் கொள்வர்.

இக்கோயிலில் அமையும் விமானம் இரண்டு தளங்களை யுடையது. கர்ணகூடு-நீடம்-சாலை-நீடம்-கர்ணகூடு என்ற அமைப் பில் தளவரிசை அமைக்கப்பட்டுள்ளது. சால கிரீவ கோஷ்டங் களில் அம்மன் உருவங்கள் உள்ளன. வட்டமான சிகரத்தில் எட்டு நாசிகள் காணப்படுகின்றன. கபோதத்தின் கீழ் பத்ம வரி சைகள் அமைந்துள்ளன. கிரீவ மூலைகளில் சிங்க வாகனங்கள் அமர்ந்துள்ளன. தேவ கோஷ்டங்களில் சிற்பம் எதுவுமில்லை. கருவறை அதிட்டானத்தின் கீழ் சிறிய உபபீடம் உள்ளது.

கருவறையைத் தொடர்ந்து அமையும் சிறிய அந்தராளத்தில் இரண்டு 'பட்டவன்' சிலைகள் வாயிலின் வலது பக்கத்தில் உள்ளன. தனது வீட்டிலுள்ள ஒருவன் எக்காரணத்தினாலோ

இறந்து விட்டால் அவருக்கு ஓர் உருவம் இக்கோயிலில் சமைத்து அல்லது அவர் சாம்பல் மேல் ஒரு கல்லை நட்டு அவரைக் குல தெய்வமாகக் கருதி வழிபடும் வழக்கம் இப்பகுதியில் மிகுதி யாகக் காணப்படுகிறது. இக்கோயிலிலே அவ்வாறு இறந்தவர் களின் சாம்பலை எடுத்து வந்து புதைத்து அதன் மேல் ஒரு கல்லை நட்டு வழிபடுகின்றனர். அவ்வாறு அமைக்கப்பட்ட கற்களை 'பட்டவன்' என்று அழைக்கின்றனர்.

அந்தராளத்தைத் தொடர்ந்து அமைவது அர்த்த மண்டப மாகும். இவ்வர்த்த மண்டபத்தில் அந்தராள வாயிலின் இரு புறமும் இரண்டு துவார பாலகிகள் சிற்பங்கள் தற்காலத்தில் அழகுடன் சுதையால் அமைக்கப்பட்டுள்ளன. இதனருகே சிங்க வாகனங்கள் உள்ளன. முன்பு காணப்பட்ட துவார பாலகிகள் மாற்றப்பட்டு புதிய துவார பாலகிகள் வைக்கப்பட்டுள்ளன. இடது பக்கத்திலுள்ள துவார பாலகி வலது மேல் கையில் டமரு கமும் வலது கீழ்க் கையில் க்த்தி முதலியவற்றையும வைத்துள் ளார். டமருகத்தின் மேல் நாகபடம் உள்ளது. இடது மேல் கை யில் பாசத்தையும் இடது கீழ்க்கையில் கதாயுதத்தையும் தாங்கி யுள்ளார். வலது பக்கத்திலுள்ள துவாரபாலகி நேர் மாறான கைகளில் ஆயுதங்களைத் தாங்கியுள்ளார். இத்துவார பாலகிகள் சாந்த சொரூபமாக சாதாரணப் பெண்கள் போல அழகுடன் அமைக்கப்பட்டுள்ளன. பதினெட்டாம்படி கருப்பண்ண சாமிக்கு மரத்தாலான சிலை ஒன்று இம்மண்டபத்தில் வைக்கப்பட்டுள்ளது. மேலும் இம்மண்டபத்தின் மேற்கில் விநாயகர், நாகக் கற்கள் (2) முதலியன வைக்கப்பட்டுள்ளன. அர்த்த மண்டபத்தின் கூரை மராட்டா பாணியில் வளைவுகளுடன் அமைந்துள்ளது. நான்கு சதுரத் தூண்கள் இம்மண்டபத்தில் காணப்படுகின்றன.

அர்த்த மண்டப வாயிலில் கோபுரம் ஒன்று தற்காலத்தில் கட்டப்பட்டுள்ளது. அது இருதளங்களையுடையது. கர்ணகூடு—நீடம்—சாலை—நீடம்-கர்ணகூடு என்ற அமைப்பு வரிசையில் தள ஹாரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மூன்று செம்பாலானக லசங்கள் சரல சிகரத்தில் வைக்கப்பட்டுள்ளன. சால, கிரீவ கோஷ்டங்களில் அம்மன் சிலலகள் வைக்கப்பட்டுன்ளன. அர்த்த மண்டபத்தின் முன்னால் மகாமண்டபம் தற்காலத்தில் கட்டப்பட்டுள்ளது. இக்

கோயிலில் பல ஆண்டுகளாக பூசை செய்யும் சோழிய வேளாளர் பரம்பரையினரும் பிறகும் இம்மண்டபத்தில் திருப்பணிகள் செய்துள்ளனர். மகாமண்டபத்தின் நடுவில் பலிபீடமும் அதனருகே சூலமும் வைக்கப்பட்டுள்ளன.

மகாமண்டபத்தின் கிழக்கில் பல சிறிய சன்னதிகள் திருச்சுற்றில் உள்ளன. பட்டவன் உண்டிக்கருப்பு, பட்டவன், பட்டவள், மதுரைவீரன் ஆகியோருக்குச் சன்னதிகள் உள்ளன. இவை மேற்கு நோக்கி அமைந்துள்ளன. அடைக்கலம் காத்த ஐயனார் சன்னதி ஒன்று கிழக்கு நோக்கி பட்டவன் சன்னதி பின்னால் அமைந்துள்ளது. மதுரைவீரன், வெள்ளையம்மாள், பொம்மியம்மாள் ஆகியோருடன் நின்ற கோலத்தில் காணப்படுகிறார். இச்சிற்பம் சுதையால் செய்யப்பட்டது. 'பட்டவன்' கற்கள் கருங்கல்லாலானவை. உண்டிக் கருப்பு நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறார். வலது கையில் கத்தியும் இடது கையில் கதாயுதமும் தாங்கியுள்ளார். அடைக்கலம் காத்த ஐயனார் சூல வடிவில் உள்ளார். மகாமண்டபத்தின் மேற்கில் இரண்டு பட்டவன் சன்னதிகளும் பதினெட்டாம்படி கருப்பண்ணசாமி சன்னதியும் உள்ளன. ஐந்தடி உயரத்தில் காணப்படும் கருப்பண்ணசாமி சிலை சுதையாலானது. கருப்பண்ணசாமி புலியின்மேல் அமர்ந்துள்ளார். வலது கையில் வாள் வைத்திருக்கிறார். இடது கை துடையின்மேல் உள்ளது. கருங்கல்லாலான சிறிய கருப்பண்ணசாமி சிலையும் இச்சன்னதியில் உள்ளது. பல சூலங்கள் சன்னதிக்குள்ளும் வெளியிலும் நாட்டப்பட்டுள்ளன. இத்தெய்வத்தை வேண்டி பலன் பெற்றவர்கள் இவ்வாறு இக்கோயிலுக்குச் சூலத்தை வாங்கி அளிக்கின்றனர்.

இக்கோயிலுக்கு வெளியே தீர்த்தமானது கோயில் முன்னால் உள்ளது. இத்தீர்த்தத்தின் கரையில் தென்மேற்கில் கிழக்கு நோக்கி ஏறத்தாழ 12' உயரமுள்ள வேதமுனியின் சுதையாலான சிலை உள்ளது. இச்சிலை பார்ப்பதற்கு விசேடமானது. வேதமுனி அமர்ந்த கோலத்தில் காட்சி தருகிறார். அவரது தோள்களில் பச்சைக் கிளிகள் உள்ளன. காதுகளில் நாகப்படங்கள் உள்ளன. இவரது இரண்டு கோரைப் பற்கள் வெளியே நீட்டிக் கொண்டு அகோரமாகக் காட்சியளிக்கின்றன. வேதமுனி

வலது கையில் வாளை உயர்த்திப் பிடித்துள்ளார். இடது கையில் வேதபுத்தகம் உள்ளது. மேலும் கதாயுதமும் இடது கையினை ஒட்டி அமைந்துள்ளது. இவர் இடது காலை மடக்கி பீடத்தில் வைத்துள்ளார், வலது காலைத் தொங்கவிட்டுள்ளார். வலது கையை நாகத்தின் மேல் வைத்துள்ளார். அவரது இரு பக்கங்களிலும் சிங்கம், புலி முதலியன முறையே இடது வலது பக்கங்களில் நிற்கின்றன. கல்லாலான சிறிய வேதமுனி சிலை ஒன்று அவர் கீழ் காணப்படுகிறது. வலது கையில் கத்தியும் இடது கையில் கதாயுதமும் அவர் தாங்கியுள்ளார். சூலம் ஒன்று இச்சன்னதி முன்பு நாட்டப்பட்டுள்ளது.

இக்கோயிலின் மேற்கே சிறிய சியாமளாதேவி அம்மன் சன்னதி ஒன்று காணப்படுகிறது. இக்கோயில் கருவறையில் அம்மன் நான்கு கைகளுடன் அமர்ந்த கோலத்தில் காட்சியளிக்கிறாள். அவரது வலது மேல்கையில் பாம்புபடம் இணைந்த டமருகம் உள்ளது. வலது கீழ்க்கையில் சூலம் காணப்படுகிறது. இடது மேல் கையில் பாசமும் இடது கிழ்க்கையில் கபாலமும் உள்ளன. கரண்ட மகுடத்தை அம்மன் அணிந்துள்ளாள். அம்மன் இடது காலை மடக்கி பீடத்தில் வைத்துக்கொண்டும் வலது காலைத் தொங்கல் நிலையிலும் வைத்துள்ளாள். கருவறையை அடுத்து சிறிய அந்தராளப் பகுதியும் உள்ளது. அதில் சியாமளாதேவி சூலம் உள்ளது. அந்தராளத்தைத் தொடர்ந்து சிறிய முன்மண்டபம் தற்காலத்தில் கட்டப்பட்டுள்ளது. கருவறை மேல் சிறிய அல்பவிமானம் அமைக்கப்பட்டுள்ளது.

இக்கோயிலின் நித்ய பூசை தினமும் காலையில் நடைபெறுகிறது. தைமாதம் மூன்றாவது செவ்வாய்க் கிழமை கரக உற்சவம் நடைபெறுகிறது. உற்சவர் புறப்பாடும் இக்கோயிலில் உண்டு. அதற்கான சிம்ம வாகனம் இக்கோயிலில் உள்ளது. ஆடி மாதம் காப்புக்கட்டித் திருவிழா நடைபெறுகிறது. மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி மாதங்களில் தஞ்சையிலுள்ள பல தெருவார்கள் பாற்குடம் அம்மனுக்கு அளிக்கின்றனர். ஆடு, கோழி முதலியன பலி கொடுத்தல் பலகாலமாக இக்கோயிலில் நடந்து வருகிறது.

தஞ்சை அரண்மனை தேவஸ்தானத்தைச் சார்ந்தவர்கள் இக்கோயிலைப் பரிபாலனம் செய்து வருகின்றனர். பெரும்பான்மையும் உபயதாரர்கள் ஆதரவில் இக்கோயில் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

## 44 செங்கமல நாச்சியம்மன் கோயில்

இத்திருக்கோயில் தஞ்சை ரயில்வே நிலையத்தின் அருகே அமைந்துள்ள வெட்டுக்காரத் தெருவில் வடக்கு நோக்கி அமைந்துள்ளது. (இக்கோயிலின் அம்மன் வரலாற்றைச் சிங்கள நாச்சியம்மன் கோயில் கதையில் காண்க) சிங்கள நாச்சியம்மனே இக்கோயிலிலும் செங்கமல நாச்சியம்மன் என்ற பெயருடன் காட்சியளிக்கிறாள். இக்கோயிலின் நீள, அகலம் 8×6 மீட்டர் ஆகும்.

இக்கோயில் ஒரு மண்டபமாகவே காட்சியளிக்கிறது. ஏறத்தாழ ஆறு சதுர மீட்டர் பரப்புள்ள இம்மண்டபத்தின் தெற்கில் ஒரு கோஷ்டத்தில் அம்மன் அமர்ந்த நிலையில் காட்சியளிக்கிறாள். இவ்வுருவம் சுதையாலானது. அம்மன் இடது காலை பீடத்தின் மேல் மடக்கி வைத்துக் கொண்டு வலது காலைத் தொங்கவிட்ட நிலையில் அமர்ந்துள்ளாள். இவ்வம்மன் நான்கு கைகளையுடையவள். வலது கைகளில் மேலிருந்து கீழாக முறையே பாம்புடன் இணைந்த டமருகமும் சூலமும் உள்ளன. இடது கைகளில் மேலிருந்து கீழாக பாசமும் கபாலமும் உள்ளன. அம்மன் தலையில் கிரீட மகுடம் உள்ளது. அதன் பின்னால் ஜ்வாலா கிரீடம் காணப்படுகிறது. அம்மனின் இருமருங்கிலும் சாமரம் வீசும் பெண்கள் உள்ளனர். கோஷ்டத்தைச் சுற்றி பிரபாவளி சிங்க முகத்துடன் அமைக்கப்பட்டுள்ளது. கோஷ்டத்தின் இருமருங்கிலும் துவார பாலகிகள் ஓவியங்கள் நின்ற கோலத்தில் பெரிதாக வரையப்பட்டுள்ளன. இவை தற்கால ஓவியங்கள் ஆகும். சூலம் ஒன்று அம்மனின் முன்னால் வலது பக்கத்தில் நடப்பட்டுள்ளது.

இக்கோயில் நான்கு தூண்களையுடைய மண்டபத்தையுடையது. இக்கோயிலின் மேற்கில் விநாயகருக்கு ஒரு தனி சந்நிதியுள்

ளது. விநாயகரும் மூஞ்சூறு வாகனமும் இதில் உள்ளன.

காட்டில் அமர்ந்துள்ள சிங்கள நாச்சியம்மன் கோயிலுள்ள உற்சவ மூர்த்தி இக்கோயிலில் தான் வைக்கப்பட்டுள்ளது. விசேட காலங்களில் அதன் புறப்பாடு நடைபெறுகிறது. வெட்டுக்காரத் தெருவார்கள் காட்டு சிங்கள நாச்சியம்மனுக்கு பாற்குடம் எடுத்துச் செல்வார்கள். காட்டிலிருந்து இரண்டு கரகங்களை எடுத்துக் கொண்டு இக்கோயிலுக்கு விசேட காலங்களில் வருவர். இக்கரகங்கள் இக்கோயிலுக்குக் கொண்டு வரப்பட்டு இத்தெருவைச் சுற்றி வந்து மீண்டும் காட்டு சிங்கள நாச்சியம்மன் கோயிலுக்குத் திரும்பிச் செல்லும். தை மாதம் இக்கோயிலில் அம்மனுக்கும் பாற்குடம் எடுக்கிறார்கள். நவராத்திரியின் போது அலங்காரமும் ஊஞ்சலும் இக்கோயிலில் உண்டு.

இக்கோயிலைத் தெருவார்கள் பாதுகாத்து வருகின்றனர்.

## 45. செங்கமல நாச்சியம்மன் கோயில்

இச்சிறிய கோயில் தஞ்சை பூக்கார வடக்குத் தெருவில் வடக்கு நோக்கியுள்ளது. ஏறத்தாழ 100 ஆண்டுகளாக இக்கோயில் செயற்பட்டு வருகிறது. இக்கோயிலைத் தெருவார்கள் பரிபாலனம் செய்து வருகின்றனர். இக்கோயிலின் நீள, அகலம் $5 \times 3$ மீட்டர் ஆகும்.

கருவறையின் உட் சுவரில் அம்மன் ஓவியம் தீட்டப்பட்டுள்ளது. அம்மன் இரண்டு கால்களையும் மடக்கி சம்மனம் போட்ட நிலையில் வரையப்பட்டுள்ளது. வலது கைகளில் முறையே டமருகத்துடன் இணைந்த பாம்பு, சூலம் முதலியனவும் இடது கைகளில் பாசம், கபாலம் முதலியனவும் உள்ளன. மேலும் வாள், சூலம் முதலியன கருவறையில் வைக்கப்பட்டுள்ளன.

கருவறை முன்னால் சிறிய முன்மண்டபம் உள்ளது. இக்கட்டிடம் செங்கல்லாலானது. இம்மண்டபத்தில் ஓடு வேயப்பட்டுள்ளது.

இக்கோயில் விமானம் அல்ப விமானமாகும். ஒரு சிறிய அல்ப விமான சிகரம் கருவறைமேல் உள்ளது. நான்கு பட்டைகளால் அமைந்த சிகரம் இவ்விமானத்தில் காணப்படுகிறது.

இக்கோயிலில் மாசி மாதம் உற்சவம் நடைபெறுகிறது. கரகம், பாற்குடம் முதலியன இம்மாதங்களில் எடுக்கப்படுகின்றன. இத்தெருவார்கள் பாற்குடம் எடுத்துக்கொண்டு காட்டில் அமர்ந்துள்ள சிங்கள நாச்சியம்மன் கோயிலுக்குச் செல்வர்.

## 46. செங்கமல நாச்சியம்மன் கோயில்

இக்கோயில் தஞ்சை குந்தவை நாச்சியார் மகளிர் கல்லூரி சமீபம் உள்ளது. வடக்கு நோக்கி இக்கோயில் சன்னதிகள் அமைக்கப்பட்டுள்ளன. இக்கோயிலின் நீள, அகலம் 25 × 25 மீட்டர் ஆகும்.

இக்கோயில் வாயிலில் அய்யனார் கல் ஒரு சிறிய சன்னதியில் வைக்கப்பட்டுள்ளது. அதன் எதிரே பலிபீடம் உள்ளது. இக்கோயிலின் அம்மன் சன்னதி கருவறை அரை வட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளது. அதில் அம்மனின் ஓவியம் தீட்டப்பட்டுள்ளது. மேலும் ஒரு சூலமும் வைக்கப்பட்டுள்ளன அம்மன் சன்னதி எதிரே முன்னடியான் சூலம் உள்ளது. அம்மன் சன்னதியின் மேற்கில் பட்டவன், சன்னாசி, கருப்பு ஆகியோரின் சூலங்கள் உள்ளன. அதனருகே மதுரைவீரன் சூலமும், முன்னடியான் சூலத்தின் பின்னால் முனியாண்டவர் சூலமும் உள்ளன. சம்பளா தேவி அம்மன் சன்னதி ஒன்றும் அதனருகே அமைக்கப்பட்டுள்ளது. மேலும் விநாயகர் சிலை ஒன்று கிழக்கில் கிழக்கு நோக்கியுள்ளது.

இக்கோயிலைத் தெருவார்கள் பராமரித்து வருகின்றனர். இக்கோயில் காட்டில் அமர்ந்துள்ள சிங்கள நாச்சியம்மன் கோயில் அருகே உள்ளது. இவ்விரண்டு கோயிலிலும் ஒரே காலத்தில் உற்சவம் நடைபெறுகிறது.

## 47. செங்கமல நாச்சியம்மன் கோயில்

இச்சிறிய கோயில் தஞ்சை போகித் தெருவில் மேற்கு நோக்கி அமைந்துள்ளது. தெருவார்கள் இக்கோயிலைப் பரிபால னம் செய்து வருகின்றனர். இக்கோயிலின் நீள, அகலம் 5 × 4 மீட்டர் ஆகும்.

இக்கோயிலில் கருவறையில் அம்மன் அமர்ந்த கோலத்தில் வீற்றிருக்கிறாள். அம்மன் நான்கு கைகளையுடையவள். வலது இரண்டு கைகளிலும் மேலிருந்து கீழாக முறையே பாம்புடன் இணைந்த டமருகமும் சூலமும் உள்ளன. இடது கைகளில் பாச மும் கபாலமும் உள்ளன. அமமன் இடது காலை மடக்கி வலது காலைத் தொங்கல் நிலையில் வைத்துள்ளாள்.

கருவறையைச் சுற்றிச் சிறிய மண்டபம் உள்ளது. இக்கோயி லில் எண்பட்டை சிகரத்தையுடைய அல்ப விமானம் காணப்படு கிறது. சிகரத்தின் மேல் ஒரு கலசம் அமைந்துள்ளது. இக்கோயில் செங்கல்லால் கட்டப்பட்டுள்ளது.

பங்குனி, சித்திரை, வைகாசி மாதங்களில் இக்கோயிலில் விசேட பூசைகளும் பாற்குடம் எடுத்தலும் நடைபெறுகின்றன.

## 48. செங்கமல நாச்சியம்மன் கோயில்

இத்திருக்கோயில் தஞ்சை மருதய்யாப் பிள்ளைத் தெருவில் வடக்கு நோக்கி அமைந்துள்ளது. தெருவார்களின் திருப்பணி யினால் இக்கோயில் நல்ல முறையில் விளங்குகிறது. காட்டில் அமர்ந்துள்ள சிங்கள நாச்சியம்மனே இக்கோயிலும் வீற்றிருக் கிறாள். ஏறத்தாழ 100 ஆண்டுகளுக்கு முன் இக்கோயில் கட்டப்பட்டது. இக்கோயிலின் நீள, அககம் 5 × 8 மீட்டர் ஆகும்.

இத்திருக்கோயிலில் அம்மன் படிமம் சுதையால் மிகவும் நேர்த்தியுடன் பெரிதாகச் செய்யப்பட்டுள்ளது. ஏறத்தாழ ஏழடி உயரமுள்ள இச்சிலை பார்ப்பதற்கு அழகானது. அம்மன் அமர்ந்த

கோலத்தில் நான்கு கைகளுடன் காட்சி தருகிறாள். இடது காலை மடக்கி வலது காலைத் தொங்கவிட்ட நிலையில் அம்மன் அமர்ந்துள்ளாள். அம்மனின் வலது கைகளில் மேலிருந்து கீழாக முறையே பாம்புடன் இணைந்த டமருகம், சூலம் முதலியனவும் இடது கைகளில் மேலிருந்து கீழாக முறையே பாசம், கபாலம் முதலியனவும் தாங்கியுள்ளாள். இவளருகே இரண்டு பக்கங்களிலும் சாமரம் வீசும் பெண்கள் நிற்கின்றனர். அவர்களின் அருகே துவார பாலகிகள் சிற்பங்களும் உள்ளன. கருவறையாகிய மண்டபத்தில் அழகிய ஓவியங்கள் பல தீட்டப்பட்டுள்ளன. மதுரை வீரன், விசாலாட்சி, மீனாட்சி, காமாட்சி, விநாயகர், காத்தாயி, வெங் கடாசலபதி, நடராஜர், கருமாரியம்மன், சுப்ரமண்யர், கிருஷ் ணர் மற்றும் பல அம்மன்களின் ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளள.

இக்கோலியின் கிழக்கு வாயில் முன்மண்டபத்தில் சக்தி விநா யகர், வள்ளி-தெய்வானை—முருகன் சிற்பங்கள் கிழக்கு நோக்கி அமைக்கப்பட்டுள்ளன. இவற்றின் முன்னால் ஆஞ்சநேயர், துர்க்கை சிற்பங்களும் கிழக்கு நோக்கி அமைக்கப்பட்டுள்ளன. வடக்கில் அம்மன் கருவறை மண்டபத்தின் முன்னால் ஒரு சிறிய இடைநாழிகை உள்ளது. அதனைத் தொடர்ந்து முன்வாயில் அமைந்துள்ளது. இக்கோயிலில் ஒரு சிறிய வட்டமான சிகரத்தை யுடைய அல்பவிமானம் காணப்படுகிறது.

இக்கோயிலில் நித்யபூசை தினமும் காலையில் நடைபெறு கிறது. பங்குனி மாதத்தில் இக்கோயிலில் பாற்குடம் எடுக்கப் படுகிறது. பாற்குடங்களைக் காட்டில் அமர்ந்துள்ள சிங்கள நாச்சியம்மன் கோயிலுக்கு எடுத்துச் செல்வார்கள். மார்கழி 30 நாட்களும் இக்கோயிலில் விசேட பூசைகள் நடைபெறுகின்றன. ஆடிமாதமும் விசேட பூசைகள் உண்டு. விநாயக சதுர்த்தியும் இக்கோயிலில் கொண்டாடப்படுகிறது.

## 49. செங்கமல நாச்சியம்மன் கோயில்

இச்சிறிய கோயில் தஞ்சை கீழவாசல் சிக்காரிமால் தெரு வில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. ஒரு வீட்டின் சுவரில் அமைக்கப்பட்டுள்ள கோஷ்டத்தில் அம்மனின் ஓவியம் வயைரப்

பட்டுள்ளது. மூஞ்சுறு, விநாயகர் சிலைகளும் வைக்கப்பட்டுள்ளன. தெருவார்கள் இக்கோயிலைப் பரிபாலனம் செய்து வருகின்றனர். அம்மனின் உருவம் நான்கு கைகளுடன் அமர்ந்த கோலத்தில் காணப்படுகிறது. கைகளில் டமருகத்துடன் இணைந்த பாம்பு, சூலம், பாசம், கபாலம் முதலியன வரையப்பட்டுள்ளன. ஏறத்தாழ 50 ஆண்டுகளாக இச்சன்னதி இத்தெருவில் இருந்து வருகிறது.

இக்கோயிலின் நீள, அகலம் 0.5 × 0.5 மீட்டர் ஆகும்.

## 50. செல்லியம்மன் கோயில்

செல்லியம்மன் கோயில் தஞ்சை கரந்தையில் அமைந்துள்ள செல்லியம்மன் கோயில் தெருவில் வடக்கு நோக்கி அமைந்துள்ளது. இது தஞ்சையில் மிகவும் புராதனமான கோயிலாகும். கரந்தையில் முத்தரையர்களால் கட்டப்பட்டுள்ள வசிட்டேஸ்வரர் கோயிலுக்கும் முற்பட்டதாக இக்கோயில் இப்பகுதியில் இருந்து வருவதாகச் செய்தி அறியப்படுகிறது. இக்கோயில் முத்தரையர்களின் வசிட்டேஸ்வரர் கோயிலுக்கு அருகாமையில் உள்ளது. இக்கோயிலின் நீள, அகலம் 4 × 3 மீட்டர் ஆகும்.

ஓர் அரசன் முற்காலத்தில் இக்கோயிலின் அருகாமையிலுள்ள தீர்த்தத்தில் மூழ்கி நோய் நீக்கப் பெற்றான் எனக் கூறப்படுகிறது. இத்தீர்த்தம் ஆரம்ப காலத்தில் இக்கோயிலைச் சார்ந்ததாகக் கூறப்படுகிறது. பின்பு வசிட்டேஸ்வரர் கோயில் தீர்த்தமாக மாற்றப்பட்டது. தஞ்சை கோடியம்மனின் கூடப் பிறந்தவர்கள் ஏழு பேரில் இச்செல்லியம்மனும் ஒருத்தியாகக் கருதப்படுகிறாள். தஞ்சாசுரனை அழிப்பதற்கு இவளும் துணையாக நின்றாள். ஆனால் இத்தெய்வம் கிராம தேவதைகளில் ஒருத்தியாகவே மக்களால் கருதப்படுகிறது. பிற்காலத்தில் கோடியம்மனின் சகோதரியாக மாற்றப்பட்டு தஞ்சாசுரனைக் கொல்லத் துணையாக நின்றாள் என்று கூறப்படுகிறது.

இவ்வம்மன் கருவறையில் ஒரு பீடத்தின் மேல் அமர்ந்த நிலையில் இருக்கிறாள். வலது கால் பீடத்தின் மேல் தூக்கி மடக்கிய நிலையில் உள்ளது. இடது கால் கீழே வீழ்ந்து கிடக்கும் அசுரனின் மேல் உள்ளது. அம்மன் எட்டு கைகளையுடையவள். வலது கரங்களில் மேலிருந்து கீழாக முறையே சூலம், உடுக்கை, கத்தி முதலியனவும் இடது கைகளில் மேலிருந்து கீழாக விச்மய முத்திரை, அங்குசம், கேடயம், கபாலம் முதலியனவும் உள்ளன. இச்சிலை ஏறத்தாழ இருநூறு ஆண்டுகளுக்கும் முற்பட்டதாக இருக்கலாம்.

கருவறையைத் தொடர்ந்து அமையும் அந்தராளத்தில் வலது மூலையில் செல்லியம்மன் பழைய சிலை (மார்பு அளவு வரையில்) வைக்கப்பட்டுள்ளது. இச்சிலையே மிகவும் புராதனமாகும். சோழர் காலத்திற்கும் முற்பட்டதாக இது கருதப்படுகிறது. தொடக்க காலத்தில் இது மூலவராக வைக்கப்பட்டிருந்தது. சிதிலமடைந்துள்ள நிலையில் இச்சிலை காணப்படுகிறது. மேலும் இவ்வந்தராளப்பகுதியில் விநாயகர், மாரியம்மன், ஐயனார், மதுரைவீரன், பைரவர், சூலபிடாரி முதலிய சிற்பங்கள் உள்ளன. அந்தராளத்தைத் தொடர்ந்து அமையும் அர்த்த மண்டபத்தின் நடுவில் பலிபீடம் ஒன்று சில காலங்களுக்கு முன்பு வைக்கப்பட்டிருந்தது. அது தற்காலத்தில் அந்தராளத்தில் வைக்கப்பட்டுள்ளது. அர்த்த மண்டபம் இடிந்து வீழ்ந்து விட்டது. திருச்சுற்றில் கருவறையின் கிழக்கில் பேச்சியம்மன் 'கல்' உருவமில்லாமல் உள்ளது.

இக்கோயில் அல்ப விமானமாகும். வட்டமான சிகரத்தின் மேல் ஒரு கலசம் உள்ளது. கிரீவ கோஷ்டத்தில் அம்மன் சிலைகள் வைக்கப்பட்டுள்ளன. எட்டு நாசிகள் சிகரத்தில் அமைக்கப்பட்டுள்ளன. நான்கு பெரிய நாசிகளும் அவற்றிடையே நான்கு சிறிய நாசிகளும் காணப்படுகின்றன.

இக்கோயிலில் நித்ய பூசை தினமும் காலையில் நடைபெறுகிறது. மார்கழி 30 நாட்களும் விசேடமான பூசைகள் உண்டு. இக்கோயிலின் பேச்சியம்மனை குழந்தை பெற்றவர்கள் குழந்தை

யுடன் ஒருநாள் வந்து வழிபட்டு தங்கள் குழந்தை சுகமாக வளர வேண்டுகின்றனர்.

இக்கோயில் செல்லியம்மன் கோயில் தெருவார்களால் பரிபாலனம் செய்யப்படுகிறது.

## 51. திரௌபதையம்மன் கோயில்

தஞ்சை மானோஜியப்பா வீதியில் இத்திருக்கோயில் மேற்கு நோக்கி அமைந்துள்ளது. மராட்டியர் காலத்தில் இத்திருக்கோயில் கட்டப்பட்டது. இக்கோயிலின் நீள, அகலம் 8×6 மீட்டர் ஆகும்.

இக்கோயில் கருவறையில் சுவரருகே கிழக்கில் ஒரு பீடம் அமைக்கப்பட்டுள்ளது. அப்பீடத்தில் வரிசையாகத் தெற்கு முதல் வடக்கு வரை முறையே சகாதேவர், அருச்சுனர், நகுலன், தருமர், திரௌபதையம்மன், கிருஷ்ணர், குந்தி, பீமர், நாககன்னி முதலிய சிற்ப வரிசைகள் உள்ளன. அம்மன் நின்ற கோலத்தில் இரண்டு கைகளுடன் காட்சியளிக்கிறாள். வலது கையில் கிளியும் இடது கையில் மலரும் உள்ளது. உற்சவர் சிலை கருவறையின் நடுவில் அமைந்துள்ளது. அது மூலவர் போன்றே காணப்படுகிறது.

கருவறையை அடுத்து அமைவது சிறிய அந்தராளப்பகுதியாகும். அதில் தெற்குப் பகுதியில் விநாயகர், விநாயகர் ஆஞ்சநேயர், விநாயகர், கோயில் ஸ்தாபகர், நாகம், சிவலிங்கம், விநாயகர் முதலிய சிலைகள் உள்ளன. வடக்குச் சுவரில் அமைந்துள்ள கோஷ்டத்தில் காளியின் தலை செப்புப் படிமத்தில் அமைக்கப்பட்டுள்ளது. அந்தராள வெளி வாயிலின் மேல் கஜலெட்சுமி புடைப்புச் சிற்பமும் அவளருகே இரண்டு சாமரம் வீசும் பெண்கள் சிற்பங்களும் உள்ளன.

அந்தராளப் பகுதியைத் தொடர்ந்து அமையும் மண்டபத்தின் வாயிலில் இரண்டு துவார பாலகிகள் சிலைகள் உள்ளன. அவற்றில்இடது பக்கத்திலுள்ள துவார பாலகியின் அருகே மேலும்

இரு சிறிய துவாரபாலகிகள் சிலைகள் உள்ளன. மண்டபத்தின் நடுவில் ஒரு பீடத்தின் மேல் நாகம், ஆஞ்சனேயர், வீரபத்திரர் சிலைகள் வைக்கப்பட்டுள்ளன. இவை அம்மனை நோக்கி அமைக் கப்பட்டுள்ளன. இவற்றைத் தொடர்ந்து இரண்டு பலிபீடங்கள் உள்ளன. இம்மண்டபம் நான்கு வட்டமானத் தூண்களைக் கொண்டது. வவ்வால் நத்தா மண்டபமாக இது அமைந்துள்ளது.

இம்மண்டபத்தின் தெற்கில் சுவரில் அமைந்துள்ள கோஷ்டங் களில் பேச்சியாயி எட்டு கைகளுடன் மடியில் குழந்தையின் வயிற் றைக் கிழித்துக்கொண்டு அமர்ந்துள்ளாள். கமலக்கண்ணியின் சிலை அடுத்து காணப்படுகிறது. இதனைத் தொடர்ந்து குதிரை வாகனத் தில் முத்தால் ராவுத்தன் சிலையுள்ளது. வடக்குச் சுவரில் மதுரை வீரன், வெள்ளையம்மாள், பொம்மி சிலைகள் உள்ளன. இச்சிலைகள் மரத்தாலான அழகிய சிலைகள் ஆகும். இம்மண் டபத்தின் தெற்கு, வடக்குப் பகுதிகளில் அமைந்துள்ள வழிகள் கருவறையைச் சுற்றி அமைந்துள்ள திருச்சுற்றிற்கு நம்மை அழைத் துச் செல்கிறது.

இக்கோயில் கருவறை செங்கல்லாலானது. ஒரு உப பீடத் தின் மேல் அமைந்துள்ள அதிட்டானத்தில் கருவறை அமைந்துள் ளது. இக்கோயிலின் விமானம் ஏகதளத்தையுடையது. கர்ண கூடு–நீடம்–சாலை-நீடம்–கர்ணகூடு என்ற அமைப்பில் விமானம் அமைந்துள்ளது. கிரீவ கோஷ்டத்தில் அம்மன் சிலைகள் உள் ளன. சிகரம் வட்டமானது. அதில் ஒரு கலசம் உள்ளது. சிகரத் தில் நான்கு பெரிய நாசிகளும் அவற்றிடையே நான்கு சிறிய நாசிகளும் உள்ளன.

இக்கோயிலில் தினமும் காலையிலும் மாலையிலும் நித்ய பூசைகள் நடைபெறுகின்றன. ஆடி மாதம் உற்சவம் நடைபெறு கிறது. 45 நாட்கள் மகாபாரதம் பிரசங்கிக்கப்படுகிறது. இறுதி நாள் திரௌபதை முடிகட்டும் நிகழ்ச்சி நடைபெறும். இதற்காக கோயில் முன்பு படுகளம் அமைக்கப்பட்டு துரியோதனன் இறந்து கிடக்கும் காட்சியும் திரௌபதை முடிகட்டும் நிகழ்ச்சியும் நடை பெறும். இப்பகுதி நாயுடு இனத்தவர் இவ்வம்மனைக் குலதெய்வ மாகக் கருதி வழிபடுகின்றனர்.

## 52. ரெதிளபதையம்மன் கோயில்

இத்திருக்கோயில் தஞ்சை கரந்தையில் பூக்குளம் பகுதியில் மேல திருவையாறு சாலையில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. மராட்டியர் காலத்தில் இத்திருக்கோயில் கட்டப்பட்டது. இக் கோயிலின் நீள, அகலம் 8 × 8 மீட்டர் ஆகும்.

இக்கோயிலின் கருவறையில் திரௌபதையம்மன் இரண்டு கைகளுடன் நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறாள். வலது கையில் அம்மன் மலரைப் பெற்றுள்ளாள். இடது கை தொங்கல் நிலையில் காணப்படுகிறது. உற்சவர் அம்மனும் மூலவர் அம்மனைப் போன்றே அமைந்துள்ளது. இக் கருவறையின் வாயிலின் இருமருங்கிலும் தட்சிணாமூர்த்தி, நாகம் முதலிய புடைப்புச் சிற்பங்கள் வைக்கப்பட்டுள்ளன.

இக் கருவறையின் இடது பக்கத்தில் அமையும் சிறிய வவ்வால் நத்தா மண்டபத்தின் மேற்தச் சுவரில் மராட்டியர் காலத்திய கிருஷ்ணர் படம் ஒன்று ஒரு கோஷ்டத்தில் பூட்டி வைக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து அமையும் கோஷ்டத்தில் கிருஷ்ணர் சிலையும் அவரோடு காணப்படும் இரண்டு கன்னிகளின் சிலைகளும் விசேடமானது. அனைத்து திரௌபதையம்மன் கோயில்களிலும் காணப்படுவது போன்று மரத்தாலான பஞ்ச பாண்டவர் சிலைகள் இம்மண்டபத்தில் அழகாகச் செய்து வைக்கப் பட்டுள்ளன. இச்சன்னதிகளின் முன்பு அமையும் மண்டபங்கள் வவ்வால் நத்தா மண்டப பாணியில் அமைக்கப்பட்டுள்ளன. கிருஷ்ணர் கோஷ்டத்தின் முன் அமையும் வவ்வால் நத்தா மண்டபம் இரண்டு வட்டமான தூண்களையுடையது. இது செங்கலாலும் காரையாலும் கட்டப்பட்டுள்ளது. இம்மண்டபத்தின் மேல் ஐந்து கலசங்கள் வைக்கப்பட்டுள்ளன. இக்கோயிலின் விமானம் அல்ப விமானமாகும். அல்ப விமான சிகரத்தின் மேல் ஒரு கலசம் உள்ளது. துர்க்கை சன்னதிமேல் அமையும் வவ்வால் நத்தா மண்டபத்தின் மேல் ஒரு கலசம் உள்ளது. எட்டு வட்டமான தூண்கள் திருச்சுற்று மண்டபத்தின் இருமருங்கிலும் உள்ளன. திருச்சுற்று மண்டபத்தின் வடக்கில் சிவலிங்கத்திற்கு

ஒரு தனி சன்னதி தற்காலத்தில் கட்டப்பட்டுள்ளது. இது அல்ப விமானமாக உள்ளது. இதன் சிகரம் வட்டமானதாகும். அதன் மேல் ஒரு கலசம் உள்ளது.

கருவறையின் நேர் எதிரே அமையும் சிறிய முன் தோட்டத்தில் ஒரு பீடத்தின்மேல் இலிங்கம், வீரபத்ரர், ஐந்து தலை நாகம் முதலியன உள்ளன. அதன் பின்னால் நந்தியாவட்டை மரம் ஒன்று நிற்கிறது.

இக்கோயிலில் நித்யபூசை தினமும் காலையில் நடைபெறுகிறது. வைகாசி மாதம் 40 நாட்கள் உற்சவம் நடைபெறுகிறது. இக்கோயில் தெருவார்களான வன்னியர்களும் அகமடியர்களும் இக்கோயிலைப் பரிபாலித்து வருகின்றனர்.

## 53. திரெளபதையம்மன் கோயில்

தஞ்சை கீழவாசலில் பூமால் ராவுத்தன் கோயில் அருகே ஏறத்தாழ 100 ஆண்டுகளுக்கு முன்பு இக்கோயில் கட்டப்பட்டது. இது ஒரு தனியார் கோயிலாகும். படையாச்சி மற்றும் வன்னியர் குலத்தினரின் குலதெய்வமாக இவ்வம்மன் வழிபடப்படுகிறாள். இக்கோயிலின் நீள, அகலம் 9 × 7 மீட்டர் ஆகும்.

இக்கோயிலின் கருவறையில் திரெளபதையம்மன் நின்ற கோலத்தில் காணப்படுகிறாள். அம்மன் இரண்டு கைகளுடன் காட்சியளிக்கிறாள். வலது கை மலருடனும் இடது கை தொங்கல் நிலையிலும் காணப்படுகின்றன. இக்கோயில் உற்சவ மூர்த்தியும் மூலவர் போன்றே அமைந்துள்ளது. வலது கை கடக ஹஸ்தாவிலும் இடது கை தொங்கல் நிலையிலும் (டோலஹஸ்தா) உள்ளது. மேலும் தருமர், சியாமளாதேவி ஆகியோரின் உற்சவ மூர்த்திகளும் கருவறையில் காணப்படுகின்றன.

கருவறையை அடுத்து அமையும் அந்தராளப் பகுதியில் வலது பக்கத்தில் விநாயகரும் இடது பக்கத்தில் ஐந்து தலை நாகம் ஒன்றும் காணப்படுன்கிறன. மேலும் அந்தராளத்தின் தெற்கில் வடக்கு நோக்கி வழக்கமாக திரெளபதி அம்மன் கோயில்களில் காணப்படும் செம்பாலான காளி தலை அமைந்துள்ளது.

இதனருகே பஞ்சபாண்டவர், கிருஷ்ணர், அரவான், குந்திதேவி ஆகியோரின் மரச் சிற்பங்களும் வைக்கப்பட்டுள்ளன.

அந்தராளத்தைத் தொடர்ந்து அமையும் அர்த்தமண்டபம் நான்கு சதுரத் தூண்களைக் கொண்டது. இம்மண்டபம் வவ்வால் நத்தா மண்டபமாகக் கட்டப்பட்டுள்ளது. இம்மண்டபத்தின் தெற்கில் காளிக்குத் தனி சன்னதி அமைக்கப்பட்டுள்ளது. இச்சுதையாலான உருவம் ஏறத்தாழ ஆறடி உயரமுள்ளது. காளி இரண்டு கைகளுடன் அமர்ந்த கோலத்தில் காணப்படுகிறாள். அவளதுவலது கையில் சூலமும் இடதுகையில் கபாலமும் காணப்படுகின்றன. காளி இடது காலை மடக்கி வலது காலைத் தொங்கல் நிலையில் வைத்துள்ளாள். இரண்டு கோரைப்பற்கள் வெளியே நீட்டியுள்ளன. இச்சன்னதியைத் தொடர்ந்து தெற்கில் திருச்சுற்றிற்குச் செல்லும் வழி அமைக்கப்பட்டுள்ளது. அதனருகே அரவான் தலை சுதையால் செய்யப்பட்டு வைக்கப் பட்டுள்ளது. அரவான் அர்ச்சுனனின் மகனாவார். அர்ச்சுனனுக்கும் நாக கன்னிகைக்கும் பிறந்தவன் அரவானாகும். இச் சிலையின் நேரெதிரே வடக்கு அர்த்த மண்டபத்தில் முத்தால் ராவுத்தன் சுதையுருவம் வைக்கப்பட்டுள்ளது. காளியின் நேரெதிரே வீரபத்திரர் சிலை உள்ளது. இது சுதையாலானது. நான்கு கைகளுடன் வீரபத்திரர் காட்சியளிக்கிறார். இடது இரண்டு கைகளிலும் கபாலம், தலை முதலியன உள்ளன. வலது கைகள் சிதிலமடைந்துள்ளன.

அர்த்தமண்டபத்தின் நடுவில் அம்மனை நோக்கி வீரபத்திரர், இரண்டு இலிங்கங்கள், பலிபீடம், கொடி மரம் ஆகியவை வரிசையாக ஒரு பீடத்தின் மேல் வைக்கப்பட்டுள்ளன. அர்த்த மண்டபத்தின் வடக்கு வாயிலின் நேர் எதிரே வடக்கு நோக்கி சியாமளாதேவி அம்மன் சன்னதியுள்ளது.

இக்கோயில் கருவறை அதிட்டானம் கருங்கல்லாலானது. அதன் சுவர்கள் செங்கல்லாலானவை. இது ஒரு வட்டமான சிகரத்தையுடைய அல்ப விமானம். இதன் சிகரத்தின் மேல் ஒரு கலசம் காணப்படுகிறது.

வாயில் கோபுரம் இரண்டு தளங்களையுடையது. அதன் சிகரம் சால அமைப்புடையது. அதில் மூன்று கலசங்கள் உள்ளன. கர்ணகூடு-சால-நீடம்-நாசிகோஷ்டம்—சாலை—நீடம்-கர்ணகூடு என்ற அமைப்பில் வாயில் கோபுரம் அமைந்துள்ளது. சாலப் பகுதியில் அம்பாள் படிமம் உள்ளது. அவளருகே இரண்டு சாமரம் வீசும் பெண்களும் துவாரபாலகிகளும் நிற்கின்றனர்.

இக்கோயிலில் நித்யபூசை தினமும் காலையில் நடைபெறுகிறது. ஆடி மாதம் உற்சவம் விமரிசையாக நடத்தப்படுகிறது. மகாபாரதக் கதை 22 நாட்கள் நடைபெறுகிறது. கொடியேற்றம் அன்று கரகம், குந்தம் முதலியவற்றைத் தெருத் தெருவாகக் கொண்டு செல்வார்கள். மாகபாரதக் கதை முடிக்கும் போது கூந்தல் முடித்தல் நிகழ்ச்சி நடைபெறும். அம்மனை வேண்டிக் கொண்டவர்கள் அன்று தீ மிதித்து வழிபடுவார்கள்.

## 54. திரௌபதையம்மன் கோயில்

இக்கோயில் தஞ்சாவூர் கரந்தையில் மந்தாரடித் தெருவில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. நாட்டார், கள்ளர், அகம்படியர் ஆகிய குலத்தினரின் குலதெய்வமாக இவ்வம்மன் வழிபடப்படுகிறாள். இக்கோயிலின் நீள, அகலம் 8×5 மீட்டர் ஆகும்.

கருவறையில் அம்மன் இரண்டு கைகளுடன் நின்ற கோலத்தில் காட்சி தருகிறாள். வலது கை கடக ஹஸ்த முத்திரையிலும் இடது கை தொங்கல் நிலையிலும் காணப்படுகின்றன. கருவறையில் பஞ்சபாண்டவர் மரச்சிற்பங்கள் காணப்படுகின்றன. பல வருடங்களுக்கு முன் இக்கோயிலில் உற்சவம் சிறப்பாக நடைபெற்றது என இதன்மூலம் தெரிய வருகிறது. தற்போது உற்சவம் எதுவும் விசேடமாக நடைபெறுவதில்லை.

கருவறையைத் தொடர்ந்து அமையும் சிறிய மண்டபத்தின் மேற்கில் கிழக்கு நோக்கி துர்க்கைச் சிலை காணப்படுகிறது. துர்க்கை நின்ற கோலத்தில் நான்கு கைகளுடன் காட்சி தருகிறாள். மேல் வலது கையில் உருத்திராச்ச மாலையும் மேல் இடது கையில் மலரையும் வைத்துள்ளாள். கீழ்இரண்டு கைகள் அபயவரத

முத்திரையுடன் காட்சி தருகின்றன. இதனைத் தொடர்ந்து பேச்சியாயி, பிடாரி, நாகக்கற்கள், கூம்பு வடிவ கல் முதலியன இம்மண்டபத்தில் காணப்படுகின்றன. இம்மண்டபத்தின் முன்னால் சிறிய முன்மண்டபமும் திருச்சுற்று மண்டபமும் காணப்படுகின்றன.

இக்கோயிலில் கருவறை கொண்டு அமையும் விமானம் அல்ப விமானமாகும். இதன் வட்டமான சிகரத்தின் மேல் ஒரு கலசம் காணப்படுகிறது. இக்கோயில் கருவறை செங்கல்லால் கட்டப்பட்டுள்ளது. இது ஏறத்தாழ 200 வருடங்களுக்கு முற்பட்ட கோயிலாகும்.

இக்கோயிலைத் தற்காலத்தில் தெருவார்களே பரிபாலனம் செய்து வருகின்றனர்.

## 55. திரௌபதையம்மன் கோயில்

இத்திருக்கோயில் தஞ்சை கரந்தைப் பகுதியில் மேல் நீத்துக்காரத் தெருவில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. இக்கோயிலின் நீள, அகலம் 10×6 மீட்டர் ஆகும்.

கருவறையில் திரௌபதையம்மனின் கல்லாலான படிமம் உள்ளது. அம்மன் நின்ற கோலத்துடன் இரண்டு கைகளுடன் காணப்படுகிறாள். இடது கையில் தாமரைப் பூவை வைத்துள்ளாள். வலது கை டோலஹஸ்த நிலையில் உள்ளது. இதன் செப்புப் படிமமான உற்சவர் வலது கையில் கிளி உள்ளது. இடது கை கடக முத்திரையில் அமைந்துள்ளது.

கருவறையைத் தொடர்ந்து அமையும் அந்தராளத்தில் கருவறை வாயிலின் வலது புறத்தில் இரண்டு விநாயகர் சிற்பங்களும் இடது பக்கத்தில் இரண்டு ஆஞ்சநேயர் சிற்பங்களும் உள்ளன. இவை கருங்கல்லாலானவை. அந்தராளத்தின் தெற்குச் சுவரில் அமைந்துள்ள உள்கோஷ்டத்தில் காளியின் தலையும் முகமும் அழகுடன் அமைக்கப்பட்டுள்ளது. இது செம்பாலான உருவமாகும். வடக்கு நோக்கி இச்சிலை அமைந்துள்ளது. இவ்வந்த

ராளப் பகுதியில் மரத்தாலான பஞ்சபாண்டவர் சிலைக உள்ளன. உற்சவத்தின் போது இவை பயன்படுத்தப்படுகின்றன.

அந்தராளத்தைத் தொடர்ந்து 12 தூண்களையுடைய அர்த்த மண்டபம் உள்ளது. அந்தராள வாயிலின் வலது பக்கத்தில் பீமனின் மனைவியான கமலக்கண்ணி சிலையும் இதனைத் தொடர்ந்து மதுரைவீரன் சிலையும் கிழக்கு நோக்கி அமைந்துள்ளன. பேச்சியாயி 'கல்' வடக்கு நோக்கி மதுரை வீரன் அருகே அர்த்த மண்டபத்தில் வைக்கப்பட்டுள்ளது. அந்தராள வாயிலின் இடன பக்கத்தில் முத்தால் ராவுத்தன் மரப்படிமம் காணப்படுகிறது. இது கிழக்கு நோக்கி அமைந்துள்ளது.

அர்த்த மண்டபத்தில் அம்மனை நோக்கி ஐந்து தலை நாகம், வீரபத்திரர், இலிங்கம், இரண்டு தலை நாகம் முதலிய கற்சிலைகள் ஒரு தளத்தின் மேல் உள்ளது. இதன்மேல் ஏகதள விமான சிகரம் ஒன்று தற்காலத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இதன் வட்டமான சிகரத்தில் சிறிதும் பெரிதுமாக எட்டு நாசிகள் அமைக்கப்பட்டுள்ளன. அர்த்த மண்டபத்தின் வாயில் வடக்குத் திசையில் அமைந்துள்ளது.

இக்கோயிலின் கருவறை கொண்டு அமையும் விமானம் அல்பவிமானமாகும். இதன் சிகரத்தின் கீழ் கிரீவம் காணப்படவில்லை. சிகரம் ஆறு பட்டைகளை உடையது. சிகரத்தின் மேல் ஒரு கலசம் காணப்படுகிறது. கருவறைச் சுவர்கள் செங்கற்களாலானவை. இக்கோயில் ஏறத்தாழ 500 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டது.

காலம் காலமாக வன்னியர் குல பரம்பரையினர் இக்கோயிலைப் பராமரித்து வருகின்றனர். உச்சிக் காலத்தில் தினசரி பூசை நடைபெறுகிறது. ஆடி மாதம் 22 நாட்கள் உற்சவம் சிறப்பாக நடைபெறுகிறது. மரத்தாலான அன்ன வாகனம், பஞ்சபாண்டவர் சிலைகள், முத்தால் ராவுத்தன் உருவம், குதிரை வாகனம் முதலியன இக்கோயிலில் உள்ளன.

## 56. திரௌபதையம்மன் கோயில்

இக்கோயில் தஞ்சாவூர் கரந்தைப்பகுதியில் கீரைக்காரத் தெருவில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. இக்கோயில் நாயக்கர், மராட்டியர் காலத்திலிருந்தே நிலைத்து வருகிறது. தஞ்சையில் அமைந்துள்ள திரௌபதையம்மன் கோயில்களில் இது சற்றுப் பழமையானதாக இருக்கலாம். இக்கோயிலின் நீள, அகலம் $12 \times 10$ மீட்டர் ஆகும்.

இக்கோயில் கருவறையில் அம்மன் நின்ற கோலத்தில் பத்மா சனத்தில் காணப்படுகிறாள். அம்மன் இரண்டு கைகளையுடைய வள். வலது கையில் மலரை வைத்துள்ளாள். இடது கை டோல ஹஸ்த நிலையில் காணப்படுகிறது. இவ்வம்மனின் வலது பக்கத் தில் விநாயகர் சிலை ஒன்று காணப்படுகிறது. அம்மனின் மூலவர் சிலை முன்பு திரௌபதையம்மன் உற்சவர் சிலை உள்ளது. நின்ற கோலத்தில் உற்சவர் சிலை காணப்படுகிறது. இதனருகே கிருஷ் ணர் சிலையும், குட்டச்சி என்ற கிராம தேவதையின் சிலையும் உள்ளது. இவ்விரண்டு சிலைகளும் மரத்தாலானவை. உற்சவர் சிலை செம்பாலானது. இக்குட்டச்சி எருக்கம் செடியிருந்து உற் பத்தியானவள். வலது கை தொங்கலாகவும் இடது கை கடக ஹஸ்த நிலையிலும் உள்ளது.

கருவறையைத் தொடர்ந்து சிறிய அந்தராளப்பகுதி காணப் படுகிறது. இதனையடுத்து சிறிய முன்மண்டபம் உள்ளது. இம் மண்டபம் மராட்டியர் பாணியில் அமைந்துள்ளது. முன்மண்ட பத்தில் அந்தராள வாயிலின் இருமருங்கிலும் விநாயகர், சுப்ர மண்யர் சிலைகள் உள்ளன. இம்முன்மண்டபத்தின் தெற்குச்சுவர் கோஷ்டத்தில் காளியின் தலை செம்பால் செய்து வைக்கப்பட் டுள்ளது. அது வடக்கு நோக்கி அமைந்துள்ளது. இம்மண்டபத் தின் வடக்கில் பஞ்சபாண்டவர் மரச்சிலைகள் வைக்கப்பட்டுள்ளன. இம்மண்டபத்தின் வெளிச்சுவர் இருமருங்கிலும் இரண்டு பெண் தலைகள் உள்ளன. இவையும் காளியின் தலைகளாகும்.

இம்மண்டபத்தைத் தொடர்ந்து தெற்கில் அமையும் சிறிய சன்னதியில் பீமனின் மனைவியான கமலக்கண்ணி சிலை உள்ளது.

மகாமண்டபத்தின் நடுவில் வீரபத்திரர் (2), இலிங்கம் ஆகியவை ஒரு பீடத்தின் மேல் வைக்கப்பட்டுள்ளன. இதன் வடக்கில் ஒரு சன்னதியில் லாடமுனி காணப்படுகிறார். அவர் முன்னாள சுதையாலான இரண்டு குதிரை வாகனங்கள் உள்ளன. வலது பக்கத்துக் குதிரையின் அருகே முருகன் சிலை உள்ளது. இது மேற்கு நோக்கி அமைந்துள்ளது.

இதனருகே கிழக்குச் சுவரின் பக்கத்தில் வரிசையாக ஏழு கற்சிலைகள் உள்ளன. இவை மேற்கு நோக்கி அமைந்துள்ளன. இப்படிமங்களில் சில கிராம தேவதைகளாகும். முனீஸ்வரன், மதுரைவீரன், நாகக் கற்கள் முதலியன இவற்றில் காணப்படுகின்றன. இவற்றினருகே வடக்கு நோக்கி வடக்குச் சுவர் அருகே ஐந்து படிமங்கள் உள்ளன. பலிபீடம், கூம்பு வடிவ கல் மற்றும் கற்சிலைகள் இவற்றில் உள்ளன. கற்சிலைகள் கிராம தெய்வங்களாகும்.

இக்கோயிலில் அமையும் விமானம் அல்பவிமானமாகும். வட்டமான சிகரத்தின் மேல் ஒரு கலசம் உள்ளது. சிகரத்தில் நான்கு நாசிகள் உள்ளன. கருவறைச் சுவர்கள் கெங்கல்லால் கட்டப்பட்டுள்ளன.

இக்கோயிலில் நித்யபூசை தினமும் காலையில் நடைபெறுகிறது. பங்குனி மாதத்தில் பாற்குடம் எடுத்தல் நடைபெறுகிறது. புரட்டாசி மாதத்தில் உற்சவம் நடைபெறும். தீ மிதித்தல் நிகழ்ச்சி உற்சவத்தின்போது உண்டு. திரௌபதை அம்மன் கதை அச்சமயம் படிக்கப்படுகிறது.

## 57. நவதுர்க்கை (சியாமளாதேவி அம்மன் கோயில்)

இக்கோயில் தஞ்சை மானோஜியப்பா வீதியில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. ஆரம்ப காலத்தில் சியாமளாதேவி அம்மன் கோயிலாகவே இது விளங்கியது. தற்போது துர்க்கை கோயிலாக மாற்றப்பட்டுள்ளது. தெருவார்கள் இக்கோயிலைப்

பராமரித்து வருகின்றனர். இக்கோயிலின் நீள, அகலம் 3 × 2 மீட்டர் ஆகும்.

இக்கோயில் கருவறையில் அம்மன் நின்ற கோலத்தில் காணப்படுகிறாள். இச்சிலை கருங்கல்லாலானது. அம்மன் நான்கு கைகளையுடையவள். வலது இரண்டு கைகளிலும் மேலிருந்து கீழாக முறையே சக்கரமும் அபய முத்திரையும் காணப்படுகின்றன. இடது இரண்டு கைகளிலும் மேலிருந்து கீழாக முறையே சங்கு, வரதமுத்திரை முதலியன அமைந்துள்ளன. இவ்வம்மனின் பின்னால் கரகம் ஒன்று வைக்கப்பட்டுள்ளது. கரகத்தைச் சுற்றி எட்டு தலைகள் காணப்படுகின்றன.

கருவறையைத் தொடர்ந்து முன்னால் அமையும் சிறிய முன்மண்டபத்தின் தெற்குச் சுவரில் சுதையாலான பேச்சியாயி சிலை பெரிதாகக் காணப்படுகிறது. பேச்சியாயி இரண்டு கைகளை யுடையவள். மேலிரண்டு கைகள் மேனோக்கி வைக்கப்பட்டுள்ளன. கீழிரண்டு கைகள் அவள் மடியிலுள்ள குழந்தையின் வயிற்றைக் கிழிப்பதாக உள்ளது. அவள் எதிரே வடக்குச் சுவரருகே மதுரை வீரன், வெள்ளையம்மாள், பொம்மியம்மாள் ஆகியோருடன் காணப்படுகிறார். கருவறை வாயிலின் இருமருங்கிலும் துவார பாலகிகள் சிலைகள் உள்ளன. துவாரபாலகிகள் டமருகம், கதா யுதம், பாசம், தர்ஜனி முத்திரை ஆகியவற்றுடன் காட்சி தருகின்றனர்.

இக்கோயிலில் கருவறையைத் தன்னுள்ளடக்கி அமையும் விமானம் அல்பவிமானமாகும். இதன் வட்டமான சிகரத்தின் மேல் ஒரு கலசம் அமைந்துள்ளது. எட்டு நாசிகள் சிகரத்தில் காணப்படுகின்றன. கிரீவ கோஷ்டத்தில் அம்மன் சிலைகள் வைக்கப்பட்டுள்ளன. முன்மண்டப வாயிலின் மேல் சாலசிகரம் மூன்று கலசத்துடன் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் சியாமளா தேவிஅம்மன் சுதையுருவம், பூதங்கள், சாமரப் பெண்கள் சுதை யுருவங்கள் ஆகியவை வாயில் மேல் அமைக்கப்பட்டுள்ளன.

இக்கோயிலில் நித்யபூசை தினமும் காலையிலும் மாலை யிலும் நடைபெறுகிறது. ஆடி மாதம் உற்சவம் நடைபெறுகிறது.

கரகம், பாற்குடம் முதலியன உற்சவத்தின் முக்கிய அம்சங்கள் ஆகும். மார்கழி 30 நாட்கள் விசேட பூசைகள் செய்யப் படுகின்றன.

## 58. மகாலட்சுமி அம்மன் கோயில்

இக்கோயில் தஞ்சாவூர் கருந்தட்டான்குடி சுண்ணாம்புக் காரத் தெருவில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. இக்கோயிலின் நீள, அகலம் 10×10 மீட்டர் ஆகும். இக்கோயிலைக் குறும்பர் மலைஜாதி மக்கள் நிர்வகித்து வருகின்றனர். குறும்பர்களின் குலதெய்வமாக இவ்வம்மன் வழிபடப்படுகிறாள். குறும்மர்கள் வாழும் பல நகரங்களில் மகாலெட்சுமிஅம்மனுக்குத் தனிக்கோயில் கட்டி வழிபடும் வழக்கம் உள்ளது. திருச்சி, உறையூர், நீலகிரி, குளித்தலை, புதுக்கோட்டையில் செல்விகுடி, ஆரணிப்பட்டி போன்ற இடங்களில் இக்குறும்பர்கள் வாழ்கின்றனர். குளித் தலையில் மேல் மகாதானபுரத்தில் அமைந்துள்ள மகாலட்சுமி அம்மன் கோயில் விசேடமானது.

இக்கோயிலில் மூன்று கருவறைகள் உள்ளன. நடுவில் அமைந்துள்ள கருவறையில் மகாலட்சுமி அம்மன் அமர்ந்த கோலத்தில் காட்சி தருகிறாள். இச்சிலை கருங்கல்லாலானது. அம்மனின் வலது, இடது மேற்கைகளில் முறையே அங்குசமும் பாசமும் உள்ளன. கீழிரண்டு கைகளில் மலர்கள் உள்ளன. அம்மன் அமர்ந்த கோலத்தில் காணப்படுகிறார். அம்மனின் இடது பக்கத்தில் காணப்படும் அறையில் வள்ளி—தெய்வானை—முருகன் சிலைகள் உள்ளன. வலது புறத்தில் அமைந்துள்ள கரு வறையில் மல்லாய் அம்மன் என்ற அம்மன் சிலை வைக்கப்பட் டுள்ளது. இச்சன்னதியில் அகோரவீரபத்திரர், வீரப்பெருமாள் சிலைகளும் உள்ளன. இவற்றினருகே ஆட்டு மந்தைகளின் சிற்பங் களும் காணப்படுகின்றன. இக்கருவறைகளுக்கு முன்பு இரண்டு வட்டமான தூண்களையுடைய ஒரு முன்மண்டபம் உள்ளது. இத்தூண்களின் இடைப்பட்ட மேற்பகுதியில் வளைவுகள் அமைந்துள்ளன. இம்மண்டபமும் கருவறைமேல்

அமையும் கூறைகளும் மராட்டியர் பாணியிலே அமைந்துள்ளன. இம்மண்டபங்களுக்கு முன்னால் திருச்சுற்று உள்ளது. முன் திருச்சுற்றில் சந்தன கருப்பண்ணசாமி சன்னதி கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. அதில் வாளுடனும் கதாயுதத்துடனும் கருப்பண்ணசாமி நின்ற கோலத்தில் காட்சி தருகிறார். இக்கோயில் கிழக்கு நோக்கியே மூர்த்தங்கள் அமைந்துள்ளன. ஒரு சிறிய வாயில் தெற்குப் பகுதி திருச்சுற்று மதிலில் கருப்பண்ணசாமி சன்னதிக்கு முன்பு அமைந்துள்ளது.

இக்கோலியில் நித்யபூசை தினமும் காலையில் நடைபெறுகிறது. ஆடி 18-ஆம் பெருக்கு அன்று விசேட பூசைகளும் உற்சவமும் நடைபெறுகின்றன. இக்காலத்தில் 18 நாட்களும் இவ்வம்மனை வேண்டி வழிபடுபவர்கள், விரதம் இருப்பவர்கள் தங்கள் தலையில், இறுதிநாள் விரதத்தில், தேங்காய் உடைத்து விரதத்தை முடிப்பர். சந்தன கருப்பண்ணசாமிக்கு ஆடிப் பெருக்கில் கிடாய் பலியிடும் வழக்கம் உள்ளது. 'சேர்வை ஆட்டம்' என்ற மலை ஜாதி நடனம் இவ்வாடிப் பெருக்கின் போது இக்குறும்பர்களால் ஆடப்படுகிறது.

தஞ்சை கரந்தை குறும்பர் சங்கத்தின் நிர்வாகத்தின் கீழ் இக்கோயில் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

## 59. மாரியம்மன் கோயில்

(அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில்)

அருள்மிகு ஸ்ரீ முத்து மாரியம்மன் ஆலயம் தஞ்சை ராஜவீதியில் கொடிமரத்தை மூலை அருகில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. இக்கோயின் நீள, அகலம் 9×8 மீட்டர் ஆகும்.

இக்கோயில் அமைந்திருக்கும் இடமானது முற்காலத்தில் இடுகாடாக இருந்தது. இருநூறு வருடங்களுக்கு முன்பு இப்பகுதியில் வாழ்ந்த ஒரு கன்னிப்பெண் அம்மை நோயால் இறந்து போனாள் அப்பெண்ணைத் தற்போதைய கோயில் இருக்கும் இடத்தில் புதைத்தனர். அவளைப் புதைத்த இடத்தில் முத்துமாரி

யம்மன் மகிமையை இடுகாட்டுக் காவலர்கள் அறிந்தனர். முத்து போன்ற அம்மை நோயை உண்டுபண்ணும் இவ்வம்மனுக்கு உருவம் சமைத்து கூரைகட்டி மக்கள் இவ்விடத்தில் பிற்காலத்தில் வழிபட்டனர். தஞ்சையை மராட்டியர்கள் ஆண்ட காலத்தில் சரபோஜி இவ்விடத்திலிருந்த சிறிய கோயிலை நீக்கி இப்புதிய கருங்கல் கோயிலை எழுப்பினார். கீழராஜ வீதியும் பிற கடைகளும் அதன் பின்புதான் இப்பகுதியில் தோன்றியது. இப்பகுதியில் வாழும் யாதவ குலத்தினருக்கு இவ்வம்மன் குலதெய்வமாக இருந்து வருகிறது. மராட்டியர்களும் பிறரும் இவ்வம்மனை வழிபட்டு வருகின்றனர். தொடக்க காலத்தில் இவ்வம்மனுக்கு ஆடு, கோழி முதலியன பலியிட்டு வழிபட்டனர். தற்காலத்தில் பலியிடுதல் மறைந்து விட்டது.

இக்கோயில் கருவறையில் முத்து மாரியம்மன் அமர்ந்த கோலத்தில் காட்சி தருகிறாள். இடது காலை ஆசனத்தில் மடக்கி வைத்துக் கொண்டு வலது காலைத் தொங்க விட்ட நிலையில் அம்மன் அமர்ந்து அருள் பாலிக்கிறாள். இவ்வம்மனுக்கு நான்கு கைகள் உள்ளன. வலது மேல் கையில் பாசமும் இடது மேல்கையில் உடுக்கையும் உள்ளன. உடுக்கையில் நாகப்படம் உள்ளது. வலது கீழ்க்கையில் கத்தியும் இடது கீழ்க்கையில் கபாலமும் காணப்படுகிறது. அம்மனின் தலையில் கரண்ட மகுடம் அமைந்துள்ளது. ஜ்வாலா பிரபை அமைப்பு அதன் பின்னால் உள்ளது. அம்மனின் பின்புறம் பித்தளையாலான திருவாசி ஒன்று காணப்படுகிறது. கருவறையை அடுத்து சிறிய அந்தராளப் பகுதி அமைந்துள்ளது. அந்தராள வாயிலின் இருமருங்கிலும் வழக்கமாக அமையும் துவாரபாலகிகள் இக்கோயிலில் இல்லை. அதற்குப் பதிலாகத் தெற்கில் விநாயகர் சிலையும் வடக்கில் வள்ளி—தெய்வானை—முருகன் சிலைகளும் உள்ளன. தொடர்ந்து அமையும் அர்த்த மண்டபத்தில் அந்தராளத்தின் முன்னால் நந்தியும் பலி பீடமும் சூலமும் காணப்படுகின்றன. இவை அம்மனை நோக்கி அமைந்துள்ளன.

அர்த்தமண்டபத்தின் தெற்கில் இராமலிங்க சுவாமி சன்னதி, விநாயகர் சன்னதி, பேச்சியம்மன் சன்னதி முதலியன காணப்படுகின்றன. பேச்சியம்மன், விநாயகர் சிலைகள் சுதையாலானவை.

பேச்சியம்மன் எட்டு கைகளுடன் காணப்படுகிறாள். அவளது இடது காலை மடக்கிய நிலையில் ஆசனத்தில் வைத்துள்ளாள். வலது கால் தொங்கிய நிலையில் காணப்படுகிறது. இடது கால் மடியில் கிடக்கும் குழந்தையின் வயிற்றை கீழ் வலது இடது கைகள் கிழிக்கும் நிலையிலும் நாவினை வெளியே நீட்டிக் கொண்டிருக்கும் நிலையிலும் அமமன் காட்சியளிக்கிறாள். அவளது தலையில் ஜடாமுடி காணப்படுகிறது. இப்பிம்பம் தொடக்க காலத்திலிருந்தே காணப்படுவதாகக் கூறுகின்றனர். பேச்சியம்மனுக்கு நேர் எதிரே வடக்கில் இடும்பன் நின்ற கோலத்துடன் காணப்படுகிறார். அதைத் தொடர்ந்து விநாயகருக்கு நேர் எதிரே வடக்கில் பழனியாண்டி நின்ற நிலையில் காணப்படுகிறார். அதனைத் தொடர்ந்து மதுரை வீரன், ஐயனார், சங்கிலிக் கருப்பன் கற்சிலைகள் கோஷ்டத்தில் அமைக்கப்பட்டுள்ளன. அர்த்த மண்டபத்தில் அனைத்துப் படிமங்களும் கோஷ்டங்களிலேயே அமைக்கப்பட்டுள்ளன. மதுரைவீரன் தனது வலது கையில் வாளுடனும் இடது கையில் கேடயத்தைத் தாங்கிய நிலையிலும் காணப்படுகிறார். ஐயனார் வலது கையில் வாளையும் இடது கையில் கதாயுதத்தையும் தாங்கியுள்ளார். சங்கிலிக்கருப்பன் வலது கையில் வாளுடன் இடது கையில் கதாயுதத்துடனும் காணப்படுகிறார். இச்சிற்பங்கள் கருங்கல்லாலானவை. இவ்வர்த்த மண்டபச் சிற்பங்கள் அர்த்த மண்டபம் கட்டப்பட்ட காலத்திலிருந்து பிரதிட்டை செய்யப்பட்டிருக்கலாம். அது ஏறத்தாழ 150 ஆண்டுகளாகும். அர்த்த மண்டபம் மராட்டியர் பாணியில் கட்டப்பட்டுள்ளது. இம்மண்டபத்தில் நான்கு பெரிய சதுரத் தூண்களும் அவற்றிடையே வளைவுகளும் உள்ளன.

அர்த்த மண்டபத்தின் தெற்கில் ஒரு வாயிலும் வடக்கில் ஒரு வாயிலும் அமைந்துள்ளன. அதன் வழியாகச் திருச்சுற்றிற்குச் செல்லலாம். திருச்சுற்றின் தெற்கில் ஒரு மடப்பள்ளியும் வாகன அறையும் அமைந்துள்ளன. வடக்கில் நவகிரகங்களுக்குத் தனிச் சன்னதி தற்காலத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

இக்கோயிலில் அமைந்துள்ள விமானம் அல்ப விமானமாகும். மராட்டியர்கள் கட்டிய பிற கோயில்களைப் போன்றே இதுவும் அமைந்துள்ளது. கருவறைச்சுவர்களில் கோஷ்டங்கள்

எதுவும் அமைக்கப்படவில்லை. வடக்கில் அமையும் பிரநாளத்தின் மேல் ஒரு சிறிய கருங்கல் பூதம் சங்கு ஊதும் நிலையில் வடிக்கப் பட்டுள்ளது. இது அழகான சிற்பமாகும். கருவரை பிரஸ்தாரத் தில் அமையும் கபோதத்தின் கூடுகள் வரிசையாக அமைக்கப்பட் டுள்ளன. கபோதத்தின் மேல் யாளி வரிசைகளோ கபோதத்தின் கீழ் பூத, பத்ம ஹம்ச வரிசைகளோ இல்லை. விமானத்தின் சிகரம் வட்டமானதாகும். வட்டமான சிகரத்தின்மேல் ஒரு கலசம் காணப்படுகிறது. நான்கு பெரிய நாசிகள் சிகரத்தில் நான்கு திசைகளிலும் சிறிய கோஷ்டங்களுடன் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றிடையே சிகரத்தில் நான்கு சிறிய நாசிகள் காணப்படு கின்றன. சிகரத்தின் கிரீவம் சற்றுப் பெரிதாக அமைக்கப்பட் டுள்ளது. விமானத்தில் அமையும் சிகரத்தில் காணப்படும் கலசத் தில் மராட்டியர் காலத்தில் வெட்டப்பட்ட வசனங்கள் உள்ள தாகக் கூறப்படுகிறது. விமானத்தின் மூலைகளில் கிழக்கில் ஓர் உடலும் ஒரு தலையுமுடைய சிங்கங்களும் மேற்கில் இருஉடலும் ஒரு தலையுமுடைய சிங்கங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

இக்கோயிலில் நித்யபூசை தினமும் காலையிலும் மாலை யிலும் நடைபெறுகிறது. நவராத்திரி அன்று விசேட பூசைகள் நடத்தப்படுகின்றன. அம்மனுக்கு அலங்காரம் நவராத்திரி அன்று செய்யப்படுகிறது. மார்கழி 30 நாட்கள் காலையிலும் விசேட பூசைகள் உண்டு. திருப்பாவை, அருட்பா முதலியன மார்கழி 30 நாட்கள் காலையில் படிக்கப்படுகின்றன. மாசி மாதத்தில் தெரு வார்கள் கரக உற்சவம் நடத்துகிறார்கள். இம்மாதத்திலும் ஆவணி மாதத்திலும் அம்மன் புறப்பாடு உண்டு. அம்மன் உற்சவர் கருவறையில் வைக்கப்பட்டுள்ளது, மூலவரைப் போன்று இச் செப்புச் சிலை காணப்படுகிறது. ஆனால் நாகபடம் ஒன்று அம்மன் பின்னால் உற்சவ மூர்த்தியுடன் இணைக்கப்பட்டுள்ளது. இவ்வுற்சவர் சிலை யாதவ குலத்தினரிடம் சில காலமாக இருந்து வந்தது. பின்பு இக்கோயிலில் வைக்கப்பட்டது.

இக்கோயில் தற்காலம் இந்து அறநிலைய பரிபாலனத் துறை யின் கீழ் செயற்பட்டு வருகிறது. குறைந்த அளவே சொத்துக் களையுடைய இக்கோயிலை இப்பகுதியைச் சார்ந்த யாதவ குலத்தினர் உபயத்தினால் சிறப்புற்று விளங்குகிறது.

## 60. மாரியம்மன் கோயில்

(அருள்மிகு மாரியம்மன்)

இச்சிறிய கோயில் தஞ்சை கீழ் அலங்கத்தில் வடக்கு நோக்கியுள்ளது. தெருவார்கள் இக்கோயிலைப் பராமரித்து வருகின்றனர். இக்கோயில் ஏறத்தாழ 100 ஆண்டுகளுக்கு முற்பட்டது. இக்கோயிலின் நீள, அகலம் 4 × 4 மீட்டர் ஆகும்.

இக்கோயில் கருவறையில் அம்மன் இரண்டு கைகளுடன் அமர்ந்த கோலத்தில் இருக்கிறாள். வலது கையில் கத்தியையும் இடது கையில் கபாலத்தையும் அம்மன் பெற்றிருக்கிறாள். இடது காலை மடக்கி வலது காலைத் தொங்கல் நிலையில் வைத்த வண்ணம் அம்மன் அமர்ந்திருக்கிறாள். கருவறையின் முன்னால் வாயிலின் இருமருங்கிலும் விநாயகர், சுப்ரமண்யர் சிலைகள் உள்ளன. முன்மண்டபம் நான்கு கல் தூண்களையுடையது. கருவறையைச் சுற்றிச் சிறிய பிரகாரம் தற்காலத்தில் அமைக்கப்பட்டுள்ளது. கருவறை தேவ கோஷ்டங்களில் மீனாட்சி, காமாட்சி, விசாலாட்சி சுதைச் சிற்பங்கள் தற்காலத்தில்முறையே கிழக்கு, தெற்கு, மேற்குத் திசைகளில் வைக்கப்பட்டுள்ளன. கோயில் வாயிலின் மேல் சுதையாலான அம்மன் உருவம் உள்ளது. அதன் இருமருங்கிலும் சிங்க வாகனங்கள் உள்ளன.

இக்கோயிலில் சிறிய அல்பவிமானம் அமைந்துள்ளது. அதன் வட்டமான சிகரத்தில் ஒரு கலசம் உள்ளது. எட்டு நாசிகள் சிகரத்தில் காணப்படுகின்றன. நான்கு பெரிய நாசிகளும் நான்கு சிறிய நாசிகளும் அமைக்கப்பட்டுள்ளன. கிரீவ கோஷ்டத்தில் அம்மன், வாராகி சுதைச் சிற்பங்கள் உள்ளன. மூலைகளில் சிங்க வாகனங்கள் அமர்ந்துள்ளன.

இக்கோயிலில் மார்கழி 30 நாட்கள் விசேட பூசைகள் நடைபெறுகின்றன. சித்திரை, வைகாசி மாதங்களில் கரகம், பாற்குடம் முதலியன எடுக்கப்படுகின்றன.

## 61. மாரியம்மன் கோயில்

(புற்று மாரியம்மன் கோயில்)

இத்திருக்கோயில் தஞ்சாவூர் கரந்தைப் பகுதியில் வடவாற்றங்கரையின் அருகில் வடக்கு நோக்கி அமைந்துள்ளது.

ஏறத்தாழ நூறு ஆண்டுகளாக இக்கோயில் செயற்பட்டு வருகிறது. இக்கோயிலின் நீள, அகலம் 12×4 மீட்டர் ஆகும்.

சமயபுரம் மாரியம்மனை வழிபட்டு வந்த இப்பகுதி மக்கள் வேண்டுதற்கிணங்க சமயபுரம் மாரியம்மனே இப்பகுதியில் வட வாற்றங்கரையில் ஒரு புற்றில் வந்து அமர்ந்துள்ளாள் எனக் கூறப் படுகிறது.

இக்கோயில் கருவறையில் ஒரு புற்று காணப்படுகிறது. அப் புற்றின் மேல் அம்மன் தலை வைக்கப்பட்டுள்ளது. கருவறை முன்னால் காணப்படும் அந்தராளத்தில் ஒரு பலிபீடம் காணப்படு கிறது. இவ்வந்தராளத்தில் உற்சவர் மாரியம்மனுக்கு ஐம்பொன் னால் சிலை செய்யப்பபட்டுள்ளது. இச்சிலை நான்கு கைகளுடன் வடிக்கப்பட்டுள்ளது. பத்மாசனத்தில் அமர்ந்த நிலையில் அம்மன் காணப்படுகிறார். வலது காலை ஆசனத்தில் மடக்கி வைத்துக் கொண்டு இடது காலைத் தொங்கல் நிலையில் அம்மன் வைத்துள் ளாள். வலது இரண்டு கைகளில் மேலிருந்து கீழாக முறையே பாம்புடன் இணைந்த டமருகமும் கத்தியும் உள்ளன. இடது கைகளில் மேலிருந்து கீழாக முறையே பாசம், கபாலம் முதலிய னவும் காணப்படுகின்றன. வாயிலில் இரண்டு துவார பாலகிகள் சிற்பங்கள் தற்காலத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

இக்கோயில் அமைந்துள்ள விமானம் அல்பவிமானமாகும். சதுரமான சிகரத்தில் ஒரு கலசம் உள்ளது. சிகரத்தில் 12 நாசி கள் உள்ளன. நாசிகளிலிருந்து கால்கள் கீழே வந்து சேருகின்றன. கிரீவம் சற்றும் பெரிதானதாகும். கிரீவ மூலைகளில் சிங்கங்கள் உள்ளன. இக்கோயில் முன்மண்டபம் சற்று நீளமானது.

இக்கோயிலில் பங்குனி மாதத்தில் பாற்குடம் எடுக்கிறார் கள். தை மாதத்தில் குத்துவிளக்குப் பூசை நடைபெறும். ஆடி மாதம் கடைசியில் பூச்சொறிதல் நடைபெறும். நவராத்திரி 9 நாட்கள் அலங்காரம் நடைபெறும். மாதந்தோறும் பௌர்ணமி மாதம் விசேட பூசை நடைபெறும் ஆவணி மாதம் நான்கு ஞாயிற்றுக் கிழமைகளிலும் விசேட பூசைகள் நடைபெறும். சந்தனக்காப்பு வருடத்துக்கு மூன்று முறை நடைபெறும். இக்

கோயிலில் மங்களகிரி, பிரபாவெளி போன்ற வாகன அமைப்புகள் உள்ளன. தஞ்சை, கரந்தை வணிகர் சங்கம் இக்கோயிலைப் பராமரித்து வருகிறது.

## 62. மாரியம்மன் கோயில்

*(செல்வநாயகியம்மன் கோயில்)*

இச்சிறிய கோயில் தஞ்சை மேலராஜவீதியில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. பல ஜாதியினருக்கும் குலதெய்வமாகி இவ்வம்மன் வழிபடப்படுகிறாள். இக்கோயிலின் நீள, அகலம் 4×4 மீட்டர் ஆகும்.

இக்கோயில் கருவறையில் அம்மன் அமர்ந்த கோலத்தில் காணப்படுகிறாள். அம்மன் நான்கு கைகளுடன் அமர்ந்துள்ளாள். வலது இரண்டு கைகளிலும் டமருகமும் கத்தியும் உள்ளன. இடது கைகளில் அங்குசமும் கபாலமும் காணப்படுகின்றன. அம்மன் இடது காலை மடக்கி பீடத்தில் வைத்துக்கொண்டு வலது காலைத் தொங்கல் நிலையில் வைத்துள்ளாள்.

இக்கோயில் ஏகபிரகாத்தையுடையது. திருச்சுற்றின் தென் மேற்கில் விநாயகரும் வடமேற்கில் செல்வநாயகி அம்மன் சிலைகளும் உள்ளன.

இக்கோயில் விமானம் ஓர் அல்ப விமானமாகும். வட்டமான சிகரத்தில் ஒரு கலசம் உள்ளது.

இக்கோயிலில் செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் விசேட பூசைகள் உண்டு. நவராத்திரியின் போது அலங்காரம், சந்தனக் காப்பு முதலியன நடைபெறும்.

இக்கோயிலில் தெருவார்கள் இக்கோயிலைப் பரிபாலனம் செய்து வருகிறார்கள்.

## 63. வாராகி கோயில்

தஞ்சைப் பெரிய கோயிலில் (பிருகதீச்வரம்) தெற்குத் திருச் சுற்றில் தென்கிழக்கு (சக்தி) மூலைக்கும் தெற்கு திக்குக்கும் பக்கத்தில் பெருவுடையார் விமானத்திற்குத் தென்கிழக்கில் வாராகிக்கு என்று ஒரு சிறிய தனிக்கோயில் உள்ளது. இதன் சந்நிதி கிழக்கு நோக்கியது. இக்கோயில் கிழக்கிந்தியக் கம்பெனி யார் காலத்தில் கோயில் முற்றுகையின் போது (உள்கோட்டை (citadel) யாகப் பயன்படுத்தப்பட்டபோது) நலிவுற்றுத் தஞ்சை மராட்டிய மன்னர்களால் செம்பூரான் கல்லாலான அதிட்டானச் சுவர் மேல் ஒரு எளிய கூம்பிய சுதை சுகரத்துடன் காட்சியளித் தது. இந்தியத் தொல்பொருள் இயல் துறையினர் இதை இப்போது செப்பனிட்டுப் பாதுகாத்துள்ளனர். இந்த தேவி தஞ்சை மக்களால் போற்றப்படுகிறாள். மக்கள் தொட்டில் கட்டுவது போன்ற நேர்ச்சிக்கடன் இறுக்கிறார்கள். வெளிநாடு சென்று வாழும் தஞ்சை மக்களும் நேர்ந்து கொண்டு குழந்தைகளுடன் வந்து தரிசனம் செய்கிறார்கள்.

# பயன்பட்ட நூற்கள்


Bhattacharya, N. N. 1973 History of Sakta Religion, Munshiram Manoharlal & Publishers Pvt. Ltd., New Delhi.

Cockalingom, V. 1987 History of Kodiyamman (Tamil) Kodiyamman Vazhipattukkazham, Thanjavur

எவலின்மாசிலாமணி மேயர், 1987 ''நாட்டுப்புற சமய ஆய்வு நெறிமுறைகள்'' நாட்டுப் புறவியல் ஆய்வுமுறைகள், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

Gopinatha Rao, T.A. 1971 Elements of Hindu Iconography, Indological Book House New Delhi

Joshna A. Fishman 1969 Language and Nationalism Two integrative Essays, Massachussets, U.S.A.

Kasambi, D.D. 1956 Introduction to the study of Indian History, Popular Book Depot, Bombay.

1962 Myth and Reality-Studies in the formation of Indian Culture. Popular Prakashan, Bombay

Kulathuran, G. 1980 Folk influence in Tamil Literature with special reference to Pallu, Kuravanchi and Nonti Natakam, (Unpublished Ph.D. Thesis) University of Kerala, Trivandrum.

| | | |
|---|---|---|
| Michael W. Master (Ed) | 1983 | Encyclopaedia of Indian Temple Architecture - Lower Dravida Desa. American Institute of Indian Studies, Varanasi. |
| Nagaswamy, R. | 1982 | Tantric Cult of South India, Agam Kala Prakashan, Delhi. |
| இராசு, எஸ். | 1987 | தஞ்சை மராட்டியர் கால கல்வெட்டுக்கள், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர். |
| Saletore, R. N. | 1982 | Vijayanagara Art, Sundeep Prakashan, New Delhi. |
| வானமாமலை, ந. | 1973 | தமிழர் பண்பாடும் தத்துவமும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை. |
| வேலுசாமி, எம். | 1987 | ''சிறு தெய்வ ஆய்வில் மேற்கொள்ளப்படும் ஆய்வு முறைகள்'' தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர். |
| வேங்கடராமையா, கே.எம். | 1984 | தஞ்சை மராட்டியர் மன்னர் கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர். |
| Balasubramoniam, S. R. | 1966 | Ealry Chola Art — Part I Asia Publishing House, Madras. |

# புகைப்படங்கள்

(குறிப்பு : இங்கு தரப்பட்டுள்ள எண்கள் முன்பே குறிக்கப் பட்டுள்ள கோயில் எண்களைக் குறிக்கும்)

1 அங்காளம்மன் கோயில்

1 அ வாயில் கோபுரம்

1 ஆ விமானம்

1 உ அங்காளம்மன், பாலகுருநாதர் (உற்சவர்)

1 ஒ பாவாடைராயன் (இரு மனைவிகளுடன்)

4 அம்பா பவானி அம்மன் கோயில்

4 அ மணிமல்லேஸ்வரர், காண்டேராயா, அம்பா பவானி

5 அன்னபூரணி அம்மன் கோயில்

5 அ அன்னபூரண அம்மன்

6 எல்லையம்மன் கோயில்

6 அ வாயில் கோபுரம்

6 ஆ குந்தாளதேவி, போத்ராஜா பலகைக் கல்

6 ஈ விமானம்

6 உ எல்லையம்மன் ரேணுகை தலை

6 ஐ மாதங்கியம்மன். துணைப்பெண்கள்

6 ஒ ராஜகோபால்சாமி

6 ஓ அகோர வீரபத்ரர்

6 ஔ அர்த்த நாரீஸ்வரர்

6 க ராஜகோபால்சாமி (துணைவியர்களுடன்)

6 ஞ கிருஷ்ணர் (ராதா-ருக்மணி)

6 ம சிவன்-ஊர்த்தவ தாண்டவம்

6 ய மகிசாசுர மர்த்தனி

6 ர தர்த்தாத்ரேயர் (திரிமூர்த்தி)

6 ல யசோதா-கிருஷ்ணன்

6 வ காளி

8 காக்காயி அம்மன் கோயில்

8 ஆ கோயில் விமானம்
8 இ காத்தாயி அம்மன்
8 ஈ பார்வதி அம்மன்
8 எ முடியாவழகி
8 ஏ குசலவர்
8 ஒ முத்துமுனி
8 ஓ செம்முனி
8 ஔ லாடமுனி
8 க வேதமுனி
8 ங கொடுமுனி
8 ச கருமுனி
8 ஞ வால்முனி
8 ட மதுரைவீரன் (இரு மனைவிகளுடன்)
8 ண இருளப்பன், காட்டேரி

10 காமாட்சியம்மன் கோயில்

10 அ வாயில் கோபுரம்
10 ஆ விமானம்

13 காமாட்சியம்மன் கோயில்

13 அ கோயில் (முன் தோற்றம்)
13 ஆ காமாட்சியம்மன் (மூலவர்-கதை)

16 காளியம்மன் கோயில்

16 அ காளியம்மன் (பழைய சிலை-நிசும்பசூதனி)
16 ஆ விமானம்
16 இ காளியம்மன் (புதிய சிலை)
16 உ கோயிலும் பிற சன்னதிகளும்
16 எ மாயா
16 ஏ விநாயகர்
16 ஐ துர்க்கை

17 காளியம்மன் கோயில்

17 அ விமானம்
17 ஆ வடபத்ர காளியம்மன்

18 காளியம்மன் கோயில்
- 18 அ ராஜகோபுரம் (முன் தோற்றம்)
- 18 இ விமானம்

19 காளியம்மன் கோயில்
- 19 அ விமானம்
- 19 ஆ துவாரபாலகி
- 19 இ துவார பாலகர்
- 19 உ காண்டேரால்
- 19 எ காளியம்மன்

20 காளியம்மன் கோயில்
- 20 அ அம்மன் (முழுத்தோற்றம்)

21 காளியம்மன் கோயில்
- 21 அ கோயில் (முன் தோற்றம்)
- 21 ஆ முத்துக்காளியம்மன் (பழைய சிலை)
- 21 இ முத்துக்காளியம்மன் (புதிய சிலை)

24 குந்தாளம்மன் கோயில்
- 24 அ விமானம், கோயில் வெளித்தோற்றம்
- 24 ஆ சிறு தெய்வங்கள்

26 கோடியம்மன் கோயில்
- 26 அ கோயில் (வெளித்தோற்றம்)
- 26 ஆ விமானம்
- 26 ஈ கோடியம்மன் (முழுத்தோற்றம்)
- 26 எ பச்சைக்காளி
- 26 ஏ பவளக்காளி

27 சியாமளாதேவி அம்மன் கோயில்
- 27 அ கரகம் (மரம், மண்)
- 27 ஆ கரகம் (வெள்ளி-பின் தோற்றம்)
- 27 இ நாயக்க அரசர் மக்கள்
- 27 ஊ அம்மன் உற்சவர்
- 27 எ நாயக்க அரசர் (மனைவியுடன்)

29 சியாமளாதேவி அம்மன் கோயில்

29 அ கோயில் (முன் தோற்றம்)

29 ஆ அம்மன்

31 சியாமளாதேவி அம்மன் கோயில்

31 அ அம்மன் கோயில் (தோற்றம்). விமானம்

31 ஆ கரகம்

32 சியாமளாதேவி அம்மன் கோயில

32 அ விமானம்

32 இ அம்மன்

33 சியாமளாதேவி அம்மன் கோயில்

33 அ கருவறை-புறத்தோற்றம்

43 செங்கமல நாச்சியம்மன் கோயில்

43 ஆ விமானம்

43 இ அம்மன் (செங்கமலநாச்சி)

43 ஈ கருப்பண்ணசாமி

43 ஊ மதுரை வீரன் சன்னதி

43 ஏ லாடமுனி

43 ஐ பட்டவன், உண்டிக் கருப்பு, பட்டவன் சன்னதிகள்

43 ஒ பட்டவன், பட்டவன் சன்னதிகள்

44 செங்கமல நாச்சியம்மன் கோயில்

44 ஆ அம்மன் (முழுத்தோற்றம்)

46 செங்கமல நாச்சியம்மன் கோயில்

46 அ அம்மன் சன்னதி-(முன்தோற்றம்)

46 ஆ அம்மன் சன்னதி-(பின்தோற்றம்)

46 இ அம்மன் சன்னதி (பக்கத் தோற்றம்)

46 ஈ அய்யனார் சன்னதி

46 உ சம்பளா தேவி சன்னதி. முன்தோற்றம்)

46 ஊ சம்பளா தேவி சன்னதி-பக்கத்தோற்றம்

46 எ முன்னடியான், பட்டவன், சன்னாசி, கருப்பு, மதுரைவீரன் சூலங்கள்

46 ஏ பட்டவன்; சன்னாசி. கருப்பு, முன்னடியான் முனியாண்டவர் சூலங்கள்

48 செங்கமல நாச்சியம்மன் கோயில்

48 அ அம்மன்

50 செல்லியம்மன் கோயில்

50 அ கோயில், விமானம்
50 ஆ செல்லியம்மன் (பழைய சிலை)
50 இ செல்லியம்மன் (புதிய சிலை)

51 திரௌபதையம்மன் கோயில்

51 அ விமானம்
51 ஆ காளி
51 இ பஞ்சபாண்டவர் (மரச்சிற்பம்)
51 ஈ அம்மன்-உற்சவர்
51 உ பஞ்சபாண்டவர்-திரௌபதை-கிருஷ்ணர்
51 ஊ திரௌபதை, சுருதி, பீமர், நாகக்கன்னி
51 ஒ நாகக்கல், வீரபத்ரர், ஆஞ்சனேயர் (முன்தோற்றம்)
51 ஓ நாகக்கல், வீரபத்ரர், ஆஞ்சனேயர் (பின்தோற்றம்)
51 ஔ பேச்சியாயி
51 க அகோர வீரபத்திரர்
51 ங முத்தால் ராவுத்தன்
51. ச மதுரைவீரன் (மனைவிகளுடன்)
51. ஞ கமலக்கண்ணி

52 திரௌபதையம்மன் கோயில்

52 அ திரௌபதையம்மன் (மூலவர்)
52 ஆ உற்சவர்-அம்மன்
52 ஈ பஞ்சபாண்டவர் (1)
52 உ பஞ்சபாண்டவர் (2)
52 ஊ வீரபத்ரர், நாகக்கல், கூம்புக்கல்
52 ஐ முத்தால் ராவுத்தன்
52 ஒ விமானம்-முன் மண்டபம்

53 திரெளபதையம்மன் கோயில்

53 அ வாயில் கோபுரம்
53 ஆ விமானம்
53 இ அம்மன் (மூலவர்)
53 ஈ அம்மன் (உற்சவர்)
53 உ பஞ்சபாண்டவர், அரிவான், குத்திதேவி,
53 ஏ காளி
53 ஐ வீரபத்திரர்
63 ஒ முத்தால் ராவுத்தன்
53 ஓ அரிவான்

55 திரைளபதியம்மன் கோயில்

55 அ அம்மன்-மூலவர்
55 ஆ அம்மன்-உற்சவர்
85 ஈ காளி
55 உ முத்தால் ராவுத்தன்

56 திரெளபதையம்மன் கோயில்

56 அ அம்மன் (மூலவர்)
56 ஆ விமானம் தீர்த்தம்
56 இ பஞ்சபாண்டவர்? அரிவான்
56 ஈ அம்மன், உற்சவர்
56 உ குட்டச்சி
65 ஊ காளி
56 ஐ லாடமுனி-சன்னதி
56 ஒ நாகக் கற்கள். பூதம், கருப்பண்ணசாமி முதலியன
56 ஔ மதுரைவீரன், பீடம், கூம்புக்கல் முதலியன

58 மகாலெட்சுமியம்மன் கோயில்

58 அ மகாலெட்சுமி அம்மன் (மூலவர்)
58 ஆ மல்லாய் அம்மன்
58 இ அகோர வீரபத்ரர், வீரபெருமாள் ஆட்டு மந்தை,

59 மாரியம்மன் கோயில்

59 அ வாயில் கோபுரம்

61 மாரியம்மன் கோயில்

61 அ விமானம்
61 ஈ புற்று மாரியம்மன் (மூலவர்)
61 உ அம்மன் (உற்சவர்)

62 மாரியம்மன் கோயில்

62 ஆ அம்மன்

# தஞ்சை நகரிய சக்திக் கோயில்கள்

## 148 புகைப்படங்கள்



1.அ. வாயில் கோபுரம்



1.ஆ. விமானம்

*1.உ.* அங்காளம்மன்,

பாலகுருநாதர் (மூலவர்.)



*1.ஒ.* பாவாடைராயன்

(இரு மனைவிகளுடன்)



4.அ. மணிமல்லேஸ்வரர், காண்டேராயா, அம்பா பவானி

5.அ. அன்னபூரனி அம்மன்

6.அ. வாயில் கோபுரம்



6.ஆ. குந்தாளதேவி,

போத்ராஜா பலகைக் கல்



6.ஈ. விமானம்

6.உ. எல்லையம்மன்,
ரேணுகை தலை



6.ஐ.மாதங்கியம்மன், துணைப் பெண்கள்

6.ஒ. ராஜகோபால்சாமி



6.ஓ. அகோர வீரபத்ரர்



6.ஔ. அர்த்தநாரீஸ்வரர்

6.க. ராஜகோபால்சாமி, (துணைவியர்களுடன்)



6.ஞ. கிருஷ்ணர் (ராதா-ருக்மணி)



6.ம. சிவன்-ஊர்த்தவ தாண்டவம்



6.ய. மகிசாசுர மர்த்தினி



6.ர. தாத்தாத்ரேயர் (திரிமூர்த்தி)



6.ல. யசோதா-கிருஷ்ணன்

6.வ. காளி



8.ஆ. கோயில் விமானம்

8.இ. காத்தாயி அம்மன்

8.ஈ. பார்வதி அம்மன்

8.எ. முடியாலழகி



8.ஏ. குசலவர்

8.ஒ. முத்துமுனி



8.ஒ. செம்முனி

8.ஔ. லாடமுனி

8.க. வேதமுனி

8.ங. கொடுமுனி

8.ச. கருமுனி

8.ஞ. வால்முனி

8.ட. மதுரை வீரன்

(இரு மனைவிகளுடன்)



8.ண. இருளப்பன், காட்டேரி



10.அ. வாயில் கோபுரம்

*10.*ஆ. விமானம்



*13.*அ. கோயில் (முன்தோற்றம்)

13.ஆ. காமாட்சி அம்மன்

(மூலவர் - சுதை)



16.அ. காளியம்மன் (பழைய சிலை-திசும்ப சூதனி)

16.ஆ. விமானம்





16.இ. காளியம்மன்

(புதிய சிலை)



16.உ. கோயிலும் பிற சன்னதிகளும்

16.எ. மாயா



*16*.ஏ. விநாயகர்



*16*.ஐ. துர்க்கை



17.அ. விமானம்



17.ஆ. வடபத்ரகாளியம்மன்



*18.* அ. ராஜகோபுரம்

(முன் தோற்றம்)



*18.* இ. விமானம்



19.அ. விமானம்



19.ஆ. துவாரபாலகி



19.இ. துவாரபாலகர்

19.உ. காண்டேராவ்



*19.எ. காளியம்மன்*

*20.அ. அம்மன்*

(முழுத்தோற்றம்)

21.அ. கோயில் (முன்தோற்றம்)





21.ஆ. முத்துக்காளியம்மன்
(பழைய சிலை)



*21.*இ. முத்துக்காளியம்மன் (புதிய சிலை)



*24.*அ. விமானம், கோயில் வெளித்தோற்றம்



24.ஆ. சிறு தெய்வங்கள்

26.அ. கோயில் (வெளித்தோற்றம்)





26.ஆ. விமானம்

26.ஈ. கோடியம்மன் (முழுத்தோற்றம்)

26.எ. பச்சைக் காளி

26.ஏ. பவளக்காளி

27.அ. கரகம் (மரம், மண்)

27.ஆ. கரகம்

(வெள்ளி - பின் தோற்றம்)

27.இ. நாயக்கர் அரசர் மக்கள்

27.ஊ. அம்மன் - உற்சவர்

27.எ. நாயக்க அரசர். (மனைவிகளுடன்)



29.அ. கோயில் (முன் தோற்றம்)

29. ஆ. அம்மன்



31. அ. அம்மன் கோயில் (தோற்றம்) விமானம்

31.ஆ. கரகம்



32.அ. விமானம்



32.இ. அம்மன்



33.அ. கருவறை புறத் தோற்றம்



43.ஆ. விமானம்

43.இ. அம்மன்
(செங்கமலநாச்சி)

43.ஈ. கருப்பண்ணசாமி



43.ஊ. மதுரை வீரன் சன்னதி

43.ஏ. லாடமுனி



43.ஐ. பட்டவன், உண்டிக் கருப்பு,
பட்டவன் சன்னதிகள்

43.ஒ. பட்டவன், பட்டவன் சன்னதிகள்



44.ஆ. அம்மன்

(முழுத் தோற்றம்)

46.அ. அம்மன் சன்னதி (முன் தோற்றம்)





46.ஆ. அம்மன் சன்னதி (பின் தோற்றம்)



46.இ. அம்மன் சன்னதி (பக்கத் தோற்றம்)




46.ஈ. அய்யனார் சன்னதி

46.உ. சம்பளா தேவி சன்னதி - முன் தோற்றம்



46.ஊ. சம்பளா தேவி சன்னதி - பக்கத் தோற்றம்



46.எ. முன்னடியாள், பட்டவன், சன்னாசி, கருப்பு,
மதுரை வீரன் சூலங்கள்

46.ஏ. பட்டவள், சன்னாசி, கருப்பு, முன்னடியான்,
முனியாண்டவர் சூலங்கள்



48.அ. அம்மன்



50.அ. கோயில், விமானம்



50.ஆ. செல்லியம்மன்
(பழைய சிலை)



50.இ. செல்லியம்மன்
(புதிய சிலை)



51.அ. விமானம்

51.ஆ. காளி

*51.*இ. பஞ்ச பாண்டவர்

(மரச்சிற்பம்)

*51.*ஈ. அம்மன் - உற்சவர்



*51*.உ. பஞ்ச பாண்டவர் - திரௌபதை கிருஷ்ணன்

*51*.ஊ. திரௌபதை, சுருதி, பீமர், நாகக்கன்னி





*51.*ஒ. நாகக்கல், வீரபத்ரர், ஆஞ்சனேயர் (முன் தோற்றம்)



*51.*ஒ. நாகக்கல், வீரபத்ரர், ஆஞ்சனேயர் (பின் தோற்றம்)

51.ஔ. பேச்சியாயி

51.க. அகோர வீரபத்திரர்



51.ங. முத்தால் ராவுத்தன்

51.ச. மதுரை வீரன்
(மனிவிகளுடன்)

*51*.ஏ. கமலக்கன்னி

*52*.அ. திரெளபதையம்மன்

(மூலவர்)

52.ஆ. உற்சவர் - அம்மன்



52.ஈ. பஞ்சபாண்டவர் (1)



52.உ. பஞ்சபாண்டவர் (2)



52.ஊ. வீரபத்ரர், நாகக்கல், சூம்புக்கல்

52.ஐ. முத்தால் ராவுத்தன்



52.ஒ. விமானம்



53. அ. வாயில் கோபுரம்

53. ஆ. விமானம்



53.இ. அம்மன் (மூலவர்)

53.ஈ. அம்மன் (உற்சவர்)

53.உ. பஞ்சபாண்டவர், அரிவான், குந்திதேவி

53.ஏ. காளி

53.ஐ. வீரபத்திரர்

53.ஒ. முத்தால் ராவுத்தன்



53.ஒ. அரிவான்



55.அ. அம்மன்-மூலவர்



55.ஆ. அம்மன்-உற்சவர்

55.ஈ. காளி



55.உ. முத்தால் ராவுத்தன்

56.அ. அம்மன் (மூலவர்)



56.ஆ. விமானம், தீர்த்தம்



56.இ. பஞ்சபாண்டவர், அரிவான்



56.ஈ. அம்மன், உற்சவர்

56.உ. குட்டச்சி

56.ஊ. காளி



56.ஐ. லாடமுனி - சன்னதி



56.ஒ. நாகக் கற்கள், பூதம், கருப்பண்ணசாமி முதலியன



56.ஔ. மதுரை வீரன், பீடம், கம்புக்கல் முதலியன



58. அ. மகாலட்சுமி,
அம்மன் (மூலவர்)

58. ஆ. மல்லாய் அம்மன்

58.இ. அகோர வீரபத்ரர், வீரபெருமாள், ஆட்டு மந்தை



59.அ. வாயில் கோபுரம்



61.அ. விமானம்



61.ஈ. புற்று மாரியம்மன்
(மூலவர்)

61.உ. அம்மன் (உற்சவர்)

62.ஆ. அம்மன்